குணப்பாடம்

சீவ வகுப்பு



மூலநூல் ஆசிரியர்

மரு. இரா. தியாகராஜன், L.I.M.

நூல் ஆசிரியர்

மரு. ஐ. சொர்ணமாரியம்மாள்,
எம்.டி (சித்தா)

வெளியீடு:

இந்திய மருத்துவம் ஓமியோபதித் துறை

சென்னை - 600 106.

குணபாடம்

சீவ வகுப்பு

சித்த மருத்துவ பாடநூல் வெளியீட்டுப் பிரிவு

இந்திய மருத்துவம் ஓமியோபதித் துறை

சென்னை - 600 106.

152 -2 - 1

குணபாடம்

சீவ வகுப்பு

மூலநூல் ஆசிரியர்

மரு. இரா. தியாகராஜன், *L.I.M.*
முன்னாள் சித்த மருத்துவ விரிவுரையாளர்,
அரசினர் மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி

நூல் ஆசிரியர்

மரு. ஜ. சொர்ணமாரியம்மாள், எம்.டி (சித்தா)
முன்னாள் இணை இயக்குநர் (ஓய்வு)
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையரகம்,
சென்னை - 600 106.

இந்திய மருத்துவம் ஓமியோபதித் துறை
சென்னை 600 106.

நூலடைவு

நூலின் பெயர்	:	குணபாடம் சீவ வகுப்பு
மூல நூல் ஆசிரியர்	:	டாக்டர். இரா. தியாகராசன்
நூல் ஆசிரியர்	:	மரு. ஐ. சொர்ணமாரியம்மாள்
பதிப்பு ஆண்டு	:	முதல் பதிப்பு : 1952 இரண்டாம் பதிப்பு : 1968 மூன்றாம் பதிப்பு : 1992 நான்காம் பதிப்பு : 2004 ஐந்தாம் பதிப்பு : 2017 (மறுபதிப்பு)
பதிப்புரிமை	:	© தமிழ்நாடு அரசு
நூல் வடிவம்	:	RA 1/8
அச்சுத்தாள்	:	70 GSM மேப் லித்தோ வெள்ளை
அட்டைக் கட்டுமானம்	:	கடின அட்டை
எழுத்துக்கள்	:	12 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	472
பிரதிகள்	:	1000
நூலின் விலை	:	ரூ.350/-
வடிவமைப்பு	:	**SHARK DESINGING CENTRE** Kodambakkam, Chennai - 600 024. Phone: +91 90250 44447
அச்சிட்டோர்	:	அரசு மைய அச்சகம் சென்னை - 600 079.

152 -2 - 1a

இந்திய மருத்துவம் மற்றும்
ஓமியோபதித் துறை
சென்னை — 600 106.

சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு
நூலாக்கப் பணிக்குழு

பதிப்பாசிரியர்
மரு.ப.பார்த்திபன், M.D (சித்தா)
இணை இயக்குனர்,
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை,
சென்னை - 600 106.

மெய்ப்புத் திருத்துனர்
மரு.ஐ.சொர்ணமாரியம்மாள், M.D (சித்தா)
சீவன் - நூலாசிரியர்

மரு.பேராசிரியர் எம்.டி. சரவணாதேவி, M.D (சித்தா)
குணப்பாடத்துறை
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி,
அருப்பாக்கம், சென்னை-106.

கூர்ந்தாய்வு மருத்துவ அலுவலர் (பொறுப்பு)
மரு. ஜெ.பி. வெண்தாமரைச் செல்வி, M.D (சித்தா)

உதவி பதிப்பாசிரியர்
திரு. ச.ராஜசேகரன், B.com
அலுவலக கண்காணிப்பாளர்
(பாடநூல் வெளியீட்டுப் பிரிவு)

திருமதி. த.லட்சுமி
(சுவடி நகல் எடுப்பவர்)

மதிப்புரை

சித்த மருத்துவம் பயிலும் மாணவர்களுக்குக் குணபாடப் பிரிவில் தாது — சீவப் பகுதி என இரண்டாம் மூன்றாம் பகுதிகள் ஒரே பாடமாக நடைமுறையில் இருந்தது. ஆனால் பாடத் திட்டங்கள் விரிவு படுத்தப்பட்டதின்கீழ் தாதுப் பகுதியும் சீவப்பகுதியும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு விட்டன. எனவே பாடத்திட்டத்திற்கு உரிய வகையில் விரிவான பாடநூல் எழுதும்படி என் மாணவி மரு.ஐ.சொர்ணமாரியம்மாள், M.D அவர்களைப் பணித்தேன். என் உரையை சிரமேற்கொண்டு அவர்கள் தொகுத்துள்ள இந்நூல் மிக நல்லமுறையில் அமைந்துள்ளது. இதுவரை நடைமுறை பாடத்திட்டத்தில் குறிப்பிடப்படாத அரிய உயிரி பொருட்களின் உதாரணமாகச் செவ்வட்டை, குழியானை, கரடி, முள்ளம்பன்றி, வெளவால் போன்றவற்றை இணைத்து இருப்பதும், உயிரிகளைக் கண்டறியும் வண்ணம் புகைப்படங்களும் அவற்றின் உயிரியல் விளக்கங்களும் தரப்பட்டிருப்பதும் வரவேற்கத்தக்கது.

இவ்வுயிரி பொருட்கள் இன்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் அநேகமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மருத்துவம் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவரும் மருந்து முறைகளுக்கு பயன்படும் சரக்கினங்கள், மூலிகை, தாது, சீவப்பகுதி எதுவாயினும் அவை பற்றித் தெளிவாக அறிந்திருத்தல் அவசியம். அவ்வகையில் இந்நூல் மாணவர்களுக்கு பெரிதும் பயனுள்ளதாக அமையும், இந்நூலில் விடுபட்ட உயிரினங்கள் பற்றிய தொகுப்புடைய

சிவப்பகுதியினை வெளியிட வேண்டும் என்று கூறி மரு.சொர்ணமாரியம்மாள் பணி மென்மேலும் சிறக்க என் நல் ஆசிகள்.

இரா. தியாகராஜன்
6.11.1995
ஷெனாய் நகர்
சென்னை — 30.

அணிந்துரை

மூலிகைகளையும், மருந்து சரக்குகளையும் மட்டுமின்றி உயிர் பொருட்களையும், கனிமங்களையும் பயன்படுத்தி நோய்களைக் குணமாக்கும் வழிகண்டவர்கள் நம் சித்தர் பெருமக்கள்.

பயன்படுத்தப்பட்ட அவ்வகை சீவப் பொருட்களைத் தொகுத்து வழங்குகிறது இந்நூல். முன்பிருந்த சித்த மருத்துவப் பாடத்திட்டத்தில் தாது சீவ வகுப்புகள் ஓரே பாடத்திட்டமாக இருந்து வந்தது. பின்னர் தாதுப் பொருட்கள் தனியாகவும், சீவப்பொருட்கள் தனியாகவும் பாடத்திட்டத்தில் பிரிக்கப்பட்டது.

சீவப்பகுதியை மட்டும் தனித்துப் பிரித்து மாணாக்கர்கட்குப் பாடநூலாகப் பயன்படும் நோக்கில் இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நூலை அரிதின் முயன்று படைத்தளித்த மரு.ஐ.சொர்ணமாரியம்மாள் பாராட்டிற்குரியவர்.

ஒவ்வொறு சீவப்பொருள் பற்றியும் கிடைக்கும் பெரும்பாலான தகவல்கள் ஓரிடத்தில் தொகுத்து அளிக்கும் வகையில் இது முதல் நூல். ஒவ்வொரு உயிர்ப் பொருளும் வேறு பெயர், பண்புகள் அதைக்கொண்டு தயாரிக்கப்படும் மருந்துகள், அதனால் குணமாகும் நோய்கள் போன்றவற்றை விளக்குகிறார். மேலும் ஒவ்வொன்றிற்கும் அமைக்கப்பட்ட மருத்துவ இலக்கிய மேற்கோள்களும், அப்பொருளைத் தெளிவாக விளக்கும் வண்ணப் புகைப்படங்களும் நூலுக்கு மேலும் மெருகூட்டுகின்றன.

நூலின் இறுதியில் பக்க எண்களுடன் தரப்பட்டுள்ள சிறப்புப் பெயர் அகராதியும், பயன்பட்ட நூற்களின் பட்டியலும் சித்த மருத்துவ ஆர்வலர்கட்கும், ஆய்வாளர்களுக்கும்

பெரிதும் பயன்படும். மிகுந்த சிரத்தை எடுத்துக்கொண்டு பாடநூலாக வைக்கத் தகுந்த இந்நூலினை உருவாக்கிய மரு.ஐ.சொர்ணமாரியம்மாள் அவர்களைப் பாராட்டி மகிழ்கிறேன். இவ்வகை நூல்கள் பலவற்றையும் மேலும் மேலும் படைக்க வேண்டும் என விரும்புகிறேன்.

மரு.கே. நடராஜன்
சித்தா பிரிவுத் தலைவர் (ஓய்வு)
அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை
சென்னை—106

திரு. மோகன் பியாரே, இ.ஆ.ப
கூடுதல் தலைமைச் செயலர் / ஆணையர்,
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை,
அரும்பாக்கம், சென்னை — 600 106.

பதிப்புரை

"குணபாடம் சீவ வகுப்பு" எனும் இந்நூல் பேராசிரியர் மரு. ஐ. சொர்ணமாரியம்மாள், எம்.டி. (சித்தா) அவர்களால் மிகச் சிறந்த முறையில் உருவாக்கப்பட்டுள்ளது. அவர் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறையின் இணை இயக்குநராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர் மரு. ஐ. சொர்ணமாரியம்மாள் அவர்கள், பேராசிரியராக சித்த மருத்துவக் கல்லூரியில் பணியாற்றிய நீண்ட அனுபவம் இந்த நூலை செம்மையாக எழுதிடத் துணைபுரிந்துள்ளது.

"குணபாடம் சீவ வகுப்பு" எனும் இந்நூலின் மூலநூல் மரு. இரா. தியாகராசன் L.I.M அவர்களால் எழுதப்பட்ட குணபாடம் தாது சீவ வகுப்பு எனும் நூலாகும்.

குணபாடம் சீவ வகுப்பு என்ற இந்நூல் சித்த மருத்துவ மாணவர்களுக்கு பாட நூலாக பயன்படும் வகையில் மிகச் சிறப்பாக அமைத்துக் கொடுத்த மரு. ஐ. சொர்ணமாரியம்மாளின் தொண்டு பாராட்டிற்குரியது.

சீவப் பொருட்களின் பயன்பாடு பற்றி சித்த மருத்துவத்துறையில் உள்ள பல அறிய செய்திகளை ஒன்று திரட்டி இந்த நூல் பாடநூலாக வெளியிடப்படுகிறது.

மேற்கத்திய நாடுகளில் தற்போது பிரபலமாகும் "Leech Therapy" என்ற அட்டை விடல் பல நூறாண்டுகளாகவே சித்த மருத்துவ முறையில் உள்ளது என்ற அரிய செய்தி

சித்த மருத்துவத்தின் தொன்மையும் மற்றும் சீவப்பொருட்களின் மருத்துவ பயன்பாடு பற்றிய சித்தர்களின் ஆழ்ந்த அறிவையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

மேலும் பெரும்பாலான சீவப் பொருட்களின் வண்ணப் புகைப்படங்களை இந்த நூலில் வெளியிட்டிருப்பது, இந்நூலிற்கு இன்னும் சிறப்பு சேர்ப்பதாக அமைந்துள்ளது.

இப்பணிக்குத் தக்க ஆலோசனைகளை வழங்கி வரும் இணை இயக்குநர் மரு.பி. பார்த்திபன், *M.D.*, கூர்ந்தாய்வு மருத்துவ அலுவலர் பொறுப்பு மரு. ஜெ.பி. வெண்தாமரைச் செல்வி, *M.D.*, நகலெடுப்போர், தட்டச்சர் மற்றும் இத்துறையினர் அனைத்து அலுவலர்களுக்கும் எனது பாராட்டுகள். மென்மேலும் இவ்வகை நூல்கள் வெளிவந்து மாணவர்களும், மருத்துவர்களும், மருத்துவ அலுவலர்களும் படித்து பயன்பெற வேண்டுமென்பதே எனது விருப்பம்.

மோகன் பியாரே.

மரு.ஐ.சொர்ணமாரியம்மாள்
முன்னாள் இணை இயக்குநர் (ஓய்வு)
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை,
சென்னை — 106

ஆசிரியர் உரை

சித்த மருத்துவத்துறையின் ஒரு பகுதி கனிமவளத்துறையைச் சார்ந்தது என்றால் அது மிகையாகாது. ஏனெனில் கனிமங்கள் எண்ணற்றவையாக இருப்பினும் மனித இனத்திற்குத் தேவையானவற்றை மட்டும் தெரிந்தெடுத்துக் குறிப்பிட்டிருப்பது வியப்பிற்குரியது. இதனிலும் கடல்படு கனிமங்கள் பற்றி குறிப்பிட்டிருப்பது மிக மிக வியப்பிற்குரியது மட்டுமின்றி தொன்மை மருத்துவம்தான் சித்த மருத்துவம் என்பதற்கு ஆதாரமுமாகும்.

சித்த மருத்துவ நூற்களில் அநேக உயிர்ப் பிராணிகளும், அவற்றை சார்ந்த பொருட்களும் மருந்து சரக்குகளாகக் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் கடலினின்று பெறப்படும் முத்து, பவளம், பலகறை போன்ற பல அநேக கனிமங்களும் அடங்கும்.

கடலியல் துறையில் உயிரினப் பகுதியில், ஒரு செல் உயிரினம் முதல் பேருயிர்கள் வரை வகைப்படுத்தப்பட்டுள்ளன.

ஆனால் அவையே மடிந்தபின் அவற்றின் ஓடுகளோ, எலும்புகளோ அன்றிப் பிற உறுப்புகளோ கரை ஒதுங்கி விட்டால் அவை கனிமவளத் துறையின் கீழ் அடக்கப்பட்டுவிடுகின்றன.

சித்த மருத்துவத்தை நிறுவிய சித்தர் பெருமக்கள் கனிமவளத்துறை வல்லுநர்களாக மட்டுமின்றி, கடலியல் துறை வல்லுநர்களாகவும் உள்ளனர்.

ஆக மருத்துவம் பயில்வோர் உயிர் சம்பந்தப்பட்ட மருந்து சரக்குகளின், உயிருற்ற, உயிரற்றதான இரு பெரும் நிலையிலும் அவற்றைப் பற்றி விரிவாகத் தெரிந்திருத்தல் வேண்டும். சித்தர்கள் கூறிய மூலபொருட்கள் யாவும் ஒரு குறிப்பிட்ட பூகோள எல்லைக்கு உட்பட்டதல்ல. ஆனால் தற்போது நாம் பல எல்லைகட்குட் பட்டவர்களாக வாழ்ந்து வருகிறோம். உதாரணமாக, நாடு மட்டுமல்லாது கடலியல், வனவியல், நிலத்தியல் போன்ற துறைகளின் விதி முறைகற்கும் உட்படுவதால் அநேக ஆதார மூலப்பொருட்கள் சித்த மருத்துவத்துறைக்கு எளிதில் கிடைக்கப்பெறுவதில்லை. இதன் பொருட்டு சித்த மருந்துகளின் எண்ணிக்கை குறைந்து காணப்படுகிறது. ஆதலால், இவை அனைத்து துறைகளோடும் சித்த மருத்துவத்துறை ஒப்பந்தப்படுத்திக் கொள்ளும்போது, சித்தர்கள் கூறியுள்ள அனைத்து மூலப் பொருட்களையும் எளிதில் அறியவும், பெறவும் முடியும்.

இதனடிப்படையில் உயிரியல் துறை, கனிமவளத்துறை மற்றும் கடலியல் துறையைப் பற்றிய பொருட்களின் விரிவான குறிப்புகள் அந்தந்தத் துறை வல்லுனர்களின் துணையுடன் கிடைத்த வரையில் தொகுத்து இணைத்துள்ளேன்.

மருத்துவம் பயில்வோருக்கு இந்நூல் உதவியாக இருக்கும் என நம்புகிறேன்.

சித்த மருத்துவத்தில் மருத்துவம் பற்றிய அனைத்து விசயங்களும் சித்தர்களால் குறிப்பிடப்பட்டுள்ளன. பரந்து கிடக்கின்ற அனைத்து மருத்துவ விஷயங்களையும் தொகுத்து பாடநூலாக்குவது மிக மிக அவசியமாகும். சித்த மருத்துவத்தின் பால் கொண்ட பற்றினால் தன் சிந்தனைகளைச் செயலாக்கித் தர எனக்குக் கட்டளையிட்டு இந்நூலை நான் எழுதப் பெரிதும் காரணமாய் நின்ற எமது பேராசிரியர் தெய்வத்திரு ஆர். தியாகராசன், எல்.ஐ.எம் அவர்களுக்கும் தெய்வத்திரு ஆ. ஆனந்தகுமார், ஜி.சி.ஐ.எம். அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன்.

இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ள உயிரினங்கள் பற்றியக் குறிப்புகள் மற்றும் புகைப்படங்களைத் தந்து உதவிய மரு.மரியஜோசப்,எம்.டி.(சித்தா) அவர்களுக்கும், தெய்வத்திரு மரு.ஞானதாஸ், எம்.டி. (சித்தா) அவர்களுக்கும்,

"கடல் நுரை" என்பதனை பற்றிய விளக்கங்களைத் தந்து உதவிய ஆய்வாளர் பி.ஏ.தாமஸ், மத்திய கடலியல் துறை ஆய்வு மையம்; அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவில் இயங்கிக் கொண்டிருக்கின்ற உயிரியல் ஆய்வு மையங்களின் பட்டியல் இந்நூலில் இணைக்கப்பட்டுள்ளது. இது ஆய்வாளர்களுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும் என நம்புகிறேன்.

இந்நூலில் ஏதேனும் குற்றங்குறைகள் இருப்பின் கற்போர் பொறுத்தருளுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

ஐ.சொர்ணமாரியம்மாள், எம்.டி. (குணபாடம்)

பொருளடக்கம்

1. ஆமை	28
2. ஆனை	34
3. ஆட்டுக் கொம்பு	41
4. இந்திர கோபப்பூச்சி	43
5. உடும்பு	49
6. எலும்பு	54
7. எறும்பு	63
8. முள் எலி	70
9. ஓணான்	75
10. கடல் நுரை	79
11. கணவாய் ஓடு	88
12. கழுதை வண்டு	90
13. கரடி	93
14. கலைமான்	97
15. கஸ்தூரி	107
16. கருவண்டு	118
17. காண்டாமிருகம்	120
18. கிளிஞ்சல்	124
19. குருவி	137

20.குளம்புகள்	140
21. குளவிக்கூடு	145
22.கொம்பரக்கு	148
23.குழியானை	158
24.கோரோசனம்	162
25.கோழி	167
26.சங்கு	175
27.சாணம்	187
28.சிறுநீர்	192
29.சிலந்தி வலை நூல்	203
30.செவ்வட்டை	208
31. தவளை	224
32.திமிங்கலம்	227
33.தேன்	232
34.பலகறை	245
35.பல்	260
36.பன்றி முள்	264
37.பவழம்	273
38.பாம்பு	287
39.பாலும் பாற்பொருள்களும்	296
40.பிச்சி	239
41. புலி	332
42.புனுகு	335

43.புற்றாஞ்சோறு	342
44.புறா எச்சம்	345
45.பூனை	347
46.பூநாகம்	351
47.நண்டு	362
48.நத்தை	366
49.நாய்க்கட்டம்	370
50.நாகர வண்டு	372
51. மயிர்	377
52.மயில்	384
53.மான்கொம்பு	390
54.மாட்டுக் கொம்பு	395
55.மின்மினிப்பூச்சி	398
56.மீன் எலும்பு	400
57.முட்டை	416
58.முத்துச் சிப்பி	426
59.முதலை	432
60.முயல்	434
61. மெழுகு	438
62.வரால்மீன் தலைக்கல்	444
63.வெளவால்	447

152-2 - 2

சீவப் பகுதி

சித்த மருத்துவ முறைகளுள் மூலிகை, தாது சரக்குகளின்றி பல அநேக உயிர்களும் அவற்றைச் சார்ந்த பொருட்களும் மருந்து சரக்குகளாகச் சொல்லப்பட்டுள்ளன. இவற்றின் தொகுப்பைப் பார்க்குமிடத்து,

"சொல்லரிய யானையொடு குதிரை யொட்டை
காமப்பா கழுதை சிங்கம் ரிஷபமானாங்
கதித்ததோ ராட்டுக்கடா வெள்ளாடு
நாமப்பா நாய் நரி குரங்கு ஓணான்
நற்கருடன் செம்போத்து மயில்
மயிலோடு கிளிப்பிள்ளை நாணுவான்
மகா சக்கிரவாக மன்னங் காக்காய் கோழி
அயிலொடு ஆந்தை குயில் காட்டுப்புறா வாழும்
அழகான வீட்டுப்புறா தானூர்க்குருவி
உயிலொடு அளுங்குடும்பு முதலையாமே
உண்மைக்கல்லாமை கட்டெறும்புபூநாகம்
இயிலொடு இந்திரகோபபூச்சி கருநாகம்
எழில் பாம்பு நாகமாஞ் சர்பமாமே"
என போகர் கருக்கடை கூறுகிறது.

உணவு முறைகட்கும், மருந்து முறைகட்கும் மட்டுமின்றிப் பல வேதியியல் முறைகளிலும் உயிர்பொருட்கள் அடங்குவனவாக உள்ளது. அதனாலேயே தாது சரக்குகளின் ஒரு தலைப்பாகிய தாதுக்கள் மட்டுமின்றிப் பல உயிர்களும், உயிர்ப் பொருட்களும் கூறப்பட்டுள்ளன.

போகர் ஏழாயிரத்தில் உபரசங்களின் தொகுப்பு
"திறமான வுபரசநூற் றிரண்டு பத்து

திறந்திட்டேன் கறந்தபடி தீர்க்கமாக
உறமான வுபரசங்கள் துருசி யொன்று
உத்தமமாம் பொன்னிமிளை முதல் தரந்தான்

எறமான ஏமமாட்சி கமென்று பேரு
இரண்டான திரங்கஞ்ச நிமிளை யாகும்
நறமான ரசிதமாம் நிமிளை யோடு
நவலோக நிமிளையோடு அருணன் தானே!

தாமென்ற நிமிளையது நான்கு மாச்சு
தனிப்பண்பு அப்பிரகம் நாலு மாச்சு
ஏனென்றெ ஏமாப்பி ரகத்தி னோடு
ஏற்றகிருஷ் ணபப்பிரகம் அருணன்சுவேதம்
ஊனென்ற இந்நூலில் நாலுந் தானும்
உற்பத்தி மதாந்திரமாய் பிறவி பாரு
பூனென்ற நாகவப்பி ரகமே யென்றும்
பெருமைநாக பிரகமது பேருந் தானே!

பேரான மண்டுக வப்பி ரகமும்
பலத்தவச் சிரவப்பி ரகம்நாலு மாச்சு
காரண காந்தமது ஐந்து மாகும்
கல்காந்தம் ஊசிபிடி காந்தத் தோடும்
மாறான மயிர்க்காந்தம் பச்சைக் காந்தம்
மகத்தான அரக்கான காந்த மைந்து

சீரான சிலாசத்தும் இரண்டு மாகும்
திணியான கற்பூர சிலாசாத் துமாமே.

சத்தான கோமூத்ர சிலாசத் தோடு
சிலாசத்து விரண்டுவிதங் கல்நார் ரெண்டு
முத்தான வெளுத்தகல்நார் பச்சைக் கல்நார்
முனையான ரெண்டுவிதக் கல்நா ராகும்

சத்தான சாத்திரமாம் பேதி யோடு
தளுக்கான கல்மதமும் தனித்தொன் றாகும்
நித்தநீலாஞ் சனதானை வகையே யாகும்
நேர்ந்தநீலாஞ் சனதான்ர சாஞ்ச னமாமே.

ஆமேபுட் பாஞ்சனமும் சவ்வீராஞ்சனம்
அறிந்தசுரோ தாஞ்சனமும் ஐந்து மாச்சு
தாமேதான் கருங்கல்லு படிகக் கல்லு
நாமேதான் ராசவர்த்தம் இரண்டு மாகும்
நலத்தராச வர்த்தனம்ரா சன்னியவர்த்தம்
தேமேதான் கருடபட்சி ஐந்து மாகும்
செங்கருட பட்சியோடு பால்க ருடனாம்

பாலான கருடனோடு மஞ்சள் கருடன்
பாங்கான கறுவர்ணக் கருடனாகும்
மாலான மேனியான் கருட னோடு
மகத்தான கருடப்பட்சி ஐந்து மாச்சி
ஏலான ஓடுசெங்கல் எறும்பு மயிர் நண்டு
இசைந்தநத்தை நாகவரண் டுக்கி ளிஞ்சல்
ஊலான! லூமச்சி யாமை முட்டைத் தோலும்
உரமான யானையின்தன் கொம்பு மாமே

கொம்பான பன்றியின்தன் கொம்பு மாகும்
கொடிதான கலங்கொம்பு ஆட்டுக் கொம்பு
வம்பான மாட்டினுட கொம்பு தானும்
மலினமான பூநாகம் மனிதர் பல்லு
தெம்பான செவ்வட்டை இந்திர கோபம்
சிதைந்ததோர் கோழிநெஞ்சென்பு தவளை யோடு
கம்பான கரடிநகம் முத்துச் சிப்பி
கருக்கான சங்கோடு பவழம் முத்தே!

முத்தோடு வயிரமாம் பச்சை தானும்
முகிலான நீலமொடு புட்ப ராகம்
மத்தோடு கோமேதகச் சிவப்பு மாகும்
மாங்கோடு வைடூரியம் கெண்டக மாஞ்சிலை
சித்துசூடா லைக்கற்கள் தேக்கல் மாக்கல்
செயமான மஞ்சள்கல் தவளைக் கல்லாம்
மத்துசிலா வங்கமன்ன பேதி யுடன்தான்
மருவுமத்தி பேதிசொர்ண பேதி தானே!

பேதிமாங்கி சபேதிஉவர் மண்கல் சிட்டம்
பேரான கருமணல்தான் செம்ம ணலுமாம்
சூதியாஞ் சுத்தமண்ணும் முடவாட்டுக் கால்தான்
சுகீதமாங்க ருவண்டுபன் றிமுள்ளு மாகும்
ஏதியாள லிமுள்ளுகடல் நுரைமீ னெலும்பு
ஏற்றமுள்சங் குபேராச னைத்தா னாகும்
நாதியாம்நா கப்பச்சை மரகதப் பச்சை
நலத்தபுத்தான் பழந்தானாம் நாடிப்பாரே

நாடியதோர் கழுதைவண்டு வெள்ளைச் சுக்கான்
நலக்கீதக தண்டோடு காகசிலை யாகும்
காடியகாண் டாமிருகம் கடுத்த மாசி
கத்தூரி எலும்போடு மந்தாரச் சிலையும்
மாடியதோர் கடல்பாசி மாங்கிச மாஞ்சிலை
மாசற்ற தன்சாலக் கிராமத் தோடு
கடியதோர் மாந்தளிர்கல் காசுமீர் படிகம்
கல்காவி செம்புமணல் நாக மணலே!

மணலான வங்கமணல் ஈய மணலே
மாசற்ற வெள்ளிமணல் ஏம மணலாம்
தணலானலோகமணல் மயிலி னிறகு
தரித்திருந்த திருக்கைமுள்ளு வெள்சி லையுமாம்
கணலான கானக்கல் குருத்தக் கல்லாம்
கனமான ரசிதசிலை யேம சிலையாம்
நணலான நாகசிலை வங்க சிலையாம்
தலக்தவீயச் சிலையயச்சி லையுமா குமாமே!

சிலையான திராச்சிலையும் வெங்கலச் சிலையும்
சேர்ந்தபித்தளைச் சிலையும்செம் புனுட சிலையும்
வலையான வுபரசநூற் றிரண்டு பத்தும்
வாய்ப்பேச்சாம் வாதியெங்கே காணப் போறான்
திலையான சித்தர்கள் குளிகை யாலே
தேசமெங்கும் சஞ்சரித்துக் கொண்டு வந்து
தலையான சத்தெடுத்துச சாரணை தீர்த்து
சாங்கமா யாடிடுவார் யோகி தானே!

தானான வுபரசநூற் றிரண்டு பத்தும்
சாங்கமாகப் பேர்பிரிந்து யானும் சாற்றி”

"கண்டுகொள் ளுபரசத்தின் வகையைச் சொல்வேன்:
காந்தமோ டப்பிரகந் துருசு கன்னார்
தொண்டர்களே! பொன்னிமிளை கருங்கல் செங்கல்
சுக்கான்க லீரக்கல் சூடா லைக்கல்
பண்டுதான் கருடபட்சி ராச வர்த்தம்
பவழவை டூரியமும் பச்சை நீலம்
உண்டுதான் கருடபட்சி கருவண்டாம்
உவர்மண் கற்சுவடு ஓட்டின் தூளே"

தூளான கர்ப்பூரச் சிலைகற் காவி
சுத்தமணல் செம்மண்ணுஞ் சொன்ன பேதி
நீளான கல்மதமும் வயிர முத்து
நீலாஞ்ச னமெறும்பு மாக்கல் தேக்கல்
கோளான பூநாக மிந்திர கோபம்
வாளான மயிலெலும்பு நண்டு நத்தை
மான்கொம்பு கலைக்கொம்பு மாட்டுக் கொம்பே

"கொம்பான ஆட்டுக்கொம் பானைக் கொம்பு
கோழிக்கால் மாட்டுக்கால் குருத்தக் கல்லு
வம்பான பன்றிக்கொம் பஸ்தி பேதி
மஞ்சட்கல் தவளக்கல் மாங்கிச பேதி
தெம்பான கற்சிட்டம் வெள்ளை சுக்கான்
சிலாவங்கம் செவ்வட்டை செம்பு மண்
கம்பான மீனெலும்பு கத்தூ ரித்தேன்
கடல்நுரையு மயிரோடு கரடி தானே"

"தானென்ற மாந்தளிர்க்கல் படிகக் கல்லு
தவளையோடு கடற்பாசி சாளி கிராமம்
கானென்ற கழுதைவண்டு நாகப் பச்சை
கருமணல் வங்கமணல் காந்தக் கல்லு
நானென்ற ஏமசிலை யேம மணல்
நாகமண லீயமணல் நாயின் கட்டம்
வானென்ற பன்றிமுள் ளெலியின் முள்ளு
வங்கசிலை நாகசிலை மகிமை பாரே"

"மகமையா மந்தாரச் சிலைமுட் சங்கு
மாங்கிசச்சிலை மரகதமாங் குருவண் டப்பா
திகையாதே கெண்டசிலை காக மியச்
சிலைரசிதச் சிலைமுத்துச் சிப்பி பல்லு
வகையான லோகமணல் கிளிஞ்சிற் செம்பு
மலையுரம் வெண் கலமலையும் வளப்பக் கல்லு
தொகையான வெள்ளிமண் அயச்சி லைக்கல்
தொடரான திமிங்கலமுஞ் சொல்லக் கேளே."

"சொல்லம் ரோசனையுந் தராபித் தளையில்
தோன்றுமலை காண்டா மிருகத்தின் கொம்பு
நல்புற்றாம் பழம்குளவிக் கூட்டு மண்ணு
நாகச்சட்டை புறாவெச்சம் மின்மினிப்பூச்சி
நல்லவனே வைகிராந்த மன்ன பேதி
நற்சாத்ரபேதியுடன் மாணிக் கந்தான்
சொல்லவென்றா லுபரச நூற்றிருப தப்பா
தொட்டவர்க்குச் சொன்னமைய மாகுந் தானே".

போகர் காரசாரத் துறையிலும், போகர் ஏழாயிரத்திலும் உபரசத்தின் கீழ் உயிர்களும், உயிர்ப்பொருட்களும் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டுள்ளன. பவழம், கருவண்டு, நாகரவண்டு, ஆமை, முத்து, எறும்பு, பூநாகம், இந்திர கோபம், முட்டை, மயில், எலும்பு, நண்டு, நத்தை, மான் கொம்பு, கலைக்கொம்பு, மாட்டுக்கொம்பு, ஆட்டுக்கொம்பு, ஆனைக்கொம்பு, கோழிக்கால், மாட்டுக்கால், பன்றிக்கொம்பு, செவ்வட்டை, மீன்எலும்பு, கத்தூரி, தேன், கடல்நுரை, மயிர், கரடி, தவளை, கழுதைவண்டு, நாய்க்கட்டம், பன்றிமுள், எலிமுள், முட்சங்கு, குருவண்டு, முத்துச்சிப்பி, கிளிஞ்சல், திமிங்கிலம், காண்டாமிருகக் கொம்பு, புற்றாஞ் சோறு, குளவிக்கூட்டுமண், நாகச்சட்டை, புறா எச்சம், மின்மினிப்பூச்சி.

மேலும் இவ்விரு தொகுப்புகளிலும், சொல்லப்படாத அநேக சீவப் பொருட்களை பற்றியக் குறிப்புகளும், மருத்துவ முறைகளும் அநேக நூற்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. உதாரணமாகப் பலகறை, பூனை, சிலந்திவலை நூல், விரால்மீன் தலைக்கல், புலி போன்றவை. எனவே மருத்துவ முறைகட்கு சொல்லப்பட்டுள்ள அனைத்து சீவப் பொருட்கள் பற்றியும் அறிந்து கொள்வது அவசியமாகும்.

சீவப்பொருட்களில் பஞ்சபூத உபரசம்

"சொல்லக்கே ளுபரசத்தின் பூதந் தன்னைச்
சொல்கிறோம் பூநாகம் ராச வர்த்தம்
மெல்லக்கே ளப்பிரக மூசிக் காந்தம்
மேலான சிலாசத்தும் பூமி யாச்சு
புல்லக்கேள் நண்டுநத்தை சங்கு முட்டை
பொற்கிளஞ்சி லிவையயைந்து புனலே யாகும்.
கல்லக்கேள் வெள்ளைக்கல் இந்திர கோபம்

கழுதைவண்டு நிமிளையத்தி அனல்கூறாமே
ஆகுமே கல்மதமும் கல்நார் ரோமம்
அருளன்ன பேதியுடன் சாத்ர பேதி
பேகுமே யிவையைந்தும் வாயுவாச்சு
புகழான சுககான்கல் வைக்கி ராந்தம்
ஏகுமே கற்சுவடு சாளிக் கிராமம்
இரசிதசிலை யிவ்வைந்தா காச மாகும்”

– குணப்பாடம் தாது – சீவ வகுப்பு நூல்

பிரிதிவி	*— பூநாகம்*
அப்பு	*— நண்டு, நத்தை, சங்கு, முட்டை, கிளிஞ்சல்*
தேயு	*— இந்திரக்கோபம், கழுதைவண்டு, எலும்பு*
வாயு	*— ரோமம்,*
ஆகாயம்	*— சீவப்பொருட்கள் குறிப்பிடப்படவில்லை.*

ஆமை

TORTOISE
Chelonia turtle

வேறு பெயர்கள்

கூர்மம், கூனன், கச்சபம், கமடாதரி, உறுப்படக்கி, பரிசல், ஒடுக்கன், உருளை.

"தஞ்சங் குருளை தனித்த தாமோதரன்
பஞ்சங்கக் கூர்மை பார் நீர்பரிசைதான்
வஞ்சங்க மூடி மவுன சிலாயுதன்
பஞ்சங்கமாகப் பரவிய வாமையே"

– சட்ட முனி நிகண்டு

வகைகள்: மூன்று வகைப்படும்.

1. கடல் ஆமை — இது மருத்துவத்திற்கு பயன்படாது

2. நீர் ஆமை — இது கிணறு, குளங்களில் வாழும். இதுவே மருத்துவத்திற்கு பயன்படும்.

3. கல் ஆமை (அல்லது) நில ஆமை — இதுவும் மருத்துவத்திற்கு பயன்படும். கருமை நிறம் உடையது.

கடலாமை திருஷ்டியினால் குஞ்சு பொரிக்கும். சீவப் பொருட்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

"கடலிலே திரியு மாமை கரையேறி முட்டையிட்டுக்
கடலிலே திரிந்த போது குஞ்சான வாறு போல"

– சிவவாக்கியர்

பயன்படும் உறுப்புகள்

ஓடு, அதன் மேல் உள்ள மெல்லிய சவ்வு, மாமிசம், குருதி, எச்சம், பித்து, கொழுப்பு, முட்டை.

ஆமை ஓட்டின் பொதுகுணம்

"வல்லைக் கவிசையுடன் மாந்த சுரம் பேதி

தொல்லையுறும் மூலந்தொலைந்துபோம்

எல்லையிலாத்தீமை தரு முட்சூடு தீவிரமா யோடிவிடும்

ஆமை முதுகோட்டால் அறி".

– கண்ணுசாமியம்

வல்லை கவிசை மாந்தசுரம், பேதி, மூலநோய், உட்சூடு தீரும்.

சிறப்புக் குணம்

அன்னமய கோசத்தில் ஏற்படக்கூடிய குற்றங்களை நீக்கும். இதன் ஓடு சிறப்பாகக் குழந்தைகள் நோய்க்கு குடிநீராகவும், கருக்காகவும், பற்பமாகவும், மாத்திரையாகவும் பயன்படுகிறது.

ஓட்டுச் சுத்தி

பூநீறு, கற்சுண்ணாம்பு, சம எடை சேர்த்து அதற்கு எண்மடங்கு நீர்விட்டுக் கலக்கி தெளிவெடுத்து, அதில் ஆமை ஓட்டைச் சிறு சிறு துண்டுகளாய் நறுக்கி இட்டு, எண்ணெய்க் கசிவு நீங்கும்வரை எரித்தெடுத்து, கருப்பு தோலை நீக்கி, சுத்த நீரில் கழுவி எடுக்கச் சுத்தியாம்.

ஆமையோட்டுக் கருக்கு குடிநீர்

"கூனன் முதுகு வசம்புள்ளிக் கூறும் ஓம நுணாவேலி

மானே பொடுதலை வாரடையும் வளரும் வெற்றிலையின் காம்பும்

கானே கிராம்பு கருக்கியி ட்டுக் காய்ச்சிச் சவலைப் பிள்ளைக்குத்

தானே கொடுக்கப் போர்மாந்தம் தங்கா தோடிப் போய் விடுமே"

– கு.தா.சீ.வ

ஆமை ஓட்டைச் சுட்டதூள், சுட்ட வசம்பு, வெள்ளுள்ளி, ஓமம், நுணாஇலை, வேலிப்பருத்தி, பொடுதலையிலை, வெற்றிலைக் காம்பு, கிராம்பு இவைகள் வகைக்கு வராகனெடை ஒன்று (4.2 கிராம்) எடுத்துச் சட்டியிலிட்டுக் கருக்கி, விதிப்படி குடிநீர் செய்து, காலை மாலை இரு வேளையும் மூன்று அல்லது ஐந்து நாள் கொடுக்கப் போர்மாந்தம் முதலிய மாந்த நோய்கள் நீங்கும்.

ஆமையோட்டுக் கருக்கு

ஆமை ஓடு, மிளகு, உத்தாமணிச் சாறு, அரிசி இவைகளை உலர்த்திக் கருக்கி பொடித்துப் புட்டியிலடைக்கவும்.

அளவு: *4 குன்றி (250 மி.கிராம்) வரை கொடுக்கலாம்.*

துணை மருந்து: *தேன், தாய்ப்பால்.*

தீரும் நோய்கள்: *தேனிலாவது, தாய்ப்பாலிலாவது கொடுக்க மாந்தம், கணம், கணமாந்தம், அசீரணபேதி, மந்தம், வாந்தி முதலியன நீங்கும். இக்கருக்கை, பால் குடிக்கும் குழந்தைக்கும், பாலும் சோறும் அருந்தும் குழந்தைகளுக்கும், சோறு மாத்திரம் உண்ணும் பாலர்க்கும் கொடுக்கலாம்.*

ஆமை ஓட்டுக்கற்கம்

ஆமைஓடு, அதிவிடயம், ஓமம், வட்டத்திருப்பி, பாவட்டை, மிளகு, சுக்கு இவற்றைச் சம எடை எடுத்துத் தாய்ப்பால் விட்டு அரைத்து குன்றி அளவு (130 மி.கி) தாய்ப்பாலில் கொடுக்க கழிச்சல் தீரும்.

ஆமைத் தைலம்

ஆமை மேல் ஒரு சிவப்பு சீலை சுற்றி கதிரில் குத்தி 8 பங்கு வேப்ப நெய் விட்டு எரித்து சுடராக விழும் பக்குவத்தில் தைலத்தை ஒரு பீங்கானில் சேகரிக்கவேண்டும்.

அளவு: *5 — 8 மில்லி.*

தீரும் நோய்கள்: சன்னி நோய், இசிவு நோய் நீங்கும்.

பற்பம்

பூநாகத்தைப் கொம்புக் கள்ளிப்பால் விட்டரைத்து ஆமை ஓட்டிற்குக் கவசம் செய்து உலர்த்தி, சில்லிட்டுச் சீலை செய்து கனபுட மிட்டெடுக்க பற்பமாம். இப்பற்பத்தை அப்படியே உபயோகிக்கலாம். அன்றியும், 1 பங்கு ஆமை ஓட்டிற்கு 8 பங்கு ஆடாதோடைச் சாறு விட்டரைத்து மறுபடியும் புடமிட்டு உபயோகிக்கலாம்.

அளவு: ½ குன்றி (65 மி.கி — 130 மி.கி) — 1 குன்றி வரை

துணை மருந்து: தாய்ப்பால், பசுவின்பால்

தீரும் நோய்கள்: குழந்தைகட்கு உண்டாகும் மாந்தம், கணம், மாந்த பேதி முதலியன.

(வேறு)

பற்பம்

ஆமை ஓட்டைச் சுத்தித்து ஆடாதோடை விழுதில் புதைத்து சீலை செய்துலர்த்தி, கனபுடமிட்டெடுத்து, பிறகு கற்றாழைச் சாறு, இவற்றால் தனித்தனியாக அரைத்து, வில்லை செய்து உலர்த்தி, சில்லிட்டுச் சீலை செய்து புடமிட்டெடுக்கப் பற்பமாம். இதனை, மேற்கூறியவாறே உபயோக்கபடுத்துவதுடன் மூலத்திற்கும் கையாளுவதுண்டு.

ஆமை ஓட்டின் மீது சுண்ணாம்பு தடவி, துணியில் சுற்றி ஒரு புடமிட்டெடுக்க வெளுக்கும். இதற்கு கற்சுண்ணாம்புத் தெளிவு நீர் விட்டரைத்து, வில்லை செய்து உலர்த்தி புடமிடப் பற்பமாம். இப்பற்பத்துடன் ¼ பங்கு கற்பூரம் சேர்த்து முன்போல அரைத்து உளுந்தளவு மாத்திரை செய்து உலர்த்தி கொள்ளவேண்டும்.

அளவு: *1 முதல் 2 மாத்திரை இருவேளை*

துணை மருந்து: *முலைப்பால், பால், வெந்நீர், மாந்தக்குடிநீர் முதலியன.*

தீரும் நோய்கள்: *உப்பு மாந்தம், கணமாந்த சுரம், பசியின்மை, அஜீரணபேதி முதலியன.*

கறிக்குணம்

"ஆமைக் கறியருசி யைம்பித் துண்டுமூலஞ்
சேமக் கனல்சூதி காமேக — நாமரத்தப்
பேதி கிராணிமலப் பேதியகற் றும்பசியுந்
தாதுமே ருங்கொடுக்குந் தான்".

– ப. கு. சஜீ

ஆமைக்கறி அரோசகம், கபம், பித்தம், உள்மூலம், உட்சூடு, கருப்பமேகம், இரத்தாதிசாரம், சீதக்கிரகணி, மலபேதி இவைகளை நீக்கும். பசி, வீரியம், அழகு இவற்றை தரும்.

கறியைப் பாகப்படி சமைத்துண்ண மேலே கூறப்பட்ட பிணிகள் நீங்கும். மற்றும் கறியுடன், சீந்தில் உப்பு சமைத்து அருந்த உடலில் உண்டாகின்ற காயங்கள் நீங்கும் என தேரன் வெண்பா நூல் உரைக்கும்.

ஆனை

ELEPHANT

வாரணக்கோடு, கரிக்கொம்பு, கெசப்பிடி, ஆனைத்தந்தம் என பல பெயர்களில் வழங்கப்படும். ஆனைத்தந்தம் என்பது ஆனையின் மேல் வரிசைப் பற்களில் வெட்டுப்பற்களின் மாறுபட்ட வளர்ச்சி ஆகும். ஆயினும் மருத்துவ குணத்தில் பற்களைக் காட்டிலும் மாறுபட்டது. மிக்க விலையுள்ளதாக கூறப்படுகிறது. மருந்து முறைகட்கன்றி மருந்துகள் சேமித்து வைக்கும் சிமிழாகவும் சித்த மருத்துவத்தில் கூறப்படுகிறது. கலைப்பொருட்கள் அணிகலன்கள் செய்யவும் பயன்படும்.

ஆனையின் கொம்பு அன்றி பல், பால், மூத்திரம், சாணம், வாய்நீர் முதலியனவும் மருத்துவத்தில் பயன்படும். வாகனமாகவும் ஆனை பயன்படும்.

'ஆனைக் கொம்பு - *(Elepha macimus –linn)*

வேறு பெயர்கள்

"வாரணக் கோடு மருவுங் கெசப்பிடி
காரணவான கரியுடன் கொம்புதான்
தோரணைவானை சிறந்திடு தந்தமாம்
நாரணவானையின் நற்கொம்பின் பேரே".

– ச.மு.நி

ஆனைத்தந்தம் சேரும் மருந்துகள்:

தாலாதி உண்டை

"முத்தொடு பவளந் தானும் முதிர்ந்ததோர் கந்தந் தங்கம்
தத்துறு கலையின் கொம்பு தறியுறு மானைக் கொம்புங்
கொத்துறு வெட்டி வேரும் குளிர்ந்ததோர் பிச்சிப் பூவும்
வித்தகப் பெண்ணைச் சாற்றில் விரவத்தா லாதி யாமே"

– அ.ந.வி

முத்து, பவளம், சந்தனம், தங்கம், கலைமான் கொம்பு, ஆனைக்கொம்பு, வெட்டிவேர், பிச்சிப்பூ ஆகியவை சம எடை எடுத்து பனைமட்டைச் சாறு விட்டரைத்து மாத்திரையாக்கி நிழலில் உலர்த்தி நீரிலிழைத்திட கண்ணோய் தீரும்.

யானை தந்தத்தைச் சுட்டுப் பொடித்து தேனில் மத்தித்துப் பூச புழுவெட்டு மயிர் உதிர்தல் நீங்கும்.

யானை தந்தத்தை நீரில் ஊற வைத்து சந்தனக் கல்லில் நீர் விட்டரைத்து உலர்த்தி அத்துடன் காவிக்கல், கஸ்தூரி மஞ்சள் சம எடை சேர்த்து தேன் விட்டரைத்து நெருப்பு சுட்ட தழும்புகட்கு போட மாறும்.

யானைத் தந்தம் பல கண்நோய் மருந்துகளில் சேரும், பல அரிய மருந்துகளைப் பத்திரப்படுத்தும் சிமிழாகவும் பயன்படும்.

யானைத்தந்த சுண்ணம்

யானைத்தந்தம் 20 பங்கு, 5—ஆம் காய்ச்சல் வெடியுப்பு 1 பங்கு, பழம் புளி 1 பங்கு சேர்த்தரைத்து வில்லை செய்து 10 நாட்கள் பனியிலும், வெயிலிலும் வைத்துலர்த்தி ஓட்டில் வைத்து சில்லிட்டு சீலைமண் செய்துலர்த்தி 100 எருவில் புடமிடவேண்டும். இவ்விதம் 5 முறை புடமிட கடுங்கார சுண்ணமாகும். ஒரு குன்றி வீதம் பனை வெல்லத்தில் கொடுக்க குன்மம், நெஞ்சுவலி, வயிற்றுவலி, கை, கால் உளைச்சல் தீரும்.

கொம்பின் பயன்கள்

"உருத்திரமணியே மானின் கொம்புறு மதுரமேபேர
ரத்தைதிப் பிலிகி ராம்போ டானையின் தந்தங் கோட்டம்
திருத்திகழ் சம்பீரத்திற் றெழுவிதை யக்கறாவும்
கருத்துடன் கழஞ் சொவ்வொன்று கருது கோமத மிரண்டே

எழுமுறை புடமிட்டப்பா லெடுத்திடு சூரணத்தை
பவளச்சிமிழில் வைத்து விதிமுறை வழங்கக்கேண்மின்
இழுதுடன் தேனுங் கல்லக்காரமிங் கிவற்றினோடு
பழுதறக் குழப்பி யுண்ணப் பறக்குமே நாமுட்தோஷம்"

– தே.வை

மான் கொம்பு, அதிமதுரம், பேரரத்தை, திப்பிலி, கிராம்பு ஆனைத்தந்தம், கோட்டம், எலுமிச்சம் பழவிதை, அக்கராகாரம் ஆகியவை வகைக்கு (1 கழஞ்சு) 5.1 கிராம், கோரோசனம் (2 கழஞ்சு) 10.2 கிராம் ஆகியவற்றைச் சேர்த்து அரைத்து 7 முறை புடமிட்டு அத்துடன் நெய், தேன், வெல்லம் சேர்த்துண்ண நாமுட்தோஷம் தீரும்.

யானைப் பல்லின் பயன்

"போமென்று சொன்னது மெய் பொய்யாது வாகடர்கள்
ஆமென்றார் காமனதி மதுரம் — ஓமம்
விடாததற்கு நேரரைத்து வில்லை செய்யப்பட்ட
படாமுகியெ யிற்றால் வெப்பம்"

– தே.வெ

திப்பிலி, அதிமதுரம், ஓமம் ஆகிய மூன்றையும் சம அளவு எடுத்து அவ்வெடைக்கு யானையின் பல்லையும் நிறுத்தெடுத்து அரைத்து வில்லை செய்து உலர்த்தி கொடுக்க வெப்பம் தீரும்.

யானை நீரின் குணம்

"அதி தூலஞ் சோபை யனிலங் கிருமி
யெதிர்விடங் கருங்கரப்பானேகும் — அதிராத
யானையென்ப பலமு மங்க புஷ்டியுங் கொடுக்கும்
யானை விடு மூத்திரம்".

– ப.கு.சி

யானை மூத்திரத்தால் அதிதூலம், சோபை, வாத ரோகம், கிருமி, விடக்கடி, கரப்பான் தீரும். தாது புஷ்டியும், சரீர பலமும் உண்டாகும்.

"குட்டம் பதி னெட்டும் குஞ்சரத்தின் தோற்சொரியும்
கட்டம் பெரிதாங் கயநோயும் — பட்டவுடன்
செந்தீமுன் பஞ் செனவே சீந்திலுப்புடன் கலந்த
தந்தா வளநீர்க்குச் சாம்"

– தே.வெ

சீந்திலுப்பு, கலந்த யானையின் நீரால் பதினெட்டுக் குட்டங்களும், யானைத்தோல் சொரியும், துன்பந்தரும் இளைப்புநோயும் தீமுன் பட்ட பஞ்சு போல் ஆகும் என்பதாம்.

"யாந்தகரை நீர்க்கோவைக் காகு மனுபானஞ்
சாந்தி விகுசஞ் சதகுப்பி — சீந்தில்கறி
பாக்கிது தந் தாவளநீர் பாச்சியாரைத்துண்டை செய்துண்
காக்கை வலிக் காவாரைகை".

– தே.வெ

சதகுப்பை, சீந்தில், மிளகு, பாக்கு நான்கையும் யானை நீர் விட்டரைத்து உருட்டி மாத்;திரையாக்கி உலர்த்தி காக்கை வலிப்பிற்கு ஆவாரைச் சாற்றிலும், நீர்க் கோவைக்கு கையான் சாற்றிலும் அனுபானித்து கொடுக்க நீங்கும்.

மருந்து சாந்தியாக எலுமிச்சம் பழச்சாறு கொள்ள வேண்டும்.

யானை சாணத்தின் பயன்

யானையின் சாணத்தை உலர்த்தி எரித்து சாம்பலை யானையின் சிறு நீரிலேயே கரைத்து வடிகட்டி அதை எரித்து வரும் உப்புடன் 10 பங்கு வாலுளுவை அரிசி சேர்த்து வேக வைத்து பூச வெண் குட்டம், ஆறாதரணம் ஆறும்.

யானைப்பாற் குணம்

"வாதம்போந் தாதுபுஷ்டி வந்தடரும் வன்பலமோ
யாது பித்தங் கூடி யழுகுதிக்குந் — தாது மலர்ந்
தேனைப் பாலிற்கலந்த தித்திப்பைப் போலிருக்கும்
யானைப் பாலுண்ணுமவர்க்கு"

– ப.கு.சி

தேனைப் பாலில் கலந்ததைப் போல் இனிப்புச் சுவையை உடைய யானைப்பாலை நாளும் உண்டுவர வாதம் நீங்கும். தாது விருத்தி, பலம், பித்தம் விருத்தியாகும். யானை மாமிசம் விந்துவிற்கு சூட்டையும் உடல் வலுவையும் உண்டாக்கும். வாதம், கபம் வளர்க்கும்.

வாய் நீரின் பயன்

"காவா யுலவுபரி காரிகளுக் காதரவாம்
நாவா யுரையை நடத்தவே — பாவகமா
நால்வா யவிழ்த நுகர்வார்க் கினிதுகட்டம்
தோல்வாய் நீராலுப் பஞ் சும்"

– தே.வெ

அவிழ்தங்களை ஆக்கவல்ல உப்பு ஐந்தையும் யானையின் வாய்நீர் கட்டும் என்பதாம்.

யானையேற்றத்தின் குணம்

"தாதுவிருத்தியும் பசியுந்தாழாது நற்பலமுந்
தீது பித்தமும் வளருந் திண்ணமே — வாதமைய
மேழுகடற் புவியுளெங்கு நிலையாவாம்
வேழநடாத்துவர்க்கு மெய்"

– ப.கு.சி

யானையில் ஏறி செல்பவர்க்கு சுக்கிலம், சடராக்கினி, பலம், பித்தம் விருத்தியாகும். வாத கப தோடங்கள் ஒழியும்.

The Tusks

The Modified incisor teeth are called as tusk and are classified as Ivory. Elephants have been hunted for their ivory from olden days.Elephant's tusk, teeth, urine, excreta are used in siddha medicine.An elephant tusk can grow to 3.5 meters in length. Enamel is only present in the tusk tip in young animals.

Dentine composes 95% of the tusk and will sometimes display broad concentric bands. Cementum, which can be thick in extinct genera, covers the outside of the tusk. Cementum can present a layered appearance, particularly in mammoth.

COMPOSITION

Ivory is a natural composity, composed of inorganic material (mostly calcium hydroxyapatite in organic (collagen) matrix. Calcium Hydroxyapatite (Ca1 0(PO46(IH)2) is the microcrystalline form of calcium and phosphorus in the exact ratio formed by the body. Hydoxyapatite Calcium is one of the most absorbable and effective forms of calcium for the prevention of bone loss.

The surface of hygroxyapatite helps attract and hold in reserve the Potassium. Magnesium, Boron, Zinc, Silica and Chromium that are also included in this powerful product.

ஆட்டுக் கொம்பு

Capra aegagrus hircus

உபரசத்தில் ஒன்றாகச் சொல்லப்பட்டுள்ளது.

வேறு பெயர்கள்

"மேஷத்தின்கொம்பு விளங்கியசெம்பொத்து
காழற்ற வோமங் கலந்தவைப்பசு
ஓழற்ற செம்பிலி வுயர்ந்த குரும்பாடு
ஓழற்ற வெள்ளாடு யியல் வகைக்கொம்பே"

– ச.மு.நி

ஆட்டுக் கொம்பு என்பதில் செம்மறி ஆடு, வெள்ளாடு, குறும்பாடு இவற்றின் கொம்புகள் அடங்கும். பல அரிய மருந்து முறைகள் பத்திரப்படுத்த சிமிழாகவும் இவை பயன்படுத்தப்படும்.

மருந்துவ பயன்கள்

கொம்பு புகை

ஆட்டுக் கொம்பு அராவியத்தூள், மயிலிறகு, வசம்பு, சுக்கு, மிளகு, பேயத்தி, அழிஞ்சில், கடுகு, குதிரை குளம்பு ஆகியவை வகைக்குச் சமஎடை எடுத்துப் பொடித்து, கம்பளியில் சுற்றி வேப்ப நெய்யில் தோய்த்து புகைக்க சன்னி நோய் தீரும் என்பதாகும்.

கொம்பு சுத்தி

கொம்பை அராவியதூள் 35 கிராமிற்கு, அகத்தியிலை சாறு 105 கிராம் விட்டு ஐந்து நாள் சூரிய புடம் வைத்து ஆறாம் நாள் சாறு விடாது உலர்த்தி கழுவி எடுக்க சுத்தியாகும்.

கொம்பு பற்பம்

சுத்தித்த கொம்பு பொடி 1 பலத்திற்கு பச்சை பேரரத்தைச் சாறு விட்டு அரைத்து புடமிட வேண்டும். இவ்விதம் 6 முறை செய்ய நன்கு பற்பம் ஆகும்.

அளவு: முழுக்கடலை கூறு உத்தமம்
முக்கால் கடலை கூறு மத்திமம்
அரை கடலை கூறு அதமம்
கால் கடலை கூறு அதமாதமம்

அனுபானம்: தாய்ப்பால்

தீரும் நோய்:

வாதத்தெறித்தலுக்கு — ஆட்டுக்கடா கொம்பு பற்பத்தையும்

பித்தத்தெறித்தலுக்கு — பெண் ஆட்டுக் கொம்பு பற்பத்தையும்

சிலேத்தும் கல்லடைப்பிற்கு — ஆண் வரை யாட்டுக் கொம்பு பற்பத்தையும்

வாதப்பிடிப்பிற்கு — பெண் வரையாட்டுக் கொம்பு பற்பத்தையும்

பித்த தும்மலுக்கு — ஆண் காட்டாட்டுக் கொம்பு பற்பத்தையும்

சிலேத்துமத் தும்மலுக்கு — பெண் காட்டாட்டுக் கொம்பு பற்பத்தையும்

சிலேத்துமத் தும்மலுக்கு — பெண் காட்டாட்டுக் கொம்பு பற்பத்தையும் வழங்கவேண்டும்.

இந்திர கோபப்பூச்சி

(Trombidium holoscricem)

இந்திர கோபம்

வேறு பெயர்கள்

"இந்திரபீச மிசைந்ததனுப்பீசம்
தத்திரயிடியீனிர் சார்த்திடு நாகமாம்
அந்திரசஞ்சீவிய முர்த சுரோணிதம்
பந்திரநாமந்தான் பகரிந்திரகோபமே".

– ச.மு.நி

இப்பூச்சி, தம்பலப்பூச்சி, ஈயல், சந்திரபீசம், தனுபீசம், இந்திரபீசம், இடிபீசம், இரம்பை, அமிர்தசுரோணிதம், சஞ்சீவி, நாகபேதி, மேகத்தின் விந்து, மன்னன் நாகம், இடியின் துளி, அயிராணி ருது, மழைத்துளி, மின்னல் நாகம், கோபம் என்னும் வேறு பெயர்களினாலும் வழங்கப்படுகிறது.

இப்பூச்சிகள், மழைக்கால ஆரம்பத்தில் நல்ல மழையுடன் அதிக இடியும் மின்னலும் இருக்கும்பொழுது, நல்ல செம்மை நிறத்துடனும், வழவழப்புடனும் புல் தரைகளிலும், தோட்டங்களிலும், செம்மண் நிலங்களிலும் காணப்படுகின்றன. இவற்றைச் சேகரித்துக் காயவைத்துக் கடைகளில் விற்கின்றனர். கடைகளில் கிடைப்பவை குங்குமப்பூ நிறத்துடனும், அரை அங்குல நீளத்துடனும், நீண்ட அரை வட்டவடிவமாகவும் இருக்கும். காய்ந்த பூச்சிகளின் துகளைச் செம்மண் நிலத்தில் தூவி, வரகு வைக்கோலிட்டு மூடி நீர் தெளிந்துவர, அதனின்றெழும்பும்

ஆவியாலுண்டாம் வேர்வையினால் இப்பூச்சியை உற்பத்தி செய்து கொள்ளலாம் என கூறப்பட்டுள்ளது. இம்முறை ஆய்வுக்கு உரியதாகும்.

வகைகள்

இதில் வெளுப்பு, கறுப்பு, செம்மை ஆகிய மூவகை உண்டு. இவற்றுள் முன்னிரண்டும் கிடைத்தற்கரியன.

"இந்திரன் கோபித்த தாலே
இந்திரகோபப் பூச்சி யென்றும்பேரு
முருக்கவே மூன்றுவிதம் சிவப்பு வெள்ளை
முழுக்கறுப்பு மூன்றாகச் செந்துவாச்சே
செந்து வென்ற சிவப்பதுவும் ரசவேதைக்காஞ்
செயலான வெளுப்பதுவும் நாகவேதை
கந்துயென்ற கறுப்பு அஞ்சனத்துக் காகுங்"

– போகர் 7000 (3ம் ஆயிரம்)

இதன் சுவை தெரியவில்லை. இது வெப்ப வீரியத் தையும், வறட்சியையும் உடையது. ஆதலின் இதனைச் சூட்டுடம்பினருக்குக் கொடுத்தால் கெடுதியை விளைவிக்கும். அத்தீங்கைத் தேனாலும், எண்ணெயாலும் விலக்கலாம். இப்பூச்சியின் வீரியம், விபாகம், செய்கை முதலியன வாலுழுவைக்கும் இருக்கிறது. ஆகையால் யுனானி வைத்தியர்கள், இப்பூச்சியை உபயோகிக்குமிடத்தில் இது கிடைக்காவிடில், வாலுழுவையை உபயோகிக்கின்றனர். இசிவகற்றும் செய்கையும், நரம்பிற்கு முறுக்கேற்றும் செய்கையும், மாமிசத்திற்கு வலிவைக் கொடுக்கும் செய்கையும் தாதுவை விர்த்தி செய்யும் செய்கையும் இதற்கு உண்டென்று கூறுவர்.

இதன் குணத்தைக் கீழ்க்காணும் செய்யுளால் அறியலாம்.

"கருமேகந் தாதுநட்டங் கக்கும் கபம்போக்குந்
தருமேநற் காய்ச்சித்தி தன்னை — வருமேக
சாலமுறை வாரளக தையலே நன்மாரிக்
காலமுறை யீயலது காண்".

– ப.கு.சி

மழைக்காலத்தில் தோன்றும் ஈயல் என்று கூறப்படுகின்ற இந்திரகோபப்பூச்சி, கருமேகத்தையும், சுக்கில நட்டத்தையும், கபரோகத்தையும் நீக்கும். காயசித்தியை உண்டாக்கும். நரை திரைகளை மாற்றும்.

இப்பூச்சியில் செம்பின் சத்து இருக்கின்ற தென்பதனையும், அச்சத்தெடுக்கும் விபரத்தினையும் உரோமரிஷி வைத்தியம் 500—லும், இச்சத்தினின்று செய்யும் செந்தூரத்தின் முறையைச் சட்டமுனி நிகண்டிலும் காணலாம்.

இதன் உபயோகம்

இப்பூச்சியின் சாம்பலைச் சிட்டிகை அளவு நீரில் கலந்து காலை, மாலைகளில் கக்குவான் நோயின் தற்காப்பிற்கும், நீக்கத்திற்கும் கொடுத்தல் மரபு.

இது நரம்பிற்கும் மாமிசத்திற்கும் வலிவைக் கொடுப்பதினால், இதன் சாம்பலைத் தேனில் கலந்து முகவாதத்திற்கும் பாரிசாவாதத்திற்கும் கொடுக்கலாம். இதனை எண்ணெயிலிட்டுக் காய்ச்சி உபயோகிப்பதும் உண்டு. இதனைச் சூலைநோய்க்குச் சாதிக்காயுடன் கலந்து பயன்படுத்தலாம். இதனைத்தேன்மெழுகுடன் கலந்தரைத்துக் ·களிம்பாக்கிக் கீல்களின் வீக்கத்திற்கு உபயோகிக்கலாம்.

இதன் தூளைத் தாய்ப்பாலில் கலந்து ஆண் குறியில் தடவிவர ஆண் தன்மை உண்டாம். இதன் சாம்பலை வெல்லத்தில் வைத்துப் புசிக்க தாதுவை (விந்துவை) விருத்தி செய்யும்.

இந்திரகோப தைலம்

"உந்து மிந்திர கோபம் வெள்ளுள்ளி பால்
வந்திடு தயிலத்தை வடித்துமே
நந்து நாக்கொடு நாசிக்கண் காதினில்
வெந்த வாய் செலுத்தோடும் விடங்களே".

– தே.வை

இந்திர கோபம், உரித்த பூண்டு சம எடை எடுத்து அரைத்து, துணியில் தடவி வாட்டி பிழிய தைலம் விழும். அதை நசியம், கலிக்கமாக விட்டு உள்ளுக்கொடுக்க கடிவிடம் தீரும்.

Velvet mites

Red velvet mites are members of the subphylum Chelicerata, a group of critters that have tiny lobster-like claws that serve as moutKarts, a feature that relates them closely to spiders,

scorpions, and harvestmen. Red velvet mites make their home in the litter layer of woodlands and forests. They live from one to several years, depending on the species. As larvae, they attach themselves to a variety of arthropods and feed parasitically. They will suck blood from a gnat or grasshopper, for instance, sometimes hitching a ride with several other mites. When red velvet mites become nymphs and then adults, they take to the soil to devour much smaller prey, including other mites and their eggs, the eggs of insects and snails, and primitive wingless insects. They do not bite humans, neither do they sting.

The presence of red velvet mites is extremely important to the environment. These mites are part of a community of soil arthropods that is critical in terms of rates of decomposition in woodlands and in maintaining the structure of the entire ecosystem. By feeding on insects that eat fungi and bacteria, they stimulate the decomposition process.

Adult male mites release their sperm on small twigs or stalks. That ritual is followed by the male laying down an intricate silken trail to the sperm. Females spot these trails, then seek out the individual male. If he is to her liking, she sits in the sperm. But if another male spots one of these sperm gardens, he'll promptly destroy it and replace it with his own.

Special features: These arachnids are often seen wandering on bare soil or through grass. They are bright red and covered in tiny hairs which give them a velvet appearance - hence the name.

Like other mites, they have no antennae. The front pair of legs are used as feelers to check where they're going.

The larvae are parasitic. After hatching from eggs laid in the soil, they latch themselves onto passing spiders or insects and suck their blood. They do not injure their hosts, and after a while drop off. They then burrow into the soil, moult and emerge as adults.

உடும்பு

Varanus salvator

வேறு பெயர்கள்

தடி, தோதா

உணவிற்காகவும், மருத்துவத்திற்காகவும் வேட்டையாடப்படும் விலங்கினங்களில் முக்கியமானது.

உடும்பின் மாமிசம், கொழுப்பு, தோல், நகம் முதலியவை பயன்படுத்தப்படுகிறது. இதன் மாமிசம் இனிப்பும், துவர்ப்புமாகிய சுவைகளை உடையது.

உடும்பின் கறியின் குணம்

"சொல்வாத பித்தமொடு தோல் வறட்சியும் போம்
பலமிலாத் துர்பாலருக்கும் பாரில் — பலம்வந்
திடுந்துவர்ப்பினிப்பும் இயற்கையிலே உள்ள
உடும்பின் இறைச்சிதனை உண்".

– ப.கு.சி

"உடும்பதன் கறிக்கு ணங்கே ளுண்மூலங்கடுப்பு சோகை
கடும் வாத பித்தந்; தாகங் காசம் புண் சேட மாற்றும்
வடுவுடல் கொழுப்பி னோடு வண்மையார்
பெலனுண்டாக்கும்
படுமிவ்வூ னுடம்பி னெங்கும் பரிவொடு சேரு மாமே"

– அ. சா.

"கிட்டும் உடும்பிறைச்சி கேள்வி நோய் மூலமூளை
வெட்டை சிரநோய் சோபை மேகம்புண் குஷ்டுகபம்
சீதமிரத்தக்கடுப்பு தீராக் குடல்வாதம்
பேதியிவை போக்கு மெனப்பேசு — ப.கு.சி

"தொன்மைத் துவர்ப்பினிப்பார் துர்ப்பலம தப்புநமை
வன்மைக் கிராணி தலைவன்னிவைக — ளின்மையுரு
மேற்றழல் புண் குட்டு கப மேகம் வெட்டை மூலமண்டங்
காற்றழல் விட்டிற்றடிக்குக் காண்"

— ப.கு.சி

இயல்பாகவே துவர்ப்பும் இனிப்புமுடைய உடும்பு கறியினால் பித்தம், தோல் வறட்சி, செவிநோய், மூலமூளை, இரத்தக் கடுப்பு, குடல்வாதம், துர்ப்பலம், வீக்கம், சொறி, கிராணி, தலை, செவியில் வரும் பிணிகள், கபம், மேகம், குட்டம், வாதபித்தம் தீரும் என்பதாம்.

மேலும்

"திண்மையாங் கல்போற்றிடமா மிடை வளமை
வண்மையா மிந்திரியம் வாய்க்கவே யுண்மை
படியிற் கழறுமுறை பண்டிதர்க்குத்; தோற்றுந்
தடிமெய்த் தடியாற் றடி"

— தே.வெ

உடும்பிறைச்சியால் கல் போல் உடற்கு வன்மை உண்டாகும். சுக்கிலம் பெருகும்.

உடும்பின் பயன்

இதன் மாமிசத்தை வற்றலாகச் செய்து உபயோகிக்கலாம்.

உடும்பு கறியை குடிநீராகக் காய்ச்சி வடிகட்டி கொடுக்க மூலமூளையில் காணும் மலக்கட்டு தீரும்.

உடும்பு தைலம்

உடும்பு சதை

திரிகடுகு

கொடிவேலி

வசம்பு

சீரகம்

பூண்டு

ஆகியவற்றைச் சம எடை எடுத்து அரைத்து அவ்வெடை நல்லெண்ணெய்; கலந்து காய்ச்சி பதத்தில் வடித்துக் கரண்டி வீதம் அருந்த கிராணிபோம்.

உடும்பின் நாக்கு குழந்தைகளின் தோடத்திற்கு குளிசமாகக் கட்டப்படுகிறது.

உடும்பு நகத்தை எரித்து சுவாசிக்க சுவாசகாசம் தீரும்.

உடும்பு நெய்யை உபயோகிக்க இரத்தப் பெருக்கு நீங்கும்.

உடும்பு களி

தின்னவே கோழைவகை சோரவே தீருமெனச்

சொன்னார்..........................

நாயுறுவி பூளை நயத்தெசமூலமுடன்

காயு முடும்பிறைச்சி காய்ச்சியந்தத் தோயமதில்

கூம்ப விளாம்பூவும் கறுப்பு நெல்மாவும்

தேம்பு களியெண்ணெயில் றிண்

நாயுறுவி, சிறுபீளை, தசமூலம், உடும்பு வற்றல் ஆகியவை சம எடை எடுத்து முறைப்படி குடிநீரிட்டு வடிகட்டி அதில் விளாம்பூ, கறுப்பு நெல்மா சேர்த்து களியாகக் கிண்டி

எள்நெய்யில் தோய்த்து உண்ண கோழை தீரும்.

உடும்புச் சூரணம்

வயதான உடும்பின் தலை, நகம், வயிற்றிலுள்ள குடல் முதலியவைகளை நீக்கி சுத்தித்து காயம் பலம் ¼ (8.75 கி), இந்துப்பு பலம் ½ (17.5 கி) வளையலுப்பு பலம் ¼ (8.75 கி) சுக்கு பலம் 1, திப்பிலி பலம் ½ மிளகு பலம் 1, சவுட்டுப்பு பலம் 1, ஓமம் பலம் 2, இவற்றைச் சூரணமாக்கி உடும்பின் வயிற்றில் நிரப்பி கயிற்றால் கட்டி, பிரமி இலைச்சாறு 4 படியை ஒரு பானையிலூற்றி அதில் முற்கூறிய உடும்பையிட்டு வேகவைத்து சாறு வற்றியவுடன் உடும்பை எடுத்து இடித்துக் காயவைத்து மறுபடியும் இடித்து துணியில் வடிகட்டிச் சேகரிக்கவும்.

அளவு: 1 — 2 கிராம் இருவேளை அரை மண்டலம்.

துணை மருந்து: தேன்

தீரும் நோய்கள்: கிரகணி வகைகள், மூலவாயு, சூதக வாயு.

பத்தியம்: இச்சா பத்தியம்



உடும்பு

Geographic Range

Varanus salvator occurs throughout much of sourthern Asia, from India in the west to the Philippines and the Indo-Australian islands in the east.

Habitat

Varanus salvator is semi-aquatic and has a wide range of habitats. They are frequently seen on river banks and in swamps.

Varanus salvator is reporterd to grow to 3 meters in length, but most adults are 1.5meters long at most. The color of the water monitor is usually dark brown or blackish, with yellow spots on the underpart of the lizard.

The flesh and dried varanus are used in siddha medicine.

எலும்பு

Bones

வேறு பெயர்கள்

"செல்லிய வஸ்தி சிறிய வங்கமாம்
மல்லிய விலாக்கொடி மன்னுயிர்க் குறடுதான்
பல்லிய சந்துயிர் பலவிலாத் தோரணம்
எல்லிய கண்டெனு மெலும்பினாமமே".

– *ச.மு.நி*

பல்வேறு உயிர்களின் எலும்புகள் சித்த மருத்துவத்தில் பயன்படுகிறது. அவற்றினுள் மனிதர், நாய், ஆடு, மாடு, கழுதை, சேவல், பூனை, மான், கரடி, புலி, குதிரை முதலியவற்றின் கபாலம், நெஞ்செலும்பு ஆகியவை பயன்படுகிறது.

எலும்பின் சுத்தி

பொடித்த என்புத்தூள் 35 கிராமிற்கு புளித்த பசுமோர் 105 கிராம் வீதம் வார்த்து சூரிய உதய முதல் அஸ்தமிக்கும் வரையில் வைக்க வேண்டும். இவ்விதம் 5 நாள் வைத்து பின் 2 நாள் மோர் விடாது வெய்யிலில் வைத்துலர்த்திக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு நாளும் புதிய மோரையே உபயோகிக்க வேண்டும்.

எலும்பு வகைகளின் பொது பயன்கள்:

"இந்துப்பு மாந்தரெலும்பு பொடி யொன்றாகத்
தொந்தமுடன் தூதுளம் பழத்தின் வந்தரசம்
வாங்கிக் கலத்திழைத்து மையாக்கி கண்ணிலிட
ஓங்குபில்லங்காசம் போம் ஓது"

– *அ.ந.வி*

இந்துப்பு, மனிதரெலும்பு சம எடை எடுத்து பொடித்து தூதுளம் பழச்சாறு விட்டரைத்து கண்ணிலிட பில்லம், காசம் தீரும்.

"வனத்துரை கருத்துடல் வராக மருப்பொரும்
புனைத்துரை யுமாமையுரம் பூணெலும்புங் கோழி
தனுத்த நெஞ்சென்பும் வெள்ளிதானுஞ் சமபாகங்
கனத்த கழித் தேனிலுரை காணுங் கண்ணில் நோய்க்கே"

– ப.ரா.சே

1. பன்றிக் கொம்பு, ஆமை ஓடு, சேவலின் நெஞ் சென்பு, வெள்ளி அரப்பொடி ஆகியவை சம எடை எடுத்துத் தேனில் நன்கரைத்து விரலளவு மாத்திரை செய்துலர்த்தி தேனிலுரைத்து கண்ணிலிட கண்நோய் தீரும்.
2. பசுவின் என்பையும், இலவம் வேரையும் இடித்து நெய்யும், தேனும் கூட்டி பூச முகத்தில் ஏற்படும் மரு தீரும்.
3. பூனையின் எலும்பைத் திரிபலை குடிநீரில் அரைத்துப் பவுத்திரப் புண்ணில் பூசிவர ஆறும்.
4. பூனை என்பு, நாபி, கிரந்திதகரம், ஆவாரைவேர் இவற்றைச் சம அளவு எடுத்து சூரணித்து நீர் விட்டு அரைத்து நசியமிட, பெருச்சாளிவிடம் தீரும்.

கோழி என்பு பற்றி கூறுமிடத்து

ஷ...

காழுறு மிதனென்பு கண்ணுரோகங்கட்காகுமே"

– பதார்த்த சூடாமணி

என்பதில் பல அநேக கண்ணோய்கட்காகும் மருந்துகளில் சேவலின் நெஞ்சென்பு சேர்க்கப்படுகிறது.

ஆணிப்பூ மாத்திரை:

சேவலின் நெஞ்செனபு, கலைக்கொம்பு, ருத்திராட்சம், கழுதைப்பல், யானைத்தந்தம், புலி நகம், குப்பைமேனிவேர், வெள்ளி, வெள்ளை சாரணைவேர்

ஆகியவை வகைக்கு சம எடை எடுத்து பசுநீரில் 3 நாள் ஊறவைத்து பின் எடுத்து கல்வத்திலிட்டு தாய்ப்பால் விட்டு நன்கு ஆட்டி விரலளவு மாத்திரையாகச் செய்து நிழலில் உலர்த்திக் கொள்ள வேண்டும்.

தாய்ப்பாலில் உரைத்துக் கண்ணிலிட கண்ணில் ஏற்படும் ஆணிப்பூ, குந்தம் தீரும்.

– *(போகர் 700)*

என்புக் குழி தைலம்:

சேவலின் நெஞ்செனபு, முதலை என்பு, கழுதை என்பு, எட்டிவித்து, அழிஞ்சில் வித்து ஆகியவை சம எடை எடுத்து உலர்த்தி குழித்தைலம் இறக்கிக் கொள்ள வேண்டும்.

பாம்பின் கடி விடத்திற்கு சற்று சூடாக்கி உள்ளுக்கு காசெடை கொடுத்து வசம்பில் தோய்த்து நசியமிட தீரும்.

மேலும் சேவலின் நெஞ்செனபு வச்சிராயுத மாத்திரை, மகா ரத்தினாதி மாத்திரை போன்ற கண்ணோய் மருந்துகளில் சேரும்.

என்பு களிம்பு:

மனிதருடைய என்பு, கற்பூரம், தாளகம் ஆகியவை வகைக்கு சம எடை எடுத்து கல்வத்திலிட்டுப் பொடித்து ஆமணக்கு நெய் சேர்த்து அரைத்து பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதை இலவம் பஞ்சில் தடவி போட கண்டமாலை, பிளவை, தொடைவாழை, பரு, பறங்கிப்புண், அல்குல் சூலை தீரும்.

பலவகை மிருகங்களின் என்புகளைக் கொண்டு பற்பம் செய்யப்படுகிறது.

பற்பம் செய்முறை

ஒரு பலம் (35 கிராம்) சுத்தி செய்த எலும்பிற்கு, கீழுள்ள பட்டியலின் முறைப்படி கற்றாழைச் சாறுவிட்டு அரைத்து வில்லை செய்துலர்த்திக் கவசித்துப் புடமிட்டு எடுக்கப் பற்பமாகும்.

சாற்றின் பெயர்	அளவு பலம்	அரைக்கும் நாள்	வில்லை உலர்த்தும் நாள்	கவசம் உலர்த்தும் நாள்	புடம் வரட்டி
கற்றாழை சாறு	2	4	3	1	32
கற்றாழை சாறு	2	4	3	1	28
கற்றாழை சாறு	2	4	3	1	24
கற்றாழை சாறு	2	4	3	1	20

அளவு: கடலையின் முழுக்கூறு உத்தமம். முக்காற் கூறு மத்திமம், அரைக்கூறு அதமம், காற்கூறு அதமாதமமாம்.

மிருகங்களின் எலும்பு பற்பவகைகளும் அவற்றால் தீரும் நோய்களும்

"கர்த்தவமா மையா கரடிபுலி மான்மையங்கங்
கர்த்தவமா மையகலக் காண்டலைக் — கர்த்த
மதுமேக மாலரந்தை வாந்திவிக்க லைதீ
மதுமே மாலுளைநோய் மல்"

– *தே.ய.வெ*

அளவு: கடலையின் முழுக்கூறு

அனுபானம்: பழச்சாறு

தீரும் நோய்கள்:

மேகப்பிணிகளுக்கு ஆண் கழுதை எலும்பின் பற்பத்தையும்,

சன்னிகளுக்குப் பெண் கழுதை எலும்பின் பற்பத்தையும்,

உன்மத்த நோய்களுக்கு ஆண் குதிரை எலும்பின் பற்பத்தையும்,

வெப்ப நோய்களுக்கு பெண் குதிரை எலும்பு பற்ப்பத்தையும்,

பித்த நோய்களுக்கு எருமைக்கடா எலும்பின் பற்பத்தையும்

உபத்திர நோய்களுக்கு எருமை எலும்பின் பற்பத்தையும்,

வாந்தி நோய்களுக்கு எருது எலும்பின் பற்பத்தையும்

விக்கல் நோய்களுக்குப் பசு எலும்பின் பற்பத்தையும்,

கப நோய்களுக்கு ஆண் கரடி எலும்பின் பற்பத்தையும்,

பித்த நோய்களுக்குப் பெண் கரடி எலும்பின் பற்பத்தையும்,

வாத நோய்களுக்குப் ஆண் புலி எலும்பின் பற்பத்தையும்,

தலைவலிகளுக்கு பெண்புலி எலும்பின் பற்பத்தையும்,

மயக்கம் தரும் ரோகங்களுக்கு ஆண் மான் எலும்பின் பற்பத்தையும்,

உளைப்பு நோய்களுக்குப் பெண் மான் எலும்பின் பற்பத்தையும்,

நோய்ப் பிணிகளுக்கு ஆண் ஆட்டெலும்பின் பற்பத்தையும்

மாரடைப்பு நோய்களுக்கு பெண் ஆட்டெலும்பின் பற்பத்தையும்

மேற்கண்ட அளவுப்படி பழச்சாற்றில் அனுபானித்துக் கொடுக்க மேற்கண்ட நோய்கள் நீங்கும்.

கோட்டான் எலும்பு பற்பம்

முன்சொன்ன எலும்புகளின் சுத்தி முறைப்படி சுத்தி செய்த கோட்டான் எலும்புப்பொடி பலம் 1—க்கு (35 கிராம்) கீழ்க்காணும் பட்டியலின்படி தண்ணீர் விட்டான் கிழங்குச் சாறுவிட்டு முறைப்படி அரைத்து வில்லை தட்டி உலர்த்திச் சில்லிட்டுச் சீலை செய்து புடமிட்டெடுக்கப் பற்பமாம்.

சாற்றின் பெயர்	அளவு பலம்	அரைக்கும் நாள்	வில்லை	உலர்த்தும் நாள்	புடம் வரட்டி
தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு	3	4	3	1	32
தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு	3	4	3	1	28
தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு	3	3	2	1	24
தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு	3	3	2	1	20

ஆண் கோட்டான், பெண் கோட்டான் ஆகிய இருசாதிப் பட்சிகளின் எலும்புகளையும், மேற்கண்ட பாகப்படியே தனித்தனியே செய்து கொள்ள வேண்டும்.

அளவு: கடலையின் முழுக்கூறு உத்தமம், முக்காற்கூறு மத்திமம், அரைக்கூறு அதமம், காற்கூறு அதமாதமமாகும்.

கோட்டான் எலும்பு பற்பத்திற்குத் துணை மருந்துகளும் தீரும் நோய்களும்

"நிதம்பத் துடைகோச நேர்வாமக் கட்டி

நிதம்பத் துடைகோச நேராய் — நிதம்பத்துக்
கன்னலற லாமுமனங் கப்பொடிபூ சம்பீர்பேய்க்
கன்னலற லாகுமுவ கை"

– தே.ய.வெ

நிதம்பத்துடை கோசம் நேர்வு ஆம் அக்கட்டி — பெண்களுக்கு நிதம்பத்துக் கடுத்த துடையிலும், ஆண்களுக்குக் கோசத்துக்கு நேரிலும் உண்டாகும் அவ்வகைக் கட்டிகள், நிதம்பத்து உடை கோசம் நேராய் — கல்லினால் உடைபட்ட முட்டையைப் போன்றிருக்கும். நிதம் பத்துக் கன்னல் அறல் ஆம் — பிரதி தினமும் பத்து நாழிகைக்கு மேல் கடுப்புண்டாகும். ஊமனி அங்கம் பொடி — அதற்குக் கோட்டான் எலும்பின் பற்பத்தை, பூசம் பீர் பேய்க்கன்னல் — பேய்ப்புடல், பேய்ப்பீர்க்கு, பேக்கரும்பு — அறல் ஆகும் உவகை — என்னும் இவற்றின் சாற்றில் அனுபானித்துக் கொடுத்தால் அந்நோய் நீங்கிக் களிப்புண்டாகும்.

பெண்களுக்கு நிதம்பத் தானத்திற்கு நேரான அடித்துடையிலும் ஆண்களுக்குக் கோசத்திற்கு கடுத்த அடித்துடையிலும், வாத சம்பந்தத்தால் விருத்தமாகவும், பித்த சம்பத்தந்ததால் நீளமாகவும், சேத்தும சம்பந்தத்தால் சதுரமாகவும், கட்டி காணுவதும், அவ்வாறு காண்பதற்கு முன்னே சுரம் தலைவலி முதலியன உண்டாவதும், அக்கட்டிகள் கல்லில்பட்டுடைந்த முட்டையைப்

போன்றிருப்பதும், நாளும் பத்து நாழிகைக்கு மேல் கடுப்பும் எரிவும் உண்டாதலும் உண்டு. இவ்வகைக் குணங்களிருந்தால் அவைகட்கு முறையே ஆண்கோட்டான் பெண் கோட்டான் என்னும் இரண்டின் எலும்பையும் தனித்தனியே பின்காணும்படி கொடுக்க வேண்டும்.

ஆண்பாலாருக்கு முற்கூறிய கட்டியானது வாதத்தைப் பற்றிவரின் பேய்ப்புடல்சாறும், பழச்சாராயம் ஆகிய இரண்டையும் கலந்தும் பித்தத்தைப் பற்றிவரின் பேய்ப் பீர்க்குச்சாறு, பட்டைச்சாராயம் இவை இரண்டையும் கலந்தும்,

கபத்தைப் பற்றிவரின் பேய்க்கரும்புச்சாறு, அரிசிச்சாராயம் என்னும் இரண்டையும் கலந்தும் பெண் கோட்டான் எலும்பின் பற்பத்தை அனுபானித்தும் கொடுத்தல் வேண்டும். அக்கட்டி பெண்பாலருக்கு வாதத்தைப் பற்றிவரின் பேய்ப்புடற்சாறு, தென்னங்கள் இரண்டையுங் கலந்தும், பித்தத்தைப் பற்றிவரின் பேய்ப்பீர்க்கஞ்சாறு பனங்கள் கலந்தும், சேத்துமத்தைப் பற்றியதாகில் பேய்க்கரும்புச்சாறு ஈச்சங்கள் இவை இரண்டையும் கலந்தும், ஆண்கோட்டான் எலும்பு பற்பத்தை அனுபவித்தும் கொடுத்தல் நல்லது. இம்முறையில் அவரவர் நோய் நீங்கும்.

பேரண்டபற்பம்

மண்டை ஓடு, சீனாக்காரம், இரண்டையும் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து வில்லைதட்டி உலர்த்திப் புடமிட்டு எடுத்துப் பொடியாக்கிப் பதனம் பண்ணிக் கொள்ளவும்.

அளவு: 200 மி.கி. முதல் 400 மி.கி. வரை காலை, மாலை பன்னிரண்டு நாள்

துணை மருந்து: கழுதைப்பால் இரண்டு பங்கும், இஞ்சிச்சாறு ஒரு பங்கும் சேர்த்து அதற்குச் சமன் சர்க்கரை கூட்டி அதில் பற்பத்தை இழைத்துக் கொடுத்துத் தும்பைச் சாற்றால் நசியம் செய்து பேய்ப்பீர்க்கு பேய்மிரட்டி, பேய்ப்புடல் பேய்க்கும்மட்டி, பேய் அத்தி, பேய்த்தும்பை, எலுமிச்சம்பழம் இவைகளைத் தலையில் தேய்த்து நூறு குடம் நீர் வார்க்க தீரும்.

பத்தியம்: பச்சரிசியும், பருப்பும் சமைத்துக் கொடுக்க வேண்டும். உப்பு ஆகாது.

தீரும் நோய்கள்: பிரமை, பித்தம் முதலியவை

(வேறு)

மனிதன் மண்டையோடு, நாய்மண்டையோடு, மாட்டு மண்டையோடு இவற்றைச் சரியெடையாக கல்வத்திலிட்டுக் கழுதைப்பாலால் மைபோல ஆட்டி, வழித்தெடுத்து, வில்லை தட்டி, உலரவிட்டு ஓட்டிவிட்டு சீலைமண் செய்து குக்குடபுடம் போட்டெடுக்கத் தவளநிறப் பற்பமாம்.

அளவு: கழஞ்சு (5.1 கிராம்) அளவு 12 வேளை கொடுக்கவும்.

துணை மருந்து: கழுதைப்பால் இரண்டு பங்கும், இஞ்சிச்சாறு ஒரு பங்கும், சர்க்கரை ஒரு பங்கும் கூட்டிப் பற்பத்தைக் கலந்து கொடுக்க வேண்டும்.

தீரும் நோய்கள்: பித்தம், பயித்தியம், பிரமை முதலியவை.

எறும்பு

Formica smaragdina

வேறு பெயர்கள்

முயிற்றெறும்பு, பிபிலிகை

சிற்றெறும்பு, பேரெறும்பு, சிகப்பெறும்பு என மூவகை எறும்புகள் மருத்துவ நூற்களில் கூறப்பட்டுள்ளது. இதில் பெரும்பாலும் சிகப்பு எறும்பு எனும் கட்டெறும்பு இன்றும் மருந்து செய்முறைகளில் வழக்கிலுள்ளது. இவ்வகை எறும்புகள் முயிற்றெறும்பு என்றும், பிபிலிகை என்றும் வேறு பெயர்களாலும் வழங்கப்படும். இவை இலுப்பை, மா மரத்தில் கூடுகள் கட்டி வாழ்பவை. இதன் முட்டைகளே பெரும்பாலும் மருத்துவத்திற்காகும்.

முசிறு கூடுகள் உள்ள மரத்தின் கிளைகளின் கீழ் ஓர் சுளகையோ அன்றி வெள்ளை சீலையையோ கட்டி தொங்க விட்டு நீண்டகழி கொண்டு கிளையை உலுப்பினால் முட்டைகள் சுளைகிலோ துணியிலோ விழுந்துவிடும். எறும்புகள் கலைந்த பின் சேகரித்து எடுத்துக் கொள்ள வேண்டும். சேகரிக்கும் துணி மற்றும் சுளகை மரத்தின் அடியில் விரித்தால் எறும்புகள் விழுந்து செல்லும்போது முட்டைகளையும் சேர்த்து எடுத்து சென்று விடுமாதலால் கிளைகளில் கட்டித் தொங்க விட்டுக் கொள்வதே முறையாகும்.

முசிற்று முட்டையின் பொது குணம்

"துள்ளு மடல் வாதத் துன்ப மந்தம் வல்லிசிவு
தள்ளு வலிக்குஞ் சலக்கப நோ — யுள்ளில்

விசிறு சந்நி வாதம் விலகு மதூ கத்தால்
முசிற்று முட்டைக் குணத்தைமுன்"

– ப. கு. சி.

இலுப்பை மரத்து முசிறு முட்டையினால் மகாவாதம், மந்தம், இசிவு, வலி, நீர்க்கபநோய் சன்னி தீரும்.

தலைமையா முசிற்றுமுட்டை சன்னி தாகஞ் சுரத்தோ
டலைவு செய் பித்தந் தானு மகற்றிடு மென்றுகாணே

முசிற்று முட்டை, சன்னி,தாகம், சுரம், பித்தம் இவற்றை நீக்கும்.

– ப.கு

முயிற்றண்டம் சேரும் சில மருந்து முறைகள்

ஏலாதி மாத்திரை

"ஏலமில வங்க மொடு கஸ்தூரியதிவிடய மினியசந் தனிமிலாமிச்

சிறுவேளை முந்திரிகை பேரிஞ்சினற்கனி யிலுப்பையிற் பூ முத்தமும்

கோலமுறு மான்கொம்பு ருத்திராக் கங்கன்னார் குலவுமதி மதுர மாஞ்சில்

கூறு சாத்திரபேதி சாதியின் காயினோடு கோரோசனை கெலுடனும்

சீலமுறு பச்சைக்கர்பூமறு சந்தனஞ் சேர்பச்சை நிலவேரினுஞ்

சேர் முயிற்றண்டமிவை சரியின நீரரை சூரைசேர் காயிளை வுருட்டிப்

பாலினொடு மாதளம்பழநீர் கரும்புநீர் பகரிஞ்சி தேன்மு லைப்பால்

*பாங்கா யறிந்துகொடு சன்னிசுரமாற்றிடப் பகருமே லாதியிதுவே" – **ப.ரா.சே***

ஏலம், இலவங்கம், கஸ்தூரிமஞ்சள், அதிவிடயம், சந்தனம், விலாமிச்சு, முந்திரிகை, பேரிச்சு, இலுப்பைப்பூ, முத்தக்காசு, மான்கொம்பு, ருத்திராக்கம், கல்நார், அதிமதுரம் சடாமாஞ்சில், சாத்திரபேதி, சாதிக்காய், பூநாகம் கோரோசனம், பச்சைக்கற்பூரம், சந்தணம், முசுறுமுட்டை சம அளவு எடுத்துப் பொடித்து வெந்நீர் விட்டரைத்து பேரிச்சங்காயளவு உருட்டி உலர்த்திக் கொள்ள வேண்டும்.

அளவு: 1 மாத்திரை

அனுபானம்: பசும்பால், தாய்ப்பால், தேன், இஞ்சிச்சாறு, மாதுளைச்சாறு, கரும்புநீர்.

தீரும் நோய்கள்: சன்னி, சுரம்.

குறிப்பு: ஒரு செய்முறையில் ஒரு சரக்கு இருமுறை கூறப்பட்டிருப்பின் இருமடங்கு சேர்க்க வேண்டும் என்பது பொதுவிதி. இம்மாத்திரையில் சந்தனம் இருபங்காக சேர்க்கப்பட்டுள்ளது.

முசிறுமுட்டை தைலம்

தூதுவேளை, எருக்கு, அவுரி, குதிரைவாலி, வெள்வேல், சிற்றாமுட்டி, நொச்சி, கொடிவேலி, முருங்கைவித்து, ஆடாதோடை, சாரணைவேர், பூநாகம், முசுறுமுட்டை, திப்பிலி, பெருங்காயம், பூண்டு, மிளகு, துரிசு, கந்தகம், நேர்வாளம், வெந்தயம், கடுகு, சீரகம், சீனாக்காரம்

ஆகியவற்றை வகைக்கு 10 கிராம் எடுத்து கடைச்சரக்கு, தாதுச் சரக்குகளைத் தனித்தனியாக இடித்துச் சூரணித்து அவ்வெடைக்கு வேப்பநெய் எடுத்து கொதிக்க வைத்து அதில் மேற்படி சரக்கு சூரணங்களை தூவி காய்ச்சி இறக்கிக் கொள்ள வேண்டும்.

பணவெடை (488 மி கி) உள்ளுக்கு கொடுத்து மேற்படி தைலத்தை நசியம், அஞ்சனம், துவாலை செய்ய குதிரைவலி, முயல்கண்ட வலி, சன்னி முதலியவை தீரும்.

மேலும் முசுறுமுட்டை, விசயசுந்தரி தைலம் போன்றவற்றில் சேரும். அன்றியும் பெரிய நோய்களில் நோய் தீர்த்து வலிமை உண்டாக்கும் மருந்துகளில் முசுறுமுட்டை சேரும்.

இதனை,

"ஆகியநோய் திண்மையணுகு நிலையா வாரைச்
சாகரத மிப்பிமுத்து தக்கோலம் — வாகாய்
உபதையுற வமைத்தங் குண்ட வுடனை
பிபிலிகையெச் சத்திலறும் பெய்"

– தே.வெ

எச்சம் — என குறிப்பிடுவது முட்டை

முசுறு முட்டையில் தைல மிறக்கி உபாயமாய் நிலாவாரைச் சாற்றுடனும் முத்துசிப்பி பற்பமும், தக்கோலமும் கூட்டி மருந்தாக்கியுட் கொள்ள பேய் போலாட்டும் நோய் தீர்ந்து வலிமை உண்டாகும்.

முசுறுமுட்டை தைலம்

"நில நாகமரை நாழியாய் முயிற்றண்டமுந்
நிறையொக்க வொரு சட்டியிற்
பலமாக வொன்றாய் வறுத்தே சிவக்காத

பருவத்தே நிம்ப வெண்ணெய்
நலமாகவே காய்ச்சி வெடிபதந் தன்னிலே
நற்சரக்கது சொல்லுவாம்
பெலமான காயம் வசம்புநற் கந்தகம்
பேசரிய வெள்ளுள்ளியே
வெளுத்தலிதாங் களிவையொன் றிருகழஞ் சாக
மெத்தெனப் பொடிசெய் திட்டே
அழுத்தவப் பொடிதன்னை யெண்ணெயிற் றூவியே
யதிகமுடனே துளாவி
முழுத்த பொன்னிறமாக வருபதந் தன்னிலே
மூடியே புகையை விட்டு
விருப்பமுட னுள்ளுங் கொடுத்துப் பொருத்தியிட
வேசன்னி வலியோடுமே"

– ப.ரா.சே

பூநாகம்—1 நாழி, முசுறுமுட்டை—1 நாழி எடுத்து சட்டியிலிட்டு சிவக்காமல் வறுத்து வேப்ப நெய்விட்டு வடிக்கின்ற பருவத்தில் காயம், வசம்பு, கந்தகம் வகைக்கு 6 கிராம் வீதம் எடுத்துப் பொடித்துத் தூவி நன்கு கிளறி, நன்கு சிவக்கும் பருவத்தில் தைலத்தை இறக்கி ஆறவிட்டு எடுக்க வேண்டும்.

200 மி.கி. முதல் 400 மி.கி அளவு உள்ளுக்கும் கொடுத்து மேலுக்கும் பூசிவர சன்னி, சுரம், வலி தீரும்.

சுர சன்னித் தைலம்

"சுரத்தினிலே மந்தமுடன் றலைகனப்பு மயக்கஞ்
சுரமொருகாற் காயும் பின்னொருதான் மெத்தென்னும்
உரத்திடுமெய்ச் சுழற்சியுடன் பார்வையதும் வேறா

152- 2 - 5a

முட்டணமா நாடியொரு நிதானத்தி னில்லா
வருத்துமிது சுரசன்னி யாகுமிதற் குள்ளி
வசம்பவுரிவேர் பூநாகம் முசுறுமுட்டை நிம்ப
வெண்ணெய் தனிற்கொதித் துவர்க்கத்
தினகரன்மு னிரு ளென்னத் தீர்ந்தகன்று போமே"

- ப.ரா.சே

உள்ளி, வசம்பு, அவுரிவேர், பூநாகம், முசுறுமுட்டை சம அளவு எடுத்து வேப்பநெய்யில் போட்டு காய்ச்சி பூச சுர சன்னி தீரும்.

முயிற்றுக் கற்கம்

"முசுற்றுமுட்டை பூநாக முந்திரி கைக்கனி பேரிஞ்சு
பசித்தோர் செப்பு மிளகுள்ளி பழகுஞ் சந்தம் பூசினிப்பூ
முசித்தே பூணு முருக்குவித்து முதிர்ந்த கலையின் கொம்பதுவும்
நசுக்கிக் கொடுக்க முலைப்பாலி னன்றாய்த்தீரு முட்குத்தே"

- ப.ரா.சே

முசுறுமுட்டை, பூநாகம், முந்திரிப்பழம், பேரிச்சு, மிளகு, பூண்டு, சந்தனம், பூசணிப்பூ, முருக்கன்வித்து, கலைக்கொம்பு ஆகியவை சம எடை எடுத்து தாய்ப்பாலில் அரைத்துக் கற்கமாக்கி தாய்ப்பாலில் கலந்து கொடுக்க உள் வீச்சு தீரும்.

முசுறு முட்டை தைலம்

முசுறு முட்டை, மரமஞ்சள், காக்கட்டான்பூ, கருஞ்சீரகம், காட்டுசீரகம், நன்னாரி, சந்தனம், கோட்டம், இந்துப்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, வசம்பு முதலியவற்றை சம எடை எடுத்து ஆடாதோடை சாறு விட்டு அரைத்து கல்கம் செய்து கற்கத்தின் எடைக்கு 4 பங்கு எள்நெய்,

ஆடாதோடைசாறு, தாய்பால் இவற்றை ஒன்று சேர்த்து மிருது பாகத்தில் வடித்துக் கொள்ள வேண்டும்.

இத்தைலத்தை நசியமிடவும், அஞ்சனமிடவும், துவாலையிடவும், செய்யின் சுரம், சன்னி மூர்ச்சை, வாதம் முதலியன தீரும்.

முசுறு முட்டை சுரசம்

முசுறுமுட்டை, வெற்றிலை, சிற்றரத்தை, சுக்கு, முருங்கைப்பட்டை, மாவிலங்கப்பட்டை வகைக்கு சம எடை எடுத்து அரைத்துப் பிழிந்து சாறெடுத்து சுரசம் செய்து அதில் 1/9 குன்றி கஸ்தூரி சேர்த்து காலை, மாலை 2 வேளை 3 நாள் கொடுக்க குழந்தைகட்கு காணும் சன்னி, மாந்தம் தீரும்.

முள் எலி
எலிமுள் (முள்ளெலி)

(Hemiechinus auritus)

வேறு பெயர்கள்

"கானகத்தின் சேமகன் கடிவளைக் குடியோன்
வானொத்த பூனைக்கு மருவிய சத்துரோன்
ஊனொத்த முள்ளூறு சுண்டெலி
தேனொத்த முள்ளெலி செப்பிய நாமமே"

– ச.மு.நி

முள்ளெலி, முள்ளூற்ற சுண்டெலி, பூனைக்குச் சத்துரு, வளைக்குடியோன் என பல பெயர் பெறும் முள்ளெலி மருத்துவத்தில் பயன்படுகிறது.

இது தவிர மூஞ்சூறு என அழைக்கப்படும் ஓர் வகை எலியும் மருத்துவத்திற்காகும். நூற்களில் சுந்தரி எனும் பெயரில் விளக்கப்படுகிறது. மூஞ்சூறு பயன்படுத்தி அனேக தைல முறைகள் கூறப்பட்டுள்ளன. இதற்கு ஆகு, கோளை என்ற வேறு பெயர்கள் உண்டு.

இவ்விரு எலிகளின் இறைச்சி, முள்ளெலியின் முள்ளுடன் கூடிய தோல் ஆகியவை மருத்துவத்திற்கானவை.

முள்ளெலியின் குணம்

"சீதமையங் குன்மஞ் செறிமூலம் வித்திரிதி
பேதி தொந்த ரோகம் பீலிகமும் போந் — தாதுவுமாஞ்
சேருமுதிரமது தேகமெல்லாம் பரவுஞ்
சாருகின்ற முள்ளெலிக்குத் தான்" *– ப.கு.சி.*

முள்ளெலியால் குன்மம், கபநோய், மூலம், பேதி, பீலிகம் தீரும். தாது விருத்தியாகும்.

சுந்தரி எலியின் குணம்

“எலியிறைச்சி குன்மம் பீலிக முரநோய்
நலி வித்திரதிப்புண் ணமைச்சல் — மெலிவோடு
மீது மட்டிடாப்புளக மேவிச் செய்யும் புணரத்
தாதுவுக்கும் புட்டி தருந்தான்”

– ப.கு.சி

குன்மம், பீலிகம், மார்பு நோய், வித்திரதிப்புண் தீரும். தாது விருத்தியாகும்.

முள்ளெலி தைலம்

1. இண்டு, இசங்கு, கண்டங்கத்திரி, தூதுவளை, வகைக்கு 25 கிராம்
2. தைவேளை, குப்பைமேனி, வேலிப்பருத்தி, கொளுஞ்சி, இவைகளின் சாறு வகைக்கு 50 மி.லி.
3. சதாவேரி, பூண்டு, கடுக்காய், மாசிக்காய், தான்றிக்காய் வகைக்கு 20 கிராம்
4. இலுப்பை பிண்ணாக்கு — 10 கிராம்
5. சுக்கு, திப்பிலி, அக்கராகாரம், திப்பிலிமூலம், சிற்றரத்தை, வகைக்கு 5 கிராம்
6. முள்ளெலி — 1
7. வேப்பநெய் — 2 லிட்டர்

செய்முறை

முள் எலியை குடல் மட்டும் நீக்கி கழுவி சுத்தப்படுத்தி இடித்துக் கொள்ள வேண்டும்.

எண். 1—ல் உள்ள சரக்குகளை இடித்து 1600 மி.லி. நீர்விட்டு காய்ச்சி 200 மி.லி — யாக குறுக்கி வடிகட்டிக் கொள்ள வேண்டும்.

எண். 3, 4, 5—ல் உள்ள சரக்குகள் அனைத்தையும் இடித்து சூரணித்து கற்கமாக அரைத்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

பின் முள் எலி, சாறு, கற்கம், குடிநீர், வேப்பநெய் அனைத்தையும் ஒன்றாக கலந்து அடுப்பேற்றி சிறு தீயாக எரித்து மணற் பதத்தில் வடித்துக் கொள்ள வேண்டும்.

அளவு: 5 — 15 மி.லி.

தீரும் நோய்கள்: இருமல், காசம், ஈளை, கயநோய்

ஆயட்காலம்: 1 ஆண்டு

முள்ளெலியைச் சுத்தம் செய்து கறியைப் பசு நெய்யில் வேக வைத்து கொடுக்க கக்குவான் தீரும்.

தோலை சுட்டு கரியாக்கி தேனில் கொடுக்க இருமல் தீரும்.

மூஞ்சுறு நசியம்

சுந்தரி, பச்சைபாம்பு, கீரிக்குளம்பு, சாரணைவேர், அவுரிவேர் உலர்த்திப் பொடித்து சூரணத்தை நசியமிட பாம்புகடிவிடம் தீரும்.

கொடிவேலிவேர், எருக்கு, சிறியாநங்கை, சுந்தரி தைலம், உள்ளி, வசம்பு, எள்நெய் சேர்த்துக் காய்ச்சி பாம்பு கடிகட்கு தைலத்தால் குடோரி இட தீரும்.

இரசப்புகை:

இரசம், மூஞ்சுறு உலர்ந்தது, வசம்பு, நேர்வாளம், துருசு, காயம், முசுறுமுட்டை, கருடன் முட்டை, வெள்ளை காக்கண வேர், கவுரி படாணம், அவுரி, மிளகு, உள்ளி, கந்தகம் சம எடை எடுத்து எருக்கம் பால்விட்டு அரைத்துத் துணியில் தடவி கழுதைப் பாலில் தோய்த்து உலர்த்தி திரியாகச் செய்து கொள்ள வேண்டும்.

பாம்பு கடிவிடத்தில் புகை குழலில் திரியை செலுத்தி எரித்து மூக்கினுள் குழலை வைத்து புகை காட்ட மூர்ச்சை, சன்னி தீரும்.



முள் எலி

LONG –EARED HEDGE HOG

General Characteristics

Hedge Hogs are easily distinguished by their spines, which are hollow hairs made stiff with keratin. Their spines are not poisonous or barbed and unlike the quills of a porcupine, cannot be easily be removed from the animal.

Behavious

Although Hemiechinus auritus possess sharp spines on its back that protect is from predators it is also able to run very fast.

Distribution

They inhabits Egypt, Asia Minor, Afghanistan, parts of India, Russian Turkestan South-eastern Russia. Chinese, Turkestan and Mangolia.

They are domesticated and used in Siddha Medicine.

ஓணான்

Calotes versicolor

இதில் பல வகைகள் உண்டு. மருத்துவத்தில் பச்சோந்தியே சிறப்பாக சொல்லப்பட்டுள்ளது. ஆயினும் தற்காலத்தில் அனைத்து வகைகளும் பயன்படுத்தப்பட்டு வருகிறன்றன. இதன் தோல், தலை, குடல், கால், வால், நீக்கி கழுவி எடுத்துக் கொள்வதே சுத்தியாம். இது பலவகை வலிப்பு நோய்கட்காகும் மருந்துகளில் சேரும். இதன் நெய்;க்கு இசிவகற்றி செய்கை உண்டு.

மருந்து முறைகள்

சாதிக்காய், இலவங்கம், புளியம்வித்து, தாமரைமொக்கு ஆகியவை வகைக்கு 5.1 கிராம், இரசம், 488 மி.கி. சேர்த்தரைத்து ஓணான், தலை, வால், தோல், குடல் நீக்கி சுத்தித்து அதனுள் மேற்படி அரைத்த சரக்கை வைத்து தைத்து பசு நெய்யில் பொரித்து கல்வத்திலிட்டு அரைத்து குன்றி போலுருட்டி நெய்யில் கொடுக்க ஆண்மை பெருகும்.

ஓணான் தைலம்

வீரம், பூரம், கந்தகம், இலிங்கம், தாளகம், மனோசிலை, பால்துத்தம், துருசு, வெள்ளை பாடாணம், பொடித்த வெங்காரம், நவச்சாரம், படிகாரம் வகைக்கு 5.1 கிராம் எடுத்து தனித்தனியே சுத்தித்து கல்வத்திலிட்டு அரைத்து உரித்த பூண்டு 175 கிராம் சேர்த்து நன்கு மெழுகு பதம் வரும் வரை அரைத்து வழித்து ஒரு சீலையில் தடவிக் கொள்ள வேண்டும்.

மூன்று பச்சோந்தியைப் பிடித்து, சுத்தித்து, சுடர் தைலக் கருவியின் முனையில் கட்டி அதன்மேல் மருந்து தடவிய சீலையைச் சுற்றி இறுக்கி கம்பி கொண்டு கட்டிக் கொள்ள வேண்டும்.

அதன் முனையில் தீயைப் பற்ற வைத்து அதன் மேல் 525 மி.லி. வேப்ப நெய்யைச் சிறிதுசிறிதாக விட்டு வரவேண்டும். கருவியின் அடியில் பாத்திரத்தை வைத்து வழியும் தைலத்தைச் சேகரித்து, மடக்கி, மீண்டும் சுடரின் மேல் ஊற்றிவர வேண்டும். சுடராகத் தைலம் இறங்கும் பக்குவத்தில் அனைத்து தைலத்தையும் சேகரித்து, 10.2 கிராம் சுத்தித்த நேர்வாளத்தை இச்சுடர் தைலம் விட்டு நல்ல மயனம் போல் அரைத்து கலக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு: குழந்தைகட்கு ஒன்று முதல் ஆறுதுளி வரையிலும், பெரியவர்கட்கு 6 துளிக்கு மேலும் கொடுத்து வரலாம். இருப்பினும் நோயாளியின் வன்மை அறிந்து அளவை நிர்ணயம் செய்தல் வேண்டும்.

இதனை காக்கைவலி, முயல்வலி, இசிவு, மந்தம், இளம்பிள்ளை வாதம் முதலிய நோய்களுக்குக் கொடுக்கலாம்.

ஓணான் சுடர் தைலம்

பச்சை ஓந்தியின் தலை, வால், இவற்றை அறுத்து சுத்தித்து அதற்குள் இரசம், இரச கற்பூரம், கந்தகம் வகைக்குப் பலம் ஒன்று (35 கிராம்) போட்டுச் சீலையை வேப்பெண்ணெயில் நனைத்து ஓந்திக்குச் சுற்றி கதிரில் குத்தி, சுடர் தைலம் வாங்கவும். இதற்குவிட முக்கால்படி (1.5 லிட்டர்) வேப்ப எண்ணெய்யைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

1. இளம் பிள்ளை வாதத்திற்கு மேலுக்குப் பூச இது பயன்படும்.

2. சகல வலிப்புக்கும் கொடுக்கப்படும் சோதிரிஷி தைலத்தில், ஓணான் சேரும்.
3. ஓணானைச் சுத்தித்துப் பசு நெய் விட்டு பொரித்துக் கொடுக்க கக்குவான் தீரும்.
4. ஓணான் இரத்தம் ஒன்று அல்லது இரண்டு துளி கழுதைப்பாலில் கொடுக்க கருங்கிரந்தி தீரும்.
5. ஓணான் கொழுப்பை உருக்கி எடுத்துக் கொள்வதே ஓணான் நெய்.
6. ஓணான் நெய் இசிவகற்றி செய்கை உடையது.

ஓணான் நெய்யின் குணம்

"ஓணான்நெய் யுட்கொள்ள ஓங்கும் பிறவலிநோய்
காணாமற் றானோடுங் காரிகையே — வீணாக
மக்கடமை வதைக்கும் மாவலியுஞ் சந்நி சுரம்
திக்கற்றே யோடுந் திகைத்து"

– *பதார்த்த குணவிளக்கம்*

இதனை உட்கொள்ள இசிவு, சந்நிசுரம் தீரும். இதனையே, "ஓணாநெய்க்குக் காணாப்பிறவலி நோய்க் காணாது" என பதார்த்த குண சிந்தாமணி அடிகள் வலியுறுத்தும்.

ஓணான் / பச்சோந்தி

Habitat

Calotes sarnnas are found in trees or occasionally on smaller bushes.

Distribution

Calotes versicolor (Oriental Garden Liza is an agamid Lizard found in India (Andaman Island and particular common in Mainland of India).

Change of Color

The colouration is very variable, sometimes uniform brownish or greyish - olive or yellowish. Generally broad brown bands across the back interrupted by a yellowish lateral band.

Roll of skin

A calotes versicolor's colourful, beautiful is its true skin. Under the transparent outer skin are two cell layers that red and yellow pigment, or chromatophores are cell layers that blue and white light. Even deeper down is a layer of brown melanin (which gives human skin its various shades)

A calm calotes vericolor, may exhibit green because the somewhat contracter yellow cells allow blue - reflected light to pass through.

Conservation Status

Calotes versicolor is relatively common and found in a wider habits. They appear to adapt well to humans and are thus not endangered.

கடல் நுரை

Tadania ignis

கடல் நுரை என்பதன் கீழ் உலர்ந்த பவளப்பாறைகளும், கணவாய் ஓடுகளும் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் போகர் நூற்களில் கூறியுள்ளவாறு இலட்சணங்கள் மேற்படி சரக்குகட்குக் கிடையாது. கடல் நுரையின் தோற்றத்தைப் பற்றிக் குறிப்பிடுங்கால் ஆழ்ந்த கடல் தன்னில் இருந்து கரை ஒதுங்கி, நான்கு வண்ணங்களில் கிடைப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

இவை பற்றிக் கடலியல் துறையில் ஆராயும் பொழுது உயிரியல் தொகுப்பில் *Sponge* என்பதில் கடல் நுரை கூறப்பட்டுள்ளது. இது பல செல் உயிரினத்தை சேர்ந்தது. இருப்பினும் திட்டமிட்ட உருவ அமைப்பு கிடையாது. இவை கடலுக்கடியில் பவளப் பாறைகளைப் பற்றி வாழும். பற்றியுள்ள பவளப் பாறைகள் மடிந்து தாய்ப்பாறையினின்றும் பிரியுங்கால் அதோடு சேர்ந்து இவையும் கடலின் மேற்பரப்பிற்கு வந்து அலைகளால் கரையில் ஒதுக்கப்பட்டு மடிந்து சூரிய ஒளியால் உலர்ந்து கிடக்கும். இவை பல வகைகளில், நான்கு வண்ணங்களில் கிடைப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. முற்காலத்தில் ஆசியா கண்டத்தில் இது மருந்தாக பயன்படுத்தப்பட்டதாகக் கடலியல் நூல் கூறுகிறது. இவ்வகை நுரைகளில், *"FIRE SPONGE"* என்றொரு வகை குறிப்பிடப்பட்டுள்ளது. நுரை போன்ற அமைப்பை உடையதாயினும் உலர்ந்துவிடின் எளிதில் பொடிபடும் தன்மையுடையது. இவ்வகை கடல் நுரையே சித்த மருத்துவத்தில் கூறப்பட்டுள்ளது.

சித்த மருத்துவ நிகண்டில் கடல் நுரையைப் பற்றி குறிப்பிடுங்கால் அக்கினி கூர்மை என்றும் தீ நுரை என்றும், வாருதி நஞ்சு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடலியல் நூலில் நவீன ஆய்வின்படி கடல்நுரை அனைத்து வகைகட்கும் *(Antibiotic)* நுண்ணுயிர் கொல்லி செய்கை இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இவற்றில் மேற்கூறப்பட்ட *Fire Sponge* என்னும் நுரை வகை மிக அதிகமான மருத்துவ குணம் உடையது எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

சித்த மருத்துவ நூற்களிலும் கடல் நுரை பலவகை மருந்து முறைகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

மருத்துவ குணம் பொருந்தியிருப்பினும், கடல்வாழ் உயிர்கள் பலவற்றிற்கு இது நஞ்சாகும். இதனால் குறிப்பிட்ட சில வகை மீன்கள் மடிந்து விடுவதாகவும் கூறப்பட்டுள்ளது. மேலும் இவற்றைச் சேகரிக்கச் செல்லும் மீனவர்களுக்கும் இதனால் சில குறிப்பிட்ட துன்பங்கள் ஏற்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. இவற்றின் மேற்புறமுள்ள நுண்ணிய முட்கள் உடலில் படுவதால் தோலில் தாபிதம் ஏற்பட்டு புண் உண்டாகி, மிக்க எரிச்சல் தரும். இந்நோய் VROMO DISEASE என்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில், நுரை சேகரிக்கச் செல்லும் மீனவர்கள் துன்பப்பட்டதாகவும் ஆதார நூற்கள் கூறுகின்றன.

இதனாலேயே வாருதி நஞ்சு என்ற வேறு பெயரும் இதற்கு உண்டு.

“அக்குனிசால் வலையிற் றிரண்டதி
தக்கினித்; தீனுறை சாதகமாம் பிட
மக்கினி கூர்மை வாருதி விந்துவாம்
ஒக்கினிற் கடல் நுரையோதிய நாமமே”

– ச.மு.நி

அக்கினிசாலம், அலையில் திரண்டதி, தீநுரை, அக்கினி கூர்மை, வாருதி விந்து, வாருதிநஞ்சு என வேறு பெயர்கள் உண்டு.

பாற்கடல் கடையும் நிமித்தம் ஆதிசேடனின் வியர்வை திவலை கடலில் வீழ்ந்து கடல் நுரை தோற்றமாவதாக புராண கதைகள் கூறும். இவ்விதம் வீழ்ந்த திவலை நுரையாக கடற்கரையில் ஒதுங்குவதாக நூலில் கூறப்பட்டுள்ளது.

இதன் வண்ணங்கள் நான்கு விதம் ஆகும். இதனை போகர் 7000 அடிகளால் அறியலாம்.

"............ கடல் நுரையும் தோற்றமாச்சு

ஆழ்ந்த கடல் தனில் வீழ்ந்து கரையொதுங்கி

அலைந்துமதே கடல்நுரையு மாச்சுதாமே

நாழ்ந்துமதே நால் வருணத் தோடுங்கூடி

நலத்ததோர் பொன் வண்ணம் வெளுப்புமாகி

காழ்ந்துமே தான் கருப்புமாகி சிவப்புமாகி

காணவுமே வண்ணமது நான்குமாச்சே"

– போகர் 7000 (3ம் ஆயிரம்)

இந்நால் வகையில் கருப்பு நிற கடல் நுரை மத்தியம் எனவும், மற்றைய மூன்று வண்ண நுரைகளும் உத்தமம் எனவும் கூறப்பட்டுள்ளது.

இதனை,

"நான்குமது விதந்தன்னில் கருப்புகேளு

நலமில்லை மத்திபமாங் குணமுமாகும்

மூன்றுமேதான் மற்றமூன்றும் உத்தமந்தான்

மிக்கான் உடலுக்கு கந்ததாகும்"

– போகர் 7000

என்ற அடிகளால் அறியலாம்.

இந்நால் வகையில்,

வெண்மைநிற கடல் நுரை மாரணம் எனவும்

கருநிற கடல்நுரை சம்மா மாரணம் எனவும்,

பொன் வண்ண கடல்நுரை பாரணம் என்றும்,

சிவப்பு வண்ண கடல்நுரை சாரணம் என்றும்

பெயர் பெறும்.

இதில் சிவப்பு நிற கடல் நுரை இரசத்தை கட்டும் எனவும், பொன் வண்ண கடல் நுரை ரசத்தின் தோடங்களை நீக்கும் எனவும், வெள்ளை நிற கடல்நுரை நோய்களை நீக்கி காயசித்தியை கொடுக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது.

கடல் நுரையின் பொதுகுணம்

"போமேதான் சந்தி பாதங்க ளெல்லாந் தானும்

புகழ்ந்துமே தாது விருந்தி பலமுண்டாகும்

பேமேதான் மேகத்தை விரைந்து போக்கும்

மிகுந்ததோர் வாதபித்தங்கள்தாம் போகும்.

தேமேதான் உடலெரிவோடு கபமும் போகும்

செப்பரிய காசத்தைப் போக்குவிக்கும்

காமேதான் கடல் நுரையின் பண்புதன்னைக்

கண்டறிந்திக் கிரிகைதனைக் கருதிப் பாரே"

– போகர் 700

"..................கடனுரையோ

நேத்திரநோய் விரணம் நீடுகபங் குன்மமிவை

தீர்த்திடுந் தப்பாம லெனச் செப்பு".

– ப.கு.சி

கடல்நுரையால் சன்னிபாதம், மேகம், வாதபித்த ரோகம், உடலெரிவு, கபம், காசம், கண்ணோய், விரணம், குன்மம் தீரும்.

உடல் பலமும், தாதுவிருத்தியும் உண்டாகும்.

இது பலவகை கண்ணோய் மருந்துகளிலும், தைல முறைகளிலும், மாத்திரைகளிலும், சுண்ணமுறைகளிலும் சேரும்.

சுத்தி

கடலிலுள்ள உப்புகளில் ஊறி சுயமாகவே சுத்தியாவதால் பிரத்தியேகமாக சுத்தி கூறப்படவில்லை.

பயன்கள்

கடல் நுரையையும், சீனாக்காரத்தையும் சம எடை எடுத்துத் தேன் விட்டு அரைத்து, கண்ணிலிட கண் சிவந்து, வலித்து, பீளை, நீர்வடிந்து பார்வையை மந்தம் பண்ணும் நோய் நீங்கும்.

கடல்நுரை, அதிமதுரம், நெய்தற்கிழங்கு, சங்கு, சந்தனம், அரிசித்திப்பிலி, கோரோசனை, சிறுசெண்பகம், மஞ்சிட்டி, சடாமாஞ்சில், கிராம்பு, தாளிசபத்திரி, நீலாஞ்சனம் இவற்றைச் சம எடை எடுத்து பொடித்து கண்ணிலிட பில்லம், பித்த காசம், கண்ணீர் வடிதல் தீரும்.

"துருசு கடலினுரை மிளகு திப்பிலி தாரந்திரிபலையும்
அரிசனமா மிரோசனையும் ஆனதுத்தம் அதிமதுரம்
பரிசனமான தம்பப்பாலில் பைய அரைத்தே எழுதிவிடத்
தெரிசனமாகும் விழிபுகைச்சல் தீரும் உள்ள நோய்களுமே"

– அ.த.வி

துருசு, கடல்நுரை, மிளகு, திப்பிலி, அரிதாரம், திரிபலை, கோரோசனம், துத்தம், அதிமதுரம் சம எடை முலைப்பாலில் அரைத்து, கண்ணிலிட கண் புகைச்சல் தீரும்.

போகர் 700-ல் சொல்லப்பட்டுள்ள சண்டமாருத குழம்பு ஐந்தெண்ணை தைலம், ஆகியவற்றில் கடல் நுரை சேரும்.

கடல் நுரை, பிச்சிப்பூ, அஞ்சனக்கல், குங்கிலியம், மனோசிலை, இந்துப்பு, மிளகு, பூங்காவி ஆகியவற்றை சம எடை எடுத்துக் கொம்புத் தேனில் மைபோல் அரைத்து பசும்பாலில் குழைத்துக் கண்ணிலிட கண் ஊறல், துடிப்பு தீரும்.

அகத்தியர் நயனவிதி நூலில் கூறப்பட்டுள்ள பல அநேக கண்மருந்து முறைகளில் கடல் நுரை சேரும்.

கடல் நுரை பற்பம்

கடல் நுரையைக் கல்வத்திலிட்டுப் பொடித்து எருக்கம்பால் விட்டு இரண்டு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி அகலிலிட்டு மேல் அகல் கொண்டு மூடி புடமிட பற்பமாகும். (குன்றி அளவு) 130 மி.கி. இரண்டு வேளை வீதம் தேனில் கொடுத்து வர காசம் தீரும்.

வேறு

கடல் நுரையைப் பிரண்டைச்சாறு விட்டரைத்து, வில்லை செய்துலர்த்தி புடமிட பற்பமாகும்.

130 மி.கி (குன்றி அளவு) திரிகடுகு சூரணத்தில் இருவேளை கொடுத்துவர உதர ரோகங்கள் தீரும்.

கடல் நுரை

TEDANIAIGNIS (Fire Sponge)

Numerous kinds of colourful sponges grow in Coral reef area, where they are often attached to the stony structures of reef Corals.

The colour of sponges is involved either with algae which live in symbiosis with them in the majority of cases or with colouring substances. The following colouring substances have been found in sponges.

1. Sponsi Porphysin floridin	- Red
2. Uranidine	- Yellow, but easily change into blackish brown.
3. Lipochrome	- Yellow and coloring substances of unbrown group.

In ancient times sponges were used to stop bleeding as compresses for the cervix and boils, as pessaries and also a type of gas mask on a protection against diseases.

The high iodine content of (uptp 14% of the dry weight) dried of charred sponges was used as medicine.

The discovery of anti-biotics in sponges is credited to Nigrelli et at (1959) who isolated a white erystalline material from ethyl ether extracts of the red beard sponge-Microcina Prolifera.

Anti biotic substances were reported also in other sponges in 1960.

Active extracts from the fire sponge - Tedania ignis yielded eight antibiotic fractions.

Research on sponges indicates that the group possesses a wealth of biologically active material including anti-biotics, iehthyoloxic and Morphogenetic substances.

Classification

Domain	Eukanyota
Kingdom	Animalia
Phylum	Porifera
Genus	Tadania
Species	Ignis

The fire sponge is more than 12"(30 cm) wide, 12"(30 cm) high. Massive, Amorphous, usually lobed. Bright red or red-orange. Smooth with few large pores. The body is soft and easily torn and its toxins may discourage or predation.

Warning

Highly toxic. The sponge causes severe blistering and pain if touched with bare hands due to the presence of spicules. Since this and the Do-not-touch me Sponge, are both red, it is wise

to avoid touching any red sponge in subtropical waters. It may be fatal when mixed with blood.

Evolutionry Scenario

The sponges or poriferans (Poros - pora; ferro - bear) are animals of the phylum PORIPERA). Sponges are among the simplest of animals with no true tissues (parazoa), they lack muscles, nerves and internal organs.

Ecology

Sponges are world wide in their distribution, and range from waters of the polar regions to the tropical regions.

கணவாய் ஓடு

(CUTTLE FISH BONE)
(Sepia officinalis)

வடமொழியில் சமுத்திர பேனம் என்பது கணவாய் ஓட்டிற்குப் பெயர். இக்கணவாய் ஓடு ஒரு வகைக் கடல் மீனின் *(Cuttle Fish)* எலும்பாகும். இது ஓர் அங்குலத்திலிருந்து (2.5 செ.மீ) 10 அங்குல (25 செ.மீ.) நீளம் வரை தட்டையாய், ஒரு பக்கம் சுரசுரப்பு வாய்ந்ததாகவும், சீக்கிரம் பொடி படக்கூடியதாகவும், மற்றொரு பக்கம் சிறிது மிருதுவும், கடினமும் உள்ளதாயுமிருக்கும். இது வெள்ளை நிறத்தில் மட்டுமே காணப்படும். கணவாய் ஓடு நிகண்டுகளில் குறிப்பிடப்படவில்லை. சித்த மருத்துவ மருந்து முறைகளில் இடைப்பட்ட காலத்தில் கடல் நுரை என்பதாக மருத்துவ பயன்பாட்டில் சேர்க்கப்பட்டிருக்கலாம். ஆயினும், பிற மருத்துவ முறைகளில் இதை பயன்படுத்துவதுமுண்டு.

1. கணவாய் ஓட்டைப் பொடித்துக் காதில் தூவிவரக் காதில் வடியும் சீழ் நிற்கும்.
2. இதை, எலுமிச்சம் பழச்சாறு அல்லது பன்னீர்விட்டு நன்றாய் அரைத்து மேலுக்குப் பூசச் சொறி, தோலைப் பற்றிய பிணிகள் நிற்கும்.
3. இதன் பொடியைப் பல்பொடிக்கும், பாத்திரங்களைச் சுத்தம் செய்வதற்கும் உபயோகிக்கின்றனர்.
4. கணவாய் ஓட்டுத்தூளை நல்லெண்ணெயிலிட்டுக் காய்ச்சி காதில் சீழ் வடிதலுக்கு வழங்குவதுண்டு.
5. கணவாய் ஓடு, இந்துப்பு இவையிரண்டையும் பன்னீர்விட்டு அரைத்து அதைக் கண்ணிலிட்டுவரக் கண்ணோய் நீங்கும்.

நிகண்டுகளிலும், மற்றைய சித்த மருத்துவ நூற்களில் உபரசம், மற்றும் காரசாரத் தொகுப்பில் கணவாய் ஓடு குறிப்பிடவில்லை. ஆயினும் நுரை போன்ற அமைப்பை உடையதால் கடல் நுரை எனுமிடத்தில் கணவாய் ஓட்டின் பயன் மருத்துவ முறை உள்ளது.

கணவாய் ஓடு

General Characteristics

The cuttlefish sepia officinallis has been found in the Meditteranean, Noril and Baltic seas.

Cuttle Bone

Sepia officinalis posses an internal structure called the cuttlebone, which is composed of calcium carbonate and is porous, to provide the cuttlefish with buoyancy. Cuttlebones are traditionally used in SIDDHA system of medicine and by jewellers and Silversmiths as moulds for casting small objects. Cuttlefish are caught for food in meditterranean south and east Asian cultures. In east Asia, fried cuttle fish is a popular convenience snack food.

Cuttlebone, also known as cuttlefish bone, is a hard, brittle internal structure (an internal shell) found in all members of the family Sepiidae, commonly known as cuttlefish, a family within the cephalopods.

Cuttlebone is composed primarily of aragonite.

கழுதை வண்டு

Anthia sexguttata

“தானென்ற மாந்தளிர்க்கல் படிகக்கல்லு
தவளை யொடு கடற்பாசி சாளிகிராமம்
கானென்ற கழுதைவண்டு நாகப்பச்சை”

– போகர் 7000

உபரசத்தில் ஒன்றாகக் கழுதை வண்டு சொல்லப் பட்டுள்ளது. அறுபுள்ளி வண்டு என்றும் நூற்களில் பேசப்படுகிறது. இவ்வண்டு முதுகில் ஆறு வெண்புள்ளிகளை உடையது.

இதனை,

“வண்டான வட்டமாம் வண்டிலறு புள்ளி
தண்டா முதுகின்றானே யிருந்திடும்”

என்ற சட்டமுனி நிகண்டு 282 பாடலால் அறியலாம்.

இது காடுகளில் முட்சங்கன் செடிகளில் அதிகமாக வாசம்செய்யும். இனவிருத்தி செய்யும் வகையில் பெண் வண்டுகளின் இறக்கைகளின் அடியில் முட்டைகளைச் சேர்த்து வைத்து அடை காத்துக் கொள்ளும்.

இவ்விதம் இதன் முதுகில் அரிசியை போல்விழும் முட்டை வண்டுக்குள்ளரிசி எனப்படும். இது கையில் பட்டால் புண்ணுண்டாக்கும். இதனால் துருசு நீறும். எனவே ஆதி மருந்து முறைகளிலும் குரு முடிப்பிலும் பெரும்பாலும் இவ்வண்டும், முட்டையும் இடம்பெறும்.

போகர் 7000-ல் சொல்லப்பட்டுள்ள சவுக்கார சுண்ணம், துரிசுச் செய்நீர் எனும் முறைகளில் இதன் முட்டைகள் சேரும்.

துரிசுக் குரு

"குருவாய்த் துரிசியைக் கூறிடக் கேளுங்கள்
அருவாகு மண்டச் செய்நீரில் தோய்த்திடு
திருவாகும் வங்கம் செயமான சுண்ணமும்
கருவாகும் வீரமுந் தானான சூதமே
சூதத்துடன் சுகமான வெங்காரம்
போதத்துடனே புகழானகற்பூரம்
வாதத்துடனே வளர்ந்த குருவண்டு
நாதத்துடனே நல்லித்து கூட்டிடே
கூட்டிடு வறு பிள்ளி வண்டுள்ளே
நீட்டிடு முட்டையை நேரே யெடுத்திடு
ஆட்யெல்லாம் புது துரிசின்மேல்
பூட்டிடக் காய்ந்தபின் புகழ்க்கேளுமே
அப்பிடுமேலே வாதிவழலையைச்
செப்பிடு சுன்னமாஞ் சீலையுஞ்சுத்தி
கொப்பிடு வங்க முருக்கித் துவைச்சிடு
கொப்பி துரிசிக் குரு முறையாகுமே"

– ச. மு. நி.



கழுதை வண்டு

Anthia sexguttata

This is a single Indian representative. This is one of the most striting beetles of the plains, black with six large white spots. It is wingless and found wholly on the soil spending the winter in holes. A few kept in captivity lived for some months, fed daily with from one to two hundred grasshoppers. Eggs were laid but failed to hatch. This is one of the few carabids easily identifiable.

கரடி

Ursus thibetanus

வேறு பெயர்கள்

குடாவடி, எண்கு,

"பாதாளபேதி பாம்புண்ட சித்தனாம்
வேதாள புத்தை விளங்க வுறுஞ்சுவோன்
யேதாளமான எழுமலைராசன் தான்
ஆதாள மன்ன னகண்ட கரடியே"

– ச.மு.நி

பெரும் கரையான் புற்றுகளில் உள்ள கரையான்களைப் புற்றின் துவாரங்கள் வழியாக உறிஞ்சி உண்ணுவது இதற்கு விருப்பமான உணவாகும். அதனால்தான் புத்தை உறிஞ்சி வேந்தன் எனப்படுகிறது.

"வெண்பல்லம், வேகவுளி, தண்பல்லம், வல்லூகம்
செங்கண் பாதாளவேதியானோன் பாம்புண்ட
சித்தன், புத்தை உறிஞ்சும் வேந்தன், மலைராசன்
ஆதாளி மன்னன்"

எனப் போகர் நிகண்டு கூறும்.

இது காடுகளில் வசிக்கும் மிருகம். இதன் பல், மயிர், நகம், பித்து கொழுப்பு ஆகியவை மருத்துவத்தில் பயன்படுகிறது. கண் நோய்கட்காகும் இரத்தினாதி மாத்திரை, நவரத்தினாதி மாத்திரை முதலியவற்றில் கரடியின் பல் சேரும்.

கரடி மாமிசத்தின் குணம்

"காணுமுடல் தளர்ச்சி கக்கிருமல் மூர்சையுடன்
தோகைக்கீல்வாதந் தொலைந்து போம் கோணுகின்ற
மாவலியுங் காசம் போம் வன்கரடியின் கறியை
ஆவலுற் றுண்ணு மவர்க்கு"

– ப. கு. சி.

கரடி கறியினால் உடல் தளர்ச்சி, கக்கிருமல், மூர்ச்சை கீல்வாதம் காசம், வலிநோய் தீரும், உடல் பலமுண்டாகும்.

கரடி பித்தின் பயன்

"காடியி னூறக் கடிப்பகையுந் சேர்த்தரைத்துப்
போட ரவியிற் புடம் போல — வாடியின்
உண்கடு நீ ரிற்புனலி லுப்புசங்கா மாலையறும்
எண்கினது பிச்சு வசையில்"

– தே.வெ

எண்கு – கரடி

கரடியின் பித்தை காடியில் ஊற வைத்துப் பின் அதனுடன் வேம்பு வித்து சேர்த்தரைத்து, வெயிலில் உலர்த்தி பொடித்து, கடுக்காய் குடிநீரில் கொள்ள, உப்புசம், தண்ணீரில் கொள்ள காமாலையும் தீரும்.

1. கரடி எச்சத்தின் பயன்

"மூன்றுமொரு நிறையாய் முக்காவேளைச் சாற்றில்
ஊன்ற வரைத்ததை யுண்டைசெய்து — தேனில்
விடாமலொரு மண்டலமுண் வெண்குட்டமாறு
குடாவடியெச் சங்கடுகு கொள்" – தே.வெ

கரடி மலம், கடுகு, கொள் மூன்றையும் சம எடை எடுத்து முட்காய்வேளை சாற்றில் அரைத்து இலந்தை விதை அளவு உருட்டி உலர்த்தி நாள் ஒன்றுக்கு இரண்டு வேளையாக ஒரு மண்டலம் கொள்ள வெண் குட்டம் மாறும்.

2. கரடி கொழுப்பின் பயன்

"வாதப்பிடிப்போடு வந்த கக்குவானகலும்

ஓதக்காலின் வெடிப்பும் ஓட்டமிடும் — பூதலத்தில்

காட்டுக்கரடியிற்காண் கொழுப்பை தானுருக்கி

ஊட்டிற் குணமாக்கு முன்"

– பதார்த்த குண விளக்கம்

கரடியின் கொழுப்பை உருக்கி நெய்யை பூச வாதபிடிப்பு, கால் வெடிப்பு கக்குவான் தீரும்.

இதன் பல்லை தூதுவளைச் சாறுவிட்டரைத்து நான்கு முறை புடமிட பற்பமாகும். ஆண் கரடிப்பால் பற்பத்தை பனங்கள்ளில் கொடுக்க மகோதரமும், பெண் கரடிப்பால் பற்பத்தை பனங்கள்ளில் கொடுக்க சன்னி நோயும் தீரும்.

BEAR BILE

Ursodeoxycholic acid is found in bear bile

Ursodioal, also know as uesodeoxycholic (UDCA), is one of the secondary bile acid, which are metabolic byproducts of intestinal bactiria. Primary bile acids which are produced by the liver can be metabolized into secondary bile acids by intestinal bacteria. Primary and secondary bile acids help the body to digest fats. Ursodeoxycholic acid helps regulate cholesterol

by reducing the rate at which the intestine absorbs cholesterol molecules.

While some bile acids are known to by colon tumor promoters (eg. deoxycholic acid), others such as ursodeoxycholic acid are chemopreventive, perhaps by inducing cellular differentiation and / or cellular senescence in colon epithelial cells.

Ursodeoxycholic acid has also be shown experimentally to suppress immune reponse such as immune cell phagocytosis. Increased quantities of systemic (throughout the body, not just in the digestive system) ursodeoxycholic acid can be toxic.

Bile acids are important signalling molecules that help regulate the regrowth of liver tissue.

கலைமான்

Antilope cervicapra

கலக்கொம்பு, கலைமான் கொம்பு, இரலை மருப்பு, திரி மருப்பு என பேசப்படும்.

மான் இனங்களில் கலைமான் ஒரு வகை. இதற்கு இரலை, வச்சயம், புல்வாய், கருமான் என வேறு பெயர்கள் உண்டு.

இவ்வகை மான் தென்னாட்டிற்கு உரியது. கருப்பு நிறத்தில் காணப்படும். இதன் கொம்புகள் சுழற்றியாக வளரும் இயல்புடையவை. எனவே இவ்வகை மான் திரி மருப்பு இரலை என இலக்கியங்களில் பேசப்படுகிறது.

உயிரியலின் படி இவ்வகை மான் கொம்புகள் மற்ற மான் கொம்பினின்றும் மாறுபட்டது.

புள்ளி மானைப் போல இது கொம்புகளை உதிர்க்காது. இளமை தொடங்கும் பருவ கால முதல் வளரத் தொடங்கும் கொம்பானது சிரத்திலுள்ள என்புகளின் மாறுபட்ட வளர்ச்சியே என உயிரியல் நூல் கூறுகிறது.

இதன் கறி, கொம்புகள், குளம்புகள் மருத்துவத்தில் பயன்படுகிறது.

கறி குணம்

"மேகப் பிடிப்பகலும் வெட்டை யனலுமறும்
போகமுறும் பலனும் பூவையரே — தேகத்திற்
பித்த வாதங்களறு பேராவழலையும் போந்
தத்து கலைமான் கறிக்குத் தான்".

– ப.கு.சி

கலைமான் கறியினால் மேகப் பிடிப்பு, வெட்டை, அனல், தீரும். போகமும், தாது விருத்தியும், உடல் பலனும் உண்டாகும்.

கலைக்கொம்பின் குணம்

“அவயவத்தின் வெப்பமதியத்தி மேகங்
கவிழ் திரிதோடம் பெருந்தாகங் களிவைதா
ணிலைக்குமோ மார்புநோய் நேத்திரநோய் நீங்கும்
கலைக் கொம்பாற் பேயுமிலைக்காண்”

– ப.கு.சி

உடல் வெப்பம், அத்திமேகம், திரிதோடம், தாகம், நேத்திரநோய், மார்புநோய் நீங்கும். மான்கொம்பால் மனக்கிலேசம் நீங்கும்.

கலைக் கொம்பின் பயன்

“சாடுவார் வாகடர் வெண் சாம்பராய்த்தேனுடன் கை
யாடுவார் கண்டாவிழ்தமாய் — நாடி
அரலை முதற் கொப்புளத்தை யாச்சியத்திற் காய்ச்சி
இரலை மருப்பாற் பிணியை யே”

– தே.வெ

கலைக்கொம்பு பற்பத்தை நெய்யுடன் சேர்த்து காய்ச்சி கழலை, கொப்புளம் இவற்றில் போட தீரும். பற்பத்தைத் தேனுடன் கலந்து கண்டாவிழ்தமாய் பயன்படுத்துவர் என்பதாம்.

“வாங்குஞ் சுயோதனனார் மாலையிரலை மருப்
போங்கு மிதனதனை யொன்றாகத் — தேங்கு
வருடை சிறுநீரை வார்த்தரைத்துப் பூசக்
கரடப்ப மீறானைக் கால்”

– தே.வெ

நந்தியாவர்த்த மலருடன் கலங்கொம்பிழைத்த சந்தனம் கூட்டி ஆட்டுநீர் விட்டரைத்து பூசிவர ஆனைக்கால் கரடுகள் தீரும்,

கலைக் கொம்பின் சூரணம்

தினமான குழந்தைகட்கு வாந்தி கண்டால்

சிங்கியென்ற கலைகொம்பு திப்பிலியுங் கூட்டி

இனமாக அதிவிடயங் கூடச் சேர்த்தே

இன்பமுடன் பொடி செய்து தேனிலிட்டால்

கனமான வாந்தியெல்லாம் விட்டுப்போகும்.

– யா.வை.சி

கலைக்கொம்பு அராவியதூள், திப்பிலி, அதிவிடயம் ஆகியவை சமஎடை எடுத்து நன்கு பொடித்து தேனில் கொடுக்க குழந்தைகட்கு காணும் வாந்தி தீரும்.

கலைக்கொம்பு அராவியதூள் 10 கிராம்,

நன்னாரிவேர்த்தோல் — 10 கிராம்

பூ நாகம் — 5 கிராம்

மூன்று சரக்குகளையும் சுத்தித்து கலை கொம்பு ஊறிய நீரில் அரைத்து கரைத்து 1/8 படி வீதம் கொடுக்க அம்மை நோயில் காணும் நீர்த் தாரையில் இரத்தம் காணுதல், வைசூரிபுண், சந்நி தீரும்.

கலைக் கொம்பு ஊறல் குடிநீர்

கலங் கொம்பை ஊறவைத்து நன்றாய் கழுவி அராவிய தூள் — 70 கிராம் எடுத்து வெந்நீரில் போட்டு ஊறவைத்து அந்த நீரை கொடுக்க வைசூரி நோயில் காணும் தாகம் தீரும்.

"கலங்கொம்பைத் தேனிலுரைத் திடவாணி
குருப் பூ போமே"

கலங் கொம்பை தேனிலுரைத்துக் கண்ணிலிட கண்பூ தீரும்.

"சொல்வீர் கருப்புக் கட்டியுடன்
துய்யகலையின் கொம்பி ழைத்து
நல்வீ ரரைத்துக் குடிப்பீராய்
நாடும் பிரமியம் நீர்க்கடுப்பு
கல்வீர் கண்டு யோடிவிடுங்
கான லுடம்பு தேறிவிடும்
அல்வீர் சிவனார் தன்னானை யாகும்
மாறிடுமே"

– **தே.வை.ச**

கலங் கொம்பை இழைத்த சந்தனம் சம எடை பனை வெல்லம் கூட்டி யரைத்து குடிக்க பிரமியம், நீர்க்கடுப்பு தீரும். உடல் வன்மை உண்டாகும்.

கலைமான் கொம்பை இழைத்துக் கோவை சாற்றில் ஒரு நாள் ஊறவைத்து மறுநாள் நன்றாயக் காயவைத்து ஓட்டிலிட்டு சீலைமண் செய்து 50 வரட்டியில் புடமிட பற்பமாகும்.

அளவு: 50 மி.கி. முதல் 100 மி.கி

அனுபானம்: பசுநெய், தேன், பசுவெண்ணெய்

தீரும் நோய்கள்: வெம்மை நோய்கள், இருமல், மேக காங்கை தீரும்.

இலவங்கம், கடகரோகிணி, ஏலரிசி ஆகியவை சம எடை வறுத்து, சூரணத்தின் எடைக்கு சந்தனம், கலைக்கொம்பு அராவியத்தூள் சேர்த்து, வெந்நீர் விட்டரைத்து கற்கமாக்கி, கொடுக்க சன்னி, மிகுந்த வியர்வை, பித்தம், மயக்கம், மூர்ச்சை தீரும்.

– **தே.வை**

கபாலாதி மாத்திரை

"மாண்டார் தலையோடுடொரு நாலும் மண்ணிற் பிறந்த கலக்கொம்பு

பூண்டார் துத்தம் ஒரு நாலும் புதிய சீனாக்காரமுடன்

நீண்டார் நிம்பச் சாறுதனில் நேகவரைத்தே யுண்டை செய்து

தூண்டார் நொந்த கண்ணிலிடத் துய்யப்படலம் பூப்போமே"

– அ.ந.வி

தலை ஓடு	—	4 பங்கு
கலைகொம்பு	—	1 பங்கு
துத்தம்	—	4 பங்கு
சீனாக்காரம்	—	1 பங்கு

எடுத்து, பழச்சாறுவிட்டு அரைத்து மாத்திரையாகத்திரட்டி, தாய்ப்பால், நீரில் இழைத்துக் கண்ணிலிட கண் பூ மாறும்.

கலைக்கொம்பு பற்பம்

"கலைக்கொம்பைக் காணியிலை கவசங் கட்டிக்
கனபுடமா யிட் டெடுத்துக் கனிந்துட் கொள்ள
சலம்பெருகு மேகமுதல் ரெத்த பித்தஞ்
சத்திவலி குன்மம் நெஞ்செரிவு காந்தல்
உலர்ந்துடலங் கருகுமக் கினியின் மந்தம்
உட்காய்ச்சல் நீரெரிப்பு விந்தில் ரத்தம்
தலங்கு பச்சைகற்பூரஞ் சேர்த்தே உண்ணச்
சகலவினை தானகன்று போகுந் தானே".

– யா.வை.சி

கலை கொம்பை சுத்தித்து, பொன்னாங்காணி இலையை அரைத்துக் கவசம் செய்து உலர்த்தி கன புடமிட்டெடுக்க பற்பமாகும்.

அளவு: *50 மி.கி. முதல் 250 மி.கி. வரை — பச்சை கற்பூரம் கூட்டி கொடுக்க வேண்டும்.*

அனுபானம்: *தேன், பால், நெய், வெண்ணெய்*

தீரும் நோய்கள்: *குன்மம், மேகம், ரத்த பித்தம், உட்டிணரோகம், அக்கினி மந்தம், உட்காய்ச்சல், விந்தில் ரத்தம் கசிதல் ஆகியவை தீரும்.*

கலைக்கொம்பு பற்பம்

"கலைக்கோடு பற்பம் கழறுங்காலை
முனிச் சாறதனில் மூழ்கச் செய்தே
அறுபது நாழிகை ஆகிய பிறகு
சுத்த நீரால் தூய்மை செய்தே
இது போலெழுநாள் ஏகச் செய்தபின்
நிட் குடியதனில் நீர் விட்டரைத்தே
கவசம் செய்தபின் காயவிட்டெடுத்தே
நூறுமுட்டை நுண்மையாயடுக்கி
வீறும் அங்கியை விதிப்படி அமைத்தபின்
ஆறி எடுக்க அமைந்திடும் வெண்மையாய்
வெந்த நீறு வெம்மை வினைநோய்
அகற்று மென்றே யறைந்தனர் பெரியோர்"

– தே.வை

கலைக்கொம்பை எடுத்து மூழ்கும் வரை அகத்தி இலைச்சாறுவிட்டு 60 நாழிகை ஊறவைத்து பின் எடுத்து, நல்ல நீரில் கழுவி எடுக்க வேண்டும். இவ்விதம் 7 முறை

செய்ய சுத்தியாகும். பின் ஏலசிரியை நீர்விட்டரைத்து கற்கமாக்கி கொம்பிற்கு கவசம் செய்து 100 எருவில் புடமிட பற்பமாகும்.

அளவு: *50 மி.லி. முதல் 200 மி.கி வரை*

தீரும் நோய்கள்: உட்டிணப் பிணிகள்

குளம்பின் பயன்: கருமான் குளம்பை எரித்துப் புகையை உட்கொள்ள சுவாசகாசம் தீரும்.

கலைமான்

Blackbuck

(Antilope cervicapra)

Size

A well grown buck stands about 32 in. (80 cm.) at the shoulder and on the average weighs about 90 1b. (40kg.) Horns seidom exceed 20 in. (50 cm.) in the South but may reach 25 in. (65 cm.) or more in north India.

Distinetive Characters

The Blackbuck is the sole representative in India of the genus Antilope. Its striking colour and its beautiful spiralled horns, which may reach the shoulder height of the animal, give it an elegance hardly equalled by any antelope. This exclusively Indian animals is perhaps the most beautiful of all its kind.

When young, its coat, like that of the does, is a yellowish fawn. When three years old it commences to turn black. This darkening of the coat varies in intensity. In south India the adult buck is rarely black, his coat remains a dark brown buck may again be seen in all parts of the country. In general there is a fading in the richness of tone during the hot weather and an increase in its velvety lustre after the rains.

In the yearling buck the horns are without a spiral. In the second year a large open spiral is developed. It is believed that the full number of spiral twists is attained with the dark coat about the end of the third year. Horned females are occasionally, but rarely, met with months.

Antler Constituents

Antler is simple extension of bone, so it has a calcium - phosphate matrix of hydroxyapatite, Ca 10(Po4)6(OH)2, integreater with smaller amounts of calcium carbonate (CaCO3); its composition is similar to that of human bones. An analysis of the ossified antler showed that 73% is hydroxyapatite and related mineral compounds. While 27% is organic materials (7). If person taking 3 grams of deer entler will get about 800mg of calcium. Hydroxyapatite is considered one of the most efficiently absorbed forms of calcium available. In velvet,

the hydroxyapatite is about 50% (8), so the calcium in 3 grams is about 600mg.

Deer antler also has a substantial amount of gelatinous components, ones that have become widely publicized in recent years, though from other source materials: glucosamine sulphate, chongroitin sulphate (which is a polymer of glucosamine), and collagen, These compounds have been benefit the joints in cases of osteoarthritis it is useful for regenerating the body's connective tissues (collagens) found in joints.

Species In India

Antilope cervicapra cervica

Antilope cervicapra rajputanae

Antilope cercicapra centralis

Antilope cercicapra rupicapra

General Characteristics

Body Length	:	100-150cm/3.35ft
Shoulder Height	:	60-85cm/2-2.8ft
Tail Length	:	10-17cm/4-6.8 inch
Weight	:	25-35 Kg.

Distinctive Characteristics

The Tamil Nadu both sex black buck have blacker upper parts and white under parts, include the insides of the legs and lower chest, as well as a white ring surrounding the eye and white chin.

Female and young are yellowish – light brown colour and usually hornless.

Male

Adult male stands about 80 cm at the shoulder and weights 32 to 35 Kg. Males gradually darken from tan to deep brown (or) black with age beginning after 2 years. The body build is slander and the tails short.

Horn

The horns, found only in males and appearing before the pronounced colour change are twisted in a tight spiral with up to five turns. Ridged laterally, they may grow 35-75cm/14-29 inches. They are used in SIDDHA system of Medicine.

கஸ்தூரி

Musk

கஸ்தூரி மார்க்கம், மார்ச்சாரி, மான்மதம், நாபி, மிருக நாபி, என்னும் வேறு பெயர்களினாலும், பிறமொழிகளில் கஸ்தூரி என்னும் பெயரினாலும் வழங்கப்படுகிறது. பல்லாயிரம் வருடங்களாக சித்த மருத்துவ முறையிலும் சீனா, திபெத் போன்ற பிற நாடுகளின் மருத்துவ முறைகளிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இமாச்சல பிரதேசத்தில் வாழும் ஒரு வகை மான் இனத்தில் ஆண்மானினின்று பெறப்படும். இவ்வகை மான்கள் கஸ்தூரி மான்கள் என்று அழைக்கபடும். ஆண் மானின் அடிவயிற்றுப் பகுதியில் காணப்படும் கோளத்தில் *(Gland)* சுரக்கப்படும் பிசுபிசுப்பும், கரு நிறமும் மிக்க மனமும் உடைய கழிவுப்பொருளே கஸ்தூரி என்பதாம். இக்கோளத்தின் பிறப்புகள் மானின் ஆண் குறியின் பக்கத்தில் திறக்கும். இளமையும் வலிமையுமுடைய மானில் பெண் மானை வசீகரிக்கும் பொருட்டும், பகை விலங்குகளின்றும் காத்துக்கொள்ளும் பொருட்டும், கால் குளம்புகளால் உந்தி கஸ்தூரியை சிந்த வைக்கும். கஸ்தூரி மிக விலையுயர்ந்த பொருளாகையால் இம்மான்கள் அதிக அளவில் வேட்டையாடப்படும். தற்காலம் அழியும் தருவாயில் உள்ள விலங்குகளாக கணக்கில் அடக்கப்பட்டு வேட்டையாடுவது தவிர்க்கப்பட்டுள்ளது. பண்ணைகளில் வளர்க்கப்பட்டு மானை கொல்லாது வயிற்றில் துளையிட்டு கஸ்தூரி கோளத்தினின்று கஸ்தூரியை வழியச்செய்து பெற்றுக்கொள்கின்றனர். ஒரு மானில் 25 முதல் 50 கிராம் வரை கஸ்தூரி கிடைக்கும். கஸ்தூரி மானில் 4 முதல் 5 வகைகள் உள்ளதாகக் கூறப்படுகிறது. மானின் வகைகட்கு ஏற்ப கஸ்தூரி 5 வகைகளாக சித்த மருத்துவ நூல் கூறும்.

இதை சோதிக்கப் பல சோதனைகள் உள்ளன.

1. சில குன்றியெடை கஸ்தூரியை நீரிலிட கரையாமல் இருந்தால் உண்மைப் பொருளென்றும், கரைத்தால் கலப்பென்றும் அறியலாம்.

2. சில குன்றியெடையை நெருப்பிலிட்டு உருகிக் குமிழிட்டால் உண்மைச் சரக்கென்றும், உருகாது கசிந்து உருக்குப்போலானால் கலப்புப் பொருள் என்றும் அறியலாம்.

3. உண்மைக் கஸ்தூரியைப் புதைத்து வைத்தெடுத்தாலும் மணம் மாறாது.

4. உண்மைக் கஸ்தூரி தொடுவதற்கு மிருதுவாயும் நெய்ப்பாயும் இருக்கும்.

5. ஒரு நூல்கயிற்றைப் பெருங்காயத்திலிட்டு இழுத்து பிறகு கஸ்தூரியிலிட்டு இழுக்கப் பெருங்காயத்தின் மணமிருந்தால் போலி சரக்கென்று தள்ளவும்.

இது சாதாரணமாய்ப் பழுப்புடன் கூடிய கறுப்பு நிறத்தைப் பெற்றிருக்கும் மற்றும் கஸ்தூரியின் ஐவகைகளும், அவற்றின் நிறம், உருவம் முதலியனவும் கீழ்க்காணும் செய்யுளினால் அறியலாம்.

"கஸ்தூரி யைந்தான் கரிகைதிலதை குளுந்தை

கைத்தபிண்டகைநாய கைமுறை அய — மொய்த்தரிலவப்

பெள்ளுகொள்ளு கட்டி சிறிது பலு மங்களென

விள்ளு மிவைக்கேகும் விளை"

– ப.கு.சி

சுவை — கைப்பு

வீரியம் — வெப்பம்

செய்கை — வெப்புண்டாக்கி, உடல் உரமாக்கி

மேலும் கஸ்தூரி முதன்மையாய் இதயத்திலும் நரம்பு மண்டலத்திலும் தொழில் புரிந்து மனதிற்கு உற்சாகத்தை ஊட்டி, மூளை, கசேருக்கொடி, நரம்பு முனைகளைத்தூண்டி இரத்தச் சுற்றோட்டத்தை நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்து நாடியின் இரத்த அழுத்தத்தை அதிகப்படுத்தும். சல, சனன உறுப்புகளைத் தூண்டும் சக்தியும் இதற்கு உண்டு. மூச்சை இயங்கும் மத்தியஸ்தானத்தைத் தூண்டிவிடும். சிறுநீர், பால், வியர்வை வாயிலாக மூளையையும் தூண்டி சிறிது நேரம் கழித்து உறக்கத்தை உண்டு பண்ணும். இதன் குணத்தை கீழ்க்காணும் செய்யுளினால் அறியலாம்.

"செல்லரும் வசியங் காந்தி சுகமுதல் அணுகும் பின்னும்
மெல்லியார் தமக்கு நாதம் விர்த்தியாம் — தலைநோ
யேகும்
பல்லூறு கபமும் நீளும் பகரொணாப் பலமும்
உண்டாம்
மல்லடர் சந்நிரூட்சை மாறுங்கஸ் தூரிக் கென்னே"
– ப.கு.சி

இதுவன்றி பிதற்றல், கபவாதம், சுவாசரோகம், வலிப்புகளுக்கும் இது சிறந்தது.

"பிள்ளைப் பிணிக்குப் பேராகத் தான் கொடுக்க
உள்ளநோய் ஓடிடும் ஓதக்கேள் — கள்ள
மாந்தவயிற்றுப்புசமும் வடிவாய் இளந்தேகம்

சோர்ந்து கிடக்கும் சுழிமாந்தம் — காந்திடும்
நாவரட்சிக் கணமும் நளிர்க்காச்ச லுங்குளிரும் — மேவும்
தூவி இரத்த தொந்த சுரம்.
முக்குக் கணமும் முதிர்பால் கிரிச்சிரமும்
பக்கியின் தோஷம் பழங்காய்ச்சல் அக்கணமே
இத்தனை நோயெல்லாம் இருப்பிடத்தை விட்டுவிட்டு
கத்திவிழுந்தோடுங்காண"

– கு. தா. சீவ

மேலே கூறப்பட்ட நோய்களுக்கு இதனை ஒன்று முதல் 2 குன்றி எடைவரை உபயோகிக்கலாம்.

இதனைத் தனியாய் உபயோகப்படுத்துவதோடு மற்றைய சரக்குகளுடன் சேர்த்து, தைலம், மெழுகு, மாத்திரை, பொடி முதலியவைகளாகச் செய்து, நோய்க்குத் தக்க அனுபானித்தும் கொடுக்கலாம்.

கஸ்தூரியைத் தாம்பூலத்துடன் சேர்த்துக் கொள்ள உடலைத் தேற்றும்.

நாட்பட்ட சுர நோயினருக்கு உண்டாகும் உடல் தளர்ச்சியை நீக்கும் பொருட்டு பூரண சந்திரோதயத்தை (32.5 மி.கி முதல் 65 மி.கி) வரை இதனுடன் சேர்த்து தேனில் இழைத்துக் கொடுக்கலாம்.

கஸ்தூரியுடன் தாம்பிர செந்தூரத்தை 16 மி.கி முதல் 32 மி.கி வரை சேர்த்து உத்தாமணிச் சாற்றில் அனுபானித்துக் கொடுக்க, சுவாசகாச நோய் நீங்குமென்பதனைக் கீழ்காணும் மருந்து பாரதச் செய்யுளினாலறிக.

"சுவேதவா கனை மைந்ததெனு மைந்தனைச்
சொர்க்கமெனு முத்த மாங்கத்
தோன்றலெனு மான்மத வலாரிதன் பகையான
சுவாசமாங்கால கேய

நிவாதகவ சத்தவுணர் முப்பத்து மூன்றான
நிகழ்லக்க ரோமா கரரை
நிமிடத்தி லெகொன்று வேலிச்ச ரத்தினால்
நிறாக்கிய காலையே”

– *கு. தா. சீவ.*

தாய்க்கு, பிரசவித்த பிறகு தடைப்பட்ட அழுக்கு வெளிப்படுவதற்கும், சுரம் நீங்குவதற்கும், கஸ்தூரிக் கருப்பு *32 மி.கி முதல் 65 மி.கி.* வரையிலும், பட்டுக்கருப்பு *32 மி.கி. முதல் 150 மி.கி.* வரையிலும் சேர்த்துத் தேனில் இழைத்துக் கொடுத்தால் நற்பலனைத்தரும்.

கஸ்தூரிக்கருப்பு செய்முறை

கஸ்தூரி — 4.2 கிராம், பச்சைக் கர்ப்பூரம், கோரோசனை, இரசம், பூரம், இரச செந்தூரம், இலிங்கம், கந்தகம், தாளகம், மனோசிலை, ஓமம், குங்குமப்பூ, திப்பிலி இவற்றைத் தனித்தனி *2.1 கிராம்* எடுத்துக் கஸ்தூரியைத் தவிர மற்றச் சரக்குகளைத் தனித்தனியாய்ப் பொடித்து, முறைப்படி ஒன்றாகக் கலந்து பின்பு கஸ்தூரியைப் பொடித்து அவற்றுடன் சிறுகச் சிறுகச் சேர்த்து அரைத்துக்கொள்ளவும்.

அளவு: *65 மி.கி முதல் 195 மி.கி.*

தேரன்யமக வெண்பாவில் கூறப்பட்ட கஸ்தூரி மாத்திரையையும் அதனால் தீரும் பிணிகளையும் கீழ்க்காணும் செய்யுளினாலும் அதன் உரையினாலுமறிக.

கஸ்தூரி மாத்திரை

“மாரனேருங் கத்தூரி மாத்திரைமுன் முக்கடுகை
மாரனேருங் கத்தூரி மாலலங்கம் — மார
வருணமுனி யாதவமே மாருத முன்னாநோய்
வருணமுனி யாதவமே மால்”

– *தே.ய.வெ*

மாரன் நேருங்கத்தூரி மாத்திரை — மன்மதனை யொத்த அழகு வாய்க்கச் செய்யும் கத்தூரி மாத்திரையைச் செய்யும் விதம் எப்படியெனின், முன் — கஸ்தூரி, முக்கடுகு — சுக்கு, மிளகு, திப்பிலி ஐ — கடுகு, மாநேருங் கத்தூரி — மாயும்படி அழுந்த மத்திக்க. மாலலங்கம் — துளசிச் சாறு விட்டும், மார — மகிழம்பூச்சாறு விட்டும், வருணம் — தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு விட்டும், முனி — அகத்திச்சாறு விட்டும் அரைத்து மாத்திரையாக உருட்டி, ஆதவம் — வெய்யிலிலே உலர்த்தி, ஏ—இசைவான பிறகு, மாருத முன்னானோய் — வாத முதலான நோய்களெல்லாம், போகிறதற்கு, வருணம் — தண்ணீரிலே புசித்தால், வாதசுரம், வாதநளிர், வாதப்பிடிப்பு முதலான பிணிகளெல்லாம் போமென்றும், முனி—தேனிலே புசித்தால் பித்த நோய், பித்த சுரம், பித்த வாயு முதலான பிணிகளெல்லாம் போகும் என்றும், ஆதவமே — கொன்றைப்; பூச்சாற்றிலே புசித்தால், சேட்பசுரம், சேட்பசன்னி, தலைவலி, தலைக்குடைச்சல் போமென்றும், மால் — எலுமிச்சம் பழச்சாற்றிலே புசித்தால் மூலவிப்புருதி, ஆசனரூடி, மேககுன்மம் போன்ற சகல நோய்களும் நீங்கும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

மற்றும் தோடசந்நிபாதம், பித்தசுரம், தலைவலி, வாந்தி, நீர்க்கோவை முதலிய நோய்கள் நீங்க கீழ்க்காணும் குளிகையைச் செய்து தாய்ப்பாலினனுபானித்துக் கொடுக்கலாம்.

கஸ்தூரிக் குளிகை

"எய்தாமல் கஸ்தூரி கழஞ்சு ஒன்று
இதமான குங்குமப்பூ கழஞ்சி ரண்டு
எய்தாமல் ரோசனையுங் கழஞ்சு மூன்று
இவைமூன்றுங் கல்வத்தி லிட்டுக் கொண்டு
எய்தாமல் அமிர்தமெனு முலைப்பால் விட்டு

இனிதான சாமமொன் றரைத்துக் கொண்டு
எய்தாமல் குன்றிபோல் நிழலு லர்த்தி
எடுத்து நீ செப்புதனில் அடைத்தி டாயே"

– *குணபாடம்*

குழந்தைகளுக்கு உண்டாகும் வலிப்பு நோய், சுவாச காசம், மயக்கம், கபவாதம், வயிற்று நோய், ஆசன வெடிப்பு, கட்டி, வாதம், உன்மாதம் முதலியன நீங்க, தேரன் தைலவர்க்கத்தில் கூறியுள்ள கஸ்தூரித் தைலத்தை 17.5, 8.75, 4.38 கிராம் கணக்காய் நிறுத்து அனலில் வெதுப்பி காலையில் மாத்திரம் கொடுத்துவர, நீங்கும்.

கஸ்தூரி, வாசனைத் திரவியங்களுள் ஒன்றாகையால், தைலங்களுக்கு மணம் ஊட்டுவிக்க இது மற்றைய வாசனைத் திரவியங்களுடன் உபயோகிக்கப்படுகின்றது. உதாரணமாய்ச் சுக்குத் தைலம், சிறு சந்தனாதித்தைலம் முதலியவற்றில் காணலாம்.

மகாராஜ மிருகாங்கம், பூரண சந்திரோதயம் போன்ற பெருமருந்துகளிலும், காமவிருத்திச் செய்கையுடைய மாத்திரைகளிலும் கஸ்தூரி சேர்க்கப்படுகின்றது.

முகவசீகரம் தரும்பொருட்டு இதனை நெற்றியில் பொட்டாக இட்டுக் கொள்ளுதல் பழக்கம்.

இருமல் வியாதிக்குக் கஸ்தூரி பங்கு 1, குங்குமப்பூ, சாதிக்காய், சாதிபத்திரி, இலவங்கம் இவை வகைக்குப் பங்கு ¼, கல்வத்திலிட்டுச் சேர்த்தரைத்து, துளசிச்சாறுவிட்டு நான்கு நாட்கள் அரைத்து கடலைப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நாளொன்றுக்கு 1 முதல் 2 மாத்திரைகள் வீதம் கொடுக்கலாம்.

கஸ்தூரி எளிதில் கிடைக்காத சரக்கு என்பதால் இதன் வைப்பு முறைகள் நூற்களில் சொல்லப்பட்டுள்ளன. அம்முறைப்படி கஸ்தூரியைச் செய்தும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

கஸ்தூரி வைப்பு முறைகள் (போகர் சப்தகாண்டம்)

1. இரத்த போளம் *(Dracaena Cinnabarii)*, வேங்கைப்பிசின், பழந்தின்னி வௌவால் எச்சம் — இவற்றைச் சமஅளவு எடுத்துப் பொடித்துக் கலைமானின் ரத்தம் விட்டு அரைத்து உருட்டி தாழைமலர் கொண்டு கவசித்து, ஒரு சட்டிக்குள் வைத்து மூடி ஒரு மண்டலம் பூமிக்குள் புதைத்து வைத்து எடுக்க மணமுள்ள கஸ்தூரி கிடைக்கும். இதை எடுத்துச் சிறிதளவு நீரிலிட ரத்தம் போல் இறங்கும். சன்னி ரோகத்தை நீக்கும்.

2. கருங்காலி பட்டைத்தூள், காய்ச்சுக்கட்டி, கிராம்பு, சம அளவெடுத்து காண்டா மிருகத்தின் இரத்தத்தால் நான்கு சாமம் அரைத்து ஒரு களிமண் சாடியிலிட்டு சாடி நிறையுமட்டும் சுத்தமான பன்னீர் விட்டு ஒரு தாளியில் வைத்து மூடி சீலை செய்து 3 நாள் திட்டமாக எரித்து எடுக்க கஸ்தூரியாகும். இதனை முகருங்கால்.

"விரைவான சூடதுதான் கபாலத்தோடும்"

என சொல்லியிருப்பதால் நரம்பு மண்டலத்தைத் தூண்டும் என்பதாம்.

3. இரத்த போளம் *(Dracaens cinnabarii)*, கார்போகரிசி, வாலுழுவையரிசி, கூகை நீறு — சம அளவு எடுத்து பன்னீரால் அரைத்து ஒரு பாண்டத்தில் அடைத்து ஒரு மண்டலம் பூமியில் புதைத்து எடுத்துக்கொள்ள வேண்டும். கருநிறமாக இருக்கும் இதன் குணத்தைக் கூறுமிடத்து.

"சிதைத்துமே நாசிதனில் முகர்ந்திட்டால்
திக்காடுஞ் சுவாசமது திணறிக்காட்டும்
பதைத்துமே மேனியது சிலிர்ப்பு காணும்
படுஞ்சுறுக்கு கஸ்தூரி பகரப் போமோ

மிதத்துமனே மருந்துகளில் சேர்க்க வேண்டும்
மிக்கான போகருட வைப்பு தானே".

– போகர் சப்த காண்டம்

என்பதில் இதனை முகர்ந்தால் சுவாசம் திணறும், மேனி சிலிர்க்கும் என்றும் மருந்து முறைகளில் சேர்க்க வேண்டும் என்பதாம்.

Musk Deer

4. காசிக்கட்டி, கருவாய்ப்பட்டை, உதிர வேங்கை, ஒட்டகத்தின் உதிரம், அவுரிச்சாறு — சம அளவு எடுத்து அரைத்துப் பின் பன்னீரால் நன்கு அரைத்து ஒரு சாடியில் வைத்து மூடி பூமியில் புதைத்து ஒரு மண்டலம் சென்று எடுத்துப் பார்க்க கஸ்தூரி கிடைக்கும்.

General Characteristics

Body Length	:	86 - 100/28 - 33 ft.
Shoulder height	:	52-55 cm/20.5 - 21.5 inch
Tail Length	:	4-6/1.6-2.4 inch
Weight	:	11-18 kg/24-40 1b.

The overal coloration of animals varies from a light yellowish brown to almost black although a dark brown is most common.

Distribution

In India, Himalayan musk deer inhabit in the parts of Kashmir, Himachal Pradesh, part of Uttarpradesh, Sikkim, Arunachal Pradesh and Assam. It is also present in Nepal, Pakistan, Afghanistan, Vitnam, China, korea, Mangolia and Russia.

The musk produced by these deer is highly held for its medical property.

Musk is the name originally given to a perfume obtained from the strong-smelling substances secreted by a gland in the abdomen of the male musk deer. To obtain it from the musk deer the animal is killed and the gland is completely removed and dried, either in the Sun or the hot store or by immersion in hot oil. It appears as "muskin pod".

Good musk is of a dark purplish colour, dry, smooth and to the touch, and bitter in taste. It dissolve in boiling water. The grain of musk will distinctly scent millions of cubic feet of air without any appreciable less of weight, and its scent is not only more penetrating but more persistent. In addition to its odoriferous

principle, it contains Ammonia, chlestrin, fatty matter, a bitter resionous substance and other animals principles.

Androstane Alkailods and rostrance alkaloids from the musk.

Muscone is an organic compound that is the primary contributor to the odour of musk.

கருவண்டு

Xylocapa aestuans

"தும்பி சுழத்தி சோரகந் தண்டுதான்
கம்பிச் சரவீனை கானக் கீதமாம்
வம்பிக் கரும் வெண்மலருக்கு நாயகம்
செம்பிக் கரும்பி சீர் கருவண் டென்னே,
தும்பி, கம்பிச்சரவீனை, காகக்கீதம், கருப்பி"

– ச.மு.தி

வெண்மலருக்கு நாயகம் என வேறு பெயர்கள் உண்டு.

காடுகளிலும், வீடுகளிலும் காணும் தும்பி வண்டினமே கருவண்டு.

இவ்வகை வண்டுகள் முருங்கைமலரில் ரீங்காரமிட்டுத்திரியும்.

மருந்துவத்தில் அநேக கடுங்காரச் செய்நீர், திராவக முறைகளில் சேருகிறது.

போகர் 700-ல் சொல்லப்பட்டுள்ளன விடமுஷ்டி தைலத்தில் கருவண்டு சேரும்.



கருவண்டு

Xylocapa aestuans Linn

This includes large carpenter bees which Make tunnelsin hard dry wood, they are large, usually black insects, with dark wings and are distinctly the largest of the bees in the plains. Male is covered in yellow pubescence, female in black.

Order - Hymenoptera.

Family - Apidae.

காண்டாமிருகம்

Rhinoceros unicornis

காண்டாமிருகத்தின் வேறு பெயர்கள்

காண்டகம், ஒற்றைக் கொம்பன், கையானை, மிருத்திடு விஷங்கள் போக்கி, பலாக்கிரமன், பேறுடையோன், பூயன், கண்டக நாகிகன்

– *(போகர் நிகண்டு)*

"காண்டகக் கொந்தளங்கடி மொற்றக் கொம்பனாம்
நீண்டக யானைநேர் கருஞ்சாணிதான்
பூண்டகக் கைப்புயன் போக்கும் விடதாரி
ஊண்டகக் காண்டா மிருகத்தினாமமே"

– *ச.மு.நி பாடல் 125*

இதன் தோல், கொம்புகள் மருத்துவத்திற்காம்.

பொது குணம்

"விளம்புதற்கரிய காண்டாமிருகநற் கொம்பின் மேன்மை

....

....

ஓதம் பயித்தியங்க ளோடிவிடும் பித்தந் தாகம்
தீதறு வறட்சிமேகஞ் செப்பருங் கயங் கபாலம்
ஏதமா மெய்ப்பிளைப் போடெரிவு நஞ்சுண்ட வெப்பம்
கோதறு மருந்தீடாக் குலைத்திடு மமிர்தத்தோ டொக்கும்"

– *பாதர்த்த சூடாமணி*

இதன் கொம்பினால் பயித்தியம், பித்தம், தாகம், வறட்சி, மேகம், சயம், மெய்யிளைப்பு, எரிவு, மருந்தீடு, நஞ்சு உண்டதால் ஏற்படும் வெப்பம் தீரும்.

கொம்பின் சுத்தி

கொம்பை அராவி எடுத்த தூள் 1 பலத்திற்கு (35 கிராம்) அகத்தியிலைச்சாறு 3 பலம் (105 கிராம்) விட்டு சூரிய உதயம் முதல் மாலை வரை வெய்யிலில் வைக்க வேண்டும். இவ்விதம் மீண்டும் 4 நாட்கள் ஒவ்வொரு நாளும் புதிய சாறை விட்டு வெய்யிலில் வைத்து ஆறாம் நாள் முதல் சாறு விடாமல் வைத்து நன்கு உலர்த்தி எடுத்து பின் நீர்விட்டு கழுவி உலர்த்திக் கொள்ள சுத்தியாம்.

பற்ப முறை

சுத்தித்த கொம்பு பொடிக்கு பேரரத்தை சாறு விட்டு அரைத்து புடமிட வேண்டும். இவ்விதம் 6 முறை புடமிட பற்பமாகும்.

பற்பத்தின் அளவு

முழு கடலை கூறு உத்தமம், ¾ கூறு மத்திமம், ½ கூறு அதமம், ¼ கூறு அதமாதமம்.

அனுபானம்: தாய்ப்பால்

சிலேத்துமம் தெறித்தலுக்கு ஆண்காண்டாமிருக கொம்பு பற்பத்தையும், வாதப் பிடிப்பிற்கு பெண் காண்டாமிருக கொம்பு பற்பத்தையும் வழங்க வேண்டும்.

கொம்பின் பயன்

நீர் விட்டரைத்து பொது குணத்தில் சொல்லப்பட்ட நோய் வகைக்கு வழங்கலாம்.

பரராச சேகரத்தில் சொல்லப்பட்ட சுரம், சன்னி நோய்களுக்காகும், தங்க ஏலாதி மாத்திரை, இரத்தின பூபதி மாத்திரை, விரண சஞ்சீவி மாத்திரை, சய குலாந்தகன் மாத்திரை, ஆகியவற்றில் இது சேரும்.

காண்டாமிருகம்

Horn

The great one-horned Rhinoceros has a single horn on the nose, though it is usually short and dull, worn down by use. This is present in Both Males and Females, But not an newborn young. The horn, like human hair & fingernails is pure keratin and starts to show after about one year. It reaches a length of between 20 and 61 cm. This horn can be sold for more than twice its weight in gold. The horn is used in Siddha system of medicine. In addition to the horn, rhino hide, blood, urine and dung also have medical Value.

Distribution

Found in India (Assam), Pakistan, Nepal, Bangladesh. It is certified to tall grassland and forests in foothills of Himalayas.

Sancturies

Major steps have been taken by the Indian Government with the help of the world wild life fund (WWF) for their protection.

Kaziranga National 1 Park, Assam, India

Manas National park, Assam, India

Royal National park, Nepal

கிளிஞ்சல்

Common Oyster Shell
Ostrea edulis

"உடல் ரெண்டுயிரொன்று மோடியவோடந்தான்
கடலே பட்சி கானகச் சிப்பிதான்
அடலெனத் தூளி போலாடும் வலசார்
திடலே குளத்தினில் கிளிஞ்சியின் பெயரே"

– ச.மு.தி

சிப்பி, ஏரல், சுத்தி, நளூ என வேறு பெயர்கள் உண்டு. ஆறு, குளங்களில் கிடைக்கும், சிப்பிகளும், கடல் சிப்பிகளும் கிளிஞ்சல் என்றே அழைக்கப்படும். இவை மெல்லுடலிகள் (Molluscus) எனும் உயிரினங்கள் ஆகும். இவை ஆழ்கடல் பகுதிகளிலும், கடலோரங்களிலும், கழிமுகப் பகுதியிலும், உப்பங்கழிகளிலும், ஏரியிலும், குளங்களிலும் வயற்புறத்திலும், மலை முகடுகளிலும் பரவிக் காணப்படுகின்றன.

இவை ஈரிதழ் சிப்பிகள், ஒற்றைக் கூடுடையவை, வயிற்றுக்காலிகள் என மூவகைப்படும். இதில் ஈரிதழ் சிப்பிகளே "கிளிஞ்சல்கள்" என்ற பெயரில் உபரசங்களில் ஒன்றாகக் கொள்ளப்படுகிறது.

இவை சிறு கிளிஞ்சல், பெருங்கிளிஞ்சல் என இருவகைப்படும். இவற்றுள் சிறு கிளிஞ்சல் என்பது ஆஸ்ட்ரியா (Ostrea) எனும் இனத்தைச் சேர்ந்தது, பெருங்கிளிஞ்சல் என்பது (Rassostren) எனும் பேரினத்தை சேர்ந்தது.

உயிருடன் இருக்கும் நிலையில் இவற்றினின்று செயநீர் முறைகள் செய்யப்படுகிறது.

இதன் ஓடுகள் கொண்டு பலவகை மருந்து முறைகள் செய்யப்படுகிறது.

இருவகை கிளிஞ்சல்களுக்கும் குணம் ஒன்றே.

கிளிஞ்சலின் குணம்

"தேகத்திலுண்டாந்திமிர்கடிநோய் வாதமெல்லாம்
போகக் குருதியுண்டு போக்குதலாற் — றேகஞ்
சுளுவு பெறவினிது தோற்றுவித்த லாலே
நளுவாலுண்டாகும் நயம்"

– **தே. வெ.**

நளு - கிளிஞ்சல்

உடம்பிலுண்டாகும் திமிர்நோய், கடிநோய், வாதநோய் ஆகிய பிணிகளை நீக்குதலாலும், உடம்பு சுலபமாக இனிமை பெறத் தோற்றுவிக்குமதனாலும் நளுவாகிய கிளிஞ்சலின் உபயோகம் நயமுடைத்தாம்.

கிளிஞ்சல்களின் பொதுப்பயன்

இதனுள் உள்ள சதை ஊட்டமிகு உணவுப் பொருளாகும்.

இதன் ஓடுகள் பல்பொடி, பற்பசை, முகப்பவுடர், தயரிக்க தற்போது பயன்படுத்தப்படுகிறது. சுண்ணச்சத்து மிகுதியாக உள்ளதால் பல மருந்து முறைகளில் கூட்டுப் பொருளாகச் சேரும். சுண்ணாம்பு தயாரிக்க பயன்படுகிறது. கிளிஞ்சல் சுண்ணம் மருத்துவ நூற்களில் வேதை முறைகளில் சிறப்பான இடத்தை பெறும்.

கிளிஞ்சல்களில் 90 — 95 விழுக்காடு கால்சியம் கார்பனேட்டு மற்றும் பாஸ்பேட்டு, மக்னீசியம், சல்பேட்டு,

இரும்பு ஆக்ஸைடுகள், சிலிகா போன்ற இரசாயன பொருட்கள் அடங்கியுள்ளது.

கிளிஞ்சல் சுத்தி

"உவரு மண்சுண்ணமு மூட்டிக் கலக்கியே
தவருங் கிளிஞ்சி தானேயதி லிட்டுக்
கவர வெடுத்துக் கடு வெள்ளை யாக்கியே
திவர வெடுத்துத் தேய்ச்சுக் கழுவிடே
கழுவுங்கிளிஞ்சி கடுக வுலர்த்திடே"

– ச.மு.நி

உவர்மண், சுண்ணாம்பு சமஎடை எடுத்து நீர்விட்டு கரைத்து வடிகட்டி அதில் கிளிஞ்சல்களை இட்டு எரித்து நன்கு கழுவி உலர்த்தி எடுத்துக் கொள்வதே சுத்தியாகும்.

"தமரத்தையார் கழுநீர் தக்களிய மாலுந்
தமரத்தையார் திவசந்தங்கத் — தமரத்தை
யாகமந்த மாமை யறுமெக் கிளிஞ்சிற்கே
யாகமந்த மாமையிஃதுதாம்"

– தே.ய.வெ

வீசை கிளிஞ்சலுக்கு தமரத்தை சமூலச்சாறு (1 படி), காடி (1 படி), மோர் (1 படி) இவற்றை ஒன்றாய்க் கலந்து அதில் கிளிஞ்சலைப் போட்டு வேடுகட்டி ஏழு நாள் வெளியில் வைத்து எடுக்கவும்.

அதன்பின் செங்கழுநீர் சமூலச்சாறு 1 படி, மோர் (1 படி), காடி (1 படி) சேர்த்து அதில் கிளிஞ்சலைச் சேர்த்து வேடுகட்டி ஏழு நாள் வெயிலில் வைத்து எடுக்க வேண்டும்.

பின் மணத்தக்காளி சமூலச்சாறு (1 படி), மோர் (1 படி), காடி (1 படி) சேர்த்து அதில் கிளிஞ்சல்களைச்

சேர்த்து 7 நாள் வெய்யிலில் வைத்து பின் அதன் மேலுள்ள கருநிறம் நீங்குமட்டும் கழுவி உலர்த்தி எடுத்துக் கொள்வதே சுத்தியாகும்.

“இவ்வகை யேரலினங்களழுக்கற
வருமை தமரத்தை வண்கழுநீர் காளி
யொருமை யிருபத் தொரு நாள் முப்பாவாய்
கருமொருங்காடியந் தானிகராவதே”

– *குணபாடம்*

என்ற அடிகள் உணர்த்தும்.

கிளிஞ்சல் பற்பம்

“ஏகா தசிக்குப்பி னஞ்சிறிய வேரனலைமை
யேகா தசிக்கு மிறவிவன்னி — யேகா
மனையட்டா ராபாணி மாரிசிநான் — கூர்கா
மனையட்டா ராபரணி மை”

– *தே.ய.வெ*

ஏகா தசிக்குப்பின் — பதினொரு தினகட்குப் பிறகு, அம் சிறிய ஏரலை — அழகுள்ள சில கிளிஞ்சிலை, மை — ஏகாது அரிக்கும் இறளி வன்னியே—கறுப்புச் சேராமல் நல்ல பற்பமாக்க குருவி ஆல் என்னும் மரத்தின் சமூலச்சாறும், வன்னியிலைச்சாறும் விட்டரைத்துப் புடமிட்டெடுக்க காமலை அட்டார் ஆபரணி — அதன் பின் கிளிஞ்சிலானது மன்மதனைத் துதித்த சிவபிரானது ஆபரணமான எலும்புபோல் வெளுப்பாகும், மாரிசி நான்கு — இதன் பிரமாணமாவது மிளகின் நாலிலொரு பாகமே, ஊர் காமன் ஐ அட்டார் — இதைப் புசிக்க வேண்டிய நிலங்கள் இந்திரனுடையதும், முருகக் கடவுளுடையதும், இடையர்களுடையதுமான மருதம், குறிஞ்சி, முல்லை என்பவைகளே ஆபரணிமை இதைப் புசிக்க வேண்டிய மாதங்களாவன — வைகாசி, சித்திரை, ஆனி என்பவைகளே.

ஒரு பலம் (35 கிராம்) சுத்தி செய்த சிறு கிளிஞ்சலுக்குக் கீழ்ப் பட்டியில் காணுமாறு குருவி ஆல் சமூலச்சாறு, வன்னியிலைச்சாறு இவை இரண்டிலும் முறைப்படி அரைத்து, வில்லை செய்து உலர்த்தி, சில்லிட்டுச் சீலை செய்து புடமிட்டெடுக்கப் பற்பமாகும்.

சாற்றின் பெயர்	அளவு பலம்	அரைக்கும் நாள்	வில்லை உலர்த்தும் நாள்	கவசம் உலர்த்தும் நாள்	புடம் வரட்டி
குருவி ஆல் மூலச்சாறு	4	11	10	1	30
வன்னியிலைச் சாறு	4	11	10	1	30

அளவு: மிளகின் நாலின் ஒரு பாகம் உத்தமமாவும், இரு பாகம் மத்திமமாகவும், மூன்று பாகம் அதமமாகவும், மிளகின் முழுப்பாகம் அதமாதமமாகவும் கொண்டு புசிக்க வேண்டும்.

புசிக்க வேண்டிய நிலம்: மருதம், குறிஞ்சி, முல்லை என்பவைகள்

புசிக்க வேண்டிய மாதங்கள்: வைகாசி, சித்திரை, ஆனி ஆகும்.

இதனை

"பெருசிறு கிளிஞ்சி வென்னும் பேதத்திற்கு சிறுகிளிஞ்சில்;
வகுப்பருப்பத்திற்கு காலும் வன்னிப்பு மூலமெல்லாம்
பருமிள அளவை நான்காம் பாகசா தனனூர் மூன்று
மெருது மூன்றாகி கால மெஞ்சிய நியுத்த மாமே"

சிறுகிளிஞ்சிற் பற்பத்தின் அனுபானமும் தீரும் நோய்கள்

சாத்திய மதுமேகத்திற்குச் சிறுபாலைச் சாற்றிலும்,
அசாத்திய மதுமேகத்திற்குப் பெரும்பாலைச் சாற்றிலும்,
சாத்திய வாதத்திற்குச் சிறுதுளசி சாற்றிலும்,
அசாத்திய வாதத்திற்குப் பெருந்துளசி சாற்றிலும்,
சாத்திய பித்தத்திற்குச் சிறுமாமரச் சாற்றிலும்,
அசாத்திய பித்தத்திற்குப் பெருமாமரச் சாற்றிலும்,
சாத்தியப் பிடிப்புக்குச் சிறுபருத்திச் சாற்றிலும்,
அசாத்திய பிடிப்புக்குப் பெரும்பருத்திச் சாற்றிலும்,
சாத்திய கடுப்புக்குச் சிறுகீரைச் சாற்றிலும்,
அசாத்திய கடுப்புக்குப் பெருஞ்சிறுகீரைச் சாற்றிலும்,
சாத்திய உப்புசத்திற்கு பசுவின் பாலிலும்,
அசாத்திய உப்புசத்திற்கு ஆட்டின் பாலிலும்,
சாத்திய இருமலுக்குப் பசுவின் வெண்ணெயிலும்,
அசாத்திய இருமலுக்கு ஆட்டின் வெண்ணெயிலும்,
சாத்திய மயக்க சன்னிக்கு குளிர்ந்த நீரிலும்,
அசாத்திய மயக்க சன்னிக்கு வெந்நீரிலும்,
சாத்;திய பிரமைக்கு நெல்லரிசி மாவிலும்,
அசாத்திய பிரமைக்கு தினையரிசி மாவிலும்
சாத்திய சுரத்திற்கு தென்னங் கள்ளிலும்,
அசாத்திய சுரத்திற்குப் பனங்கள்ளிலும்,
சாத்திய சத்திக்குத் தேனிலும்,
அசாத்திய சத்திக்குக் கொசுத்தேனிலும்,
சாத்திய சயரோகத்திற்குப் பழச்சாராயத்திலும்,
அசாத்திய சயரோகத்திற்குப் பட்டைச் சாராயத்திலும்

மேற்படி பற்பத்தை முறையே அனுபானித்துக் கொடுக்க மேற்கண்ட நோய்கள் நீங்கும் என்ப.

இதனை,

"அறைகிறேன் சிறுகிளிஞ்சிற் பற்ப முண்ணு
மனுபானத் துடனேநோ யகலு மாண்மை
யறைகிறேன் சிறுபாலை பெருத்த பாலை
யொடுதுளசி மாபருத்தி சிறுத்த கீரை
பறைகிறேன் பால்வெண்ணெய் நீர்மா கட்டா"

– குணபாடம்

வேலை அரிகன்னி மிதுனம் முனிவிலக்கு — மாதங்கிலே, ஆவணி, புரட்டாசி, ஆனி, மார்கழி ஆகிய நான்கையும், நீக்குவாயாக, வேலையா இகல் நிலமே மேல் வேலாய வேலாயுதக் கடவுளின் வலியுள்ள குறிஞ்சி நிலமே இப்பற்பத்தை அருத்துங்கால் புசிப்பதற்கு மேன்மை உண்டாகும்.

பெருங்கிளிஞ்சல் பற்பம்

ஒரு பலம் (35 கிராம்) சுத்தி செய்த பெருங்கிளிஞ்சலுக்குக் கீழ்க்காணும் பட்டியலின்படி, மாவிலங்க வேர்ப்பட்டைச்சாறு, காட்டு மல்லிச்சமூலச்சாறு, வெள்ளெருக்கம் சமூலச்சாறு, புளிமா சமூலச்சாறு இவைகளைக் கொண்டு அரைத்து, வில்லை செய்துலர்த்திப் புடமிட்டெடுக்கப் பற்பமாம்.

சாற்றின் பெயர்	அளவு பலம்	அரைக்கும் நாள்	வில்லை உலர்த்தும் நாள்	கவசம் உலர்த்தும் நாள்	புடம் வரட்டி
மாவிலங்கப்பட்டைச்சாறு	4	8	7	1	40
ஊசிமல்லிகைச்சாறு	3	6	5	1	30
வெள்ளெருக்கன்சாறு	2	4	3	1	20
புளிமா மூலச்சாறு	1	2	1	1	10

இதனைப் புசிப்பதற்கு, முல்லை நிலம் நீங்கலாக மற்ற நிலங்கள் ஆகும். ஆயினும், குறிஞ்சி நிலமே சிறந்தது.

அளவு: குன்றிமணியை எட்டு பங்காக்கி, அவற்றுள் ஒன்று முதல் எட்டு வரையில் உள்ள அளவு முறையே உத்தமம், மத்திமம், அதமம், அதமாதமம் ஒரு புடைத்துணிவு, முழுத்துணிவு, அநத்தம், அபரிமிதமெனக் கொள்க.

மாதங்கள்: ஆவணி, புரட்டாசி, ஆனி, மார்கழி இவற்றை நீக்கி மற்ற மாதங்களில் உண்ணலாம்.

பெருங்கிளிஞ்சல் பற்பத்தின் துணை மருந்தும் தீரும் நோயும்

"ஏரல டலை யினைமூல நீர்ப்பத்தி
யேர லடலை யினைசத்தி — யேரல்
வனமா தளையமுத மச்சிகைநெய் வெந்நீர்
வனமா தளையமுத மா"

– தே.ய.வெ

ஏரல் அடலையினை — கிளிஞ்சிற் பற்பத்தை, மூலம் வாதாதி மூன்று மூலங்களுக்கும், நீர்ப்பத்தி — மூவகை நீர்கட்டும், ஏர் — மூவகை நீரேற்றத்திற்கும், அல் — மூவகை பெக்கத்திற்கும் இணை — மூவகை உபாதிக்கும், சத்தி — மூவகைச் சந்திக்கும் முறையே, ஏர் — நற்சீரகம், காட்டுச்சீரகம், கருஞ்சீரகம், அல் — சுக்கு, இஞ்சி, பேரரத்தை, வனம் — பனங்கள் தென்னங்கள், ஈச்சங்கள், மாது — பசு வெண்ணெய், எருமை வெண்ணெய் ஆட்டு வெண்ணெய், அலை பசுந்தயிர், எருமைத் தயிர், ஆட்டுத் தயிர், அமுதம் பசும் பால், எருமைப்பால், ஆட்டுப்பால், மச்சிகை பசுவின் மோர், எருமை மோர், ஆட்டின் மோர் நெய் — பசுவின் நெய், எருமை, நெய் ஆட்டு நெய், வெந்நீர், சுத்த வெந்நீர், சுக்கு வெந்நீர், மிளகு வெந்நீர், வனம் துளசி, ருத்திரசடை, கஞ்சாங்கோரை, மாதுளை, எலுமிச்சை, கெடாரம் அமுதம் — சீந்தில், கோவை, வல்லாரை, மா — புளிமா, தேமா, நறுமா ஆகிய இவ்வனுபானங்களில் கொடுக்க வேண்டும்.

வாத மூலத்திற்கு நற்சீரகத்திலும், பித்த மூலத்திற்குக் காட்டுச் சீரகத்திலும், கபமூலத்திற்குக் கருஞ்சீரகத்திலும், வாத நீர்க்கட்டுக்கு சுக்கிலும், பித்த நீர்க்கட்டுக்கு இஞ்சியிலும், கப நீர்க்கட்டுக்குப் பேரரத்தை சாற்றிலும்;, வாத நீரேற்றத்திற்கு பனங்கள்ளிலும் பித்தநீரேற்றத்திற்கு தென்னங்கள்ளிலும், கப நீரேற்றத்திற்கு ஈச்சங்கள்ளிலும், வாத மயக்கத்திற்குப் பசுவின் வெண்ணெயிலும், பித்த மயக்கத்திற்கு எருமை வெண்ணெயிலும், கப மயக்கத்திற்கு ஆட்டு வெண்ணெயிலும், வாத சுத்திற்குப் பசுவின் தயிரிலும், பித்த சுரத்திற்கு எருமைத் தயிரிலும், கப சுரத்திற்கு ஆட்டுத் தயிரிலும், வாத சன்னிக்குப் பசுவின் நெய்யிலும், பித்த சத்திக்கு எருமை நெய்யிலும், கபசத்திக்கு ஆட்டு நெய்யிலும் மேற்படி பற்பத்தை அனுபானித்துக் கொடுக்க வேண்டும்.

அன்றியும், வெந்நீர், சுக்குநீர், மிளகுநீர், துளசிச்சாறு, ருத்திர சடைச்சாறு, கஞ்சாங்கோரைச்சாறு, மாதுளை ரசம், எலுமிச்சை ரசம், கடாரங்காய் ரசம், சீந்தில் சாறு, கோவைச்சாறு, வல்லாரைச்சாறு, புளிமா ரசம், தேமா ரசம், நறுமா ரசம் என்னும் இவற்றிலும் நோய்கட்கேற்றவாறு சமயத்திற்கேற்பவும் தனியாகவும் அனுபானித்தும் கொடுக்கலாம்.

இதனை

“கேளடா புலத்தியா என்மகனே மேலே
கெடியுள்ள வாதமுத லானமூல
நாளடா நீர்க்கட்டு நீரி னென்ற
நண்ணுசுர முதலாக வல்லை யீறா
யாளடா வேரல்வெண் மைகு டாரியாதி
யனுபானத் துடனூட்ட வகன்று போகு
மூளடா நற்குணத்தைக் கைவிடா தென்றும்
முன்னோர் களியம்பினதா முகம தாமே”

என்ற அகத்தியர் இருபத்தோராயித்துச் செய்யுளால் அறிக.

கிளிஞ்சல் மெழுகு

சிறு கிளிஞ்சலைச் சேகரித்து சுத்தித்து கரி நெருப்பில் காய்ச்சி பச்சை நெல்லிக்காய் சாற்றில் தோய்க்க வேண்டும். இவ்விதம் மூன்று முதல் ஐந்து முறை செய்து கல்வத்திலிட்டு பொடித்து ஆமணக்கு நெய்விட்டு அரைத்து மெழுகு பதத்தில் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். உள்ளங்கை, உள்ளங்கால் வெடிப்பிற்கும், உள்ளங்கை, உள்ளங்கால் கருப்பிற்கும் பூச தீரும்.

ஏறற்குழம்பு

சாரணை வேர் (4 பலம்) வெள்ளாட்டு பால் விட்டவித்து உலர்த்தி எடுத்து அத்துடன் சுத்தித்த கிளிஞ் சல் பொடி (2 பலம்) 70 கி, நேர்வாளம், சீனாக்காரம், சுக்கு, கடுகு, ஊசிக்காந்தம், இந்துப்பு, பெருங்காயம், மிளகு, கல்மதம், கடுகுரோகிணி ஆகியவை வகைக்கு 25.5 கிராம் வீதம் எடுத்து அரைத்து அனைத்தையும் ஒன்று சேர்த்து அரைத்து லு படி தேங்காய் பாலில் கலக்கி அடுப்பேற்றி எரித்து வெந்துவரும் சமயம் 280 கிராம் எள் நெய் சேர்த்து, குழம்பு பக்குவத்தில் இறக்கி கொள்ள வேண்டும்.

அளவு: 10—15 கிராம் வீதம் நாள் தோறும் உண்டு வர பெருவயிறு, வெப்புபாவை, உதரவாத சூலை, தீரும்.

சிப்பி செயநீர்

உயிருள்ள கிளிஞ்சல்களின் வாயைப் பிளந்து அதில் வெங்காரம், வீரம், பச்சை கற்பூரம், சம பங்கு எடுத்து பொடித்து அதில் ஒரு சிட்டிகை அளவு இட்டு வைக்க நீர் இறங்கும். இந்நீரை உலோக பாடாண உபரசங்களுக்கு விட்டு அரைக்க சுண்ணமாகும்.

கிளிஞ்சல் மை

“நீல காசத்தைப் போக்கிட நிகழ்த்துவன் பசுவின்
பாலிற் பூநாகமிட்டது பதத்தில் வெந்துலர்த்தி
ஏலமுங் கிளிஞ்சிலும் மிணக்கிடும் பசு வெண்ணெ
யாலரைத்தொரு சிமிழினிலடைத்ததை விழிக்கிடேன்”

– தேரையர் வைத்தியம் 1500

சுத்தித்த பூநாகம், ஏலரிசி, சுத்தித்த கிளிஞ்சல் — சமஎடை எடுத்து பசுவெண்ணை கூட்டி நன்கு அரைத்து விழிக்கிட நீலகாசம் தீரும்.

கிளிஞ்சல் பூச்சு

“ஏரிக் கிளிஞ்சலதை ஏந்திழையே நீகண்டு
கோரித் துகளாக்கிக் கொண்டே பன்னீரில்
அரைத்தே நீர்க்கட்டுக் கடிவயிற்றில் பூசிக்
கரைத்தேவிடும் நீரைக் காண்”

சிறு கிளிஞ்சலை பொடித்துப் பன்னீர் விட்டரைத்து அடிவயிற்றிற் பூச நீர்க்கட்டு தீரும்.

சிறு கிளிஞ்சல்

Key Identification features

Shell inequivalve, lower (left) valve convex and upper valve flat sitting within the lower. Periostracum thin, dark brown. Outer surface rough and scaly with concentric sculpture and fine radiating ridges. Yellowish or cream in colour with light brown or bulish concentric bands on the right valve. Hinge line without teeth in the adult. Adductor muscle scar white, or slightly discoloured.



பெருங்கிளிஞ்சல்

Physical Description

The eastern oyster is relatively large, growing up to 10 cm. in length. It is normally some what pear - shaped in outline, but members of this species vary greatly in size and shape. The shell is dirty gray externally and white internally, except for the muscle scar, which is deep purple.

Habitat

Oysters inhabit areas of fairly constant turbidity and fslinity. The oyster is eurythermal or able to withstand a wide range of temperatures including freezing temperatures.

Behaviour

Oysterns usually colonize in beds. Competition for space is a most important source of mortality. Uncrowded, oysters can live to be 20 years old. The beds are a permanent social structure unless they are separated physically and forcefully. Otherwise, the oysters will recongregate if they are capable.

குருவி

Passer Domesticus Indicus

குருவி இனங்களில் பலவகைக் குருவிகள் மருத்துவ முறைகளில் கூறப்பட்டுள்ளது. இவற்றின் மாமிசம், முட்டை மருத்துவத்தில் பயன்படும். இதனால் பித்தம், சயம், சுரம் நீங்கும். விந்துவை வளர்க்கும், சடராக்கினியை தூண்டும். முட்டை உடல் சூட்டை வளர்க்கும், நரம்பு நோய், பக்கவாதம், உப்புசம் தணிக்கும். சூட்டுடம்பினர் உண்ணக்கூடாது. அதிகம் புசிப்பதால் உண்டாகும் நச்சுநிலை புளியினால் மாறும். ஆள்காட்டி குருவியின் முட்டை அம்மை நோய் தடுப்பிற்காகும்.

சிட்டுக்குருவிக்கறியின் குணம்

"பூவிரணம் போக்கிவிடும் பொல்லாக் கிருமிகளைப்
பாவுமலத் தோடிறங்கப் பண்ணுங்காண் — பூவணையிற்
கட்டுற்ற மாதர்களைக் கைகுவித்துக் கெஞ்சுவிக்குஞ்
சிட்டுக்குருவித்திறம்".

– ப.கு.சி

சிட்டுக் குருவிக்கறி ஆண்குறிமலரின் புண்ணையும், மலக் கிருமிகளையும் நீக்கும். புணர்ச்சி மிகப்பண்ணும். ஆண் தன்மையையும், விந்துவையும் அதிகரிக்கும்.

கருங்குருவிகறியின் குணம்

"வாதகா மலையறு மாதே கபமும்போ
மூதுகா மாலைவிழுந் தோடுங்காண் — வாது செய
வந்தகரப் பானுடனே மாளுச் சொரியும் போங்
குந்துகருங் குருவி கொள்".

– ப.கு.சி

கருங்குருவிக் கறியை உண்ணில் வாதகாமாலை, விஷசிலேத்துமம் ஊதுகாமலை, தீராச்சொரி, கரப்பான் தீரும்.

ஆள்காட்டிக் குருவிக் கறியின் குணம்

“ஆட்காட்டிப் பட்சிகடன் மேகம் போயொளிக்குத்
தோட்காட்டு வாதத் தொடராவே — வாட்கண்
ணரிவையே பத்தியத்திற் காகும் புவியிற்
றெரியமறைப் பில்லாமற் செப்பு”

– *ப. கு. சி.*

இது பத்தியத்திற்காகும். வாதப்பிரமேகமும், வாத ரோகங்களும் தீரும்.

தூக்கணாங்குருவிக் கறியின் குணம்

“ஐயமருசி யகட்டின் மலமும் போக்குந்
துய்ய பசியை மெல்லத் தூண்டிவிடு — மெய்யின்
மினுத்த வழகுண்டா மென்பத்தியமாந்
தணித்தூக்க ணாங்குருவி தான்”

– *ப. கு. சி.*

இது பத்தியத்திற்காகும் கபம், அரோசகம், மலக்கட்டு நீங்கும். பசியையும், வனப்பையும் உண்டாக்கும்.

சிட்டுக்குருவி லேகியம்

சிட்டுக்குருவி 8, சாதிக்காய் (1 பலம்) 35 கிராம், சாதிப்பத்திரி (1/2 பலம்) 17.5 கிராம், ஐவன விதை (1/2 பலம்) 17.5 கிராம், அபின் (1 வராகனெடை) 5.1 கிராம், குங்குமப்பூ (1 வராகனெடை) 5.1 கிராம்.

சிட்டுக்குருவிகளை இறகு, குடல், நகம் நீக்கி கழுவி சுத்தித்துக் கொள்ள வேண்டும். கடைச்சரக்குகள் அனைத்தையும் அரைத்து 8 பங்கு வைத்து குருவியின் வயிற்றுள் செலுத்தி மெல்லிய கம்பியால் கட்டி பசுநெய்யில் கருகாமல் பொரித்துக் கொள்ள வேண்டும். பின் உரலிலிட்டு இடித்துப் பின் கல்வத்திலிட்டு தேன் விட்டு அரைத்து இளகபதத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

சுண்டைக்காய் அளவு உருட்டி ஒரு பாத்திரத்திலிட்டு மூழ்குமட்டும் தேன் விட்டு வைத்துக்கொள்ள வேண்டும்.

வேளைக்கு ஒரு உருண்டை வீதம் 2 வேளை 17 நாட்கள் கொடுத்துவர குறைவுள்ள ஆண்தன்மை மீளும்.

PASSER DOMESTICUS INDICUS

சிட்டுக் குருவி

Geographic Range

The House Sparrow is distributed worldwide (excluding the poles) It is native to India and other south asian countries.

Habitat

House sparrows like areas that have been modified by humans, including farms, residential, and urban areas. They are absent from uninhabited woodlands, deserts, forests, and grasslands.

Lifespan/Longevity

A wild House Sparrow lived to be 13 years and 4 months old, though most will live for only several years.

குளம்புகள்

Hoofs

வேறுபெயர்கள்

நகம், உகிர், குளம்பு

பல்வேறு மிருகங்கள், பறவைகளின் நகங்கள் மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது. சங்குப் பூச்சியின் நகம் நாகணம் என்பதாக வழங்கப்படுகிறது. இது ஒரு சிறந்த வாசனைப் பொருளாக கையாளப்படுகிறது.

குளம்புகளின் குணத்தைக் கூறுமிடத்து சில மிருகங்களின் குளம்புகள் வலி நோயை நீக்கும்.

"உற்றகாற் குளம்பு சன்னியோடு பரிவலிப்புமாறும்
பற்றியவெலும்பும் பல்லும் பகர் விழிநோய் மாற்றும்
குதிரை கழுதை குளம் பெருமைக் கொம்புங்
குதிரைவலி நீக்குங்குறி"

– ப.கு.சி

குளம்புகள், பற்பம், தைலம், புகை முறைகளில் பயன்படுகிறது.

குளம்புகளின் சுத்தி மற்றும் பற்பம்

இராவின காற் குளம்பு பொடி பலம் 1 (35 கிராம்)க்கு 5 பலம் (175 கிராம்) இளநீர் விட்டுச் சூரிய உதய முதல் அத்தமிக்கும் வரையில் வெய்யிலில் வைக்க வேண்டும். இவ்விதம் ஐந்து நாள், நாள்தோறும் ஐந்தைந்து பலம் இளநீர் புதிது புதிதாய் விட்டுக் காலை முதல் மாலை வரையில் வெய்யிலில் வைத்தும், பின்பு 2 நாள் மேற்படி

இளநீர் விடாமல் வெய்யிலில் வைத்தும், நீரெல்லாம் உலர்ந்த பின்பு கழுவியெடுக்க, காற்குளம்பு பொடி சுத்தியாகும்.

நகத்தை சட்டியிலிட்டு வறுத்து வளைந்து நொறுங்கும் பக்குவத்தில் எடுக்க சுத்தியாகும்.

பற்பம்

ஒருபலம் (35 கிராம்) சுத்தி செய்த காற் குளம்பிற்குக் கீழ்க்காணும் பட்டியில் கண்ட முறைப்படி வன்னியிலைச் சாறுவிட்டு அரைத்து வில்லை செய்து உலர்த்திச் சில்லிட்டுப் புடமிடப் பற்பமாகும்.

சாற்றின் பெயர்	அளவு பலம்	அரைக்கும் நாள்	வில்லை உலர்த்தும் நாள்	கவசம் உலர்த்தும் நாள்	புடம் வரட்டி
வன்னியிலைச்சாறு	6	6	5	1	40
வன்னியிலைச்சாறு	5	5	4	1	35
வன்னியிலைச்சாறு	4	4	3	1	30
வன்னியிலைச்சாறு	3	3	2	1	25

அளவு: கடலையின் முழுக்கூறு உத்தமம், முக்கால் கூறு மத்திமம், அரைக்கூறு அதமம், காற்கூறு அதமமாம்.

காற்குளம்புகளின் பற்ப வகைகளும் அவற்றால் தீரும் நோய்களும்

"கானாட்டு மையா கரடிபுலி மாவுழைமை
கானாட்டு மையா கலைப்பொடிசெய் — கானாட்டு
கண்டா விடதமனல் காலதல்கால் குன்மமுறை
கண்டா விடதமனல் கை"

– தே.ய.வெ

கான் நாட்டு மை ஆ கரடி, புலி மா உழைமை— காட்டிலும். நாட்டிலுள்ள எருமை, பசு, கரடி, புலி, குதிரை, மான், ஆடு என்னுமிவற்றின், கால் நாட்டும ஐ ஆகலை பொடி செய் — கால்களில் பதிந்திருக்கும் அழகமைந்துள்ளவைகளான குளம்புகளைப் பற்பமாக்குவாயாக. கான் ஆட்டு — தேனிற் குழைப்பாயாக, கண்டாவிடதம் — இதன் பெயர் கண்டாவிடதமாகும். (இதை) அனல் கால் அறல் கால் குன்மம் மு ஐ — பித்தாதிக்க ரோகம், வாதாதிக்க ரோகம், சேத்து மாதிக்க ரோகம், சீத்தி வயிற்று நோய், மீவகைச் சன்னிகள், கண்தாவிடதமன் அல்கை — நேத்திரவாயு, இசிவு, ருத்திர வாயு, உன்மத்தம், கண்மறைவு, காசநோய் என்னும் இந்நோய்கட்கு முறையே கொடுக்கத் தீரும்.

அன்றியும் முன்கண்ட அளவே, முன் அனுபானத்தில் கொடுக்க, காட்டு நரி குளம்பு பற்பத்திற்குச் சூலையும், நாட்டு நரிக்குளம்புப் பற்பத்திற்கு வல்லையும் காட்டு நாயென்னும் செந்நாய்க்குளம்புப் பற்பத்திற்கு மூலமும், நாய்க்குளம்புப் பற்பத்திற்குப் பவுத்திரமும், காட்டுமுயல் குளம்புப் பற்பத்திற்குப் பாரிசவாயுவும் நாட்டு முயல் குளம்புப் பற்பத்திற்கு பக்க வாதமும் நீங்கும்.

குளம்புகளின் பயன்கள்

குதிரை குளம்பு புகை

"சேட்டை பரிஉகிர் மயிலிறகு தின்னுமிளகு வசம்பு சுக்கு

கூட்டக் கடுகு பேயத்தி கூறும் அழிஞ்சில் வேப்பெண்ணெய்

போட்டுக் கம்பளமுஞ் சமனாய் புகழ் செம்மறியின் கோட்டுடனே

வாட்டிப் புகைக்கவே பிணியு மாந்த விசிவு மாறிடுமே"

– *பாலவாகடம்*

குதிரை குளம்பு, மயிலிறகு, மிளகு, வசம்பு, சுக்கு, கடுகு, பேயத்திவிரை, அழிஞ்சில் விரை, கம்பளி, சமஅளவு, அவ்வெடைக்கு செம்மறி ஆட்டின் கொம்புகளை எடுத்து வேப்பநெய்யுடன் கலந்து புகைக்க மாந்தவலி தீரும்.

கரடி நகம், உடும்பு நகம், மான் குளம்பு, கருமான் குளம்பு ஆகியவை சமஎடை எடுத்து எரித்து புகை கொள்ள சுவாச காசம் தீரும்.

கழற்சி மாத்திரை

"கழற்பருப்பு வெள்ளையுள்ளி கடிய காயமிந்துடன்
பழுத்த சுக்கு நாகணத்தினோடு பாதரசமும்
பழக்கமுற்றபடி யரைத்து மதுவளாவியுண்டிடில்
அழுத்திநின்ற குடகரியினோடு சூலையகலுமே"

– *ப.ரா.சே.*

கழற்சிப்பருப்பு, பூண்டு, பெருங்காயம், இந்துப்பு, சுக்கு, நாகணம், ரசம் ஆகியவைகளை நன்கு அரைத்து மாத்திரையாக்கி உலர்த்தி தேன் கலந்து மத்தித்து கொடுக்க சூலைரோகம் தீரும்.

பாம்புச் சட்டை, மஞ்சள், குதிரை குளம்பு ஆகியவை சமஎடை எடுத்து புகைக்க சித்தவிப்பரம சன்னி தீரும்.

"வல்லியத்தின் கானகத்தை மர்க்கடத்தெச் சத்துடனே
வெல்லுஞ் சசிநீரை விட்டரைத்த — வில்லைகுறி
வற்றுக்கு நெய்யிலிட வாதைக்கு மோரிலிடப்
புற்றுக்கு நீரிலிடப் போம்"

– *தே. வெ.*

புலி நகத்தை குரங்கின் எச்சத்துடன் கூட்டி கற்பூர நீரில் அரைத்து வில்லை செய்து நெய்யில் கலந்து பூச ஆண், பெண் குறிகளின் சுருக்கம் தீரும்.

வாதத்திற்கு மோரிலும், புற்றுக்கு நீரிலும் கலந்து மேற்பூச போகும்.

"வாச வரிசனமும் வன்மீ னடிநகமும்
ரோசனையு நைய நொறுக்கியே — காசளவு
பச்சைப் புனுகுடனெய் பக்குவமா யட்டதிட
வுச்சிப் பிளவையொழியும்"

– தே. வெ.

கஸ்தூரி மஞ்சள், முதலைக்கால் நகம், கோரோசனம் மூன்றையும் சமஅளவெடுத்து பொடியாக்கி காசளவு, பச்சைப்புனுகும், நெய்யும் சேர்த்துக் காய்ச்சி தடவி சீலையால் கட்டிவர உச்சி பிளவை தீரும்.

"தேனிலுரைத்திட்டாற் றினவடங்கும் புண்ணகலும்
ஊனி லுதிர முரக்குமே — கானமறுங்
கோலக் கனிரசத்திற் கூட்டமதி யூறவைத்த
கோலத்தின் கானகத்தைக் கொண்டு".

– தே. வெ.

பன்றியின் கால் நகத்தை அழிஞ்சில் கனிச் சாற்றில் ஒரு மாதம் ஊறவைத்து அதைத் தேனில் உரைத்து தடவி வர சொறி, புண் தீரும். அதனால் ஏற்பட்ட தசைகளின் கேடும் தீர்ந்து விடும்.

குளவிக்கூடு

Wasps nest

இது குளவிகளால் கட்டப்படும் கூடு. வேட்டுவன் கூடு என்றும் வழங்கப்படும். "அரக்கெனினு மண்ணெணிதூ மாங்குளவிக்கூண்டை" என்ற அடியால் குளவிக்கூடு — அரக்கு கூடு, மண் கூடு என்று இருவகைப்படும். மண்ணால் வீடுகளிலும் பொந்துகளிலும் கட்டக்கூடியது. மண்குளவிக்கூடு, சாதாரணமாக வீடுகளில் பிள்ளைக் குளவி கூடு என பேசப்படும்.

மரங்களில் ஒரு வகை குளவிகளால் கட்டப்படும் மெழுகுப் போன்ற கூடு அரக்கு கூடு என்பதாம். குணத்தில் இரண்டும் ஒன்றாகவே பேசப்படுகிறது. இவற்றைக் கொண்டு அநேக வகை குடிநீர், சூரணம், தைலம், முதலியன செய்யப்படுகிறது. பலவகை கண்ணோய் மருந்துகளில் கொம்பரக்கு சேரும். இவையன்றி பட்டுப்பூச்சிகளின் பட்டுக்குளவி கூடுகளும் மருத்துவத்தில் பயன்படும்.

மண்குளவிக் கூட்டின் பயன்

அரக்கு அல்லது மண்குளவிக்கூடு, விளாம்பழ வித்து, நெற்பொரி, திப்பிலி சம எடை எடுத்து தேன் விட்டு வறுத்து குடிநீர் செய்து கொடுக்க விக்கல் தீரும்.

குளவி கூட்டு குடிநீர்

"நன்மை பிள்ளை மாந்தைக்கு
நளிரு மூலி நீ கேளாய்
கொன்றை வேர்த்தோல் விளாயிலையுங்

கூறுஞ்சிறு புள்ளடியுடனே
கன்றாய்க் குளவி மண்ணுந்தான்
கறுக வறுத்து நீர்விட்டு
உண்டால் மாந்தஞ் சகலமுந்தா
னொழிந்து போகு மடமயிலே"

– **தேரையர் வைத்தியம்**

கொன்றை வேர்ப்பட்டை, விளாயிலை, குளவி கூட்டு மண் — ஆகியவை சம எடை எடுத்து வறுத்து 4 பங்கு நீர் விட்டு 1/8 பங்காக வற்றவைத்து கொடுக்க குழந்கைட்கு காணும் மாந்த நோய் தீரும்.

வேட்டுவன் குழம்பு

"கருவளையல் கிட்டங்கடுக்காய் நெல்லி தான்றி சுக்கு
பெருகிய மிளகு உப்பும் பொருந்த வேட்டுவன் கூடொக்க
பருகிய புளியஞ் சாறும் பருக நல்லெண்ணை தன்னில்
உருகவே அரைத்துப் போட ஓடிடுங் கண்ணோய் தானே."

– **நா.மு.ந.வி**

கருவளையல், அயக்கிட்டம், திரிபலை, சுக்கு, மிளகு, இந்துப்பு குளவிக்கூடு மண் சமஎடை எடுத்து புளியிலைச் சாறும், எள்நெய்யும் ஓரளவாக விட்டு குழம்பு பக்குவத்தில் அரைத்துக் கண்ணிலிட கண்ணோய்கள் தீரும்.

குளவிக்கூட்டு மண், இண்டங் கொழுந்து, புற்றுமண், விளாஇலை, பச்சிலை, நாரத்தை, வரட்பூலா கொழுந்து, ஆலங்கொழுந்து, பொன்முசுட்டை கொழுந்து ஆகியவை சம எடை எடுத்து குடிநீரிட்டு கொடுக்க தாகம் தீரும்.

"சொல்லென்ற அமிர்தாதியுண்டை கேளு
துடியான திரிகடுகு மாவிலிங்கம்
அல்லென்ற வகைவகைக்கு கழஞ்சு
வீதம் புகழாகச் சுத்திசெய்து குளவிக்கூடு
மல்லென்ற அவ்வெடைக்குக் கல்வத்திலிட்டு
மங்கை முலைப்பால்தனிற் சாமமாட்டு
......சுண்டை போலுண்டை பண்ணே"
பண்ணியுண்டை நிழலிலுலர்த்திச் செப்பிலிட்டு
பரிவாகக் கசக்காமல் குளிகையாக்கித்
தின்னவுடன் மட்டடங்காவுடம் புளைச்சல்
திறமான வாயு குத்ததில் கடுப்பு சத்தி
வண்ணமுறு முப்பிசமுமந்தத் தொண்டை
வலி நெஞ்சு நீர்தோஷந்தாக சுரமும்
நண்ணுகின்ற சிறுமதலைகட்கு வருநோய்
மாந்தம் நவிலரிய சந்நி முதல் தீரும் பாரே"

– *போகர் 700*

சுக்கு—5.1 கிராம், மிளகு—5.1 கிராம், திப்பிலி—5.1 கிராம், மாவிலங்கப்பட்டை—5.1 கிராம், குளவிக்கூடு—20.4 கிராம் எடுத்து, தாய்ப்பால் விட்டு நன்கு மைபோல் அரைத்து சுண்டைக்காய் வீதம் உருட்டி நிழலில் உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு: வேளை ஒன்றுக்கு *1* மாத்திரை வீதம் *2* வேளை

தீரும் நோய்கள்: *உடல் வலி, வாயு, கடுப்பு, சந்நி, உப்புசம், தொண்டைவலி, நீர்க்கோவை.*

தாகசுரம், குழந்தைகட்கு உண்டாகும் தாகம், சந்நி, சுரம் தீரும்.

கொம்பரக்கு

Cateria Lacca (Or) Coccus Lacca

கொம்பரக்கின் குணம்

சுவை — துவர்ப்பு, கைப்பு

செய்கை — உடல் தேற்றி

வீரியம் — வெப்ப வீரியம்

பிரிவு — கைப்பு

இதன் குணத்தைக் கீழ் செய்யுளால் அறியலாம்.

"குட்ட மசிர்க்கு பித்தங் குன்மயிரைப் பென்புருக்கி
பட்டிடு புண்ணாகச்சூர் பங்கநோய் — தொட்டோ
ரரக்கரக்குஞ் சந்நிசுர மையமிலைக் கொல்லா
மரக்கரக்கு நூலை யறி"

– ப.கு.சி.

அரக்கு, குட்டம், அசிர்க்கரம், இரத்தபித்தம், குன்மம், சுவாசம், எலும்புருக்கி, அடிப்பட்ட புண், உடல் வலி, சந்நிபாத சுரம், கபம் முதலிய நோய்களைப் போக்கும் மற்றும் இதனால் பெரும்பாடு, இரத்த சீதபேதி முதலியன நீங்குவதோடு இது மார்பிற்கு வலிமையைக் கொடுக்குமென்று கூறப்பட்டுள்ளது.

உபயோகங்கள்: அரக்கைப் பொடி செய்து 3 (390 மி.கி.) முதல் 10 குன்றி (1.3 கிராம்) வரை தேனில் கலந்து கொடுத்து வர, வாந்தியில் காணும் இரத்தத்தை நிறுத்தும்.

இரத்த சீதபேதியை நிறுத்த, இலவம் பிசின் சூரணம், மூன்று குன்றி (390 மி.கி.) யுடன் கொம்பரக்குச் சூரணம் மூன்று குன்றி (390 மி.கி) அளவு சேர்த்து, நாள் ஒன்றுக்கு மூன்று வேளை அல்லது நான்கு வேளை வீதம் கொடுத்துவர வேண்டும்.

கொம்பரக்கு — 1, இலவம் பிசின் ½, மாசிக்காய் ¼, ஜாதிக்காய் 1/8 பங்காக எடுத்து 1000 மி.லி நீர்விட்டு காய்ச்சி 123 மி.லி.யாகக் குறுக்கி, அதை இரு பங்காக்கிக் காலை மாலை பீச்சு ஆக உபயோகித்துவர கிரகணி, இரத்த பேதி, பித்த சுரத்தில் காணும் பேதி முதலியன தீரும்.

அரக்கைச் சூரணம் செய்து அடிப்பட்ட புண்களின் மீது வைத்தழுத்திக் கட்ட வடியும் ரத்தம் நின்று புண் ஆறும், கண்டமாலை முதலிய நோய்களில் காணும் துஷ்ட விரணத்திற்கும் இதனை உபயோகிக்கலாம்.

அரக்கு தைலம்

“துரும வியாதி யென்குடுப்பஞ் சுராற்
றறலெண்ணாண்குகடன்
கருக்கயித் தனக்கனலாந் தொகைக்கெட்
டொன்றாய் வடிகுடிநீ;
ரருமை நறும்பா லெட்டயில மந்நீர்க் கருக்க
மவந்திமஸ்து
மாற்ற பளவைப் படிப்பலமா மார நிசிபுட் கரஞ்
சிகரச்
சரும மடைபச் சிலைமதுரஞ் சடைகிச் சிலிரோ
கணியேலை
சதபுட்பியும் பாயும்வா லரியுரிபூஞ் சாந்தோ டுபய
வசைமுசலி
உரும முறுசெவ் வல்லிகண மொவ்வொன்
றிருக்கோ ராம்மிரமா
யூற்றும் பயசா லிழையெல்லா மூற்றிக் கரைத்துத்
தானமிடே”

– தே.தை.வ.சு

கொம்பரக்கு பலம் 32 (1,120 கிராம்) குடிநீர்ப் பாண்டத்தில் கிழிகட்டித் தொங்கவிட்டு, மருதஞ் சார்ந்த ஆற்றுநீர் மரக்கால் (32) விட்டு சிற்றாமுட்டி விறகினால் எரித்து (8—ல்) ஒரு பங்காய் வடித்த குடிநீரில் பசுவின் பால் படி 4—ம் (8 லிட்) நல்லெண்ணெய் படி — 4ம் (8 லிட்டர்) காடிச் சலம், தயிர்ச்சலம், இவைகள் வகை 1க்கு பலம் 32—ம் (1, 120 கிராம்) சேர்த்து இதில் சந்தனம், கஸ்தூரி மஞ்சள், கோட்டம் இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, பச்சிலை, அதிமதுரம், சடா மாஞ்சில் , பூலாங்கிழங்கு, கடகரோகணி, ஏலம், சதகுப்பை, கிளியூறல்பட்டை, பூசாந்திரப்பட்டை, சீரகம், கருஞ்சீரகம், மெருகன் கிழங்கு, செவ்வள்ளிக் கொடி என்னும் கற்கத்திரவியம் ஆகிய (18ம்) வகை 1 க்கு பலம் 1 (35 கிராம்) தனித்தனியே பொடித்து நிறுத்து, மேற்படிப் பாலால் பதமாக அரைத்து, எல்லாம் ஒன்றுபடக் கரைத்து அடுப்பின் மிசை வைப்பாயாக.

இதன் மகிமை

“உத்தான மிட்டுமுதற் பொருளை வாழ்த்தி
யொல்கவெரித் தைத்தாநா ளுதய முந்தி
யோது பரு வத்துவடித் ததற்குச் சுத்தி
யொருமதிநெற் புடத்தீர்வ தொளிரி லட்சைத்
சத்தான தைலத்தின் பெயரைச் சொல்லிற்
சப்ததா துச்சுரமுஞ் சடக்க டுப்புஞ்
சந்திரா வர்த்தமொடு சூரிய வர்த்தத்
தலைச் சூலை வியர்வுறுகற் றாழை வாச
முத்தான வெயிற் றினடிச் சுரப்பு மாற்ற
மொழிய வொட் டாச்சுரக்கி னமுமூர்த் தமாக

மூர்ச்செழுப் புஞ்சுவா காசச் செருக்கு
முதிருழலை யுதிரத்தின் முரிவும் பாண்டுக்
கொத்தான நோய்களுமுள்ளீர லுக்குட்
குளிர்தெழுந்தங் கவயவியை குலுக்கி யாட்டுங்
குளிச்சுரமு நாட்பட்ட சுரமுத் தீவாய்க்
குயவரியை நேருமயக் குழாத்த தாமே"

– தே.தை.வ.சு

கடவுளை பூசித்து, அடுப்பின் மீது வைத்து எண்ணெயை தகுந்த விறகினால் 4 நாள் வரைக்கும் மெல்ல எரித்து, 5—வது நாள் உதய காலத்திற்கு முன் வடித்து, ஒரு மாதம் நெற்புடம் வைத்து சுத்தி புரிந்தெடுத்துப் பதனஞ் செய்யவும். இதில் சிவந்த அரக்கின் சத்து சேருதலால் இந்தத் தைலத்தின் பெயரைச் சொன்ன மாத்திரத்தில், சப்த தாதுக்களைப் பற்றிய சுரங்கள், தேகக் கடுப்பு, சந்திராவர்த்தம், சூரியாவர்த்தம், கபாலச் சூலை, வியர்வையாற் பிறக்கின்ற கற்றாழை நாற்றம், பற்களின் வேரில் வீங்குகின்ற வீக்கம், வார்த்தை சொல்ல ஒட்டாத சுரத்தின் ரோகம், ஊர்த்துவ கதியாக மூச்சை எழுப்புகின்ற சுவாசகாச ரோகம், அதிகரித்த உழலை ரோகம், உதிரக்கெடுதி, ஐவகைப் பாண்டு ரோகங்கள், ஈரலுக்குள் குளிர்ச்சியை உண்டாக்கிப் பின்பு, நரம்புகளில் வியாபித்து தேகத்தைக் குலுக்கி ஆட்டுகின்ற நளிர்ச் சுரம், புராண சுரம் ஆகிய ரோகங்களையெல்லாம், தீவாயையுடைய புலிமுன் அகப்பட்ட ஆட்டுக் கூட்டத்தைப் போலாகும்.

அரக்கு, சந்தனாதித் தைலத்திலும், அசுவகந்தி, பலா லாட்சா தைலம் போன்ற தைலங்களிலும் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

கொம்பரக்கு, மஞ்சிட்டி, அரிதாரம், மஞ்சள், மனோசிலை பொடித்து தேன், நெய் சேர்த்து அரைத்து பூச தோல் வெடிப்பு தீரும்.

பட்டுக்கூடு

பட்டுக் குளவிக்கூட்டை கருக்கி கொடுக்க விக்கல் தீரும். பட்டு நூலால் நெய்யப்பட்ட பட்டு துணியை கருக்கி கொடுக்க பெரும்பாடு தீரும். பட்டுசீலை பல்வேறு மருந்துகள் செய்ய பயன்படும். (உ.ம்.) பட்டு கறுப்பு, சின்ன பட்டுகறுப்பு.





குளவிக்கூடு

Potter Wasp

Family : Vespidae

Subfamily : Eumeninae

Potter Wasp, common name for a group of caterpillar-hunting wasps known for the post-shaped mud nests built by some species. Potter wasps are also known as mason wasps.

Some species of potter wasps nest in the ground, in hollow plant stalks, in nail holes in wood, or in deserted bee and wasp nests. The nests of these species consist of a linear series of brood cells separated by mud partitions. Other species construct

rounded, jug - shaped nests with narrow necks. These nests, which resemble miniature pottery, may be fastened at the bottom to twigs. Each female constructs one or more nests independently. She carries a droplet of water to a particular mud - collecting site and mixes it with dry clay earth, using her mandibles. The Wasps saliva may help to strengthen the dried mud. The architectural potter wasp collects wood fibers to cover the mud nest. Scientists believe that this behavior represents an intermediate stage in the development of constructing nests completely from paper, a behavior found in many other wasps.

அரக்கு குளவிக்கூடு
Carteria lacca

source

Lac is a resinous substance usually of reddish or dark brown in colour with a disagreeable odour & easily breakable with

a cracking sound. It is deposited on the twigs of trees such as Banyan, Acacia and Peepal tree by a small insect - Carteria lacca. Young branches of the trees above mentioned & fix themselves to the branches.

The female insect after oviposition is affected dies, giving out from her body a reddish liquid which solidifies & forms a crust about an inch thick round the branch attached. Others again affirm that the sting of the insect affects the sap or gum of the trees which forms the lac.

Origin of Lac

The minute hemipterous insect Tachardia lacca lives upon juices sucked up by its proboscis. In the adult stage females have on power of locomotion. But the males on attaining maturity emerge from their pupal cases, becomes possessed of a long transparent wing & fly away to visit the females & shortly after, they die off. At two or three seasons, swarming of the larvae takes place. The larvae are seemed to emerge from dead bodies of the females & to crawl away in quest of fresh feeding grounds. They are thin minute creatures of an orange - red colour. Have on separation of body into head, thorax and abdomen. But have fully formed features and powerful legs. They measure about 1/ 140 of an inch in size. For some days the swarming continues until the twigs become distinctly reddish in colour & literallyalike. The vast majority however perish, the more fortunate are waited on the breeze & carried by the bees, birds, squirrels or by their own excretion to new situations. The larvae thus becomes fixed and their legs being useless drop off. Lastly a resinous excretion begins to form around their body

which by aggregation of many in times assumes the condition of a more or less complete encrestation of the twigs.

In cold weather, the branches of lac plant, Laksha tharu often swamp with the lac insect & seem covered with a red dust. The female insect produces small nipple like encrustations on the twigs, their bodies being apparently glued together by a liquied which forms acellular texture. Animals resembles a small bus. After a time the yound ones escape leaving empty shells on the branches.

Stick lac

Stick lac is the name given to the twigs encrusted with lac, that are collected from the trees. These twigs are dried in the shade. Various forms and sizes are given to stick lac. Thus when the resionous concretion is taken off, the twigs are broken and triturated & washed in water. Then greater part of the colouring matter is dissolved & granular matter is known as seeds lac. Seed lac is stick lac crushed & reduced to roundish pieces. Seed lac breaks off into small particles ie grain seed lac; when it is melted over a fire & squeezed through a pieces of calico

& spread into thin glossy plates known as shell lac. ie: seed lac is specially washed bleached & mixed with a proportion of Arsenic & resin. This is put in lags and placed over a fire. Then lac is squeezed through the meshes. The molten is spread off in sheet form & allowed to cool. The result being shell lac.

Silk Cocoon (Bombyx mori)

The Domestic silk moth, Bombya mori is a member of a small family of about 300 Moth species. Mulberry leaves are the food of Bombyx mori. There are four stages of development of Bombyx mori - Ova, Larva pupa and Imago. The egg of the B. mori is a very small and hard structure. The larva of Bombyx mori is called silk worm. about 27 days after hatching silk worms begis spinning cocoons. Cocoon completion takes about 3 days. Silk Cocoon serves as protection for the pupa. Cocoons are shades of White cream and yellow depending on silk work genetics.

Silk Thread

It is a solidified secretion from two large found in each larva. Silk threads are very fine, smooth and solid and are usually yellow in colour. Silk is soft and smooth to the touch, possess considerable tensile strength and elasticity and is hygroscopic.

Silk becomes positively electrified when subjected to friction. Silk is easily soluble, in cold sulphuric acid 66% and in strong hydrochloric acid (1:16) in 5% aqueous caustic alkali, silk dissolves only with difficulty, even on boiling. With lead acetate and caustic soda it gives on blackening. All these characters distinguish silk from wool.

Microscopy

Genuine mulberry silk appears as solid structure less, Cylindrical or slightly flattened, highly refractive thread from 5 to 25 microns in thickness mentioned above can be observed under the microscope. Silk threads polarize brightly between crossed nicols and many threads show bright colours.

Constituents

Silk consists chiefly of the protein fibrin, which forms the mass of the fibre. This is coated externally by another protein. sericin or silk gum, which cements the fibreas together and soluble in warm water, being therefore largely recoved when the silk is wound from the cocoons. The proteins of silk contain C.H.O and H.

குழியானை - ANTLION

Mynnelion contractus

இது மழைக்காலங்களில் காணும் தட்டான் பூச்சியின் வகையில் ஒன்றான ஊசித்தட்டான் தன் முட்டையினின்று வளரும் பருவ நிலையில் "லார்வா" பருவத்தை சேர்ந்தது. இது பூமியில் சிறு குழிகள் தோண்டி அதனுள் வாசம் செய்யும். எறும்புகளை பிடித்து உண்ணும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறப்பாக குழந்தைகட்கு உரிய மருத்துவ முறைகளிலும், கர்ப்பகால மருந்துகளிலும் கையாளப்படுகிறது. அனேக வர்மத் தைலங்களிலும் சிறப்பாக சேர்க்கப்படுகிறது.

பிள்ளைத் தைலம்

குழியானை, வசம்பு, உள்ளி, பூநாகம், இஞ்சி, நஞ்சறுப்பான், ஓணான், வகைக்கு (1 பலம்) எடுத்து அரைத்து வேப்ப நெய் (7 பலத்தில்) விட்டுக் கரைத்து காய்ச்சி வடித்து, உள்ளுக்கும் கொடுத்து, துவாலையிட்டு வர குழந்தைகட்கு காணும் எச்சி, இளைப்பு, இருமல் தீரும்.

குழியானைத் தைலம்

குழியானை, அக்கரா, கிராம்பு, மிளகு, அதிமதுரம், வால்மிளகு, பூநாகம், அரத்தை, முருங்கைப்பூ, ஆமணக்குவேர், கடுக்காய், கொளிஞ்சிவேர், முசுறுமுட்டை, திப்பிலி, திப்பிலி மூலம், குழிமீண்டான் சாறு வகைக்கு 5.1 கிராம் வீதம் எடுத்து அரைத்து வேப்ப எண்ணெய் ½ படி சேர்த்து அரித்து மணல் பதத்தில் வடித்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

பிள்ளை வயதிற்கு ஏற்ற அளவுப் படி 3 நாள் 6 வேளை கொடுக்க வேண்டும் பிள்ளைகட்கு காணும் விலாச்சுளி, தோடம், குடற்பிடிப்பு, கணை, எச்சி, பட்சிதோடம் தீரும்.

பேற்றெண்ணை

அ) திரிகடுகு, அதிமதுரம், காயம், ஏலம், சதகுப்பை, வசம்பு, தகரம், கறிமஞ்சள், குக்கில், கடுகு, ஓமம், இலவங்கம், காட்டுச்சீரகம், திரிபலை, அரிதாரம் வகைக்கு 1 கழஞ்சு (5.1 கிராம்).

ஆ) மயிலிறகு, எருமை மாட்டுத் தோல், குதிரைக் குளம்பு, முயல்புழுக்கை, பூநாகம், குழியானை வகைக்கு 4 கழஞ்சு (20.4 கிராம்).

தழுதாழை, ஆடாதோடை, முடக்கற்றான், ஊமத்தை, நொச்சி இவற்றின் சாறு வகைக்கு ½ படி.

கருங்கோழி — 1

நல்லெண்ணெய் — (1 படி) 1.3லி

வேப்பநெய் — (1/2 படி (650மிலி))

பகுதி அ—வில் உள்ள கடைச் சரக்குகளை அரைத்து, பகுதி ஆ—வில் உள்ள சீவப் பொருட்களில் மயிலிறகு, எருமைமாட்டுத் தோல், குதிரைக் குளம்பு இவற்றைக் கருக்கி மற்றையவற்றைச் சேர்த்து அரைத்து கருங்கோழியைச் சுத்தித்து இடித்து அனைத்துச் சரக்குகளையும் ஒன்றாகக் கலந்து காய்ச்சிப் பதத்தில் வடித்துக் கொள்ள வேண்டும்.

அளவு: ½ கழஞ்சு (2.5 கிராம்).

சூலுள்ள பெண்களுக்கு ஏற்படும் சுரம், சன்னி, கபம், தலைவலி இவற்றிற்கு உள்ளுக்கும் கொடுத்து தலைமுழுகி வரத் தீரும்.

உரோமரிஷி 300 எனும் நூலில் "பேதத்தின் பொடி" எனும் இடு மருந்தில் குழியானையும் சேரும்.

குழியானை

Mynnelion contractus Antlion

Habitat

Antlions are worldwide in distribution, most common in arid and sandy habitats and can be fairly small to very large (wingspan range of 2-15 cm)

Larvae

The term "antlion' applies to the larval form of the members of this family.

Size

Fully developed larvae are as long as a human fingernail about (1.5 cm) with plumpy abdomen, small head and sickle shaped mandibles.

Diet

The Antlion larvae eat ants and other insects.

Digging the pit

The antlion larva digs its pits which are 1.5 to 2 inches in diameter and about the same depth in dry, sunny spots sheltered from wind and rain, particularly on south - facing slopes. The soil must be light and easy to shift. Pushing itself backward. The larva first draws a circle on the ground. Then digging deeper and deeper, it spirals in toward centre. The larvae be busied at the bottom of the pit ants talling into the pir are seized and eaten.

152-2 - 11

கோரோசனம்

FEL BOUINUM PURIFACTUM
Purified oxgall (or) Ox bile

இப்பொருள் ரோசனம், கோமந்திரம், வச்சலமணி, ஜாதி என்னும் வேறு பெயர்களினாலும் வழங்கப்படுகின்றது. பொதுவாய் மிருகங்களின் பித்தைக் குறிக்கும்பொழுது, ரோசனம் என்றும், சிறப்பாகப் பசுவின் பித்தைக் குறிக்கும் பொழுது கோரோசனமென்றும் (கோ+ரோசனம்= கோரோசனம்). ஆட்டின் பித்தத்தைக் குறிக்கும் பொழுது மைரோசன மென்றும் வழங்கப்படும்.

செரிமானத்திற்கு மிக முக்கியமான பித்த நீர், கல்லீரலினின்று உற்பத்தியாகி பித்தப் பையில் சேமிக்கப்படும். இவ்வாறு பித்தப்பையில் சேரும் நீர் பல காரணங்களால் மிகுந்த அளவில் நீர்த்துவம் குறைந்து கெட்டிப்பட்டு பித்தப்பையில் கல் போன்ற கடின நிலைமை அடையும். செரிமானத்திற்கு உரிய அளவு பித்த நீர் சேராததால் இந்நிலையில் உள்ள பசு சீரண சக்தியின்றி கழிச்சலுடன் உடல் மெலிந்தும் மூர்க்க குணமுடனும் காணும். அருகில் செல்லுங்கால் சற்று சுகந்த மணம் உடையதாய்க் காணும். இக்குறிகள் காணில் அப்பசுவில் கோரோசனம் விளைந்துள்ளதாக அறிந்து அதைக் கொன்று கோரோசனையை எடுத்துக்கொள்வதே மரபு. இது அரிதானதும் மிக விலை உயர்ந்ததுமாகும்.

ஆனால் தற்போது மாட்டின் பித்தப்பையில் உள்ள பித்தத்துடன் சாராயம் கலந்து சிறுக்க வைத்தும், மொச்சையை அரைத்துக் கலந்தும் கோரோசனை என விற்கப்படுகிறது.

கோரோசனை விலையுயர்ந்த சரக்காகையால், செயற்கையில் செய்யப்பட்ட கோரோசனையைச் சோதிக்க, ஒரு சிறிய ஊசியைப் பழுக்கக் காய்ச்சி, கோரோசனையில் குத்திப் பிடுங்கினால் மஞ்சள் நிறப்புகையுடன் ஊசியின் மேல் மஞ்சள் நிறம் பதியும். அதுவே நல்ல சரக்கென்று கண்டு கொள்ள வேண்டியது. இது கைப்புச் சுவையையும், வெப்ப வீரியத்தையும் கார்ப்புப் பிரிவையுமுடையது. மற்றும் இதற்கு மலமிளக்கி, இசிவகற்றி, குளிர்ச்சியுண்டாக்கி, பித்தசமனி கோழையகற்றி ஆகிய செய்கைகள் உண்டு.

இதன் குணத்தைக் கீழ்க்காணும் செய்யுளினால் அறியலாம்.

"நீரிழிவு மேகசுர நீங்காக் கனல்வேகங்

கூறியஉன் மாதங் குழந்தைகள் நோய்.... பாரகபம்

வீறுவை சூரியும் போம்... ... ..."

– ப.கு.சி.

(கனல் வேகம் — பித்தாதிக்கம், குழந்தைகள் நோய் — கிரந்தி, மாந்தம், கணம் முதலியன, வைசூரி அம்மைநோய்)

இதனைக் குழந்தைகளுக்கு 2 கடுகுப் பிரமாணமும், மற்றையோருக்கு இரண்டு குன்றி 260 மி.கி. அளவு முதல் ஐந்து குன்றி (650 மி.கி.) அளவு வரையும் உபயோகிக்கலாம்.

இதனை நோய்க்குத் தக்க அனுபானத்தில், தனியாகவும், மாத்திரை, தைலம், முதலிய முறைகளாகச் செய்து உபயோகிக்கின்றனர்.

கோரோசனையை முலைப்பாலிலாவது, கற்பூரவள்ளி இலைச்சாற்றிலாவது அனுபானித்துக் கொடுக்கச் செங்கிரந்தி தீரும். நீர்க்கோவைக்கு வெற்றிலைச் சாற்றில்

அனுபானித்துக் கொடுக்கலாம். கண் இருள் நீங்க இதனை முலைப்பாலில் இழைத்துக் கண்ணிலிட்டு வரவும்.

படலம் முதலிய கண் நோய்கள் தீர, தேரன் தைலவருக்கச் சுருக்கத்தில் கூறப்பட்டுள்ள கண் தைலத்தில், கோரோசனையும் முக்கிய சரக்காம்.

வைசூரி என்று கூறப்படுகின்ற அம்மை நோய்க்குக் கோரோசனையைப் பசும்பாலில் இழைத்துக் காலை, மாலை கொடுத்தல் வழக்கம். மற்றும் காலை மாத்திரம் இதைக் கொடுத்து, மாலையில், தோல்சுட்ட சாம்பல் சிட்டிகையுடன் கலந்து கொடுத்தலுமுண்டு. இப்படிக் கொடுத்தலினால், இந்நோயிலுண்டாகும் அதிவெப்பம் தனியும்.

மற்றும் கோரோசனை, தொண்டை நோய்க்கும் வெப்பநோய்க்கும் சிறந்தது.

"கோரோசனை யொன்று லிங்க மிரண்டு

கூட்டியரைத் தாவின்வெண்ணெயிற் றின்றிடவே

மானாதோய்த் தொண்டை வெப்போடு

மாறு மென்றே கும்மி யடியுங்கடி"

– அ.வை.கு

மேற்கூறிய முறையில் சேர்க்கப்பட்ட இலிங்கத்தின் குணத்தைப் பொருட்பண்பு நூலில் கூறப்பட்ட செய்யுளினாலறியலாம்.

பவளக்கால் மல்லிகையின் இலை, மிளகு, கோரோசனை இம்மூன்றையும் சரியளவு எடுத்து அரைத்து, மாத்திரை ஆக்கி முறைச் சுரத்திற்கு மூன்று தினம் கொடுக்கத் தீரும்.

கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், கற்பூரம், ஏலம், கிராம்பு கோஷ்டம், சாதிக்காய், அக்கராகாரம்

வகைக்கு மூன்று கழஞ்சு (16 கிராம்) எடுத்துப் பொடித்து சந்தனத் தூள் குடிநீரால் நான்கு சாமமும், சண்பகப்பூக் குடிநீரால் இரண்டு சாமமும், குங்குமப்பூக் குடிநீரால் இரண்டு சாமமும் அரைத்துக் குன்றி அளவு மாத்திரை செய்து உலர்த்திக் கொண்டு, முலைப்பாலில் கொடுக்க, சேத்தும நோய்கள், சன்னி, நீர்த்தோடங்கள், மயக்கம், சிலேத்தும சுரம் நீங்கும். இம்மாத்திரையை அண்டத் தைலத்தில் கொடுக்க வலிப்பிசிவு நீங்கும்.

மாந்தப் பிணிக்குக் கீழ்காணும் செய்யுளில் கூறப்பட்ட கோரோசனை மாத்திரையைச் செய்து கொடுக்கத் தீரும்.

"சீர் சிறந்த மாசிக்காய் திப்பிலிகோ ரோசனமும்
கார்சிறந்த கோட்டம் கருஞ்சீரகம் — பேர்சிறந்த
அக்கராகாரம் அரைத்து முலைப்பாலிலிட
இக்கணமே தீரும் இது".

– பாலவாகடம்

சுரம் நீங்கவும் மலங்கழியவும் கோரோசனம் வராகனெடை இரண்டு (8, 4 கிராம்) கடகரோகிணி, நேர்வாளம் இவைகள் வகைக்கு வரானெடை ஒன்று (4.2 கிராம்) இவைகள் முலைப்பால் விட்டு நன்கு சாமமரைத்து பயறளவு உருண்டை செய்து நிழிலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும். இதை வாத சுரத்திற்கு ஒரு மாத்திரை இஞ்சிச் சாற்றிலும், பித்த சுரத்திற்கு ஒரு மாத்திரை முலைப்பாலிலும், கப சுரத்திற்கு ஒரு மாத்திரை ஆடாதொடை, கண்டங்கத்திரி, தூதுவறை இவைகளின் இலை சரியெடை எடுத்துப் பிட்டவியல் செய்து பிழிந்து சாற்றிலும் கொடுக்கத் தீரும். இச்சாபத்தியம் வைக்க வேண்டும்.

இம்மாத்திரை வயிறு கழியுமாறு செய்யுமாதலால், காலையில் மாத்திரம் உபயோகிக்க வேண்டும். மாலையில்

வயிற்றைப் போக்காத கோராசனை மாத்திரையில் ஒன்று, மேற்படி துணை மருந்துகளோடு சேர்த்துக் கொடுக்கலாம்.

அச்சரத்திற்குக் கீழ்காணும் கோரோசனை எண்ணெயை உபயோகிக்க நல்ல பலனை அளிக்கும்.

"கருஞ்சீரகம் ரோகிணி கடுக்காய் காட்டுமல்லி கைவேர் வகைக்கு

ஒருவராகன் இரண்டங் கொழுந்து ஒருபிடி யுள்ளி பலமிரண்டு

முருவிளக் கெண்ணெய் படியரைக்கால் முலைப்பால் வீசம் படியாக

மருந்தையிடித் தெண்ணெய்தன்னில் மயனபதங்க கோரோசனையே"

சசினையே இரண்டு வராகனெடை சேரப்பொடித் தெண்ணெய்விட்டு

தனையே வடித்துண் ணக்கேளு சதிரா வயிற்று வேக்காடும்

பணியக் காய்ச்ச லுந்தீரும் பத்திய மிதற்கு நலமாமே"

காட்டாட்டு ரோசனையை — ½ (65 மி.கி.) முதல் குன்றி (130 மி.கி.) வீதம் பாலிலேனும் தனியாகவேனும் கொடுத்துவர, விஷங்களைப் பறிக்கும். தலை, மூளை, இருதயம் முதலிய இராச உறுப்புகளுக்கு வலிவையும், பஞ்சேந்திரியங்களுக்கு அதிக சக்தியையும், தாது விருத்தியையும், தேக பலத்தையும் சந்தோசத்தையும் உண்டு பண்ணும். சிறப்பாக இருதய நோய்களைப் போக்கும்.

கோழி

Gallus gallus domesticus

"இரவையறிவோ றிறங்கிய சேவலாம்
நிரவிய சண்முகன் நீண்ட கொடியோனாங்
கரவிய சூரன் கடியதோர் ஞானிதான்
தரவைய னாமந்தான் தன்கோழி பேரே"

– ச.மு.நி.

அன்றியும் ஆண்டலை புள், குக்குடம், குருகு வாரணம் கரலாயுதம் என்ற வேறு பெயர்களும் உண்டு.

பலவகைக் கோழிகள் வழக்கில் உணவாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் மருத்துவ நூற்களில் மருந்து முறைகட்குச் சிறப்பாகச் சொல்லப்படுவது. கருங்கோழி இனங்களே. இதன் மாமிசம் இறகு, நகம், பித்து, இரைப்பைக் கல், மலம், கால்தோல், நெஞ்சென்பு, முட்டை, இரத்தம் முதலியன மருத்துவத்தில் பயன்படுகிறது.

கோழியின் பொதுகுணம்

"கோழிக்கறிக்கு வாதங்குடி போகுங் குன்ம நீங்கும்
வாழிபெல னோடுவன் பசியுண்டாம் முட்டை
பாழ்செய்யுங் கிரந்தியல்லாற் பகருங் கரப்பன் சேர்க்கும்
காமுறு மிதனென்பு கண்ணு ரோகங் கட்காகும்"

– பதார்த்த சூடாமணி

கோழிக்கறியினால் வாதநோய் நீங்கும். குன்மம் தீரும்.

பசியும் பலனும் உண்டாகும். முட்டை கிரந்தி, கரப்பானை உண்டாக்கும். இதன் எலும்பு கண்ரோகங்களை நீக்கும்.

கோழிக்கறியின் குணம்

"கோழிக்கறி நெருப்பாங் கொள்ளின் மருந்துரம் வாங்
கூழைக் கடுப்புமந்தங் கூறுரச — மாழ்கிப்போ
நீளுற்ற போக நிணக்கரந்தி பித்த முண்டாதி
தூளித்த மெய்யிளைக்குஞ் சொல்"

– ப.கு.சிந்தாமணி

சூடுள்ள கோழிக்கறியை உட்கொள்ள மருந்தின் வேகம், சுவாசம், தேகக்கடுப்பு, மகாவாதம் போம். சுக்கிலம், விரணம், பித்தம் விளையும், உடல் இளைக்கும்.

கருங்கோழிக்கறியின் குணம்

குட்டங் கடிகிருமி கோரவாதக் கூட்ட
மட்டிடாச் சூலையறு மாதரசே — துட்ட
கிரந்தியொடு புண்வலி போங்குட லுரக்கு
மருந்துகருங் கோழியுன் வை"

– ப.கு.சி

மருந்தாகிய கருங்கோழிக்கு குட்டம், காணாக்கடி, புழு, மகாவாதரோகம், சூலை, சிறுசிரங்கு, விரணம், வலிப்பு போம். உடல் வலுக்கும்.

சுவை — இனிப்பு, உப்பு

வீரியம் — உஷ்ணம்

கருங்கோழித் தைலம்

"குக்குடந்தான் முட்டையிட்ட கோழி யொன்று
குணமாகச் சிகைபிடுங்கிக் குடலைப் போக்கி
இக்கிடவே உரலிலிட்டுக் காயஞ் சுக்கு
இதமான பரங்கியுட் பட்டை யுள்ளி
தக்கிடவே வகையொன்று பலங்கா லாகத்
தாட்டிகம தாயிடித்து மிடாவி லிட்டுச்
சிக்கெனவே பாணிபடி பத்து விட்டுச்
செயம்பெறவே யெட்டொன்றாய்க் காய்ச்சி டாயே
காய்ச்சியதில் நிம்பயெண்ணெய் இடை விட்டுக்
கமனாக நீர்சுண்ட யெரித்து யெண்ணெய்
தாச்சியில்லா தொரு கரண்டி யெட்டு நாளுஞ்
தானருந்த வாதமெலாங் கடலே புக்கும்
பாச்சிடவே சூலைபதி னெட்டும் போகும்"

– யா.வை.சி

முட்டை இட்ட கருங்கோழியை இறகு, குடல் நீக்கி சுத்தித்து உரலிலிட்டு இடித்து அத்துடன் காயம், சுக்கு, பறங்கிப்பட்டை, பூண்டு, வகைக்கு 10 கிராம் எடுத்து சேர்த்திடித்து ஒரு பானையிலிட்டு 20 லிட்டர் நீர் விட்டு 2½ லிட்டராக வற்ற வைத்து 2½ லிட்டர் வேப்ப நெய் சேர்த்து, அடுப்பேற்றிக் காய்ச்சி நீர் சுண்டும் பக்குவத்தில் இறக்கிக் கொள்ள வேண்டும்.

15 மி.லி. முதல் 30 மி.லி. வகை எட்டு நாட்கள் கொள்ள வாத நோய், சூலை நோய் தீரும்.

கருங்கோழி சூரணம்

"முற்றற் கோழி தான்பிடித்து முதுகைப் பிளந்து கடுகுப்பு
ஒத்த காயம் எண்கழஞ்சு முடிக்கு மிளகு வெள்ளுள்ளி

பற்றிப் பிடித்ததற் குள்ளிட்டு பகரும் பானையின் மேல்வைத்துச்

சுற்றிக் கூட்டிப் பானைக்குற் சொல்லு மருந்து நீர்கேளும்

சங்கம் வேர்பிரப் பங்கிழங்கும் சாற்றும் வெள்ளறுகு செருப்படையும்

புங்கம் வேரோடு கடம்பம்வேர் புனலிக் கொடியும் இலைக்கள்ளி

லிங்கம் வேருடன் கொடிக்கள்ளி இயற்றுஞ் சதுரக் கள்ளியுடன்

அங்கஞ் சொரியும் திரிகள்ளி ஆன செங்கத் தாரியுடன்

பங்கம் பாளை சாரணையும் பகருங் கால்தூக் கதுகூட்டி

நறுக்கிப் பெரும் பானையிலிட்டு

நான்கு வெள்ளத் தண்ணீர்விட்டு எரித்து

நான்கு சாமந்தான் இயல்பாஞ்சீலை

மண் செய்து எரித்துப் பின்பு

தானெடுத்தே எழுந்த கதிரோன்

முன்பரப்பி நறுக்கிடித்து வடித்தனை

நண்ணி வெருகடி தேன்றனிலே கொள்ளே

யின்னு மநுபானம் கூட்டு மிஞ்சிச் சாறு தனில்".

– ***ப.ரா.சே***

முற்றிய கருங்கோழியை இறகு, குடல் நீக்கி சுத்தித்து வயிற்றில் கடுகு, உப்பு, காயம், மிளகு, பூண்டு வகைக்கு 42 கிராம் இடித்து சேர்த்தரைத்து கோழியின் வயிற்றுள் வைத்து தைத்துக்கொள்ள வேண்டும்.

பின் சங்கன்வேர், பிரப்பன் கிழங்கு, வெள்ளறுகு, செருப்படை, புங்கன்வேர், கடப்பம் வேர்,

புனலிக் கொடி, இலைக்கள்ளி, லிங்கம் வேர், கொடிக்கள்ளி, சதுரக்கள்ளி, திருகுக்கள்ளி, செங்கத்தாரி, பங்கம்பாளை, சாரணை வகைக்கு 425 கிராம் எடுத்திடித்து ஒரு பனைக்குள்ளடைத்து 20 லிட்டர் நீர்விட்டு பானையின் மேல் வேடுகட்டு அதில் கோழியை வைத்து மூடி சீலைமண் செய்து 4 சாமம் எரித்துப் பின், கோழியை வெயிலில் உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்து கொள்ள வேண்டும்.

அளவு: 1—2 கிராம்

அனுபானம்: இஞ்சிச்சாறு, திரிகடுகு குடிநீர், கொடிவேலி குடிநீர், பூண்டு தைலம்

நாளளவு: 20 நாட்கள்

தீரும் நோய்கள்: விக்கல், குமட்டல், சூலை, வாயு, புண்கள், பிரமியம், மூலம், குழந்தைகட்கு காணும் சயம் தீரும்.

உப்பு நீக்கி பத்தியமிருக்க வேண்டும்.

கருங்கோழி கற்கம்

"மூன்று வருடந் தான் சென்ற முதிர்ந்த கோழி தனைப்பிடித்துக்

கீன்று குடல்தோ லிறகுமுதற் காலு நீக்கிக் கற்கங்கேள்

தோன்று முப்பு மிளகுள்ளி சுக்குச் சித்திர மூலமுடன்

ஆன்ற வீசூர மூலிவே ரளவாய் வகைக்குப் பிடியொன்றே

ஒன்றே சயிந்தம் பாக்களவா யுற்ற கடுக்கா யோரைந்து

யன்றா யரைத்தச் சரக்கெல்லா கூவிடுங் கோழி தனிற்பொதிந்தே

அன்றே யுருவி யுவாய்நொச்சி யரிய வேலிப் பருத்தியுடன்

பொன்றா நாலு தமைக்கழுவிப் பொருந்தக் கீழ மேலுமிடே

இட்டுக் கோழி தனைநடுவே யெட்டு நாழி நீருற்றி

அட்டு நீரு மூறிநிற்க லதன்பி னெடுத்துக் கோழிதனிற்

சட்ட வெலும்பு தனைநீக்கிச் சரக்கோ டிறைச்சி தனையரைத்து

மட்டாய் வெருகி னடிகொள்ள மாறுங் குண்ட லவ்வாய்வே”

– ப.ரா.சே

கோழி பித்தினை காமாலை நோய்க்கு வெல்லத்தில் வைத்துக் கொடுக்கத் தீரும்.

கோழி எச்சத்தை வெற்றிலையில் வைத்துக் கொடுக்க தேள்கடி விடம் தீரும்.

எருக்கம் பாலைச் சீலையில் நனைத்து அதை மயிலிறகின் மீது சுற்றி அதன் மீது கோழி எச்சத்தை தடவி புகை பிடிக்க தேள்கடி விடத்தால் வரும் கடுப்பு தீரும்.

கோழிக்கல்

கோழியின் வயிற்றுள் வட்டித்த பை போன்ற அமைப்புள் கற்கள் காணும்.

கோழிக்கல், வெள்ளரிவித்து, பூநாகம், வெல்லம் சமஎடை எடுத்து அரைத்து ஆவின் பாலில் கரைத்து 6 வேளை கொடுக்க சதையடைப்பு நீங்கும்.

கோழிக்கல்லை நீர்விட்டரைத்து சுண்டை அளவு காலை, மாலை, இருவேளை கொடுக்க அதிக பசி உண்டாகும்.

கோழிக்கல் பையுள்ளிருக்கும் மஞ்சள் தோலை உலர்த்தி சிறிது இளம் வறுப்பாக வறுத்து சீரகம், கற்கண்டு, சேர்த்து நெய்விட்டு இளகபதத்தில் அரைத்து எடுத்துக் கொண்டு சுண்டை அளவு காலை, மாலை கொடுக்க செரியாக் கழிச்சல் தீரும்.

சேவலின் நெஞ்செலும்பு, கால், நகம், ஆகியவை பலவகை கண்ணோய்களுக்காகும் மருந்துகளில் சேரும்.

கோழிமுட்டை, சிற்றண்டம் என பேசப்படும். இது முட்டை என்ற தலைப்பின் கீழ் பேசப்பட்டுள்ளது.

கோழி இறகுகள் பற்பம் செய்யப்பயன்படும்.

குடிநீர்

"நிலையாய்க் கருங்கோழி நீறுகாச் சீந்திடவே தொலையு மேற்சுவாச மது."

கருங்கோழியைச் சுத்தித்து இடித்து நீர்விட்டுக் காய்ச்சிக் குடிநீரிட்டுக் கொடுக்க மேற்சுவாசம் தீரும்.



கருங்கோழி — Kadaknath

The colour of the day old chicks is bluish to black with irregular dark stripes over the back. The skin, beak, shank, toes

and soles of feet of males and females are dark gray colour. Even the comb, wattles and tongue also show a purplish hue. The shining blue tinge of the earlobes add to its unique features. The peculiarity of this breed is that most of the internal organs show the characteristics black pigmentation which is more pronounced in trachea, thoracic and abdominal air sacs, gonads, elastic arteries, at the base of the heart and mesenteryt. Varying degree of blackish colouration is also found in the skeletal muscles, tendons, nerves, meninges, brain and bone marrow. The back colour of muscles and tissues is due to the deposition of melamin pigment, a genetic condition called "Fibromelanosis".

The flesh of this breed through black and repulsive to look at, is considered not only adelicacy but also of medicinal value. The tribal uses Kadakanath blood in the treatment of chronic disease in humanbeings and its meat as aphrodisiac. The meat and eggs are reckoned to be a rich source of protein (25.47% in flesh) and iron. It is used in Siddha Medicines. The chest bone is a special drug for eye diseases.

Constituents

Kadaknath chicken contains many kinds of amino acids (18 kinds of amino acids including the 8 essential amino acids for human body), Vitamins B1, B2, B6, B12 C and E, niacin, protein, fat, calcium, phosphorus, iron, nicotinic acide, etc.

The chest bone of the chicken contain **Chondroitin Sulphate.**

சங்கு

Strombus pugilis

உபரசங்களில் ஒன்றாகச் சொல்லப்படுகின்ற சங்கு கடற்படு திரவியங்களில் ஒன்று. இது ஒருவகைக் கடற்பூச்சியின் கூடுகளாகும். இச்சங்கு பூச்சிகள் ஊட்டமிகு உணவாகக் கடற்பிரதேசங்களில் கொள்ளப்படுகிறது. சங்கு பூச்சியின் நகம் "நாகணம்" என்று வழங்கப்படும். இது மணமூட்டிகளில் ஒன்றாகும் பல அநேக பெருந் தைலமுறைகளில் சேரும். மருத்துவத்தில் இருவகைச் சங்குகள் சொல்லப்பட்டுள்ளன. போகர் ஏழாயிரத்தில் உபரசத் தொகுப்பின் கீழ் சங்கென்றும், போகர் காரசாரத் துறையில் உபரசத்தின் கீழ் முட் சங்கென்றும் இருவகைகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது வெண்மை நிறத்தில் காணும். எவ்விதத்திலும் அதன் வெண்மை நிறத்திலும் மாற்றம் அடையாத தன்மை அதன் சிறப்பாகும். இதிகாசகாலந் தொட்டு சிறப்புற்று வருவது. இதனால் அணிகலன்கள் செய்யப்படுவது சிறப்புடையது. மீன் வளத்துறையில் அந்நியச் செலவாணியை ஈட்டி தரும் பொருட்களில் இதுவும் ஒன்று.

சங்கின் வேறு பெயர்

"வலம்புரி யிடம்புரி வாருதி நாதந்தான்
சலம்புரி பட்சி தவளத்திசை நாதம்
நிலம்புரி பாணி நீங்காத வோசையோன்
தலம்புரிடி சின்னஞ் சங்குட நாமமே".

– ச.மு.நி.

"வலம்புரி, இடம்புரி, வாருதி நாதம், சலப்பட்சி,

வெண்மை, நாதம், பாணி ஓசையோன்

என்றும், கோவில்களில் அர்ச்சனையின் பொருட்டும்,

தீர்த்த பாத்திரமாகவும் பயன்படுவதைக் குறிக்கும்

வண்ணம் "தலம் புரி சின்னம்" என்னும் பல பெயர்களைப் பெறும்.

அன்றியும்

பாஞ்சசன்ய மாதி பகரு மகிமை கொண்டு

வாஞ்சநீ ராகவத்தின் வைப்பாகி — வாஞ்சையுடன்

நம்புபற்ப மாகவரு நாகுபணி லம்வளை

கம்பு வலம்புரி சங்கம்".

– தே.வெ.

என்ற தேரன் வெண்பா கூற்றுப்படி பாஞ்சசன்ய மென்னும் திருமால் கையகத்துள்ள மகிமை கொண்டு, கடலைப் பிறப்பிடமாகக் கொண்டு மருத்துவ முறைக்கு விருப்புடனும் நம்பிக்கையுடனும் ஆக்கிக் கொள்ளும் பற்ப மருந்தாகவும் பயன்படும் சங்கானது நாகு, பணிலம், வளை, கம்பு, வலம்புரி, சங்கம் என பல பெயருடையதாம்.

முட்சங்கு

புறப்பக்கங்களில் முட்கள் போல் அமைந்த வடிவை உடையது. நிறம், வெண்மை, பழுப்பு, மஞ்சள் மற்றும் சிவந்த மஞ்சள் நிறத்தில் காணும்.

வேறுபெயர்

"சுவரேழு சங்கங் கடுகண்டகச் சங்கு

நவரேழு சங்கம் நலங்குலச் சங்கம்

முவரேழு சங்க முயன்றவேற் தங்கமாந்
தவரேழு ரோமந்தன் முள்ளின் சங்கமே”

– ச.மு.நி

முழக்கெடுக்கும் சுரச்சங்கம், கண்டகச் சங்கம், கதித்த சங்கம், கவரெழுசங்கம் உயன்ற வேல்சங்கு, ரோமத்தின் சங்கு, ஒற்றைவாகை, கூப்பிடுஞ் சங்கு என பல்வேறு பெயர்களால் பேசப்படும்.

வெள்ளைச் சங்கின் குணம்

“கசிவா மிரத்த பித்தங் கண்ணோய்க ளேகும்
பசியாரும் வாதம் பறக்கு — மிசிவுடனே
தங்குமுளைவிரணந்தா னகலுமே வெள்ளைச்
சங்கமது வுண்டாயிற் றான்”;.

– ப.கு.சி.

வெண் சங்கினால் இரத்தக் கசிவு, பித்தம், கண்ணோய் தீரும், வாதம் தீரும், முளை விரணம் தீரும். பசியாரும் என்பதில் வயிற்றுள் அமிலத்தன்மையைக் குறைக்கும் வண்ணம் பசி நீங்கிவிடும் என்பதாகும்.

சங்கின் சுத்தி முறைகள்

1 பங்கு சங்கிற்கு 5 பங்கு இலைக் கள்ளிச் சாற்றைக் காலையில் விட்டு மாலை வரை வெயிலில் உலர்த்தி மறுநாள் காலையில் புதிதாக மேற்படி சாற்றைவிட்டு வெயிலில் வைக்கவும். இங்ஙனம் மேலும் மூன்று முறை செய்து நீர்விட்டுக் கழுவியெடுக்க சுத்தியாகும்.

வேறு சுத்தி முறை

சங்கைக் கற்சுண்ணாம்பில் புதைத்துத் தாளித்துக் கழுவியெடுக்கச் சுத்தியாம்.

வேறு

கற்சுண்ணாம்பும், உவர் மண்ணும் சமவெடை கூட்டி, எண் மடங்கு நீர் சேர்த்துத் தெளிவெடுத்து அதில் சங்கைப் போட்டு எரித்துக் கழுவி எடுக்கச் சுத்தியாம்.

பற்பம்

ஒரு பலம் (35 கிராம்) சுத்தி செய்த சங்கை எடுத்துக் கீழுள்ள பட்டியலில் குறித்த முறைப்படி அரைத்து உலர்த்திப்புடமிடவும்.

சாற்றின் பெயர்	அளவு பற்பம்	அரைக்கும் நாள்	வில்லை உலர்த்தும் நாள்	கவசம் உலர்த்தும் நாள்	புடம் வரட்டி
கமுகின்பாளை பூச்சாறு	6	6	5	1	36
குருக்கத்திப் பூச்சாறு	5	5	4	1	28
மாமரச்சமூலச் சாறு	5	5	4	1	25
குழிநாவல் சமூலச்சாறு	4	4	6	1	20
அத்திசமூலச்சாறு	4	4	3	1	18
புன்னைசமூலச்சாறு	4	4	3	1	16
கஞ்சிகொதிநீர்	3	8	2	1	16

பற்ப மகிமை

இச்சங்கு பற்பம் பெண்களுக்கு மாதவிடாய் வருங்காலத்துத் துன்பத்தைப் பண்ணகின்ற சூலக சன்னிநோயைப் போக்கி, மன்மதனுக்கு நிகரான அழகைக் கொடுத்து, மலையைப் போல் அதிக பலத்தைக் கொடுக்கு மென்ப.

"... ... சூத
கசனி கராத்திரிவல்காலு சங்கத்தூளங்
கசனி கராத்திரிய காண்"

– குணபாடம் தா.சீ.வ.

என்ற அடிகளால் அறிக.

பற்பத்தின் அளவு

அவரைக் கொட்டையில் நான்கில் ஒரு கூறு உத்தமம், என்றும், இரண்டு கூறு மத்திமம் என்றும், மூன்று கூறு அதமம் என்றும், முழுக்கூறு அதமாதமமாகுமென்றும் கூறப்பட்டுள்ளது. இதற்கு மேற்பட்ட அளவு மிகுதியாம். அளவு அதிகப்படினும் குறையினும் பொல்லாங்குகள் நேரிடும் என்பதினை,

"வாகான வுரைப்படியே யவிழ்த நன்மை
வருமளவைப் பிரமாண வகைமை தப்பிப்
போகாமற் படியரிந்தா லதுவே நன்மை
புரியாட்டா லதுதானே பொல்லா தாகி
யாதூத வாதபித்த சேட்ப மூன்று
மனபோக மிகுதியென்றே யாகுமேலே
வேகாத நெருப்பையொத்த மெய்யைச் சுட்டு
விழலாக்கிப் போகுமடா மருந்தைத் தானே".

– குணபாடம் – தா.சீ.வ.

சங்கு பற்பத்தினால் தீரும் நோய்களும் துணை மருந்துகளும்

தேன் — வாதநோய்
வெந்நீர் — நடுக்கம்
குளிர்ந்த நீர் — பித்தம்

ஆளிவிதை ரசம் — கப நோய்

கடுகுச் சமூலச்சாறு — சுரம்

நெற்கதிர் பசுங்காய்ச் சாறு — மூர்ச்சை

பசுவின் பால் — தும்மல் (சலம் மீறி வரப்பட்ட தோடப்பிணி)

பசுவின் தயிர் — தும்மல், விக்கல்

பசுவின் மோர் — பித்தவாயு, பந்தத்தால் வரப்பட்ட சந்நிவாதப் பிரட்டல்

வெள்ளைச் சர்க்கரை — குன்மம்

பனவெல்லம் — நளிருடன் கூடிய சீதவெப்பம்

பனங்கள் — படலிகை வாயுமுதலிய கண்ணோய்

நெய் — கழலை (புரைகுழல்)

அறுகு சமூலச்சாறு — வாதசுரம்

சோற்றுக்கொதி தண்ணீர் — பித்தசுரம்

கடம்பமர சமூலச்சாறு — கப சுரம்

வேறு

சங்கு பற்பத்தை நந்தியாவர்த்தத்தின் சமூலச்சாற்றில் அனுபானித்துக் கொடுக்க, வாதத்தைப் பற்றி வந்த வாத சந்நி, வல்லை, குன்மம், பெருவயிறு, பாண்டு, மேகவாதம், பட்சவாதம், தனுர்வாதம், சூதிகாவாயு, மூலம், பிரமியம், காசம், ஷயம், முதலிய பெரும்பிணிகளும், நொச்சிச் சமூலச்சாற்றில் கொடுக்க, கபத்தைப் பற்றி வாரா நின்ற கபசந்நி, சுரம், நளிரானவப் பிணி, விலாப்புற சந்நிவாதப் பிணி, பீனசம், மார்வலி, வல்லை முதலிய பிணிகளும், தேனில் கொடுக்க பித்தசந்நி, பித்த சோகை, பித்த வாத மகோதரப்பிணி, பித்த ஷயம், பெரும்பாடு, பித்த பாண்டு, மூலம், வல்லை, குன்மம், வாயில் நீர் ஊறல், பிரமை, காரகம், முதலிய பிணிகளும் நீங்கும் என்க.

வேறு

சங்க சமூலத்தைலம், புங்கமரத் தைலம், தும்பைத் தைலம், துளசித் தைலம், தேங்காய்த் தைலம் இவற்றைத் தனித்தனியே எடுத்து, முப்பத்திரண்டு பங்குக்கு, சங்கு பற்பம் ஒரு பங்கு சேர்த்துக் கூந்தலில் தடவித் தேய்த்து ஊறவைத்து முழுகினால் முறையே கூந்தலிலுள்ள நரை, செம்பட்டை நிறம், முனைவெடித்தல் நடுவில் முறிதல், சுருண்டிருத்தல் இவைகள் நீங்கும். இவைகளுக்கு முறையே வேலம்பாசி, எலுமிச்ச பழரசம், முன்னைக் கீரை, நாவல் சமூலச்சாறு, நெல்லிச் சமூலச்சாறு இவற்றை அரைப்பாகப் பயன்படுத்துக.

ஒவ்வொரு அரைப்பிலும் கால்பணவெடை (122 மி.கிராம்) கஸ்தூரி கலந்து கொள்ள வேண்டும். நீராட வெந்நீரை உபயோகித்தல் வேண்டும். உதயத்திற்கு முன் தைலத்தைப் பூசி அஸ்தமனத்திற்கு முன் நீராடல் வேண்டும். இங்ஙனம் ஐந்து நாள் செய்து, ஐந்து நாள் விட்டு மறுபடியும் 5 நாள் இவ்விதம் 5 முறை செய்தல் வேண்டும்.

பற்பம் வேறு

கற்சுண்ணாம்பில் சுத்தி செய்த சங்கை, உத்தாமணி இலை விழுதில் புதைத்துக் கனபுடமிடப் பற்பமாம்.

அளவு: *இரண்டு குன்றி (260 மி.கி.) வரை*

துணை மருந்து: *நெய்*

தீரும் நோய்கள்: *இருமல், மூலம் வயிற்றுப்பிணி, அண்ணாக்குத்தூறு, மார்புவலி, வாயு, குன்மம்.*

வேறு

சங்கை நீரில் கழுவித்துடைத்து, சிறுதுண்டுகளாக உடைத்துக் கீழா நெல்லிச் சாற்றில் மூன்று நாள் ஊறவைத்துப் பின்பு ஒரு குடுவையில் போட்டு, மேற்படி சாற்றைவிட்டுச் சில்லிட்டுச் சீலை செய்து காய வைத்து 50 எருவில் புடம்போடப்பற்பமாம்.

அளவு: *½ (244 மி.கி.) முதல் 1 பணவெடை (488 மி.கி.) வரை இருவேளை கொடுக்கவும்.*

துணை மருந்து: *வெண்ணெய் அல்லது எலுமிச்சம் பழச்சாறு*

தீரும் நோய்கள்: *மாரடைப்பு, மார்பு எரிச்சல், நெஞ்சுவலி, நீர்ச்சுருக்கு, வெள்ளை முதலியன.*

வேறு

"வெண்பணில பற்ப மெவருண் பரவ ருக்குடல்
மென்பொனிற் மிக்கு மதுசெய்
பண்பின ரைக்கிலொரு கண்புகையி ருட்டலறு
மிஞ்சிய பயித்துவ மறுமெய்
விண்பதும் பத்ரியரை சங்கின் மிசை யப்பதனை
விஞ்சுரவி வைத்தொருபகல் எஞ்சுபுட மிட்டெடதை
யுண்கிருத முத்திளை வின்பமிகு பத்யம் லகுவே"

– குணபாடம் – தா.சீ.வ

"சொன்னவிப் பணில பற்பஞ் சுராங்குச மெவ்வா றென்னில்
வன்னிபோற் றரிக்குங் காய்ச்சல் வாங்கிடாப் பழைய தாகிச்
சந்நிதொந் தித்துச் சேனைத் தலைவனைத் தேடும்போது
தின்னுமா லலங்கற் சாற்றில் சிங்கமா தங்கமாமே".

– குணபாடம் – தா.சீ.வ

சுத்தி செய்த சங்கிற்குத் தாமரை இலை விழுதைப் பூசி ஒரு நாள் வெயிலில் உலர்த்திக் கனபுடமிட்டெடுக்கப் பற்பமாம்.

அளவு: *முத்தினளவு*

துணை மருந்து: *நெய்*

தீரும் நோய்கள்: *கண் புகைச்சல், கண் இருள், பித்தம் முதலியன தீரும். உடலுக்கும் நிறமுண்டாகும். இப்பற்பத்தைத் துளசிச் சாற்றில் கொடுக்க சந்நி தொந்தித்த நாட்பட்ட சுரம் ஆகியன நீங்கும்.*

நத்தையை நசுக்கிச் சங்கிற்குள் வைத்து, மேற்கூறியவாறே புடமிட்டெடுத்த பற்பத்தை சயத்திற்குக் கொடுத்தல் பழக்கத்தில் இருக்கின்றது. சங்கினால் சயம் முதலிய கப நோய்கள் நீங்குமென்பதை,

"ஆகுமிச் சங்க பற்பத்தாலே கயமா னனெலா மறுமேன் மேல்

போகு மிருமல் சுவாசமோடு ஆகு பொருமலுபத்திரவ

தமிக முருமல் மிகுபத் யமாகத் துறைநீ கற்றிடு

சாகக் கற்பா கத்தது .. .. வீர"

என்ற தேரன் தருச் செய்யுளினால் உணர்க.

செந்தூரம்

சங்கை, வெள்ளைச்சாறுவேளை சமூலச்சாறு, கற்றாழைச்சாறு இரண்டையும் கொண்டு தனித்தனியாய் அரைத்து, முறைப்படி புடமிட்டெடுக்கச் செந்தூரமாம். இதனை,

"நத்தை சோதணிமாக்கவே நவின்ற மேற்படி யொன்றிலே

சத்தி குமரி யிரண்டிலே தருண வரன்முறை தேட்டியே
வித்தை யருமை யறிந்தேசெய் வேத வழியில் நுண்மை யாய்
மித்ர பேத மில்லாமல் வேட்கை யறிந்து செய்வீரே”
என்று புகன்றிருப்பதால் அறிக.

செந்தூரத்தினால் தீரும் நோய்களும் துணை மருந்துகளும்

வெள்ளைச்சாறு வேளைச்சாறு — உட்டண மேகம்
சந்தனக் குழம்பு — வாதம்
உள்ளிரசம் — சுவேதசந்நி, பித்தநோய்
சாம்பிராணியிலைச்சாறு — வீக்கப்பாண்டு
எலுமிச்சம் பழரசம் — வெண்குட்டம்
வெல்லம் — குன்மம் மதுமேகம்
நாவல் பழரசம் — விகாரத்தேமல், மேகம்
இலவங்கப்பட்டைச்சாறு — சந்நிதோடக் குளிர்மை

வெள்ளை மாத்திரை

பவழம், பால்துத்தம், சீனாக்காரம், பொரித்த துருசு இவை வகைக்கு ஒரு வராகனெடையும் (4.3 கிராம்), சங்கு வராகனெடை 24 (103.2 கிராம்) எடுத்து நீர்விட்டுக் கழுவி, உலர்ந்த பின் தூள் செய்து கல்வத்திலிட்டுத் தாய்ப்பால் அரைக்கால்படி (168 மி.லி.) விட்டரைத்து, அதன்பின் இளநீர் கால்படி (336 மி.லி.) விட்டரைத்து, மெழுகு பதத்தில் மாத்திரைகளாய்த் திரட்டி உலர்த்திக் கொள்ளவும்.

துணை மருந்துகள்: சுத்த நீர் அல்லது முலைப்பால்

தீரும் நோய்கள்: இரத்தப்படலம் முதலிய கண்ணோய்கள்

குறிப்பு: இம்மாத்திரையை ஓர் ஆண்டு கழித்து உபயோகித்தல் வேண்டும்.

மற்றும் சங்கை, முலைப்பாலில் தனியாகவாவது அல்லது கறிவேப்பிலை சேர்த்தாவது இழைத்து முகப்பரு, மோகப்பரு முதலியவைகளுக்கும் கண் கட்டிக்கும் எழுதலாம்.

சங்கினால் காந்தத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ளும் மருந்தினால் உடல் வளம் பெற்று நீடிக்கும், வலிமை உண்டாகும். சங்கு பஞ்ச சுண்ணைக் குகையில் சேரும்.



சங்கு

Conch

A conch is a dwelling mollusc and more specifically. a marine gastropod. Conch shells which are basically the external skeleton of various kinds of snails.

In India shells have always considered auspicious, shells find their way into most Hindu rituals and often have a place of honour in households.

Constituents

The conch shell contains a natural ceramic - plywood like microarchitecture. Conch shell is a natural brittle composite that

defends against predatory attacks. It is made of 90% Argonite - a white to pale - yellow mineral with a vitreous luster that is often found in limestone caverns.

<1% protien

The shell contains a protien matrix that surrounds and separates three layers of mineral. It is also 10 to 30 times stronger and as much as 1000 times tougher than its principle constitute Argonite (CaCo3) because it has a brick - and - mortar like mircroarchitecture.

சாணம்

எச்சம், மலம் என வேறு பெயர்களாலும் நூற்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. பலவகை மிருகங்கள், பட்சிகள் ஆகியவற்றின் மலம் மருந்தாகக் கொள்ளப்படுகின்றது.

பசுஞ் சாணத்தின் குணம்

"ஆவினது சாண மடிபடுவீக் கம்முதிரத்
தாவி வருகிருமி சார்ந்தகப மேவு சுரந்
தங்குந்தாகம் போக்குஞ் சாற்றின் மெய்ச் சுத்தியப்பால்
தெங்கின்பாலுக் கொக்குந் தேர்"

– ப.கு.சி.

1. பசுஞ் சாணம் அடிபட்ட வீக்கம், உதிரப்போக்கு, கிருமிரோகம், கபச்சுரம், மிக்க தாகம் இவற்றை நீக்கும். தேக சுத்தி உண்டாகும். இது தேங்காய்ப்பாலை ஒக்கும்.
2. பசுவின் சாணம் கவசம் செய்வதற்கும் புடமிட வறட்டி செய்வதற்கும் பயன்படும்.
3. பசுஞ் சாணப்பால் நேர்வாளம், சேங்கொட்டை இவற்றைச் சுத்திக்கப் பயன்படுகிறது. பாடாணங்களுக்கு முறிப்பாகவும் பயன்படுகிறது. கன்று ஈனாத பசுவின் சாணப்பாலை உள்ளுக்குக் கொடுக்க தேள்கடி விடம் தீரும்.
4. பசுவின் சாணத்தைச் சுடவைத்து பொறுக்கக் கூடிய சூட்டில் ஒற்றடமிட வீக்கம் கரையும்.

கன்றின் சாணம், பயன்

“பட்டை ரசத்தில் பகலெல்லா மூற வைத்துப்
புட்டுப்போல நன்றாய்ப் பொடிசெய்து — சட்டியிலெரி
யீற்செய் தயிலமிறக்கி யுண்வுப்பு சம்போம்
வற்சம் புழுக்கை நாவல்”

– *தே.வெ.*

நாவல் பட்டைச் சாற்றில் இளங்கன்றின் புழுக்கையை ஊறவைத்து உலர்த்தி குழித்தைலமிறக்கி உண்ணக் கொடுக்க வயிற்றுப்புசம் தீரும்.

கழுதை லத்தி மூசை செய்யவும், பரங்கிப்பட்டை பதங்கம் செய்யவும் பயன்படுகிறது.

குதிரை லத்தி துருசு வைப்பில் பயன்படுகிறது.

புலியின் சாணத்தால் தாளகம் நீறாகும்

கரடி மலத்தின் பயன்

“மூன்று மொரு நிறையாய் முட்காவேளைச்சாற்றில்
ஊன்ற வரைத்ததனை யுண்டை செய்து — தேனில்
விடாமலொரு மண்டலமுண்ண வெண்குட்ட மாறும்
குடாவடியெச்சங் கடுகு கொள்”

– *தே.வெ.*

குடாவடியெச்சம், கடுகு, கொள், சமஎடை எடுத்து முட்காய் வேளைச் சாற்றில் நன்கரைத்து உருண்டை செய்து, உருட்டி, உலர்த்தி வேளைக்கு ஒன்றாக இருவேளை ஒரு மண்டலம் கொள்ள வெண்குஷ்டம் மாறும்.

நரி எச்சம்

"ஆசன ரூடி யதுவே பவுத்திரமாம்
பேசுமது மறக்கப் பேதிக்கும் — மோசமிலை
வெம்புகை தந்தாற் றணலால் வேம்பின் புறணியுடன்
சம்புவெனும் நரி எச்சம்"

– தே.வெ.

வேம்பின் பட்டையுடன் நரி எச்சத்தைக் கூட்டிப் பொடித்து நெருப்பிலிட்டுப் புகை காட்ட பவுத்திர நோய் தீரும்.

கீரி மலம்

"தெத்த லிடறல் திடறலொடு குளறல்
அத்தனையும் போமே யதிமதுரஞ் — துத்தம்
தகரைரசத் தாலரைத்துத் தானதைத் தேனிற்கொள்
நகுலத்தினெச்சத்தால் நா"

– தே.வெ.

கீரி

கீரி மலம், பால்துத்தம், சமஎடை எடுத்துத் தகரைச் சாற்றிலரைத்து தேனிலருந்த நாவிலுண்டாகும் தெத்திப்பேசல், இடறல், குளறிப் பேசுதல் ஆகிய நோய்கள் தீரும்.

கோழி எச்சம்

இதனை வெற்றிலையில் வைத்துக் கொடுக்க தேள்விடம் தீரும்.

மயில் எச்சம்

நாகங் களங்காகும்.

செம்போத்து எச்சம்

"தேங்காய் நெய் யோடைஞ் செண்ணெய்
செம்போத் தெச்சம் வெள்ளை யுள்ளி
வாங்காய் நாவி போட்டு வைத்து
மரிசம் புகை கண்டுஷ மிடே".

தேங்காய் நெய்யுடன் ஐந்தெண்ணெய் (பசு நெய், வேப்ப நெய், புன்னை நெய், புங்க நெய், எள் நெய்) செம்போத்து எச்சம், பூண்டு, நாவி, சேர்த்தரைத்து புகையிட சன்னி ரோகங்கள் தீரும்.

அணிலெச்சம்

"தன்னி லாறாத பிணிதானாறு மெய்நன் றாகும்
வன்னியெனப் பசித்தீ வாய்க்குமே — புன்னை
தளிர்க்கறியில் மத்தித்த தண்ணீரா லுண்டால்
வெளிலெச்சத் தாலு மெய்".

– தே.வெ.

புன்னைத்தளிர், மிளகு கூட்டி இடித்துப் பிழிந்த ரசத்துடன் அணிலெச்சத்தைக் கூட்டிக் கொடுக்க தீராத பிணி தீர்ந்து உடல் நன்றாகும்.

முயற்கட்டம்

"பீனசமெட்டிற்கும் பெருமுயலதின் கட்ட
மானது பொடி நசியமாட்டு"

– வைத்திய குறள்

முயல் மலத்தை உலர்த்திப் பொடித்து நசியமிட பீனச நோய் நீங்கும்.

எலிப்புழுக்கை

"துத்தங் கண்டாய் எலிப்புழுக்கை சொல்லோர்
நிரையாய்க் காடிதனில் வெற்றி பெறவே
யரைத்து மைபோல் விரல்போல்
செய்துலர்த்தி நீரில் பத்தியுரைத்துக்
கண்ணிலிடப் பறக்கு மந்தி மாலையது".

– நா.ந.வி

துத்தமும் எலிப்புழுக்கையும் சமஎடை எடுத்துக் காடி நீர்விட்டரைத்துக் கயிறாக உருட்டி உலர்த்தி நீரில் உரைத்து கண்ணிலிட மாலைக்கண் தீரும்.

எலிப்புழுக்கை, வெள்ளரிவித்து, வெடியுப்பு சம எடை எடுத்து நீர் விட்டரைத்து மேற்பூச பெருவயிறு தீரும்.

ஆமை எச்சம்

"முறைக்காய்ச்ச லாலே முசியு முடலைச்
சுறுக்கிலே தேற்றவென்றாற் சொன்னேன்— பொறுப்பாய்
கேள்
வெறிப்பகையிலைச் சாற்றில் வெள்ளுள்ளியோ டூறும்
உறுப்படக்கி யெச்ச மமையும்"

– தே.வெ.

முறைக்காய்ச்சலில் மெலியும் உடலைத் தேற்ற வேப்பிலையின் சாற்றில் ஆமை எச்சத்தையும், வெள்ளுள்ளியையும் ஊறவைத்துக் கொடுக்க வேண்டும் என்பதாம்.

சிறுநீர்

Urine

"...... நீர் சிறுநீர முரி
மூத்திரமென் றேபெயரோர் மூன்று"

சிறுநீர், அமுரி, மூத்திரம் எனவும் வழங்கப்படும்.

மனிதர் முதல் பல வகை மிருகங்களின் சிறுநீர் மருத்துவத்திற்காகும்.

மிருகங்களின் சிறுநீரில் பெண் மிருகங்களின் சிறுநீரே மருத்துவத்திற்காகும்.

மனிதரின் சிறுநீரின் குணம்

"காணாக் கடிபோங் கதித்தெழுந்த வீக்கமது
காணாது காயசித்தி கைக்குளநல் — பூணே
பதித்த கொங்கைமாதே பகர்மாந் தருக்குள்
ளுதித்தசிறு நீருக்கென் றோது"

– ப.கு.சி

"அங்கியுவ ருறைசிறுநீர் வாதம் போக்கு
மதைப்பருகி லிருமலிரைப் பிரத்த நோயும்
பொங்கிவரு மேகனிகா ரமுடன் கிரந்திப்
புண்களும்போ மதைநசியம் புரியிற் சூடுத்
தங்கியதோ ரபஸ்மாரஞ் சன்னியாசஞ்
சருவவிடம் விடசுரம் தவறுண்டோடும்
இதனைத் தொட்டலம்பிற் கண்மு கங்கா
திவ்விடத்து ளெழும்விரண மிரியுங் தானே"

– ப.கு.சி

உலக வாழ்க்கை இன்னதென அறியாத சிறு குழந்தைகளின் சிறுநீரே பயன்படுத்தத் தக்கது.

இதை வாலையிலிட்டு வடித்து எடுத்துக் கொள்வதே இதன் சுத்தியாம்.

இதனை நாள்தோறும் உண்டு வருதல் "அமுரித் தாரணை" என நூற்களில் சொல்லப்பட்டுள்ளது. நூற்களில் "சிவாம்பு" என்றும், "வழலை" என்றும் குறிப்பிடப்படுகிறது.

மனிதரின் சிறுநீரால் காணாக்கடி, வீக்கம் தீரும். காயசித்தி உண்டாகும்.

மாந்தர் சிறுநீரை முறைப்படி பருகி வர மேக நோயும், இரத்த நோய், மேகநோயில் காணும் கிரந்தி, புண் முதலியவையும் தீரும். இதனை நசியமிடின் அபஸ்மாரம், சந்நியாச ரோகம், விடரோகம், விடசுரம் தீரும். இதனால் முகம் கழுவிவர கண், முகம், காது இவற்றில் வரும் புண்கள் ஆறும்.

பயன்கள்

"மிளகைச் சிறுநீரின் மேலிட்டு மண்டலங்கொள்

அளவிலாச் சூடுமாறும்"

– *விஷ ஆரூடம்*

மிளகைச் சிறுநீரில் ஊறவைத்து உலர்த்திப் பொடித்து மண்டலம் கொடுக்க அத்தி சுரம் தீரும்.

"வாழுந்தேள்கள் கொட்டினக்கால் மதித்துயிஞ்சி தன்னிலிரு

தாழுங் கொத்தான் சிறுநீரிற் றாக்கு மணித்தக்காளிச் சாற்று

ஆகும் புரானட்டுவக்காலி யதுவு மிஞ்சிச்சாறு நசியம்"

– *விஷ ஆரூடம்*

தேள் நட்டுவக்காலி கடித்தக்கால் இஞ்சிச்சாறு, கொத்தான் சாறு, மணத்தக்காளிச் சாறு, மாந்தரின் சிறுநீர் சமஎடை உள்ளுக்கும் கொடுத்து நசியமிட தீரும் என்பதாம்.

"நாவி எனும் பாடாணத்தைத் தின்றவர்க்கு நாவற்

கொழுந்தைச் சிறுநீர் விட்டரைத்து உட் புகட்ட முறியும்"

"கற்பூரத்தை உண்டவர்க்குக் கரிசலாங் கண்ணியை

அரைத்துச் சிறுநீரில் உட்புகட்ட முறியும்"

– *விஷ ஆரூடம்*

நாவி தின்றவர்க்கு நாவற் கொழுந்தைச் சிறுநீர் விட்டரைத்துக் கொடுக்க நஞ்சு முறியும்.

கற்பூரம் தின்றால் கரிசாலையை அரைத்து சிறுநீரில் கலக்கிக் கொடுக்க முறியும் என்பதாம்.

"தீராத நோய்கள் தெளியாத பித்தந் தினவுடனே

வாராது காணும் வழலைப் பெருமையின் வாழ்க்கையினால்

பேராலெட்டும் அமுரியுண்டால் வினை போந்திடுங் காண்

சாராது மாய்கை நமனென்ற தீவினை தவறிடுமே"

இதனை உண்டுவர தீராத நோய், பயித்தியம், தினவு வாராது, சாவை மறுக்கும் தன்மை உடையது என சிறப்பிக்கப்படுகிறது.

பசு மூத்திரத்தின் குணம்

"விட பாண்டு சோபைபல வீக்கஞ் சகல

விடமுதிர மாலையென மெத்தப் — புடவிதனிற்

பேசலக்க ணோடு தந்தப்பீடை யகன்றிடும்

கோசலத்தா லாரணங்கே கூறு" – *ப.கு.சி.*

பசு மூத்திரத்தால் விடப்பாண்டு, சோபை, பற்பல வீக்கம், சகல விடம், உதிரப் போக்கும், பல்நோய் தீரும்.

பசு மூத்திர பயன்கள்

"நாயுறுவி முற்றினதாய் நறுக்கி மிக
நற்பசுவின் கோமயத்திற் போட்டுப் பாண்டம்
வாயிலிட்டுப் பூப்புடத்திற் றயிலம் வாங்கி
வைத்ததனை வெற்றிலையில் மென்று தின்ன
நோயில்பெரு மந்தார சுவாச காசம்
நுணுக்கிருமல் யீளைகண்டத் துடிப்பு தீரும்
காயமதைப் பலக்கவைக்கும் சித்தர் சொன்னார்
கருணையிது தப்பாது கண்டு தேரே"

– *யா.வை.சி.*

பசுவின் நீரை வடிகட்டி ஒன்று முதல் இரண்டு அவுன்ஸ் வரை கொடுத்துவர, அகுவை, மகோதரம், நீர்க்கட்டு, மலக்கட்டு, பெருநோய், தோல் சம்பந்தப்பட்ட பிணிகள் நீங்கும்.

240 மி.லி பசுவின் நீரில், ஒரு கடுக்காய்த் தோலிட்டு ஊறவைத்துக் கலந்து வடிகட்டி 30 மி.லி நீரைக் கொடுக்க அகுவை, மகோதரத்தில் உண்டாம் மலசலக் கட்டு இவற்றை நீக்கிக் குணம் தரும்.

இருவி, நாபி, இவை போன்றவைகளைத் தனித்தனிப் பசுவின் மூத்திரத்தில் மூன்று நாள் ஊறவைத்தெடுக்கச் சுத்தியாம்.

அயம், உருக்கு, மண்டூரம் இவற்றைத் தனித்தனியாகக் கொல்லன் உலையிலிட்டுக் காய்ச்சி பன்முறை பசுவின் நீரில் தோய்த்தெடுக்கச் சுத்தியாகும்.

பாவனக் கடுக்காய் முதலிய மருந்துகள் செய்யவும், அனுபானமாகவும் பயன்படும்.

கழுதை நீர்

வேசரிநீர், கரமூத்திரம், பெருவாயான் நீர் என நூற்களில் கூறப்பட்டுள்ளது.

கழுதை நீரின் குணம்

"வேசரி நீரால் வெப்பம் வீரிய நஷ்டங்குஷ்டம்
காச மிரைப்பு விஷங்காற் கிருமி — வீசிடுபுண்
மேகபஸ் மாரம் வெடியச் சரங்கிரந்தி
போகு மின்னுஞ் சேய்ப்பிணியும் போம்"

– ப.கு.சி

கழுதை நீரால் வெப்பம், வீரிய நட்டம், குட்டம், காசம், இரைப்பு, விடம், கிருமியால் வரும் புண், மேகம், அபஸ்மாரம், வெடி அச்சரம், கிரந்தி தீரும். குழந்தைகட்குண்டாகும் பல ரோகங்கள் தீரும்.

கழுதை நீரின் பயன்

"கண்டு பார் சரக்குவகை சுத்திக்கெல்லாம் கழுதைநீர்
வெகுசுருக்கு மற்றொன் றாகா" என்பதின்

தாது சரக்குகளின் சுத்தி முறைகட்கு கழுதை நீரே சிறந்தது.

சுரை விதையைத் தட்டி பருப்பு 140 கிராம் சேர்த்து கழுதை நீர் விட்டரைத்து நீர்விட்டு வைக்க எண்ணெய் கக்கும். அத்தைலத்தை வாரெண்ணெய் வழிப்பது போல் வழித்து அடைத்துக் கொண்டு புரைப்புண்களிலிட ஆறும். சிரத்தில் தேய்த்துக் குளிக்க தும்மல், பீனசம், சிர நோய்கள் தீரும்.

"மாதர் பொறையு யிர்ப்பால் வந்த நலி சன்னி
யாது மகலு மனுதினமுஞ் — சீதை

பிரமியிலை ரசத்தாற் பெந்தமாய்ச் சேர்த்து

கர மூத்திர புட்டைகள்”

– தே.வெ

பொன்னாங்காணிச்சாறு, பிரமி இலைச்சாறு, கழுதை நீர், கழுதை சாணப்பால் ஆகியவை சமஅளவு கலந்து கொடுக்க பிரசவ சன்னியாவும் தீரும்.

கழுதை நீர், அவுரி இலைச்சாறு வகைக்கு 500 மி.லி. வசம்பு, பூண்டு வகைக்கு 10 கிராம் எடுத்து மேற்படி சாறு விட்டரைத்து அத்துடன் எஞ்சிய சாறு, கழுதை நீர், 500 மி.லி. விளக்கெண்ணெய் சேர்த்துக் கலந்து எரித்துப் பதத்தில் வடித்து 1 கிராம் வீதம் 3 முதல் 5 நாட்கள் கொடுக்க கருங்கிரந்தி தீரும்.

வெள்ளாட்டு நீரின் குணம்

“சோபையொடு பாண்டுவைத் துரத்தும் பலவீக்க

தாபமகற்று முதிரத்தைப் போக்கும் — கோபமுடன்

உள்ளாட்டுத் துர்ச்சதையோ டோங்குதர நோயகற்றும்

வெள்ளாட்டு மூத்திரம் விரைந்து”

– ப.கு.சி.

சோபை, பாண்டு, வீக்கம், உதிரப் போக்கு, உதிரரோகம், துர்மாமிச வளர்ச்சி இவற்றை நீக்கும்.

பயன்

“காமன் மரிசங் கடுவாமலக மறிக்

கோமயத்தை விட்டரைத்துக் குன்றிபோல் — நேமவுண்டை

செய்துலர்த்தி நீரிலுண்ண சேட்பமறும் மனல்

நெய்தினப்போம் வாத மிளநீர்”

– தே.வெ.

திப்பிலி, மிளகு, கடுக்காய், நெல்லிக்காய் சமஅளவு எடுத்து வெள்ளாட்டு நீர் விட்டரைத்துக் குன்றி போல் உருட்டி உலர்த்திக் கொள்ள வேண்டும்;.

ஒரு குன்றி இரு வேளை நீரில் கொடுக்க சேத்தும ரோகங்களும், நெய்யில் கொடுக்க வெப்ப பிணிகளும், இளநீரில் கொடுக்க கபரோகங்களும் தீரும்.

“வெள்ளாட்டுக் கோமியம் கோசலமும்
வேண்டிய சங்கம் வேரரைத்து
மெள்ளக் குடித்திட வீக்கங்க ளெல்லாம்
விட்டோடிப் போமென்றே கும்மியடியங்கடி”

– அகத்தியர் வைத்திய கும்மி

வெள்ளாட்டு நீர், பசு நீர் சம அளவு கலந்து சங்கம் வேர் சேர்த்து ¼ பலம் வீதம் மேற்படி நீரில் அரைத்துக் கலக்கி குடிக்க வீக்கம் தீரும்.

“ஆட்டமுரி சேரரையாங் கடுக்காய் பத்து
அதையரைத்து திரிநாளு முண்டுபாரு
வாட்டுகின்ற மகோதரங்கள் ஆம்பற் கட்டி
வயிற்றுவலி பெருவயிறு குன்மச் சூலை
காட்டுமுன்னே பறந்தோடும் கடலே புக்கும்
கருத்துணர்ந்தோ ரிதுகண்டு உண்டு கொள்வர்”

– யா.வை.சி

ஆட்டு நீர் 140 மி.லி, கடுக்காய்த் தோல் 10 வீதம் அரைத்து ஒரு நாளைக்கு ஒரு வேளை வீதம் 3 நாள் கொடுக்க, மகோதரம், ஆம்பற்கட்டி குன்மம், பெருவயிறு சூலை தீரும்.

வயிற்றுவலி, அண்டச்சூலை தீரும்.
மேலும் காரீயம் இதனால் சுத்தியாகும்.

“பாரேநீ காரீயம் பலமும் பத்தும்
பதக்குதா னாட்டமுரி உருக்கிச் சாய்க்க
காரேநீ கசடகலு.....”

– ச.மு.நி

காரீயம் (10 பலத்தை) உருக்கிப் பதக்கு ஆட்டு நீரில் சாய்த்து எடுக்க சுத்தியாகும்.

அன்றியும் மான் கொம்பு சுத்திக்கும் பயன்படும்.

“ஆணை வணங்கி யரமகள் வெற் பேந்தியிலை
ஈணறலைச் சிட்டத்தி லேற்றியே — ஆனபின்பு
வெள்ளாட்டு நீரில்மதிவேண்டியுணத் தீண்டாது
கள்ளமிகு பாண்டு ரோகம்”

– தே.வெ.

நெருஞ்சில், வாழை, மலைதாங்கி இவைகளின் சாற்றில் மண்டூரத்தை ஊறவைத்துப் பின் வெள்ளாட்டு நீரிலும் ஊறவைத்து உலர்த்திப் பின் பொடி செய்து கொடுக்க பாண்டு ரோகம் தீரும்.

எருமை மூத்திரம் குணம்

“உதரநோய் பாண்டோ டுரத்தகா மாலை
விதிர வருசோபை மேகம் — முதிர்கிருமி
யாகியநோ யேகு மடரெருமை மூத்திரத்தால்
மீதிலன லுண்டாகுமே”

– ப.கு.சி

வயிற்றுரோகம், பாண்டு, ரத்தக்காமாலை, சோபை ரோகம், கிருமி தீரும்.

பயன்

"மால்மனை களங்காகும் வல்லமையாம் பாஷாண
மேல்வருமு லோகமெல்லாம் வெண்மையாம் —
நூல்வளமை
சொல்லச் சிலாக்கியமாஞ் சோதிமய மாகும்
புல்லச் சிறுநீராற்பொன்"

– *தேரன் வெண்பா*

எருமை நீரினால் பொன்னும், தாளகமும் களங்காகும். வீரிய முண்டாகும். பாடாணங்களும், உலோகமும் பற்பமாகும்.

யானை நீரின் குணம்

"அதிதூலஞ் சோபை யனிலங் கிருமி
யெதிர்விடங் கருங்கரப் பானேகு — அதிராத
யானை யெனப்பலுமு மங்கபுஷ்டி யுங்கொடுக்கும்
யானைவிடு மூத்திரமென் றோது"

– *ப.கு.சி*

அதி தூலம், சோபை, வாதரோகம், கிருமி, விடம், கருங்கரப்பான் தீரும். உடலுக்கு வன்மையும், பலமும் கொடுக்கும்.

பயன்

"குட்டம் பதினெட்டும்குஞ்சரத்தின் றோற்சொரியும்
கட்டாம் பெரிதாங் கயநோயும் — பட்டவுடன்
செந்தீமுன் பஞ்சௌவே சீந்திலுப் புடன்கலந்த
தந்தாவள நீர்க்குச் சாம்"

– *தே.வெ*

சீந்திலுப்புக் கலந்த யானையின் நீரால் பதினெட்டுக் குட்டங்களும், யானைத்தோல் சொரியும், துன்பந்தரும் இளைப்பு நோயும், தீ முன்பட்ட பஞ்சுபோல் ஆகும்.

"யாந்தகரை நீர்க்கோவைக் காகுமனு பானஞ்
சாந்தி லிகுசஞ் சதகுப்பி — சீந்தில்கறி
பாக்கிதுதந் தாவளநீர் பாச்சியரைத் துண்டைசெய்துண்
காக்கைவலிக் காவாரை கை"

– தே.வெ

சதகுப்பை, சீந்தில், மிளகு, பாக்கு, நான்கையும் யானை நீர் விட்டரைத்து உருட்டி உலர்த்தி காக்கை வலிக்கு ஆவாரைச் சாற்றிலும், நீர்க்கோவைக்கு கையாந்தகரைச் சாற்றிலும் கொடுக்கத் தீரும்.

ஒட்டக சிறுநீரின் குணம்

"மேலையூருந் தடிப்பு வீசியெழுஞ் சந்நி
சூலையுதா வர்த்தந்த தொடர்கு ன்மஞ் — சூலைதனை
மண்டல குஷ்டேகும் வருமொட்டை மூத்திரத்தா
லுண்டானல மாதே யுரை"

– ப.கு.சி

வெப்பத்தையுடைய ஒட்டகத்தின் மூத்திரத்தால் சரீரத்திலேப் புடைக்கின்ற தடிப்பு, சந்தி பாதம், சூலை பிடிப்பு, உதாவர்த்த வாதம், குன்மம், மண்டல குட்டம் தீரும்.

"ஒட்டகத்தி னீரை யுயரா தனல்வெதுப்பி
இட்டமுறுங் காதி லிருதுளியே — விட்டுவர
வாசமலர்க் குழலே வந்தசெவி மந்தம்
நாசமுற் றோடும் நவில்"

– தே.வெ.

"தாசோக நீரினிற் றப்பாம லூறவைத்து
மாச வரைக்கு மறுமாசத்தில் — போசனகு
டாரி மிளகோடயரைத்தை யரைத்துருட்டி
சுவாசமறு நீரிலுண் டக்கால்"

– தே.வெ

தாசோகம் ஒட்டகம்

அரப்பொடி, மிளகு, சீரகம், சம அளவு எடுத்து, ஒட்டக நீரில் ஒரு மாதம் ஊறவைத்து மறுமாதம் ஒட்டக நீர் விட்டு அரைத்து உருட்டி, உலர்த்தி நீரில் கொடுக்க சுவாச காசம் தீரும்.

குதிரை மூத்திரத்தின் குணம்

"பாதவன் மீகம் படர்தடிப்பு நீள்கிருமி
வாதமொடு கபமு மாறுங்கா — ணோவரிய
பொற்குவட்டை யொத்தமுலைப் பூவையரே சூடுடைய
நற்குதிரை மூத்திரத்தினால்"

– ப.கு.சி

பயன்

சூடுள்ள குதிரை மூத்திரத்தால் பாதப்புற்று, கண்டு கண்டாகத் தடித்தல், கிருமிரோகம், வாதநோய், கபதோஷம் இவைகள் நீங்கும்.

குதிரை மூத்திரம் நவமணி சுத்திக்குப் பயன்படுகிறது.

சிலந்தி வலை நூல்

Spider's web

வேறு பெயர்கள்

கேகதூமம், ஆகாசத்தூள், புகையூறல், சிலந்திநூல், ஓட்டடை என்பதாம். கட்டடங்களில் சிலந்திப் பூச்சியினால் கட்டப்படும் வலை பின்னல் போன்ற அமைப்பு சிலந்திப் பூச்சியின் வாயினின்று வழியும் திரவத்தால் இவ்வகைச் சிலந்திக் கூடுகள் கட்டப்படுகின்றன. மருத்துவத்தில் பல அநேக விஷக்கடிகட்கு இக்கூடுகளே பயன்படுகிறது.

பொதுக்குணம்

"குட்டங் களநோய் குருதி மூலம் பேதி
யுட்டங்க சீரண முள்ளுருகுன்மங் — கெட்டசிரா
வற்புதப்புண் சீதசுரா ற்பவ நஞ்சிவைகள்
பற்புதம்போ லொட்டறையாற் போம்"

– ப.கு.வி

ஒட்டறையினால், குட்ட நோய், கண்டத்து ரோகம், குருதி மூலம், பேதி, அசீரணம், குன்மம் தீரும்.

அற்புதப் புண், சீதசுரம், சிறுபாம்பு முதலாகிய நஞ்சு வகைகள் ஆகியவை தீரும் என்பதாம்.

(அற்புதப் புண் — உருவத்தில் கிரந்தியைக் காட்டிலும் பெரிதாகவும், அதிக கடினமாகவும் உள்ள புரைக்கட்டி, இது பழுத்து பக்குவம் ஆவதில்லை).

1. ஒட்டறை எரித்து கரியாக்கி அத்துடன் மஞ்சிட்டி, மஞ்சள் இந்துப்பு, சமஅளவில் சேர்த்தரைத்து பூச பெருச்சாளிகடி விடம் தீரும்.

2. ஒட்டறை நன்னாரிவேர், கரந்தையிலை, உப்பு, எள், நாயுறுவி ஆகியவை சம எடை எடுத்து அரைத்து கடிவாயில் பூசி சுண்டை இலை சேர்த்து உப்பு வறுத்து கட்டி வர நாய்க்கடி தீரும்.

3. புகையூறல், நீலியிலை, சுண்ணாம்பு, கள்ளிப்பால் ஆகியவை சமஎடை எடுத்துரைத்து பூச பாம்பு கடியால் வரும் வீக்கம் தீரும்.

4. ஒட்டறை எடுத்து எருமைச் சாணிப்பால் விட்டரைத்து கொதிக்க வைத்து தேள்கடி விடவாயில் பூச கடுப்புத்தீரும்.

ஒட்டறை, கொட்டை கரந்தை, இலுப்பைப் பழக்கோது, காட்டுக்கருணை இவற்றைச் சிறுநீர் விட்டரைத்து பூச புடையன் பாம்பு கடியால் வரும் வீக்கம் தீரும்.

"ஆகாயத் தூளின் புனல் — விட்டிளக

அரைத்துக் கொதிக்க வைத்துக் கடிவாயில்

வாகாகப் பூசிடவே பூசனிகை

வாங்குமுன் குளிர்ந்திடும் வீங்கிற்கடிவாய்"

ஒட்டறையில் நீர் விட்டரைத்துக் வைத்து கடிவாயில் பூச தேள், செய்யான் பூரான் முதலிய கடி விடத்தால் வரும் கடுப்பு, வலி நீங்கும்.

ஒட்டறை, கம்பளி சுட்ட சாம்பல் சம எடை எடுத்து வேப்ப நெய் விட்டரைத்துப் பூச வண்டுகடி தீரும்.

ஒட்டறை — 2 பங்கு கழற்சிப் பருப்பு — 1 பங்கு, கடுக்காய் — ½ பங்கு, எள் — ½ பங்கு வீதம் எடுத்து அரைத்து கழற்சி விரை பிரமாணம் வேப்ப நெய்யில் கொடுக்க அனைத்து வித வலி நோய்கள் தீரும்.

உப்பு, புளி நீக்கி பத்தியமிருக்க வேண்டும்.

சுக்கு தோல் நீக்கி இடித்து 8 லிட்டர் நீர்விட்டுக் காய்ச்சி 1 லிட்டராக குறுக்கி எடுத்துக் கொள்ள வேண்டும்.

மேற்படி சுக்குக் குடிநீர், இஞ்சிச்சாறு, அண்டத் தைலம், பூண்டு தைலம், வேப்ப நெய் — வகைக்கு 1 லிட்டர் எடுத்து ஒன்றாகக் கலந்து பாத்திரத்திலூற்றி அதில் ஒட்டறை, பூநாகம், மயிலிறகு, கீழாநெல்லிவேர் — வகைக்கு 51 கிராம் எடுத்து சுத்தித்து அரைத்துக் கரைத்து அடுப்பேற்றிச் சிறுதீயில் காய்ச்சிப் பக்குவத்தில் வடித்துக் கொள்ள வேண்டும்.

5 — 30 மி.லி. வீதம் 2 வேளை உள்ளுக்குக் கொடுக்க வேண்டும். இத்தைலத்தையே நசிய மிட்டும் துவாலையிட்டும் வர அனைத்து வித வலி நோய்கள் தீரும்.

"புண்சிலந்தி செவ்வாப்புப் போகவென்றாற் பாலருக்கு

மண்சிலந்தி நூலாக்கு மாறன்றார் — வெங்காயம்

எண்ணெயுடன் வாகா யெரித்ததனை மேற்றடவு

பண்ணையிலே."

– தே.வெ

புண்சிலந்தி, செவ்வாப்புக்கட்டி முதலாகக் குழந்தைகட்கு வரும் நோய்கள் தீரவென்றால் சிலந்தி வலைநூல், மண், வேம்பு, வெங்காயம் ஆகியவற்றை எள் நெய்யுடன் காய்ச்சி மேலுக்குத்தடவி வர வேண்டும் என்பதாம்.

சிலந்தி வலை நூல்

SPIDER'S WEB

A Spider web or cobweb ("cope" meanings spider) is a device built by a spider out of proteinaceous spider silk extruded from its spinnexets.

There are numerous types of spider web

Several different types of silk may be used in web - construction, including a "Sticky" capture silk or with fluffy capture silk, depending on the type of spider.

Glands Of Spider:

There are several glands located at the spider's abdomen which produce the silken thread.

Web Making:

Webs allow a spider catch prey without having to expend energy by running it down. Thus it is an efficient method of gathering food. However, construction the web is in itself an energetically costly process due to the large amount of protein required, in the form of silk. In addition, after a time the silk will lose its stickiness and thus become inefficient at capturing prey. It is common for spiders to eat their web daily to recoup some of the energy used in spinning. The silk proteins are thus recycled.

Thread:

The average diameter of a thread is 0.15μm. The smallest thread was only 0.02 μm thick. We are able to see the web only because of the reflection of sunlight on the thread. The thread is not only strong but also very elastic. These properties make the material very tough.

Silk Doesn't Decompose By Fungi 7 Bacteria:

In spider silk, there are three substances that are important for its durability: Pyrolodin, Potassium hydrogen phosphate

and potassium nitrate pyrolidins can be found in dyes and plant poisons and very hygroscopic. This substance prevents the thread from drying out.

Pyrolidin is also found in high concentration in the glue of catching threads.

Pottasium hydrogen phosphate makes a thread acidic and prevents fungal and bacterial growth.

A low PH causes denaturation (become insoluble) of proteints.

A phenomenon we can observe in sour milk. Potassium Nitrate prevents this and the proteins are salted which prevents bacterial and fungal growth.

செவ்வட்டை

Julus

வேறு பெயர்கள்

"ஆயிரங் காலி யமந்த வரிச்சுருள்
பாயிரங் கானகம் பரவிய தட்டான்தான்
தாயிரக் குண்டலி தனித்த மரவட்டை
சேயிர நாமஞ் செவ்வட்டையின் பேரே"

– ச.மு.நி

ஆயிரங்காலி, மரவட்டை, கானகம்பரவியதட்டான், வரிச்சுருள் எனப் பல பெயர்களில் வழங்கப்படும்.

நீர்ப்பாங்கான இடங்களிலும் காடுகளிலும் மலைகளிலும் கிடைக்கும். சிவப்பு, கருப்பு என இரு வண்ணங்களில் காணப்படும். இதில் சிவப்பு இனமே மருத்துவத்திற்காகும். அட்டை என வழக்கில் கூறப்படும் (Leech) என்பது இச்செவ்வட்டையினின்றும் முற்றிலும் மாறுபட்ட உயிரினம். இவ்வகை அட்டைகள் நோய் நிலைகளில் புற மருத்துவ சிகிச்சை முறையில் குருதிவாங்கும் முறைக்காக மட்டுமே பயன்படுத்தப்படுவது. ஆனால் உபரசங்களில் ஒன்றாக பேசப்படுவது இச் "செவ்வட்டையே" யாகும். இது பலவகை வாத ரோகங்களுக்காகும் தைல முறைகளிலும், இசிவு, முக்குற்ற நோய்களுக்காகும் பல மருந்து முறைகளிலும் சேரும்.

நரம்பை உரமாக்கும், தாது விருத்தி செய்யும்.

இதனை வேப்ப நெய்யுடன் சேர்த்து காய்ச்சி பூசி வர, சேற்றுப் புண் ஆறும். இம்முறை இன்றும்; கன்னியாகுமரி மாவட்டத்தில் வழக்கில் உள்ளது.

ஆண்குறிப் பெருக்கத்திற்கு இதன் சாம்பலை வெளிப்பிரயோகமாக பயன்படுத்தும் முறை உண்டு. இரசாயன வேதைக்காகும் தீநீர் முறையில் இது சேரும். பூ நாகத்துடன் உலர்ந்த அட்டையைச் சமமாகச் சேர்த்து நல்லெண்ணெயில் எரித்து ஆண் குறியில் பூச ஆண்மை மிகும்.

"செந்தூரத்தாதி முறையில் இதுவும் ஒன்று. இதனை,

— — — — — — — — — — —

துயவான இந்துப்பு சவுக்கா ரந்தான்
வார்த்ததொரு சீனமுடன் சாரங் காரம்
வளமாக ஐந்தாச்சு யின்னங் கேளு
பார்த்திடவே சிங்கியொடு கௌரி கெந்தி
பதமாக மனோசிலையும் ரசமு மைந்து
ஆய்ந்துபார் இந்திரகோபம் செம்பட்டுப் பூச்சு
அழகான கொம்பரக்கு பூச்சி போடெ
பூச்சியுடன் பூநாகஞ் சிவந்த அட்டை
புகழாக இதுவெல்லாங்கல்வத் திட்டே
ஆச்சியமா றரைத்திடுவா யுவர்நீ ராலே
அப்பனே காய வைத்துப் பதனம் பண்ணி
வார்ச்சுதே தொட்ட தெல்லாஞ் செந்தூ ரந்தான்"

– ***(போ. ச. கா.)***

என்ற பாடல் வரியால் அறியலாம்.

சர்வாங்கத் தைலம்

ஆயிரங்காலட்டை, பூநாகம், முசுறுமுட்டை, முதலைக்கண்டம், பாம்பு கண்டம், சுந்தரி எலி, நண்டு, ஓணான், நத்தை, சிப்பி, ஆட்டுச்சாணம், கோழிமலம், ஒட்டறை வசம்பு, திரிகடுகு, வால்மிளகு, கார்போகரிசி,

காட்டுச் சீரகம், பூலாவேர், பூண்டு, கழற்சிப்பருப்பு, அரத்தை, தேவதாரம், காயம், கற்பூரம், அரிதாரம், ரசம், கந்தகம், லிங்கம், துத்தம், துருசு, நிர்விடம், கோட்டம், மஞ்சிட்டி ஆகியவை வகைக்கு 10.2 கிராம்.

குப்பைமேனி, தும்பை, எருக்கு, தைவேளை, நொச்சி, புங்கிலை இவற்றின் சாறு வகைக்கு படி ¼, வேப்பநெய் 1 படி, புன்னை நெய் ½ படி, நல்லெண்ணெய் 1/8 படி அனைத்தையும் கடைச்சரக்கு, தாது சரக்குகளை அரைத்து அனைத்தும் ஒன்று சேர்த்து அத்துடன் 42 முட்டை அண்டத்தைலம் விட்டுக் காய்ச்சி கரகரப்பு பதத்தில் வடித்துக் கொண்டு காசெடை உள்ளே கொடுக்க சன்னி, முக்குற்றம், உடல் சில்லிடல் தீரும்.

சத்து முறை

"மருவியுமே. . . . . .செவ்வட்டை தான்
. . ..
. . . .
. . . .
. . . . .நிறுத்துக் கொண்டு
குருதியுமே கோமயத்தி லூறப் போட்டு
குருகவுமே மூன்றாம்நாள் எடுத்துக் கொள்ள
எடுத்துமேதான் வெவ்வேறாய் வைத்துக் கொண்டு
ஏற்றமான பொடியாகத் தானு ருக்கி
வடுத்துமேதான் வாதமென்ற குடோரி வீரம்
வகையானவெங்காரம் குன்றிவித்து
தடுத்துமேதான் ஏரண்ட வித்தினோடு
என் சாங்கமான நேர்வாளம் வேம்பின் வித்து
விருந்துமேதான் புரசினுட வித்தினோடு
விவரமாக வகை வகைக்குப் பலமு மாமே

பலமான இதுவெல்லாம் வெடியுப்பபு நீரில்
பாங்காக அரைத்திட்டு மூன்றுநாள் தாம்
பலமான. . . .தன்னில் போட்டு
பிலத்தரைத்து புடம் போட்டு குகையிலூது
கொடிதான கரடெடுத்து பின்னமூது
அலமாக ஐந்து முறையிப்படித்தானூது
கடங்கலுமே இப்படியே திடாயே
ஊதியுமே இப்படித்தான் சத்தைவாங்கி
. . . .”

– *போகர் 7000 3 ஆயிரம்*

செவ்வட்டை வேண்டிய மட்டும் நிறுத்தி 3 நாள் பசுநீரில் ஊறப்போட்டு எடுத்து, காயவைத்துப் பொடியாக்கி அத்துடன் வாதகுடோரி, வீரம், வெங்காரம், குன்றிவித்து, ஏரண்டவித்து, நேர்வாளம், வேப்பமுத்து, புரசுவித்து வகைக்கு 35 கிராம் வீதம் எடுத்து வெடியுப்பு நீர்விட்டு 3 நாள் அரைத்துப் புடமிட்டுப் பின் அதை குகையிலிட்டு உருக்கி சத்து பிரியும். அதை எடுத்துக்கொண்டு கரடை மீண்டும் உருக்க வேண்டும். இவ்விதம் 5 முறை செய்து உருகி வரும் சத்தையெல்லாம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அட்டைப்புகை

“நாட்டு மரவட்டை நற்றூள் புகை தீயிற்
காட்டப்போ மிரத்த மூலம்” **– *வை.கு***

உலர்ந்த அட்டையைத் தணலிலிட்டுப் புகையை மூலத்திற்குக் காட்ட இரத்த மூலம் தீரும்.



Julus

The body is elongated and cylindrical consisting of large number of segments, Head bears a pair of short seven jointed antennae, a part of Maddible and a pair of maxillar forming guttachilarium. Each trunk segment, expect the first four and last segment bears two pairs two pairs of legs. Poision jaws are absent. Stink gland present, along the sides of the body. Gential Opening on the third segment behind the head. Sexes are separate. Julus is found in the dark and damp placed under stones or wood or in decaying leaves.

அட்டை

Hirudo medicinalis

Speckled Leech

சித்த மருத்துவத்தில் வெளிப்பிரயோக மருந்து முறைகளில் குருதி வாங்குதல் எனும் முறைக்கு பயன்படுத்தபடுகின்ற அட்டை செவ்வட்டையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. இது, ஆழமில்லாததும் ஆழமுடையதுமான தெளிந்த நல்ல

நீரில், அல்லி, நெய்தல், கொட்டி போன்ற மணமுள்ள செடிகள் இருக்குமிடங்களில் கிடைக்கும். அட்டை மணலின் கீழ், மறைவாக ஒதுங்கிக் கிடப்பதும் உண்டு. இவ்வட்டையைப் பிடித்து முக்கால் பாகம் நீருள்ள வாயகன்ற கண்ணாடிப் புட்டியில் விட்டு, அந்நீரில் உணவுக்காகச் செவ்வல்லி, கொட்டி, பசுமஞ்சள் இவற்றின் கிழங்குகளில் ஒன்றை அரைத்துச் சேர்த்து, இவ்வட்டை பற்றிக் கொண்டு உறங்க இலைகள் இட்டு, புட்டியின் வாயை ஒரு மெல்லிய துணியால் மூடி, அடிக்கடி நீரை மாற்றிக் கொண்டு வந்தால், இது பல திங்கள் உயிருடன் வாழும். சிறிய உருவுள்ள அட்டையே மருத்துவத்திற்கு நன்றாய்ப் பயன்படும்.

1. நல்ல அட்டை, 2. தீய அட்டை, 3. சாதாரண அட்டை என இவ்வட்டையை மூவகையாகப் பிரிப்பர். இவற்றுள்

1. நல்ல அட்டை நால்வகைப்படும்.

முதல் வகுப்பு: வெண்மையும், சிறிது பொன்நிறமும் பொருந்தியிருக்கும்.

இரண்டாம் வகுப்பு: செங்கழுநீர் நிறமாயிருக்கும்.

மூன்றாம் வகுப்பு: பவழ நிறத்தையும், அரிசியின் உருவத்தையும் பெற்றிருக்கும்.

நான்காம் வகுப்பு: பச்சை அல்லது எலுமிச்சம்பழ நிறமாகும்.

2. தீய அட்டை — கருநிறம், கருஞ்செம்மை நிறம் அல்லது வானவில் போன்ற நிறம் ஆகிய பல நிறங்களைப் பெற்றிருக்கும்.

3. சாதாரண அட்டை — பொன்நிறத்தில் கருநிறம் பொருந்தி இருக்கும்.

பெரும்பாலான அட்டைகள் தனி வெள்ளை, மிகுநீலம், பொன்மை, கருப்பு முதலிய நிறங்கள் இருக்கும். சாதாரண அட்டை, 5 செ.மீட்டர் முதல் 10 செ.மீட்டர் நீளமுள்ளதாய், சிறிது கூர்மையான முனைகளுடன் சுருக்கங்களையும் பெற்றிருக்கும். அட்டைக்குப் பல் மூன்று, தோலடுக்கு ஐந்து, முகம் பச்சை அல்லது சிவப்பு பக்கமிரண்டிலும் பருத்த நரம்பு இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

ஆங்கில சீவ நூல்கள் அட்டையில் ஆண் பெண் தனியாயில்லை என்று கூறினும், நம் நூல்கள் ஆண் பெண் தனித்தனி உண்டென்றே கூறுகின்றன.

இதனை,

"ஆண்மிகில் ஆணாம்
பெண்மிகில் பெண்ணாம்".

என்ற அடியால் உணர்க, இவற்றுள் ஆண் பெண் அறிய், தாமரையையும் கொட்டியையும் நீரிலிட்டு அட்டையை விடின் ஆண், தாமரையைச் சேரும்; பெண் கொட்டியைப் பற்றும், இச்செயலினால் கண்டு கொள்ளலாம். இதனை

"அட்டையில் பெண்ணும் ஆணும்
அறிந்திட வேணுமாகில்
கொட்டியும் பதுமந் தானுங்
கூடவே நீரில் போட்டால்
அட்டையை விட்ட வாறே
ஆண்பது மத்திற் சேரும்.
கோட்டியிற் பேடு சேரும்
குறிதனை யறிந்து கொள்ளே."

என்ற செய்யுளால் உணர்க.

நிற்க, நண்டு, தவளை, நீர்ப்பாம்புகளையுடைய நீர் ஓட்டமில்லா நீர்நிலை, சருகூறிய நீர் இவைகளிற் பிறந்த அட்டை மருத்துவத்திற்காகவாம். இதனை,

"ஆகா வட்டை யதுகேளாய்
அலவன் தவளை நீர்ப்பாம்பு
மேகா சலத்தில் பிறந்தனவும்
போகாச் சுனையில் பிறந்தனவும்
பொல்லா வட்டை யிவையென்றே
பாகார் மொழிகொள் பைந்தொடியே
பாரா யட்டைவகுப்பினையே"

என்று புகன்றிருப்பதனால் அறிக.

செய்கையும் ஆட்சியும்

வீக்கம் நீக்குஞ் செய்கைக்காக இரத்தக் குழலைக்கீறி, இரத்தத்தை வெளிப்படுத்தல் போல இதைச் சிறப்பாக இரத்தத்தை வெளிப்படுத்த உபயோகித்தல் வழக்கமாயினும் முதியவர்க்கும் பெண்களுக்கும், சிறுவருக்கும், மென்மை உடலைப் பெற்றோர்க்கும், ஆயுத சிகிச்சைக்குப் பயந்தவர்க்கும், பித்த உடம்பினர்க்கும் சிறப்பாய் உபயோகிக்கலாம். அட்டை நீரில் பிறந்து வசிப்பதினால் இனிப்பையும் குளிர்ச்சியையும் உடைத்தாயிருத்தலின் பித்த நோய்கள் நீங்கும் என்று கண்டு கொள்க. ஓர் அட்டை சுமார் 120 துளி இரத்தம் வரை இழுக்கும் வன்மை உடையது. அட்டை உறிஞ்சுவதனால் 12 அங்குலம் வரை உள்ள இரத்தம் வெளிப்படும் என்பதை, "அட்டைவிடி லுதிரம் ஆறிரண்டங்குலம் போம்" என்ற தொடரால் அறிக."

அன்னம் நீரைப் பிரித்துப் பாலைப் பருகுவது போல, அட்டையானது விடநீரைப் பருகி இரத்தத்தைச் சுத்தி செய்யும் என்பதை,

"முன்னே கேளா யட்டையதன்
குணத்தைச் சொல்வேன் மொய்குழலே
அந்நாளன்னம் பால்பருகும்
அதுபோல் வாங்கும் விஷ நீரை
நன்னாள் பார்த்து நோயறிந்து
நயனந் தன்னில் விடுவாயால்."
என்ற அடிகளால் உணர்க

ஒரே சமயத்தில் 4 அல்லது 6 அட்டைகளுக்குமேல் விடக் கூடாது. நிற்க, இதனைப் பலவகைப் பிணிகளில் உபயோகிக்கும் விதத்தினைக் கீழ்க் கூறுவோம்.

1. அடிப்பட்ட வீக்கங்கள், கட்டிகள், கிரந்தி, வீக்கங்கள், சுளுக்கு, தோல், என்பு போன்ற உறுப்புகளைப் பற்றிய வீக்கங்கள் ஆகியவைகளுக்கு அவ்வவ்விடங்களில் அட்டையை விட்டு இரத்தத்தை வெளிப்படுத்த அந்நோய்கள் தீரும்.
2. மருத்துவத்திற்கடங்காத வாந்தியில் நெஞ்சுக்குழியில் விட நீங்கும்.
3. தாங்காத் தலைநோய்க்குப் பொட்டிலில் விட அது தணியும். தணியாவிடின் பிடரியில் விடவும்.
4. சுரத்திலுண்டாம் மார்புநோய், வயிற்று நோய் ஆகியவற்றிற்கு நோய் கண்ட இடத்தில் விட வேண்டும்.
5. இரத்த மூலத்தில் இரத்தம் தடைப்படுவதனால் உண்டாகும் தலைநோய்க்கு, அட்டையைக் குதத்தைச் சுற்றி விட நீங்கும். ஆனால், இது குதத்திற்குள் புகாவண்ணம் காத்துக் கொள்ளவும்.
6. சூதகத் தடையினால் உண்டாகும் தலைநோய் நீங்கத் தொடைகளின் உட்பக்கம் கடிக்க விடவும்.

7. இரத்த சீதபேதியில் உண்டாகும் வயிற்றுக் கடுப்புத் தீர குதத்தைச் சுற்றி விடவும்.
8. கல்லீரல் வீக்கத்திற்கு அவ்விடத்தில் விடப் பலன் தரும்.
9. குழந்தைகளுக்கு உண்டாகும் கக்குவான் நோய் தீர நடுமுதுகின்மேல் விடவும்.
10. நாட்பட்ட கீல்வீக்கங்களுக்கு அட்டை விட்டு நற்குணம் கண்டிருக்கின்றோம்.
11. கண்ணில் கனம் தோன்றி வலித்து, நீரொழுகிக் கொண்டு புருவத்தில் வலியுண்டானால் அட்டைவிடின் அது நன்றாகும் இதனை,

"கண்ணது கனத்து நொந்து
கண்ணில் நீ ரொழுகு மாயின்
விண்ணுடன் புருவத் தோடு
மேலுற வலித்த போது
நிண்ணிய அட்டை விட்டு
நிமைபெறு நீளந் தன்னில்
திண்ணிண கிரமத் தாலே
செய்வதோர் கருமம் நன்றாம்."

என்று புகன்றிருப்பதனால் உணர்க.

மேலே குறிப்பிடப்பட்ட குறிகுணங்கள் எல்லாக் கண்ணோய்களுக்கும் பொதுவாயினும், சிறப்பாய் நேத்திரச் சூலை, வாத காசம், கருவிழியில் உண்டாம் படர்விரணம், காசநோயில் சரிவர சஸ்திர சிகிச்சை செய்யப்படாததினால் உண்டாகும் அழற்சி இவைகளுக்கு அட்டை விட்டுப் பலன்.கண்டிருக்கிறோம். மற்றும் இமையில் அட்டையை விடவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. அதற்கு, கடைக் கண்ணிலிருந்து லு அங்குல (1.25 செ.மீ) தூரத்தில் புருவ முனைக்குக் கீழ் விடுவதை நலம் எனக் கண்டு கொள்க.

அட்டை விடக்கூடாத இடங்களும் திதிகளும்

அட்டைகளைக் கார் இரத்தக் குழல்கள் தோன்று மிடங்களிலும், நாடி பரிசிக்கப்படும் வீக்கங்களிலும், கண்ணிமைகளிலும், ஆண்குறி, அண்டம், குய்யம், ஸ்தனம் இவைகளின் மீதும் விடக்கூடாது, விடின் வீக்கத்தை உண்டுபண்ணும். சிறுவர்களுக்கு இரத்தம் விரைவில் வெளிப்படுமாகையால், கண்காணிப்பாக என்பிருக்குமிடங்களில் விடலே நன்று. அட்டை விட நடுப்பத்து நாழிகை சிறந்ததாயினும், குழந்தைகளுக்குக் காலையில் விடலே நன்று. ஏனெனில் மாலையில் விட்டால், ஒரு வேளை இரவில் கடிவாயினின்றும் இரத்தம் பெருகின் கவனிக்க இயலாது. அதனால், ஆபத்து நேரும் மற்றும்,

திதிகள்	அட்டை விடக்கூடாத இடங்கள்
பிரதமை	பெருவிரல்
துதியை	உள்ளங்கால்
திரிதிகை	முழங்கால்
சதுர்த்தி	தொடை
பஞ்சமி	குய்யம்
சஷ்டி	நாபி
சப்தமி	ஸ்தனம்
அஷ்டமி	கரம்
நவமி	கழுத்து
தசமி	அதரம்
ஏகாதசி	நாக்கு
துவாதசி	நெற்றி
திரயோதசி	புருவம்
சதுர்த்தசி	பிடரி
பூரணம்	உச்சி

அமிர்தம் நிற்கின்றபடியினால், அந்த திதிகளில் அவ்விடங்களில் அட்டை விடக்கூடாது. விடின் மரணம் நேரிடுமென்று கூறப்பட்டுள்ளது.

சுத்தியும் ஆராய்ச்சியும்

அட்டையைக் கடிக்கவிடுமுன், அதைச் சுத்திசெய்ய, ஒரு வாயகன்ற பீங்கான் பாத்திரத்தில் மஞ்சள் கரைத்த நீரிட்டு, அதில் அட்டையை விட அதன் உடம்பினின்று கோழையொத்த கழிப்பொருள் வெளியாகும். பின்பே அந்த அட்டையை உபயோகித்தல் வேண்டும். இக்கழிப்பொருள் அதிகமாயிருப்பினும் அது நீரில் சுறுசுறுப்பாய் ஓடாவிடினும் அவ்வட்டை பற்றாதென்றுணர்க.

நோயாளியைத் தயாரிக்கும் முறை

நோயினனுக்கு, முன்னாள் பேதிக்கு அல்லது வியர்வை பெருகுவதற்கு அல்லது வாந்திக்குக் கொடுத்து, மறுநாள் அட்டையை விடவேண்டுமென்பர். மற்றும் அட்டை விடும் போது, நோயாளிக்குப் பட்டினியோ தூக்கமின்மையோ கூடாது. அன்றியும், அது விடவேண்டிய இடத்தை உவர் மண்ணும் மணலும் கொண்டு கழுவிச் செம்மண்ணால் பூச வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

இதனை,

"சத்தியில் மாந்த ருக்குத்
தையல்பிள் ளையர்த மக்கும்
ஒத்துநின் நூட்டு வித்து
உறக்கமுந் தவிர்ந்தி டாமல்
மத்தியா னத்து மேலாய்
மண்கொண்டு சுத்தி பண்ணிப்
பற்றிய நோய்கள் தன்னைப்
பார்த்துநீ அட்டை கட்டே"

என்று கூறியிருப்பதாலறிக.

நிற்க, தற்காலம், ஆங்கில வைத்தியர்கள், அட்டை விடுவதற்குமுன் அட்டையைச் சுத்தி செய்யாமல், கடிக்க விடுமிடத்தை மட்டும் சுத்தி செய்ய டிஞ்சர் அயோடைன், டர்பன்டைன் போன்ற இயற்கைக்கு மாறானதும் அட்டைக்கு ஒவ்வாததுமான மருந்துகளைத் தடவுகின்றார்கள். இதனால் அட்டை உடனே பற்றாதென்றும், தூய நீரிட்டு நன்றாய்க் கழுவுதலே போதியதென்றும் உணர்தல் வேண்டும்.

கடிக்கும்படிச் செய்யும் வகைகள்

வாய் குறுகலான நீர் நிறைந்த பாத்திரத்தில் அட்டையை விட்டு, அப்பாத்திரத்தின் வாயைக் கடிக்கவிட வேண்டிய இடத்தில் கவிழ்த்தி, நீர் வெளிப்படா வண்ணம் பிடித்தால் பற்றும், பற்றாவிடின் இடத்தைத் துடைத்து, ஒரு துளி பாலைத் தடவி, நீரில் நனைத்துப் பிழிந்த பஞ்சால் அட்டையை மெல்லெனப் பிடித்துவிடப் பற்றும். இதற்கும் பிடிக்காவிடின் இடத்தைச் சுத்தமான குண்டூசி கொண்டு இரத்தம் சற்றே கசியும் வண்ணம் கீறி, அதன்மீது அட்டையை விட அஃது உடனே பற்றிக் கொள்ளும். அட்டையின் முகம் பெரிதான வியர்வைத் துளியுடன் தோன்றினால், நன்றாய்ச் கவ்விக் கொண்டதென்று உணர்ந்து, அதன்மீது ஈ மொய்த்து இரத்தம் இழுப்பதைத் தடுக்காமலிருக்க ஈரத்துணியிட்டு மறைக்கவும்.

நிற்க, கையால் அட்டையைத் தொட அஞ்சி, சில வைத்தியர்கள் ஆயுதங்களால் எடுத்து விடுகின்றனர். இதனால் அட்டைக்குத் துன்பமும், உடலுறுப்புச் சேதமும் நேரிடும் என்பதனை அறிதல் வேண்டும்.

கடித்த அட்டை கீழே விழ

அட்டை ½ மணியிலிருந்து 4 மணி நேரத்திற்குள் இரத்தத்தைக் குடித்துத் தானே கீழே விழுந்து விடும். கீழே விழச் செய்ய வேண்டுமாயின் உப்பு நீர் அல்லது காடிநீரைக் கடிவாயில் தெளிக்கவும். அட்டை மூக்கின் தொளை, குதம், குய்யம், இவ்விடங்களில் புகுந்துவிடின், அதனை வெளிப்படுத்த மேற்படி சிகிச்சையே பொருந்தும்.

கடிவாயில் இரத்தத்தை நிறுத்தவும் பெருக்கவும்

அட்டை விழுந்தபின் கடிவாயினின்றும் இரத்தம் அதிகமாக வெளிப்படின், பொரித்த படிகத்தூள், துருசின் தூள், மஞ்சட் தூள், பஞ்சு சுட்ட கரி, சீலைக்கரி, சிலந்திக்கூடு, மாசிக்காய்த்தூள் இவைகளுள் ஏதாவதொன்றைக் கடிவாயிலிட இரத்தம் நிற்கும். நிற்காவிடின், கடிவாயை விரலால் சிறிது நேரம் அழுத்தினாலும், காடிக்காரமுனையால் தொட்டாலும் துண்டுச் சீலை வைத்து அழுத்தமாகக் கட்டினாலும் நின்றுவிடும். மெழுகுத் தைலத்தையும் கையாளலாம்.

கடிவாயினின்றும் இரத்தம் வெளிப்படும்படி செய்ய, வெந்நீர், தவிடு, நொச்சியிலை, வேப்பிலை, இவைகளுள் ஒன்றைக் கொண்டு ஒற்றடமிடவும்.

அட்டை விடுதல் நன்கு நிறைவேறியது என்;பதற்கான அறிகுறி, கெட்ட இரத்தம் நீங்கியவுடன் நோயினால் உண்டான சோகமும் வேதனையும் நீங்கும்.

இதனை,

"துட்டரத்தம் போனக்கால் சோக முடன்கூடிய
திட்டமுடன் வேதனையும் தீருமே—வட்டதன
மானே, உருவினுக்கு மற்றொன்றும் வாராது
தானே தனக்குநிகர் தான்."

என்று புகன்றிருப்பதினால் உணர்க.

இரத்தத்தை அதிகமாக அட்டை
உறிஞ்சுவதனாலுண்டாகும் கெடுதிகள்.

அட்டை மிஞ்சினாலும், இரத்தம் அதிகமாய் வெளிப்பட்டாலும் கடிவாயில் தினவு உண்டாய்க் கடுத்து வீங்குமென்றறிக. இதனைக் கீழ்ச் செய்யுள் வலியுறுத்தும்.

“அஞ்சுவிரல் நீளத்தில் அட்டை விடலாகும்
மிஞ்சவே அட்டைவிட வேண்டாம்—மிஞ்சின்
கடிவாய் தினவாய் கடுத்துவலி வீங்குந்
துடியாரு நல்லிடையாய் சொல்.”

அட்டைக் கடியினால் உண்டான புண்ணுக்குச் சிகிச்சை

காடி, காரென், கற்றாழை இம்மூன்றையும் அரைத்து மேல் பூசிவந்தாலும், கற்றாழை மடலைச் சட்டு இரண்டாய்ப் பிளந்து மஞ்சள் தூளைத் தூவிப் புண்ணின் மீது வைத்துக் கட்டினாலும் நீங்கும்.

ஒரு முறை உபயோகித்த அட்டையை மறுமுறை பாவிக்க

கடித்து விழுந்த அட்டையைத் தவிட்டில் விட்டுப் புரட்டியோ புரட்டாமலோ, அதன் வாயில் எள்ளின் பொடி அல்லது மஞ்சள் பொடியைத் தூவின் இரத்தத்தைக் கக்கும். அது சரியாக வெளிப்படாவிடின், இரு விரல்களாலும் மெதுவாய்ப் பின்னிருந்து முன் அட்டையைப் பிடித்துவிட, இரத்தம் நன்றாய் வெளிப்படும். பிறகு, புற்றுமண் கரைத்த தெளிநீரில் விட்டு வைத்திருந்து, அதன்பின் முற்கூறிய நீரில் பத்திரப்படுத்த வேண்டுமென்பர். இதனை,

“குடித்துவீ ழட்டையை கொண்டதவிட டில்விட்டே
பிடித்ததின்வாய் எள்ளதனைப் பெய்து—பிடித்துவிட
விட்டரத்தம் போனால் துலைநீரில் நீந்த விட்டுக்
கட்டுவது மண்குடுவைக் கண்.”

என்று புகன்றிருப்பதால் உணர்க.

நிற்க, பாவித்த அட்டைகளையும், பாவியாத அட்டைகளையும், வெவ்வேறாக வைத்தல் வேண்டும். ஒருமுறை உபயோகித்த அட்டையை ஏழு நாட்கள் சென்ற பின்பே

மறுமுறை பாவிக்கலாம். இவ்வாறு அட்டைக்கு ஓய்வளிக்காமல் திரும்பத் திரும்ப விடின், அது நச்சுத்தன்மையை அடையும். அதனால் கடிவாயில் வீக்கம், வேதனை, சுரம், தினவு, புண், கலக்கம் முதலியன உண்டாம் என்று உணர்க. இதனை,

“விட்டவுரு வேறே விடாதவுரு தான் வேறே
கட்டும் குடுவைதனில்”

என்றும்,

“பட்ட உருவைப் பலகாலும்—விட்டுவிடு
மத்தா லுருவடைய மான விஷமாகும்”

என்றும்,

“விட்டவுருத் தானும் விஷவுருவே யானக்கால்
வேட்டுருவாய் வீங்குமது வேதனையாந்—திட்டஞ்
சுரமாங் கலக்கமாஞ் சூழ்தினவுங் காணும்
உரமாகும் புண்ணு முதிர்ந்து.”

என்று அகத்தியர் நயனவிதியில் புகன்றுள்ளமையைக் கண்டுகொள்க.

தவளை

Rana tigrina

வேறு பெயர்கள்

மகாபேகன், கச்சதூஷன், ராச மண்டூகம், தத்தூரன், மண்டூகன், மேகவார்த்தையறிபவன், முத்தியடகோஷ மூர்க்கன், சொரியோன்.

"தத்தல் மண்டூகத் தனிநீர் தவளைதான்

மத்தணல் மேகத்தின் வார்த்தை யறிபவன்

முத்திய கோஷ மொழியுட மூர்க்கனாம்

கத்தியே செரியோன் காலைத் தவளையே"

– ச.மு.நி.

தவளையில் பல வகைகள் இருப்பினும் உணவிற்கும் மருந்திற்கும் பெறப்படுவது பச்சைத் தவளையே ஆகும். இது உடல் முற்றும் பசுமை நிறத்தில் மேற்புறம் நாமம் போன்ற வடிவும், வட்ட வடிவிலும், புள்ளிகள் போலும் அமைப்பை உடையதாயிருக்கும்.

இது சுமார் 200 கிராம் முதல்1000 கிராம் எடையுள்ளதாகக் காணும்.

கன்னியாகுமரி மாவட்டங்களில் பல இடங்களில் இன்றும் இது உணவாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதன் தோல், மாமிசம், கொழுப்பு முதலியன மருத்துவத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

தவளையின் குணம்

குளிர்ச்சியும் வறட்சியுமாம்
உதிர சுத்தி உண்டாகும்
சுத்த உணவுமாகும்.

பயன்கள்

1. பச்சைத் தவளை மாமிசம், உப்பு சேர்த்து எள்நெய்யாவது, பசு வெண்ணெய்யாவது கூட்டி வேகவைத்துக் கொடுக்க சகல பாம்புவிடம் தீரும்.
2. தவளையை இடித்துப் பிழிந்து சாறு அல்லது குடிநீர் குடிக்க நாட்பட்ட ரோகம், சயம், தீரா இருமல் தீரும். உறக்கம் உண்டாகும்.
3. தவளையைக் குடிநீரிட்டுக் கொப்பளிக்க பல்வலி தீரும்.
4. தவளை முட்டையைப் பூச கண்டமாலை, தீப்பட்ட புண்கள் ஆறும்.
5. தவளையைச் சாம்பலாக்கி காயங்கள், இரத்த பீனசம், இரத்த மூலம் இவற்றில் தூவ உதிரப்போக்கு நிற்கும்.

போகர் 700ல் சொல்லப்பட்டுள்ள பூதமாரண விடமுட்டித் தைலத்தில் இது சேரும்.

மாதுளை நெய்

மாதுளம்பிஞ்சு, மாதுளம்பூ, மாதுளை இலை, மாதுளைப்பட்டை, மாதுளை வேர் ஆகியவை வகைக்கு 1 வராகனெடை சீந்தில் கொடி — 5 பலம் சேர்த்து ஒன்றிரண்டாக இடித்து அத்துடன் ஒரு பச்சைத் தவளை பிடித்துச் சுத்தித்துச் சேர்த்து இடித்து 4 லிட்டர் நீர்விட்டு அடுப்பேற்றி எரித்து ½ படியாக வற்றவைத்து வடிகட்டிக்

கொள்ள வேண்டும். அத்துடன் 175 கிராம் பசு நெய் சேர்த்து மீண்டும் அடுப்பேற்றி சிறுதீயில் எரிக்க வேண்டும். கொதிக்கும் சமயம் சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு வகைக்கு 5.1 கிராம் வீதம் எடுத்துச் சூரணித்து சேர்த்துப் பக்குவத்தில் வடிகட்டிக் கொள்ள வேண்டும்.

50 மி.கி.—100 மி.கி. வரை இரு வேளை வீதம் கொடுக்க குழந்தைகட்குக் காணும் கணை, இளைப்பு தீரும். குழந்தைகளின் உடல் எடை அதிகரிக்கும்.

பச்சைத்தவளை — 2, வயல் நண்டு — 2, பழந்திண்ணி வௌவால் — 1, நாகப்பூச்சி — 1 ஆகியவற்றை முறைப்படி சுத்தித்துக் கொண்டு அரைத்து அத்துடன் சிறுநாகப்பூ, வசம்பு, வெங்காயம், பொன்னாங்கண்ணிவேர், கருஞ்சீரகம் ஆகியவை வகைக்கு 4.2கி (1 வராகனெடை) சேர்த்தரைத்து 650மிலி (1/2 படி) எள் நெய்யுடன் சேர்த்துக் காய்ச்சி உள்ளுக்கும் கொடுத்து துவாலையுமிட குழந்தைகட்குக் காணும் கழிச்சல் தீரும். ஆரோக்கியமுண்டாகும்.

தவளை

The Bullfrog is the most common frog of the Indo- Gangetic plains. It frequents mostly cultivated areas and swampy wastelands.

திமிங்கலம்

Physeter macrocaphalus

உபரசங்களின் தொகையைக் கூறுமிடத்து
தொகையான வெள்ளிமலையச்சி லைக்கல்
தொடரான திமிங்கலஞ் சொல்லக்கேளே

என்பதில் திமிங்கலம் உபரசங்களில் ஒன்றாகச் சொல்லப்படுகிறது. திமிங்கலத்தை உபரசங்களில் அடக்கிய போகர், திமிங்கலத்தினின்று பெறப்படுகிற அம்பரைக் காரசாரத்தின் கீழ் விளக்குகிறார்.

சித்த மருத்துவத்தில் அம்பர் பயன்படுத்தப்படுவதாலேயே திமிங்கலம் முக்கிய இடத்தைப் பெறுகிறது.

திமிங்கலத்தில் பல வகைகள் இருப்பினும் அம்பர் பெறப்படுவது *ûûSperm Whale"* என்ற இனத்தில் மட்டுமே இவ்வகை மீன், பாலூட்டிகள் இனத்தைச் சேர்ந்தது. *The name sperm is derived from ûSpermceti' the oil contained in the reservoir of the head.*

எண்ணெய்க் கிணறுகளைத் தலையில் கொண்டுள்ளதால் இவ்வகைத் திமிங்கலங்கள் *Sperm Whale* என அழைக்கப் படுகிறது.

இந்தியாவைச் சுற்றியுள்ள கடற்புறங்களில் இது காணப்படுகிறது. கடற்கரைகளில் உயிருடனோ, இறந்த பின்போ சில நேரங்களில் ஒதுங்குவதாக மீன் வளத்துறை நூல் கூறுகிறது.

இதன் மாமிசம் பல இடங்களில் உணவாகப் பயன்படுகிறது.

இதனின்று பல வகை உயர்ந்த பொருட்கள் பெறப்படுகிறது.

Sperm Oil : இவ்வகை நெய் சாதாரண திமிங்கலத்தினின்று பெறப்படுகிற நெய்யை விட இருமடங்கு விலை உயர்ந்தது.

Sperm Ceti: *Sperm* திமிங்கலத்தின் தலைப்பகுதியில் காணப்படும் திரவ நிலையில் உள்ள கொழுப்பு. இது அந்நிய செலாவணியைத் தரும்.

அம்பர்: *Sperm* திமிங்கலத்திலிருந்து கிடைக்கக் கூடிய முக்கிய பொருள் இதனைப் பற்றி கீழ்க்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அம்பர் அக்னி சாரம் என மருத்துவ நூல்களில் பேசப்படுகிறது.

இது கடலிலுள்ள சாரங்களில் ஊறி சுயமாகவே சுத்தியாய் விடுவதால் இதற்கென பிரத்தியேகமான சுத்தி முறை அவசியமில்லை.

இது சூலை, சந்நிபாதம், தனுர் வாதம், கபதோஷம், இவற்றை நீக்கும். பித்தத்தை விருத்தி செய்யும், உஷ்ண வீரியம் உடையது.

திமிங்கலம்

SPERM WHALE

Physeter macrocaphalus

GENERAL CHARACTERISTICS

The sperm whale is toothed whale that lives in pods. The head of the sperm whale is blunt and squared off and has a small under slung jaw. The head is also large and makes upto 1/3 of the body length and more than 1/3 of its mass.

PRODUCTION OF AMBERGRIS

Sperm whales was named for the valuable spermaceti oil (wax) that this whale produces in the spermaceti organ which located in its head.

DIET

A sperm whales consumers about one ton (907 kg) of food each day. Sperm whales are carnivores that mostly eat giant squired that like on the ocean botton at great depths. They also fees on the species of fish, Skate end octopus.)

CONSERVATION STATUS

It is estimated that there are about 2,00,000 sperm whales world wide. Sperm whales are considered as endangered species. Theses whales were over hunted for many years, since their oil, Amber and meat are very valuable.

AMBERGRIS

OTHER NAMES

Grey Amber, Amber Giris, Amber Grease, Ambra Grisea

மீன் அம்பர்

The Ambergris is a solid, waxy, flammable substance of dull grey or blackish colour, with the shades being variegated like marble. It possess a peculiar sweet, earthy odour not unlike isopropyl alcohol.

SOURCE

Ambergris occurs as a biliaty secretion in the intestines of the Sperm whale and can be found floating upon the sea, on the sea-coast, or in the sand near the sea coast.

DISTRIBUTION

Ambergris can be found in the Atlantic Ocean, on the coasts of Brazil and Madagascar, on the coast of Africa, of the East Indies, Mainland China, Japan, Australia, New Zealand and the Moluccia Islands. However, more commercially collected ambergris come from the Bahamas Islands and Providence Island.

PHYSICAL PROPERTIES

Ambergris is found in lumps of various shapes and sizes, weighing 14-45 Kg or more. When initially expelled by the sperm whale or remover from it, the fatty precursor of ambergris is pale white in colour (sometimes streaked with black), soft consistency, with a strong faecal smell.

Following to years of photo-degreasers and oxidation in the ocean, this precursor gradually hardents, developing a dark grey or black colour, a crusty and waxy texture and a peculiar odour that is once sweet, earthly, marine and animalic.

தேன்

Honey

தேனீக்கள், மரஞ்செடி கொடிகளிலுள்ள பூக்களில் அமைந்திருக்கும் அமிர்தத்தைப் பருகித் தம் உடலிலுள்ள தேன்பையில் சேர்த்துக் கொள்கின்றன. அப்போது அப்பையில் இருக்கும் அமிர்தம் ஒருவித மாறுதலை அடைகின்றது. இம்மாற்றமடைந்த அப்பொருளைத் தேனீக்கள் அடையிலுள்ள அறைகளில் உமிழ்ந்து சேர்த்துவைக்கின்றன. இப்பொருளுக்குத் தேன் என்பது பெயர். தேனீக்கள் பெரும்பாலும் தேன் கூடுகளை மலை, கொம்பு, மனை, புற்று, மரப்பொந்து போன்ற இடங்களில் கட்டுகின்றன. தேன் கூடுகளிலிருந்து ஒழுகும்பொழுது சேகரித்தெடுத்த புதிய தேனே சிறந்ததாகும்.

தேன் கூட்டிலிருந்து எடுத்த புதிய தேன் இனிப்பாயும், தெளிவாயும், இளமஞ்சள் நிறமாயுமிருக்கும். பிறகு படிப்படியாய் உறைந்து மங்கலாகிவிடும். புஷ்பங்களுக்குத் தக்கவாறும், கால தேசத்திற்கு ஏற்றவாறும் தேனின் மணம், உருசி, குணம் முதலியன வேறுபடும். சித்த மருத்துவ நூல்களில் தேனிக்களின் பாரம்பரிய மாறுபாடுகளைக் கொண்டே தேன் வகைப்படுத்தப்படுகின்றது. ஏனெனில் ஐவகைத் தேனைச் சேகரிக்கும் தேனீக்கள் தனித்தனியான வகையைச் சார்ந்தது.

தேனில் உடலுக்குத் தேவையான இனிப்புச் சத்து, உலோகச் சத்துக்கள், வைட்டமின் போன்ற எல்லாச் சத்துகளும் சிறுசிறு அளவில் பொருந்தியிருக்கும்.

சித்த மருத்துவ நூற்களில் தேன் 12 நாழிகையில் சீரணமாகிவிடுகின்றதென்று கூறப்பட்டுள்ளது.

ஆதலினால், இது விரைவில் உடலில் சேர்ந்து பலத்தைக் கொடுக்கின்றது. சிறந்த ஆகாரமாகத் தேக பலத்திற்காகவும் ஆரோக்கியத்திற்காகவும் உட்கொண்டு வருகின்றனர்.

தேனின் செய்கையும் நன்மையும்

உள்ளழலாற்றி, மலமிளக்கி, துவர்ப்பி, அழுகலகற்றி, கோழையகற்றி, போஷணகாரி, பசித்தீத்தூண்டி, தூக்கமுண்டாக்கி போன்ற பல செய்கைகள் உண்டு.

தேனைக் குழந்தைகளுக்குக் கொடுக்க, அது சிறுநீரைச் சிறிது அதிகப்படுத்துவதோடு வயிற்றுப் பொருமலையும் குறைக்கும்.

தேனில், 1. மலைத்தேன், 2. கொம்புத்தேன், 3. மரப்பொந்துத் தேன், 4. புற்றுத்தேன், 5. மனைத்தேன் என ஐவகை உண்டு.

இவ்வகைத் தேனீக்கள், ஒன்றுக்கொன்று குணத்தில் வேறுபடுவதைக் கீழ்க்காணும் செய்யுட்கள் உணர்த்தும். ஏனெனில் தேன் என்பது தேனீக்களின் மூலம் பெறப்படுவதாயினும் மேற்கூறிய 5 வகை தேனீக்களும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட இனத்தைச் சார்ந்தது.

மலைத்தேனின் குணம்

“ஐயிரும லீளைவிக்க லக்கிப்புண் வெப்புடல்நோய்
பைய வொழியும் பசியுமுறும் — வையகத்தி
லெண்ணுமிசை யாமருந்திற் கேற்ற வனுபான
நண்ணுமலைத் தேனொன்றி னால்”.

– ப.கு.சி

மலைத்தேனினால் கபகாசம், சுவாசம், விக்கல், கண்விரணம், சுரம், தேகக்கடுப்பு முதலிய பிணிகள் நீங்கும். பசியும் தொனியும் உண்டாகும். இது மருந்துகளுக்கு நற்றுணை மருந்தாகும்.

கொம்புத் தேனின் குணம்

"வாதபித்த வையத்தை மாற்றுமுளை மாந்தைதனைக்
காதமென வோடக் கடியுங்காண் — பூதரமாம்
வம்புமுலை மாதே வருமருசி நீங்கிவிடுங்
கொம்புத்தே னன்றாகுங் கூறு".

– *ப.கு.சி*

கொம்புகளில் கட்டுகின்ற தேன் முக்குற்றம், உளை மாந்தை, அரோசகம் முதலிய பிணிகளை ஓட்டு மென்க.

மரப் பொந்து தேனின் குணம்

"பசிவெப்பாம் வாந்திமந்தம் பல்விக்கல் வெய்ய
ருசிமுக்க பந்தூல ரோகங் — கசிவகலாக்
கொந்துத்தேன் பாடுங் குழலணங்கே காவின்மரப்
பொந்துத்தே னுண்டாயிற் போம்" – *ப.கு.சி*

மரப்பொந்து தேனினால் பசியும் வெப்பமும் உண்டாகும். வாந்தி, அக்கினி மந்தம், பலவகைப்பட்ட விக்கல், அரோசகம், காசம், சுவாசம், ஷயம், அதிதூலம் முதலிய பிணிகள் நீங்கும்.

புற்றுத் தேனின் குணம்

"கொப்பணியு மாதே குவலயத்து ளெல்லார்க்கு
மொப்பநின்ற வைய மொளிக்குங்காண் — காப்புளிக்குங்
காசசுவாசம் வாந்தி கண்ணிலெழு நோய்களறும்
வீசுபுற்றுத் தேனுக்கு மெய்".

– *ப.கு.சி*

புற்றில் கட்டுகின்ற தேன் ஐயம், காசம், சுவாசம், வாந்தி, கண்ணோய்கள் முதலியவற்றை நீக்கும்.

மனைத் தேனின் குணம்

"புண்ணும் புரையும்போம் போகாக் கரப்பனறு
மெண்ணரிய தீபனமா மேந்திழையே — கண்ணுகளிற்
பூச்சிபுழு வெட்டுகபம் பொல்லா விருமலறும்
பேச்சின்மனைத் தேனுக்குப் பேசு".

– ப.கு.சி

வீடுகளில் கட்டுகின்ற தேனால் புண், சிலையோடல், கரப்பான், நேத்திரவிரணக்கிருமி, புழுவெட்டு, கபகோபம், காசம் முதலிய பிணிகள் நீங்கும். பசி உண்டாம்.

1. புதிய தேன்
2. பழைய தேன்

நிற்க, புதிய தேனுக்கும் பழைய தேனுக்கும் உள்ள வித்தியாசங்கள் அதிநுட்பமாகக் கூறப்பட்டுள்ளன.

புதிய தேனின் குணம்

"ஆயுளுட னுட்டிண மரோசியகக் கபமு
மேய வழகும் வளர்ந்திடுங்காண் — தூய
மதியமெனு வதன மாதரசே நாளும்
புதியநறுந் தேனாற் புகல்".

– ப.கு.சி

புதுத் தேனினால் நிறைந்த ஆயுளும்,உடல் வெப்பமும், ஒளியும் உண்டாகும். இது மிகச் சேர்ந்தால் அருசியும் நெஞ்சிற் கபமும் விளையும்.

பழைய தேனின் குணம்

"வாதப் பெருக்கை வயிற்றெரிவைத் தந்துறையைச்
சேதப் படுத்துமின்னுஞ் செப்பவோ — மாதரசே
சந்திப் புறுமரசந் தன்னைத்தூண் டும்புளிப்புத்
தித்திப் புறும்பழைய தேன்".

– ப.கு.சி

புளிப்பும் இனிப்புங் கலந்த சுவையையுடைய பழைய தேனானது, வாதரோகக் கூட்டத்தையும், வயிற்றெரிச்சலையும், வாதமூல ரோகத்தையும் விளைவிக்கும். அன்றியும் மருந்தினது நற்குணங்களைக் கெடுக்கும் என்ப.

சுத்தி

கடைத்தேனில் மெழுகு, தேனீ, புழு, முட்டை, மகரந்தப்பொடி முதலிய மலினங்களிலிருக்கும் ஆகையினால், இதனை உபயோகிக்குமுன் நீர் இயந்திரத்தில் வைத்துக் காய்ச்சிச் சூடாயிருக்குபோதே, ஈரக் கம்பளித் துணியில் விட்டு வடிகட்டிக் கொள்ள வேண்டும்.

ஓட்டைச் சுட்டுத் தேனில் போட்டு முறித்து உபயோகிப்பது வீட்டு வழக்கம்.

உபயோகங்கள்

இலேகியம், பாணிதம், மெழுகு, கட்டு, கண்மை போன்ற மருந்துகள் செய்வதற்குத் தேன் பயன்படுகிறது.

பற்பம், செந்தூரம், சூரணம், மாத்திரை, குடிநீர் போன்றவற்றிற்குத் தேன் ஒரு சிறந்த துணை மருந்தாகும். இது அனுபானப் பொருளாவதன்றி அவிழ்தப் பொருளுமாகி, தேகத்தை நன்னிலையில் வைத்து, வாத முதலிய முக்குற்றங்களையும் போக்குகின்றதென்பதனை,

"அனுபான மாய்ப்பின் அவிழ்தமுமாய்த் தோன்றி
கனமான தேகநிலை காட்டிப் — பினுமே
யரசன் முதல்வோ ரையுமாட்டு வித்தாலே
பிரசத் தினாற்போம் பிணி".

– **தே.வெ**

என்ற செய்யுளால் அறிக.

அவிழ்தம் பலிக்க வேண்டுமாயின் அனுபானப்பொருள் தேவை என்பதனையும், அவ்வனுபானப் பொருள்களும் தேனும் ஒன்று என்பதனையும்,

"அனுபானத் தாலே யவிழ்தம் பலிக்கும்
இனிதான சுக்குன்ன விஞ்சி — பினுமுதகங்
கோமயம்பால் முலைப்பால் கோநெய்தேன் வெற்றிலைநீர்
ஆமிதையா ராய்ந்துசெய லாம்".

– **தே.வெ**

என்ற செய்யுளால் உணர்க.

குழந்தைகளின் இருமலுக்குத் தேன் (60 மி.லி) விளாவினகாடி அல்லது எலுமிச்சம் பழரசம் சமன்கூட்டி குறைந்த அளவில் கொடுத்துவரத் தணியும்.

சுவாசகாச நோயில் மலத்தைக் கழித்துக் கஷ்ட சுவாசத்தை நிறுத்த சிற்றாமணக்கு நெய் ½ அவுன்ஸ் (14 மி.லி), தேன் ¼ அவுன்ஸ் (7 மி.லி) கூட்டி நன்றாய்க் கலந்து கொடுக்க நற்பலனை அளிக்கும்.

தேனும் தண்ணீரும் கலந்து உட்கொள்ள வேண்டுமென்ற பிரயத்தனம் செய்வதற்கு முன்பே, நாட்சென்ற சீதசுரம் பயப்பட்டு ஓடும் என்று கூறப்பட்டுள்ளது.

இதனை,

"பயப்படு பிரசமுன் பழகு மைச் சுரம்
பயப்படு மாறெென".

என்ற அடிகளால் உணர்க.

மற்றும் தேனைப்பானம் செய்து வந்தால், கபப்பிணிகள் நீங்கும் என்பதனை "இறவுளர் அமுதையை இறவுள தாக்கும்" என்ற கரிசல் அடியால் அறியலாம்.

உள்ளழலாற்றிச் செய்கைக்காக, தேனைச் சூடுள்ள பாலில் அரிசிக் கஞ்சித் தெளிநீருடன் கொடுப்பதுண்டு. இதனால் மலபந்தம், செரியாமை, நீர்க்கோவை, இருமல், தொண்டை விரணம், நுரையீரலைப் பற்றிய பிணிகள் முதலியன நீங்கும்.

கபவாத சுரத்தினால் வருந்தும் நோயினருக்கும், இளைத்த உடம்பினருக்கும் இதயத்தைப் பலப்படுத்த தேனை வழங்கி வரலாம்.

வயோதிகர்களுக்குக் காணும் கோழையை அகற்றி, உடலில் வெப்பத்தை உண்டு பண்ணுவதற்கும், சக்தியை அதிகப்படுத்துவதற்கும் தேனைக் கொடுத்து வரலாம்.

மதுமேக நோய்க்காக வழங்கப்படும் மருந்துகளுள், தேனும் ஒரு முக்கியப் பொருளாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

தேனுடன் சுண்ணாம்புகூட்டிக் குழைத்து, பழுப்பதற்காகக் கட்டிகளின் மீதும், தலைவலிக்குத் தலைப்பொட்டிலும், வயிற்று வலிக்குக் கொப்புழைச் சுற்றிலும் போட்டு வருவது நாட்டு வழக்கம்.

வாய் கொப்புளிக்க உபயோகிக்கும் குடிநீர்களுடன் தேன் சேர்ப்பதுண்டு. இது கோழையை நீக்கும்.

முலைக்காம்பு விரணத்திற்கும், பால் கட்டிக்கும் தேனை வெளிப் பிரயோகமாக உபயோகிப்பதுண்டு.

வயிற்று வீக்கத்தில் அதன் மீது தேனைத் தேய்த்துவர வலி குறைந்து வீக்கம் வடியும்.

தீச்சுட்ட புண், வெந்நீர் படுவதினால் உண்டாகும் புண், விரணம் முதலியவற்றிற்குத் தேன் போட்டுவரச் சீக்கிரத்தில் ஆறும்.

அழுக்குடன் கூடிய எண்ணெய்ப் பசையுள்ள கையில் இதனைத் தேய்த்துக் கழுவ நீங்கும்.

தேனை ஒரு குறிப்பிட்ட முறையில் முகத்தில் கருங்கோடுள்ள இடத்திலும், புள்ளிகளுள்ள இடத்திலும் தடவி வெந்நீரால் கழுவினால் நல்ல வசீகரம் உண்டாகும்.

தேனும் நெய்யும் சம அளவு சேர்த்து அருந்தினால் விடமிக்கும்.

தேன் கற்கண்டு

தேனானது உறைந்து கற்கண்டாய் மாறுவதுண்டு. அக் கற்கண்டினால் கண்ணில் படருகின்ற துர்மாமிசப்படலம், சுரம், கபநோய், வாதநோய் முதலியன நீங்கும். இன்னும் அதிக பசியையும் இசைப்பாட்டிற்குரிய தொனியையும் உண்டு பண்ணும். இதனை,

"தேனிற் பிறந்த செழுங்கற்கண்டாற் கண்விழிக்கு
ளூனிற் படர்படல மோடிடுங்காண் — கானத்திற்
காகுஞ் சுரமாகு மண்டும் பசிகபங்கா
லேகுஞ் சுரமேகு மெண்".

– தே.வெ

என்ற வெண்பாவால் அறிக.

இக்கற்கண்டை நன்றாய்ப் பொடித்துச் சிறிதளவு கண்ணில் இட்டுவரக் கரைந்து, இது கண்ணில் படருகின்ற படலத்தைக் கரைக்கும்.

இதை வாயிலிட்டுச் சுவைத்தருந்தி வர, செய்யுளில் கூறப்பட்ட மற்றைய குணங்களைக் கொடுக்கும் என்ப.

HONEY

Honey is a viscous, Semi- translucent liquid produced by honey bees from the nectar of blossoms, or from the secretion of living part of plants or excretions of plant sucking insects on the living part of plants. Honey bees collect it, transform and combine with specific substances of their own, store and leave in the honey comb to ripen and mature.

Types:

மலைத்தேனி : Apis Dorsata

கொம்புத்தேனி : Apis Florea

மரப்பொந்து தேனி : Xylocopa Appendiculata

புற்றுத் தேனி : Bombus Diversus

மனைத் தேனி: Apis Indica

கொசுத் தேனி — Melipona Iridipennis

Honey Comb:

It is formed by honey bees. It consists of hexagonal cells. The total structure of the comb is divided into 3 main sections.

Lower - Contains eggs, larvae, pupae
Middle - Storing pollen
Upper - Storing honey

Bees visit approximately two millions flowers to make one pound of honey. To produce 1 pound of honey, bees travel a distance equal to 4 times around the earth.

152- 2 - 16

One bee visits 50 – 1000 flowers per day

Bees don't sleep, however they can be found resting in empty cells.

Physical Characteristic of Honey:

Colour:

It varies from clear and colourless to dark amber black depending on the type of flora from which it has been taken.

Crystallisation:

In temperate climates, most honeys crystallize to form white coloured and monohydrate glucose crystals. So honey turns lighter in colour.

Viscosity:

It is a high viscous fluid. Its viscosity depends on a large variety of substance and therefore varies with its composition.

Density:

1500 kg/m³ (50% denser than water)

Hygroscopicity:

It strongly absorbs water from the atmosphere.

Surface Tension:

It is the low surface tension of honey that makes it excellent humertants in consmetic products.

Chemical Composition:

Fructose	38%
Glucose	31%
Sucrose	1%
Other sugars	8.5%
Protein	0.3%
Moisture	20.6%
Minerals	0.2%
Other	0.4%

P^H: 3 – 5

Energy : 319 K cal / 100 mg.

Wound Healing Property:

The Anti-bacterial activity of honey suggests that the hygroscopic properties and low P^H of honey are anti bacterial and that the barrier honey forms on the wound surface prevents bacterial penetration and colonization. Honey has significant anti- bacterial activity against the major wound infecting species

including (METHICILLIN RESISTANT). Staphylococcus aureus. This activity is independent of water effect.

This activity results from the presence of hydrogen peroxide – an oxidizing agent released by the action of the enzyme peroxidase that is added by bees to the nectar they collect. While this compound has been found to be harmful to wounds when added as a rinse solution. Honey continuously provides a consistant anti bacterial, non toxic level that is approximately 1, 000 times lower than in rinse solutions.

பலகறை

Calpurnus verrucosus

முத்து, பவழம், சங்கு, பலகறை, கரியுப்பு ஆகிய கடல்படு திரவியம் ஐந்தினுள் ஒன்றாகிய இது கவடி, சோகி, வராடி, பரல், வட்டி, வெள்வரி என்று வேறு பெயர்களினால் வழங்கப்படும். இதனை,

"மண்ணிய கவடி சோகி வராடியே பலகறைப்பேர்

சோகி பரல் வட்டி பலகறை வெள்வரி

யாய் கவடி யோடல் கென்றான்".

என்ற அடிகளால் உணரலாம்.

இது சராசரம் எனவும் நூற்களில் பேசப்படும். உள்ளே அடங்கியுள்ள உயிர் வசிக்கும் வரையில் சரமாகவும், நசித்தபின்பு அசரமாகவும் ஆவதால் சராசரம் எனப்படுகிறது.

வராடி எனும் இவ்வகைச் சோழிகள் ஒருவாறு சிறு பசுமை கலந்த வெண்நிறத்திலும், முன்புறத்தில் கிரந்தி போன்ற பிதுக்கமுள்ளது. உருவத்தில் நீண்டும் உருண்டுமிருப்பது.

இதில் 48 கிராம் (1 ½ நிட்கம்) எடையுள்ள சோழியே மருந்து செய்முறைக்கு உத்தமமானது.

32 கிராம் (1 நிட்கம்) எடையுள்ள வராடி மத்திமம் என்றும்,

24 கிராம் (3/4 நிட்கம்) அதற்குக் குறைவான எடையுள்ளதுமாகிய பலகறை மருந்து செய்ய ஏற்றது என்று இரச ரத்தின சமுச்சயம் எனும் நூலில் குறிக்கப்பட்டுள்ளது.

சித்தமருத்துவ நூற்களில் தாதுச்சரக்கு தொகுப்புகளில் குறிக்கப்படவில்லை. ஆயினும் மருத்துவ முறைகள் பல நூற்களில் காணப்படுகின்றன. சிறப்பாக தேரன் நூற்களில் பலகறையால் செய்யப்படும் மருந்து முறைகளைக் காணலாம். மருந்து முறைகட்காவது வெண் பலகறை என குறிப்பிடுகிறார். உபரசத் தொகுப்பில் பலகறை குறிப்பிடப்படவில்லை — எனினும் நத்தை குறிப்பிடப்பட்டுள்ளது. உயிரியல் துறையில் பலகறை, நத்தை முறை குடும்பத்தின் கீழ் பேசப்படுகிறது. எனவே உபரசத்தில் ஒன்றாகவும் இதைக் கொள்ளலாம். பலகறையில் ஓர் வகையான "சிப்ரியா மோனிடா" என்பது இந்தியாவில் நாணயமாக உபயோகிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. எனவே இவ்வகைப் பலகறைகளும் மருந்து முறைகட்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் தற்காலத்தில் அனைத்து வகைப் பலகறைகளும் பயன்படுத்தப்படுகிறது.

இதன் பொது குணத்தைக் கூறுமிடத்து

"சோகிபீங் கானறுக்குந் துன்மாங்கிசந்தன்னை"

என்பதில் சோகி துன்மாங்கிச வளர்ச்சியை நீக்கும்.

"மந்தந்தாகங் கிரகணி மாவிடச் சுரங்கண்ணோய்
தொந்தம் பரிநாமச் சூலைகப — மிந்த
வுலகறையைக் காலொடி வையோடு நரைத்த
பலகரையைக் காணிணயம் பார்".

– ப.கு.சி

மந்தம், தாகம், கிரகணி, விடச்சுரம், கண்ணோய், சூலை, வாத ரோகங்கள் பலகறையினால் தீரும்.

சுவை — கைப்பு

செய்கை — தாது வெப்பகற்றி, கோழையகற்றி, வெப்பகற்றி வெளிப் பிரயோகத்தில் தடிப்புண்டாக்கிச் செய்கை உடையது.

சுத்தி முறைகள்

ஒரு பலம் 35 கிராம் பலகறைப் பொடிக்கு (10 பலம்) தமரத்தம் பழச்சாற்றைக் காலையில் விட்டு மாலை வரை வெயிலில் வைத்து எடுத்து மறுநாள் காலையிலும் புதிதாக மேற்படி சாற்றை விட்டு வெயிலில் வைக்கவும். இவ்வாறு 15 நாட்கள் செய்து எடுக்க பலகறை சுத்தி ஆகும்.

பலகறையை எலுமிச்சம் பழச்சாற்றிலேனும் அரிசிக் கஞ்சியிலேனும் ஊறவைத்தெடுக்க சுத்தியாகும்.

பலகறையை நெருப்பனலில் சுட்டு எடுக்க சுத்தியாகும்.

பலகறையை நொறுக்கி பாத்திரத்தில் போட்டு தமரத்தங்காய்ச்சாறு அல்லது பழச்சாறு அல்லது புளிப்பு மாதுளைச்சாறு விட்டு வெயிலில் சாறு சுண்டும் வரை வைத்தெடுக்க சுத்தியாகும்.

பலகறைப் பற்பம்

“பண்ணவே பலகறையாம் பற்பங் கேளு
பாலகனே பலகறையை நிம்பப்பழத்தில்
தன்னவே ஊறவைத்து ஐந்தா னாளில்
தானெடுத்துப் புடமதுவே போட்ட பின்பு
நின்னவே பழச்சாற்றி லாட்டி யப்பா
தீர்க்கமுடன் புடம் போட்டு எடுத்து மேதான்
நண்ணவே ஆவின்பால் விட்டே யாட்டி
நன்மைபெற புடம்போட்டு எடுத்து வையே”

– *யா.வை.வா.கு*

“கள்ளியின் சுதையினால் கவடியுமடலையாம்”

பலகறையைச் சுத்தித்துக் கள்ளிப்பால் விட்டு நன்றாக அரைத்து வில்லை தட்டி காயவைத்து,பின் காய்ந்த வில்லைக்குக் குப்பைமேனியிலையை அரைத்துக் கவசம் செய்து ஓட்டில் வைத்து மூடி சீலை செய்து 15 எருவில் புடமிட பற்பமாகும்.

தேன், நெய், வெண்ணெய் இவை ஏதாவது ஒன்றில் ஒன்று முதல் மூன்று குன்றியளவு வரை கொடுக்க மேகவெட்டை நீர்ச்சுருக்கு, உட்சூடு தீரும்.

பலகறையை அகலிலிட்டு மூழ்கும் அளவு காடி விட்டு மேல் அகல்மூடி சீலை செய்து 50 வறட்டியில் புடமிட பற்பமாகும். இதனை (இரண்டு குன்றியறவு) 260மிகி, நெய், வெண்ணெய், சர்க்கரையில் கொடுக்க ரத்தபித்தம், மதுமேகம் தீரும்.

6 கிராம் எடை நிற்கும்படியானதும் முதுகில் மஞ்சள் நிறமுடையதுமான சோழி என்னும் பலகறை (5 பலம்) 175 கி. நிறுத்தெடுத்து ஒரு பீங்கானில் போட்டு மூழ்க எலுமிச்சம் பழச்சாறு விட்டு மறுநாள் எடுத்து, பின்னும் எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்றாகக் கல்வத்திலிட்டு அரைத்து வில்லை தட்டி உலர்த்தி ஒரு ஓட்டிலிட்டு மேலகல் மூடி சீலை மண் செய்துலர்த்தி 30 வறட்டியில் புடமிட பற்பமாகும்.

– **அ.போ.வை**

“பரவையிலை யிடையலகு கவடியென் மருவுபெயர்
பலகறையின் மகிமையென — வெளிதாமோ
பரிவுபெறு பிடகரிமு மயிர்தெனுமோ ரவழ்தமது
படிமனித ரமரரென — வருநீதி
ரியதது செயுமுறைமை யினிதுமொழி குவதெளிய
தலவதனி னொருநிறை — முடிபானை

யதனிலுடு பிரமியிலை யகைநிறைய மிசையிலிட
அடுதயில மிழியுமது — தனையே கேள்"
ஷபெரிய பலகறையை யொரு தொடியளவி கழுவியெடு
பிறகுதயி லமுமளவு — சரியே வார்
பிரியமிகு மகலிலதை யுலரவிரு தினமிரண்டு
ரிதோர்கல மிசையிலமை யிடுசீலை
யுரியரவி தனிலுலர விடுபினிடு புடமைய
புடையதனை யெடுவெந்து பொடி யாமே
வுணுமுறைமை மதுகிருத மறகலவின் மிளகளவு
வுபுசமெரி கயமசதி — குணமாமே"

– தே.சே

பிரமியிலை ஒரு பானையில் இட்டு பூப்புடத்தைலம் இறக்கிக் கொள்ளவும். பின்னர் ஓர் அகலில் சுத்தம் செய்த பலகறை ஒரு பலம் (35 கிராம்) மேற்படி தைலம் 35 கிராம் இட்டு நிரப்பி 2 நாட்கள் வெயிலில் வைக்கவும். பிறகு மற்றொரு அகலில் மூடி சீலை மண் செய்து வெயிலில் உலர்த்திப் புடம் போட வெண்மையான பற்பம் ஆகும்.

இதனை மிளகளவு தேன், நெய் ஏதாவது ஒன்றில் கொடுக்க கபம், அசதி, உப்பிசம் தீரும்.

"கவடியின்பொடி விடமித்த சுர மறக்கண்டா வலி
அவிடத மாகி வாயு வுதகமதை யழிக்கும்
வெவிகுடர்குரஞ் செயுமது வெயுமுறை தேனில்
ஓவுநிம் பரத்திலடு பொடிக்கபொடி யுறவே"

– தே.சே

ஒரு பலம் பலகறைக்கு ஏழு பலம் கஞ்சாயிலையை அரைத்து 3 சீலை செய்து கசபுடம் இட பற்பமாகும்.

இப்பற்பத்தை ஒன்று முதல் இரண்டு குன்றியளவு கொடுக்க சுரம், பித்தம், என்பு சுரம், ஈளை, என்புருக்கி குணமாகும்.

பலகறையை அகலில் வைத்து ஊதி எடுக்க பற்பமாகும். இதனால் பித்தமேகம், மூத்திரக்கிரிச்சரம், நீர்க்கட்டு, நீரடைப்பு தீரும்.

பலகறையைப் பொடித்து இலந்தையிலைச் சாற்றால் 6 மணி நேரம் அரைத்து (150 பலம்) 5250 கி. வறட்டியில் புடமிடவும். இப்பற்பம் 5 பங்குடன் ரசம் 1 பங்கு சேர்த்தரைத்து பழச்சாற்றால் 4 சாமம் அரைத்து (150 பலம்) 5250 கி. வறட்டியில் புடமிடவும்.

இப்பற்பத்தை இரண்டு முதல் நான்கு குன்றியளவு தேன், நெய், வெண்ணெய் ஏதாவதொன்றில் அனுபானித்துக் கொடுக்க சுரம், பிரமேகம், மூலம், வயிற்றுநோய், விக்கல், இருமல், நிணக்கழிச்சல் நீங்கும்.

பலகறை (5 வராகன்) 21 கி. எடுத்துத் தூள் செய்து அத்துடன் துத்தம், காந்தம், வெங்காரம், கந்தகம், நிமிளை 2 வராகன் எடுத்து சூரணித்து 2 மணி நேரம் அரைத்துப் பின் பழச்சாறு விட்டு 4 சாமம் அரைத்து அகலிலிட்டு மேலகல் கொண்டு மூடிசீலை செய்து அகலின் எடைக்கு 10 மடங்கும் வறட்டியில் புடமிட்டெடுக்க பற்பமாகும்.

இதனை (2 முதல் 4 குன்றியளவு) 260 — 520 மிகி. தேன் அல்லது நெய்யில் கொடுக்க குன்மம் குணமாகும். சாதிக்காய், தேனுடன் இதனைக் கொடுக்க கிராணி தீரும்.

"கவடித் திருநீறு காணவழை வேலி
குவடித் திருநீரார் கண்டங் — கவடி
பலகறையா மொன்றே பலகறையா மெக்குப்
பலகறையா மேதுணிந்துபார்"

– தே.ய.வே.

ஒரு பலம் சுத்தி செய்த பலகறைக்கு கீழ்கண்ட சாறுகளை முறைப்படி விட்டு அரைத்து உலர்த்திப் புடமிட பற்பமாகும்.

சாறுவகைகள்	அளவு	அரைப்பு நாள்	வில்லை உலர்த்தும் நாள	கவசம் உலர்த்தும் நாள்	புடம் வரட்டி
சுரபுன்னை சமூலச்சாறு	4	6	5	1	36
சித்திர மூல சமூலச்சாறு	4	5	4	1	30
கல்லால் சமூலச்சாறு	4	4	3	1	24
காட்டுமல்லிகை சமூலச்சாறு	3	3	2	1	18
நீலோற்பல சமூலச்சாறு	2	2	1	1	12
சந்தனக் குழம்பு தெளிநீர்	1	1	1	1	6

அளவும் அனுபானமும்

"சூரணமன் சோகிக்கை சோபையெரி சத்திகுன்மஞ்
சூரமைமன் சோகிவரை சோபிவலி — சூரமைமன்
கீரையைய மோர்நெய் கிலாளமளை காடி வெந்நீர்
கீரையைய மாரிபுன் மகிழ்"

– தே.ய.வே.

கடலையின் ஐந்து கூறுகளில் ஒன்று உத்தமம், இரண்டு மத்திமம், மூன்று அதமம், நான்கு அதமாதமம், ஐந்து அனந்தமாகும்.

துணை மருந்துகள் : தீரும் நோய்கள்

பால்	— பாண்டு
பன்னீர்	— மேக உஷ்ண நோய்
வெண்ணெய்	— வாந்தி
பசுமோர்	— வயிற்றுவலி
பசுநெய்	— மகாமூர்ச்சை
குளிர்ந்த நீர்	— நளிர்
தயிர்	— சந்நி
புளித்த காடி	— பிடிப்பு
வெந்நீர்	— சோகை
சிறுகீரை ரசம்	— பக்கசூலை
கற்றாழை ரசம்	— வீங்கு மாந்தம்
தண்ணீர்விட்டான் கிழங்கு சாறு	— வாத நோய்கள்
கள்	— கப நோய்கள்
வெள்ளை சர்க்கரை	— பித்த நோய்கள்
மகிழம்பூ ரசம்	— வாத வியாதி

புற நடை

கடிக்குக் கன்மாய்நரர் கோகாரானிருளி
கடிக்ககன் மாபுனெல்வேய் கைகால் — கடிக்குக்கள்
முட்டையர்வாள் கல்கதை மோதல்கிளிகோழிபுறா
முட்டையரி கரகமன்றின் மொய்

– **தே.ய.வே.**

முள் தைத்த காயம், பனைமட்டை கருக்காலறுபட்ட காயம், கற்களாலடிபட்ட காயம், கடியாதிகளாலுண்டன காயம், கைக்குத்து இவற்றாலுண்டான காயம் இவைகட்கு, கிளியின் முட்டைக்கரு, கோழி முட்டைக்கரு, புறாமுட்டைக்கரு,

தவளை முட்டைக்கரு, காக்கை முட்டைக்கரு, அன்றில் முட்டைக்கரு என்னும் இவற்றில் மேற்படி பற்பத்தை இழைத்து தடவ காயங்கள் ஆறும். காயம் படாத புண்களுக்கு ஆமை முட்டைக்கருவில் இழைத்து தடவ தீரும்.

சீவ வெறி நஞ்சிற்கு பலகறைப் பற்ப ஆட்சி

நாய்நரிமா னிடர்பசு காரானிருளி
    வெறியிரண்டி னடையி யற்கை
யாய் செயற்கை வழிகுணத்தினாலறிந்திட்
    டதற்கமைய வநுகூலித்தே
நீயுளமா கவடி வெண்மையனுபான
    படியளித்து நிலைக்க செய்தே
மாய்வுறுதே கத்தைமகி தலத்திருத்தி
    யாயு ண்மறை வன்மையு ள்ளோம்

– *மா. செ.*

என்ற பாடலில் இருந்து செயற்கையாகவும், இயற்கையாகவும், வெறிபிடித்த நாய், நரி, மனிதர், பசு, எருமை, பன்றி இவைகளினால் உண்டாகும்

நஞ்சிற்கு பலகறை பற்பத்தை, தக்க துணை மருந்துடன் அளித்துத் தேகத்தை நிலைக்க செய்யலாம் என்று அறியலாம்.

நஞ்சுக்கடிகள்	அனுபானம்	உணவு
செயற்கை வெறி நாய் நஞ்சு	கல்லால் சாறு	கொள்ளுக்கஞ்சி
இயற்கை வெறி நாய் நஞ்சு	நிலப்பனைச்சாறு	காராமணிபருப்புக் கஞ்சி
செயற்கை வெறி நரி நஞ்சு	கீழா நெல்லிச்சாறு	சிறுபயற்றுக் கஞ்சி
இயற்கை வெறி நரி நஞ்சு	மூங்கில் சாறு	துவரம்பருப்பு கஞ்சி
செயற்கை வெறி பசு நஞ்சு	நாயுருவிச் சாறு	வரகரிசி கஞ்சி
இயற்கை வெறி பசு நஞ்சு	வெற்றிலைச் சாறு	சாமையரிசி கஞ்சி

இயற்கை வெறி நரி நஞ்சு	மூங்கில் சாறு	துவரம்பருப்பு கஞ்சி
செயற்கை வெறி பசு நஞ்சு	நாயுருவிச் சாறு	வரகரிசி கஞ்சி
இயற்கை வெறி பசு நஞ்சு	வெற்றிலைச் சாறு	சாமையரிசி கஞ்சி
செயற்கை வெறி எருமை நஞ்சு	வன்னியிலைச்சாறு	புல்லரிசி கஞ்சி
இயற்கை வெறி எருமை நஞ்சு	கோரைச்சாறு	தினையரிசி கஞ்சி
செயற்கை வெறி பன்றி நஞ்சு	பாகலிலைச் சாறு	மூங்கிலரிசிக் கஞ்சி
இயற்கை வெறி பன்றி நஞ்சு	பேய்ப்புடல் சாறு	கோதுமை அரிசி கஞ்சி
செயற்கை வெறி மனிதர் நஞ்சு	நரிப்பயற்றங்கொடி சாறு	அவரைப்பருப்புக் கஞ்சி
இயற்கை வெறி மனிதர் நஞ்சு	செருப்படைச்சாறு	உளுந்து கஞ்சி

புறநடை

"பையரவைக் கேட்குமுனர் பட்சிமனைக் கண்டுமறை
மையரவைப் போல பறக்குமே — பையரவை
தேங்காய் பாலூறு தினவுசெரி மேகமடி
தேங்காய் பாலூறு களிதின்"

– யமக வெண்பா

பலகறைப் பற்பமிருக்கும் பையின் சத்தத்தை கேட்பதற்கு முன்பே கருடனைக் கண்டு மறைகின்ற படத்தையுடைய பாம்பைப் போல் மெள்ளக் கொஞ்சமாய் சீர உஷ்ணத்தால் நேர்ந்த இடையூறுகளும், தினவுகள், சொரிகள், மேகங்கள், முதலிய ரோகங்கள் விட்டுப்போகும். இவ்வியாதிகட்கு மேற்படி மருந்தைச் சாப்பிடும் போது தேங்காய்ப்பால் ஊறிய களியைப் புசிக்க வேண்டும்.

பலகறை செந்தூரம்

ஒரு பலம் சுத்தி செய்த பலகறையை பொடித்து கீழ்ப்படி சாறுகளை விட்டரைத்து வில்லை செய்து உலர்த்தி கவசித்து புடமிட்டு எடுக்க செந்தூரமாகும்.

தீரும் நோய்கள்

சாற்றின் பெயர்	அளவு பலம்	அரைக்கும் நாள்	வில்லை உலர்த்து ம் நாள	கவசம் உலர்த்து ம் நாள்	புடம் வரட்டி
மாம்பட்டைச் சாறு	4	4	4	1	24
ஆனை வணங்கிச் சாறு	3	3	2	1	18
விடத்தேரிச் சாறு	2	2	1	1	12
செருப்படைச் சாறு	1	1	1	1	6

பலகறை சுண்ணம்

துணை மருந்துகள்	தீரும் நோய்கள்
வெள்ளுள்ளிச்சாறு	கப வேதனை
ஆத்திச்சாறு	காங்கைப்பிணி
தும்பைச்சாறு	வாதசுரம்
வெந்நீர்	பித்தசுரம்
சர்க்கரை	சந்நி
வெண்ணெய்	மூலம்
ஆனைக்காஞ்சொறி சாறு	உருத்திர வாயு
இலவணம்	மூடிக வாத சுரம்

"சோகியை நீலித்துணி சுற்றி குக்குடமிடற்று
தோகையருந்த சூதகம் போம்"

– தே.க.

பலகறைகளை நீலியிலைக் கற்கத்துள் வைத்து உலர்த்தி குக்குடபுடமிட சுண்ணமாகும்.

இது 100 முதல் 200 மி.கிராம் வரை கொடுக்க பெண்களுக்குண்டாகும் சூதகதடை, சூதக வாயு தீரும்.

பலகறையை பழச்சாற்றால் 2 சாமம் அரைத்து 10 வரட்டியில் புடமிட்டு எடுக்கவும்.

துருசுச் செந்தூரம்

பலகறைச்சுண்ணம், சுத்தித்த துருசு வகைக்கு 8.4 கிராம் இவற்றை கஞ்சாங்கோரை சாறு விட்டு 2 சாமம் அரைத்து உலர்த்தி அகலிலிட்டு மேலகல் கொண்டு மூடி உலர்த்தி 10 பங்கு வரட்டியில் புடமிடவும். இதனை 260 — 520 மி.கி தேனில் கொடுக்க பாண்டு, நீர்க்கோவை, இரைப்பிருமல், கபம் தீரும்.

பலகறை சங்கு சுண்ணம்

பலகறை, சங்கு இரண்டையும் பொடித்து மூழ்கும்வரை பழச்சாற்றில் 3 நாள் ஊறவைத்து அரைத்து உலர்த்தி புடம்போடவும். இதனைப் பழச்சாற்றில் அனுபானித்துக் கொடுக்க வயிற்றுவலி தீரும்.

குட்டங்குறை நோய்ப்புண்களுக்கு

"தேசி பழத்தின் சாறு எடுத்துத் திரும்ப கலசமதனிலிட்டு
பேசும் பலகறை தானெடுத்துப் பேணிக் கலசமதிலிட்டு
வாசமாக மூடியிட்டே மறுகால் ரவியில் வைத்ததனைக்
கூற வேண்டா மாறாநாள் கொதித்து வெந்து நீராமே
வெற்று கொதித்த நீறதனில் மிகுந்த எள்ளினெய்விட்டுச்
சிந்தை மகிழக் குழைத்தெடுத்துத் திரும்ப புண்மேலிடுவீரேல்
வந்த குட்டங்குறைநோயும் வறிய புண்ணு மாறிவிடும்
சிந்தை மிகவே சிவனானை தீருமென்றார் திருமுனியே"

– கு.தா.சி

எலுமிச்சம் பழச்சாற்றில் பலகறையைப் போட்டு ஆறு நாட்கள் வெய்யிலில் வைக்க வெந்து சாம்பலாகும். அச்சாம்பலில் எள்நெய் விட்டு குழைத்து போட்டு வர குட்டம், குறைநோய், அசாத்திய புண்கள் இவை ஆறிவிடும்.

பலகறை சேரும் பிற மருந்துகள்

நவநீத பற்பம்

பவளம், முத்து, பலகறை, சங்கு, கல்மதம், சிலாசத்து, கந்தகம், இலிங்கம், வெள்வங்கம் இவற்றை வகைக்கு 5.1 கிராம் எடுத்து எருமைப் பால்விட்டு 4 சாமம் அரைத்து (100 பலம்) வரட்டியில் புடமிட்டு எடுக்கவும். இதனை (1 முதல் 2 குன்றியளவு) கொடுக்க மதுமேகம், நீரடைப்பு, சதையடைப்பு, கல்லடைப்பு உதிரமேகம் தீரும்.

இராஜ மிருகாங்கம்

இரச பற்பம் 3 பலம், தங்க பற்பம்,வெள்ளிப் பற்பம், தாமிரப் பற்பம், முத்துப் பற்பம், கந்தகம், தாளகம் வகைக்கு ஒரு பலம் கலந்து அரைத்து அவற்றை மஞ்சள் பலகறையில் நிரப்பி வெங்காரம் (ஒரு பலத்தை) 35 கி, வெள்ளாட்டுப் பாலில் அரைத்துப் பலகறை வாயில் தடவி காய வைக்கவும். ஒரு பானையில் 4 விரற்கடை உப்பும் அதன் மேற் பலகறையை வைத்து மீண்டும் இதுபோல் மூடி சீலை செய்து கஜபுடம் இடவும். இதனை (அரை பண எடை) 244 மி.கி திரிகடுகு சூரணத்தில் தர சகல ஷயங்களும் தீரும்.

மேக ராஜாங்க பற்பம்

பலகறை, கல்நார், கல்மதம், சிலாசத்து, காந்தம் வகைக்கு 17.5 கிராம் எடுத்துப் பொடித்துக் கொள்ள வேண்டும். வெங்காரமும், வெடியுப்பும் சமஎடை பொடித்து வறுத்துப்

152- 2 - 17

பீங்கானிலிட்டு பனியில் வைத்தெடுத்த செயநீரால் 2 சாமம் அரைத்து 20 வரட்டியில் புடமிட பற்பமாகும். இதனை நெய், வெண்ணெயில் 200 மி.கி. — 500 மி.கி. தர நீரெரிவு, வெள்ளை, நீரடைப்பு, மேகசுரம் தீரும்.

இராஜ மாத்திரை

பலகறைப் பற்பம், திரிகடுகு, நாபி, இரசம், கந்தகம், வெங்காரம் வகைக்கு 35 கிராம் எடுத்து பழச்சாற்றால் அரைத்து 2 முதல் 3 குன்றியளவு மாத்திரைகளாக்கி கொடுக்க 11 வகை கிராணிகளும் தீரும்.

வெடியுப்பாதிச் சுண்ணம்

பலகறை, வெடியுப்பு, வெங்காரம், அண்ட ஓடு, கற்பூர சிலாசத்து, சீனாக்காரம் இவற்றைப் பழச்சாற்றால் 2 சாமம் அரைத்து கற்சுண்ணக் குகையில் வைத்து சீலை செய்து 4 பங்கு வரட்டியில் புடமிடச் சுண்ணமாகும். இதனை கால் முதல் 1 வராகன் நீரைப் பெருக்கும் குடிநீர்களில் கொடுக்க கல்லடைப்பு, நீரருகல் நீங்கும்.

கண்புற வளையம்

பலகறையைப் பழச்சாற்றில் போட்டு வெய்யிலில் வைக்க கரையும், இதனுடன் கீழாநெல்லிச் சேர்த்து குழம்பு பதத்தில் எடுத்துக் கண்ணைச்சுற்றி தடவ கண்காசம், நமைச்சல், வீக்கம், வலி தீரும்.

நடுத்தரமான 8 பலகறைகளைப் பீங்கானில் போட்டு பழச்சாறு விட்டு கரையும் வரை வைத்து வடித்து நீரை குடிக்கவும். இதனால் பித்த மேகம், நீர்க்கட்டு, நீரடைப்பு நீங்கும்.

கற்பூராதி மாத்திரை, சங்காதி மாத்திரை, மகா இரத்தினாதி மாத்திரை, மகா தாம்பிராதி மாத்திரை, தாம்பிராதி மாத்திரை, குக்குடாதி மாத்திரை, செம்பிராதி மாத்திரை, கனகமாமணி, இவற்றில் பலகறை சேரும்.

பலகறையைப் புடமிட்டு எடுத்து நுணுக்கி பச்சிலை கூட்டி அரைத்து சற்று ஆமணக்கெண்ணெய் விட்டு மத்தித்து மூன்று உருண்டையாகத் திரட்டிக் கொடுக்க வயிற்றினுள் மரித்த பிள்ளை வெளியாகும்.

"பச்சைத் தேன் விட்டுப் பலகறையைத் தேய்த்தெடுத்து
இச்சையுடனே விழியிலிட்டிடிலோ — மெச்ச
படலந்திமிரந் தினவும் பரியுமிரு பொழுதில்
வடகடலிற் செல்லும் நோய் மாண்டு"

– அ.ந.வி




உரை கல்லில் பலகறையைத் தேன்விட்டு இழைத்துக் கண்ணிலிட படலம், திமிரம், தினவு இவை தீரும்.

C. Verrucosus - Calpurnus

The shell of this Species reach 10 – 40 M.M. This cowry is pure white, smoot and ovate, the base is flat and wide. It is called as umbilical Egg shell warty / little egg cowry. It is a species of sea – snail.

152- 2 - 17a

பல்

வேறு பெயர்கள்

"தந்தங் கடைக்கவர் தாள்வாய் பரக்கூடம்
அந்தம் பரவைதா ழைரு வாய் முத்தது
விந்தஞ் சுர முல்லை விளங்குமொலிக் கல்
பந்தம் பலவாம் பல்லுட நாமமே".

– ச.மு.நி.

பல்லின் பொதுப் பயன்கள்

கோகுதிரை யொட்டை குரங்குவா — வேகப்
பல்மிருகப்பல்லெலும்பும் பல்விழிநோய் தீர்க்கும்

என்பதில் பல்லும், என்பும் கண்ணோய்களை நீக்கும்.

பசு மாட்டின் பல்லினை நீர்விட்டு இழைத்து கட்டிகட்கு பூச அவை பழுத்து உடையும்.

ஒட்டகப்பல், வேலம்பிசின் சம எடை எடுத்து அரைத்து பூச தேள்கடி விடம் தீரும்.

ஷபோமென்று சொன்னது மெய்பொய்யானது வாகடர்கள்
ஆமென்றார் காமனதிமதுரம் — ஓமம்
விடாததற்கு நேரரைத்து வில்லை செய்த
படாமுகியெ யிற்றால்வெப் பம்."

– தே.வெ.

திப்பிலி, ஓமம், அதிமதுரம், மூன்றையும் ஓரளவாகக் கொண்டு மூன்றின் எடைக்கு யானைப்பல் நிறுத்து சேர்த்து அரைத்து வில்லை செய்து உபயோகிக்க உடல் வெப்பம் தீரும்

பல்லின் பயன்கள்

போகர் கருக்கடை நிகண்டு எனும் நூலில் கூறுமிடத்து அவற்றின் எலும்பும், பல்லும் கண்ணோய்கட்காகும் என கூறப்பட்டுள்ளது. இதனை

"உற்றகாற் குளம்பு சன்னியொடு பரிவலிப்புமாறும்

பற்றியவெலும்பும் பல்லும் பகர்விழிநோய்கள் மாற்றும்."

என்ற அடியால் உணரலாம்.

கரடி பல்

ரத்தினாதி மாத்திரையில் சேரும்.

நரிப்பல், நாய்ப்பல், முதலைப் பல், ஆவின் பல் முதலியவை மகா இரத்தினாதி மாத்திரையில் சேரும்.

புறவளையம்

"அரிதகியெட்டி சந்தமகில் வில்வ மரத்தோடு

முறியதோர் மதுரந்தாரமுடன் தெறுங் கரியின் பல்லும்

அரிவையர் முலைப்பால் விட்டு அரைத்த பின் கலந்து காய்ச்சித்

தெரிவிழி சுற்றிப் பூசத் திகைத்த லறியோடிபோமே"

கடுக்காய், எட்டி, சந்தனம், அகில், வில்வ மரப்பட்டை, அதிமதுரம், தேவதாரம், யானைப்பல் ஆகியவை சம அளவு எடுத்து தாய்ப்பால் விட்டு அரைத்து காய்ச்சி கண்ணினைச் சுற்றி பூச கண் புகைச்சல் தீரும்.

நயனாமிர்த மாத்திரை

குதிரைப்பல் பன்றிக் கொம்பு வெள்ளி அரப்பொடி
சமஎடை எடுத்து கையான்சாறு விட்டரைத்து
மாத்திரைகளாக உருட்டி நிழலிலுர்த்தி தாய்ப்பாலில்
இழைத்து கண்ணிலிட காசம், இரணம் தீரும்

தந்த இரத்தினாதி மாத்திரையில் மான், குதிரை, கழுதை, கரடி, புலி முதலை, கீரி, நரி, எருமை, முயல், நாய், குரங்கு, பூனை, பன்றி, யானை, பசு இவைகளின் பல் சேரும்.

பற்களின் சுத்தி முறை

பற்களை இடித்து தூள் செய்த பொடி 35 கிராமிற்கு தாய்ப்பால் 175 கிராம் வீதம் விட்டு வெயிலில் வைக்க வேண்டும். இவ்விதம் 5 நாட்கள் வைத்து பின் 2 நாள் பால் வற்றும்படி வெயிலில் வைத்து உலர்த்தி பின் கழுவி எடுக்க சுத்தியாகும்.

நீர் விட்டு நன்கு கொதிக்க வைத்து பின் கழுவி எடுக்க சுத்தியாகும்.

பல் பற்பம் செய்முறை

பல்வகை மிருகங்களின் பற்கள் பற்பம் செய்ய உதவும்

ஒரு பலம் (35 கிராம்) சுத்தி செய்த பல்லின் பொடிக்குக் கீழ்க் காணும் பட்டியலின் முறைப்படி, தூதுவளைச் சமூலச்சாறுவிட்டு அரைத்து வில்லை செய்துஉலர்த்திச் சில்லிட்டுப் புடமிடப் பற்பமாகும்.

சாற்றின் பெயர்	சாற்றின் அளவு	அரைக்கும் நாள்	வில்லை உலர்த்தும் நாள்	கவசம் உலர்த்தும் நாள்	புடம் வரட்டி
தூதுவளைச் சமூலச்சாறு	4	4	3	1	40
தூதுவளைச் சமூலச்சாறு	4	4	3	1	35
தூதுவளைச் சமூலச்சாறு	4	4	3	1	30
தூதுவளைச் சமூலச்சாறு	4	4	3	1	25

அளவு

முழுக்கடலை அளவு உத்தமம், முக்கால் கடலை அளவு மத்திமம், அரைக்கடலை அளவு அதமம், கால் கடலை அளவு அதமாதமம் ஆகும்.

அனுபானம் - தீரும் நோய்கள்

1. ஆண்கரடிப் பல் பற்பம் — மகோதரம்
2. பெண்கரடிப் பல் பற்பம் — சன்னி
3. ஆண் செம்மறியாட்டுப்பல் பற்பம் — சேத்தும ரோகம்
4. பெண் செம்மறியாட்டுப் பல் பற்பம் — பெருவியாதி
5. ஆண் யானைப்பல் பற்பம் — சுரவிடம்;
6. பெண் யானைப் பல் பற்பம் — வாதாதிக்க ரோகம்
7. இடபத்தின் பல்பற்பம் — காசம்
8. பசுவின் பல் பற்பம் — பித்த நோய்
9. எருமைகிடா பல்பற்பம் — பிரமை
10. எருமை பல் பற்பம் — மேகரோகம்
11. ஆண் ஒட்டகம் பல் பற்பம் — பீனிசம்
12. பெண் ஒட்டகம் பல் பற்பம் — பிடிப்பு
13. ஆண் குதிரை பல் பற்பம் — அதிசாரம்
14. பெண் குதிரை பல் பற்பம் — நீரிழிவு
15. ஆண் பன்றி பல் பற்பம் — குட்டம்
16. பெண் பன்றி பல் பற்பம் — இருமல்

பன்றி முள் (முள்ளம் பன்றி)

PORCUPINE

Erethizon dorsaum

வேறு பெயர்

"ஏனத்தின் முள்ளு யெழு மூன்று வணத்தி
கானகத்தில் சிந்துங்கடிய முட்பாணமாம்
ஊனத்தின் முள்ளு வுதறும் வராகிவேல்
மேனத்துப் பண்ணி விளங்கிய முட்பேரே"

– ச.மு.நி.

வேறு பெயர்கள்

எய், ஏனத்தின் முள், முட்பாணம், ஊனத்தின் முள், வராகிவேல், ஏனத்துப் பண்ணி பன்றி வகைகளுள் முள்ளம்பன்றி, காட்டுப்பன்றி, ஊர்ப்பன்றி சொல்லப்பட்டுள்ளது. இதில் முள்ளம்பன்றியும், காட்டுப்பன்றியும், மருந்திற்கும் உணவிற்கும் ஆகும். ஊர்ப்பன்றி மாமிசம் பல நோய்களை உண்டு பண்ணும்.

"காட்டுப் பன்றிக் குணமும் காயமெல்லாம் முள்ளை
நீட்டுப் பன்றிக் குணமு நேரென்றாய்க் காட்டுகினு
மிப்பன்றிக் கங்க மிறுகுவதா லிப்பன்றிக்
கெப்பன்றியு நிகரோகவெண்"

என பதார்த்த குண சிந்தாமணியில்

முள்ளம் பன்றியின் குணத்தை குறிப்பிடுங்கால் முள்ளம் பன்றியின் இறைச்சி, காட்டுப் பன்றியின் இறைச்சியை ஒத்த குணமுடையதாயிருப்பினும் அதிக வன்மையை கொடுக்க கூடியதாகையால் முள்ளம்பன்றியே சிறந்தது எனக் கூறப்படுகிறது.

இம்முள்ளம் பன்றியின் இறைச்சி, முள், நெய் முதலியவை மருத்துவத்தில் பயன்படும். பன்றிமுள் உபரசத்தில் ஒன்றாக கொள்ளப்படுகிறது.

பன்றி உதிர்த்து விடும் முள்ளையே பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வகை பன்றிகள் எல்லா காடுகளிலும் வாழ்ந்து கொண்டிருப்பது. பன்றி முள் அநேக கப நோய்களில் பயன்படுத்தப்படுகிறது.

"ஏனத்தில் முள்பன்றிமுள் சுட்டுத் திப்பிலி
தேனத்தில் கூட்டி சிறுகாலை தின் பீரா
லூனற்றுப் பாயுமிரும லொழிந்திடு
மானுற்ற கையாள் மருந்திதுவே காண்"

– ***தேரையர் வைத்தியம்***

முள்ளம் பன்றி முள்ளைச் சுட்டுக் கருக்கி அத்துடன் திப்பிலி கூட்டி காலை மட்டும் ஒரு வேளை கொடுக்க அதீத இருமல் தீரும்.

முள்ளம் பன்றி முள்ளை சுட்டு எரித்து நெய், தேன், கலந்து கொடுக்க சுவாச காசம் தீரும்.

"எய்யின்முருந்து மிலவணமுங் காமனுநேர்
மெய்யினிரதத்ததை விட்டரைத்துச் — செய்குளிகை
மோரிலுணப் பாண்டுவறு மூத்திரக் கிரிச்சியிள
நீரிலுணப் போம் பொசிப்பு நோய்"

– ***தே.வெ***

முள்ளம் பன்றி முள்ளின் அடிப்பகுதியுடன், உப்பு, திப்பிலி, சமமாகக் கூட்டி மேனிச்சாறு விட்டு அரைத்து குளிகையாக உலர்த்தி மோரிலுண்ண பாண்டுவும், இளநீரிலுண்ண மூத்திர கிரிச்சரமும், அசீரணநோயும் தீரும்.

முள்ளம்பன்றி நெய்யின் பயன்

"வாளியைப் போலாகுநோய் மாவினத்தின் மேலேநீ
நாளு மதனா னயமுண்டாம் — கேளிதனை
மெய் நடுங்கப் பண்ணுநரர்மெய்யிற் குடியிருக்கும்
எய்நிணத்தை நெய்யாக்கி நெய்"

– தே.வெ.

கண்டார் மெய்யை நடுங்கச் செய்கின்ற முட்களமைந்த முள்ளம்பன்றியின் நிண நெய்யை ஆறாத விரண நோய்களை நீக்க பயன்படுத்த வேண்டும் என்பதாகும்.

பன்றிக் கொம்பு

"வராகத்தின் தந்தம் மலைவாசிக் கொம்புதான்
நிராகமிழுகம் நேர்முறு தந்தமாம்
தராகத் தரணிதான் கிளைக் கொம்புதான்
பராகத்தின் சேவகன் பார் பண்ணிக்கொம்பே"

– ச.மு.நி

காடுமலைகளில் வாழும் பன்றிகளின் கடைவாய்ப் புறம் தோன்றும் தந்தம் போல் வளரும் பல்லே கொம்பு என்பதாம்.

இது வராகம், கோலம் என்றும் அழைக்கப்படும்.

பன்றிகளில் காட்டுப்பன்றி, முள்ளம்பன்றி, ஊர்ப்பன்றி என 3 வகை இருப்பினும் மருத்துவத்திற்கு பயன்படுவது காட்டுப் பன்றியும், முள்ளம் பன்றியுமே ஆகும்.

கடைவாயில் தந்தம் முளைக்கும் அமைப்பு காட்டுப் பன்றிகளுக்கு மட்டுமே உரியது. இப்பன்றிகளின் மாமிசம், இரத்தம், பல், பித்து, கொம்புகள், நெய் ஆகியவை மருத்துவத்தில் இடம் பெறும்.

காட்டுப்பன்றி இறைச்சியின் குணம்

ஏறிய வாதம் போகு மெழுப்பிடுங் காச நோய்கள்
வீறிடும் விழி நோய் சீதம் விஷக்கடி கிரந்தியுண்டாங்
கூறிடு மூலங்கீலங் குதங்குடல் வாத நாசம்
மரிடு காட்டுப் பன்றி மாங்கிசத் தனையுண் பார்க்கே

– *ப.கு.சி.*

அதிகரித்த வாதம், மூலம், சரும நோய், குத நோய், குடல் வாதம் தீரும்.

விழி நோய், விடக்கடி, கிரந்தி உண்டாகும் என்பதாம்.

மூக்கிரட்டை முன்னை முசுட்டை தவசியிலை
காக்கிரட்டை யெய் கோல நாகணவா — யாக்குகறி
நான்கு முத லுத்தம்மா நாடிலது பத்தியமாம்
ஊன் கருதிலிரண்டு மமையும்

– *தே.வெ*

என்பதில் பத்தியத்திற்காகும் மாமிசம் வகையில் முள்ளம்பன்றி, காட்டுப்பன்றி மாமிசமே உத்தமம் என்பதாம்.

காட்டுப் பன்றியின் மருத்துவ பயன்

நந்தாதி கிருதம்

காட்டுபன்றி மாமிசம், வெள்ளாட்டு மாமிசம், நத்தை மாமிசம், சிப்பி மாமிசம் ஆகியவை சம எடை எடுத்து (16 படி) நீர்விட்டு (2 படியாக) வற்ற வைத்து எடுத்துக் கொள்ளவேண்டும்.

மேற்படி மாமிசத்தின் நீர் — 2 படி, பசுநெய் — 2 படி, முத்தக்காசு, நன்னாரி, விலாமிச்சு, குறுந்தொட்டிவேர்,

கொழுஞ்சிவேர், கொத்தான் வேர் சம எடை எடுத்து ஒன்றிரண்டாக இடித்து (8 படி) நீர் விட்டு ஒரு பங்காகக் குறுக்கி கொள்ளவேண்டும்.

திரிகடுகு, கோட்டம், அதிமதுரம், சாதி ஐந்து, அதிவிடயம், சிறுநாகப்பூ, செண்பகமொக்கு, திரிபத்திரி, வாய்விளங்கம், முந்திரி, பேரிச்சு, அதிவிடயம், ஓமம், கற்பூரம் ஆகியவை வகைக்கு 5 கிராம் எடுத்து அரைத்து அனைத்தையும் ஒன்று கலந்து காய்ச்சி வடித்து கொள்ள வேண்டும்.

அளவு: *2 — 5 கிராம்*

தீரும் நோய்கள்: *மூலம், கிரந்தி, அதிசாரம்.*

சன்னி நோய்க்கு வழங்கும் சுவச்சந்த மாத்திரை அரைக்கவும், சரக்குகளைப் பாவனை செய்யவும் பன்றி பித்து உதவும்.

பரராச சேகரத்தில் சுரம்,சன்னிக்கு என கூறப்பட்ட பிராண சஞ்சீவி மாத்திரையில் பன்றி கொம்பு சேரும்.

"— — — — — — — — மிளகு வசம்பு சுக்குள்ளி

சந்தங்கோட்ட மெருக்கலம்வேர் சாரம் பன்றிக்கொம்புடனே

முந்தப் புகைக்கச் சன்னியெலா முறையிட்டோடுங் கண்டாயே"

மிளகு, வசம்பு, சுக்கு, பூண்டு, சந்தனம், கோட்டம், எருக்கன் வேர், நவாச்சாரம், பன்றிக்கொம்பு ஆகியவை வகைக்கு சம எடையெடுத்து புகைக்க சன்னி தீரும்.

வரகாதி மாத்திரை

"ஓங்குந்திப்பிலி கொந்தாழை ஒளிசேர் வெள்ளி லோத்திரமும்

தாங்கும் பீத ரோகிணியும் பன்றிக் கொம்பும் சமன் கூட்டிப்

பாங்கும் படியே தானிழைத்துப் பரிசாவரையின் சாற்றிலிட

நீங்குங் காசம் வெள்ளெழுத்து நெடுமாலறிய நிச்சயமே"

– அ.ந.வி

அரிசித்திப்பிலி, சமுத்தராப்பழம், வெள்ளிலோத்திரம், பீதரோகிணி. பன்றிக் கொம்பு சமஎடை எடுத்து நீர்விட்டு அரைத்து மாத்திரையாக்கி உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும். கோழியவரைச் சாற்றில் இழைத்துக் கண்ணிலிட வெள்ளெழுத்து, காசம் தீரும்.

நயனாமிர்த மாத்திரை

"பந்திப்பரி தந்தத்தோடு பருபன்றியின் கோடும்

பசு வெள்ளியின் பொடியும் மிகு பரிவாகவே கொண்டு

விந்தைப் பட சரியாக வராகனெடை தன்னை

வேண்டிக் கையான்சாற்றிலினி தரைத்தே பயிறிழைத்து

முந்தத் திரிபொழு திட்டிடில் முளைப் பூவுடவிரணம்

மீளும் பதினென் சாகமும் முறிந்தொடுமே பறந்து

தந்திக் குருவருள் பெற்றிடு நயனாமிர்தக் கயிற்றைத்

தரைமீதினில் பொதிமாமலை முனியோதினார் நலமே"

– ப.ரா.சே

குதிரைப்பல், பன்றிக் கொம்பு, வெள்ளி அரப்பொடி, சமஎடை எடுத்து கையான் தகரைச் சாறுவிட்டு

அரைத்து மாத்திரையாக உருட்டி நிழலில் உலர்த்தி உரிய அனுபானத்தில் இழைத்துக் கண்ணிலிட மூன்று பொழுதில் முளைப்பூ, இரணம், காசம் தீரும்.

"கோல மருப்புந்தக் கோலமுமா டப்பருப்பும்
ஏலமுங் கூட்டி யிளநீர்வார்த் — தேல
அரைத்துண்டை யாக்கி யதையரைத்து நெய்யிற்
பொருத்துமுனே கண்புகைச்சல் போம்"

– தே.வெ

பன்றிக்கொம்பும், தக்கோலமும் உளுத்தம்பருப்பும், ஏலமும் கூட்டி இளநீர் விட்டு மைபோலரைத்து உருட்டி உலர்த்தி மாத்திரையைக் கண்ணில் இட்டுவர கண் புகைச்சல் தீரும்.

"தேனிலுரைத்திட்டாற் றினவடங்கும் புண்ணகலும்
னுனி உதிரமுரக்குமே — கானமறுங்
கோலக் கனிசத்திற் கூடமதி யூறவைத்த
கோலத்தின் கானகத்தைக் கொண்டு"

– தே.வெ

பன்றியின் கால் நகத்தை அழிஞ்சில் கனிச் சாற்றில் ஒரு திங்கள் ஊறவைத்து பின் அந்நகத்தைத் தேனிலுரைத்துத் தடவி வர உடலிலுள்ள சொரி நீங்கும். அதனால் ஏற்படும் புண்ணும் தீரும். சொரிப் புண்ணாலேற்பட்ட தசைகளின் இரத்தக் கேடும் தீர்ந்து நல்ல தன்மையடையும்.

"குடச வித்தினைப் பொடித்துக் கோல வுதிரத்திற்
பட வுலர்த்தி யவ்வெருவோர் பாண்டத் — திடை மூட்டி
ஆகுமதிலது பெய் தப்புகை கொளாசனத்திற்
போகாவெண் மூலமெலாம் போம்"

– தே.வெ

குடசப்பாலை வித்தைப் பொடித்து பன்றியின் இரத்தத்தில் ஊறவைத்துலர்த்தி அத்துடன் பன்றியின் மலத்தைச் சேர்த்து ஒரு பாண்டத்திலிட்டு, எரித்து வரும் புகையை ஆசனவாயிற்படும்படி செய்ய மூலமனைத்தும் தீரும்.

பன்றியின் நெய்யின் குணம்

பன்றிக் கொழுப்பை உருக்கி எடுத்து கொள்வதே பன்றி நெய் ஆகும். இதை அக்கி, தீப் புண், குழிப்புண் இவற்றிற்கு போட தீரும்.

"பன்றிநெய் நீர்க்கடுப்பு பாயு மூலத்திரத்தங்
கன்றிய வாதக் கடுப்புமுதல் துன்றிய நோய்
அக்கிதீப் புண்ணுடனே யாறாத சுட்டுப் புண்
புக்கிடுமா சாகரத்திற் போம்".

– *ப.கு.வி.*

பன்றி நெய்யினால் நீர்ச்சுருக்கு, இரத்த மூல வாதக் கடுப்பு, தீப்புண் தீரும்.

சிலைத் தைலம்

பன்றிநெய் 700 கிராம் ஒருபாண்டத்திலிட்டு அதில் அரசு, ஓதி, வேல், நெல்லி, செம்புரா (இம்பூறல்) இவைகளின் பட்டைச்சாறு வகைக்கு (பலம் 2) 70 கிராம், புங்கம் பால் 70 கிராம் விட்டு சாதிலிங்கம், களிப்பாக்கு, காய்ச்சுக்கட்டி என்னும் கறகத்திரவியம் வகைக்கு 35 கிராம் ஆக நிறுத்துப் பொடித்து

அதிற்போட்டு மூன்று நாள் ஊறிய பின்பு நான்காவது நாள் அடுப்பில் வைத்து மெல்லென எரித்துப் பதத்தில் வடித்துக் கொண்டு பூசிவர புரைப் புண்கள் ஆறும்.

முள்ளம் பன்றி
Erethizon dorsaum



காட்டுப் பன்றி
Indian Crested Porcupine

General Characteristics:

Hystrix indica is a large nocturnal, herbivorus, spiny, rodent one porcupines are easily recognized by their hair modified more or less completely into spines. It's neck and shoulders are crowned with a crest of bristles 15- 30 cm. long. The quills on the back are very profuse. Each quill is ornamented with deep brown or black and white rings. They are extremely sharp and easily removed as they are a form of modified hair.

Merits:

Throughout its range, the Indian porcupine is hunted as a food source and used in our Siddha System of medicine. Also, its role as a herbivore may allow it to help with the spread of seeds and pollen.

பவழம்

CORAL

Corallium rubrum

உபரசங்களில் ஒன்றாகச் சொல்லப்படுகின்ற பவழமானது நவமணிகளுள் ஒன்று. இதன் பிறப்பைக் கூறுமிடத்து,

"சிவந்துமே தான் கடலினடி தன்னில் தானும்
பிறமான பவழமான கொடியே போன்று
பெரும் பிரபையுமாயிருக்குந் தானே".

– ச.மு.நி

என்பதில் கடலுக்கடியில் கொடி போல் மிக்க ஒளியுடன் வளர்ந்து காணும் பவழப் பூச்சிகளின் கூடுகளே பவழக் கொடியாகும். சித்த மருத்துவத் துறையில் பவழம் என்பது சிவந்த நற்பவழத்தை மட்டுமே குறிப்பதாகும்.

வேறு பெயர்

"வாருதிதண்டு வளர்ந்த செந்தண்டு தான்
நேருதுக் கொடியோன் நேர் பிரவாளமாந்
தாருரு வேளை சாத்திய பெண் மாலை
பாருதி நாமம் பவளத்தின் பேருமே".

– ச.மு.நூ

வாருதிதண்டு, செந்தண்டு, கொடியோன், பிரவாளம், பெண்மாலை என்பதாம்.

நற்பவளத்தை உரைக்கல்லில் உரைத்தால் மேற்புறம் உள்ள சிவந்த நிறத்தைப் போல் உள்ளேயும் காணப்பட்டால் அது உயர்தர பவழமாகும்.

152- 2 - 18

உத்தம பவழம் உருட்சியாகக் கனமாக அடி முதல் மேற்புரம் வரை சமமாக, வழுவழுப்புடன் இருக்கும்.

நிறம் கருகுதல், கரடுகள் காணல், நீர்புகுதல், மெலிந்திருத்தல், புழுவரித்தல், கறுப்பாதல், வெள்ளையாதல், முரடாய் காணல், கனமின்றி லேசாதல் ஆகிய குற்றங்கள் ஒன்பதும் பவழத்தின் தோடங்கள் ஆகும்.

பிறப்புப் பவழமன்றி வைப்பு பவழ முறைகளும் உண்டு.

பவழ வைப்பு

சங்கைப் பொடித்து சலித்த மாவு 1 பங்கிற்கு, ½ பங்கு இலிங்கம் கூட்டி விளாம்பிசினை ஊறவைத்த நீரால் அரைத்து பவழம் போல் செய்துலர்த்தி மடவை மீனின் வயிற்றைக் கீறி அதனுள் வைத்து தைத்து ஒரு பாண்டத்தில் கால் பகுதி கிளிஞ்சல் சுண்ணம் போட்டு அதன் மேல் மீனை வைத்து பின் மீண்டும் கால் பங்கு கிளிஞ்சல் சுண்ணம் போட்டு 4 படி நல்ல நீர்விட்டு அடுப்பேற்றி எரித்து நீர் முற்றிலும் சுண்டியபின் எடுத்து வெந்நீரில் கழுவி எடுத்துக்கொள்ள நற்பவளமாகும்.

பவழத்தின் பொது குணம்

“சுரதோடம் ஐயமுத்தோடசுரங் காசம்

அருசிகீடத்தாலாம் ஆலம் — பெருவிந்து

நட்டம் அதிதாகம் நாவறட்சி போ மொளியுங்

கிட்டும் பவழத்தாற் கேள்”.

– ப.கு.சி.

சுரத்திலுண்டாகும் தோடம், கபம், சன்னிபாத சுரம், இருமல், அரோசகம், விட சந்துகளினால் உண்டாகும் விடம், தாது நட்டம், அதிக தாகம், நாவறட்சி தீரும்.

பவழத்தை உடலில் அணிவதனால் சம்பத்தும் புகழும் உண்டு என்பதனை

"கடல் தன்னில் விளைகின்ற பவழந்தன்னை

மேலெங்கும் தரித்துமேதான் இருந்தால் தானும்

மிக்கான சம்பத்தும் புகழுமுண்டாம்"

என்ற போகர் அடிகளால் உணரலாம்.

பவழ சுத்தி

1. *ஒரு பங்கு பவழத்திற்கு 6 பங்கு பேரிச்சங்கள் விட்டு காலை முதல் மாலை வரை வெயிலில் வைத்து எடுக்க வேண்டும். இவ்விதம், தினமும் புதிய சாறுவிட்டு 5 நாள் செய்து பின் நீர் விட்டுக் கழுவி எடுக்க சுத்தியாம்.*
2. *பவழத்தை ஒரு நாள் பழச்சாற்றில் ஊறவைத்து நீர் விட்டுக் கழுவி எடுக்க சுத்தியாம்.*
3. *பவழத்தைச் சுத்த நீரில் ஒரு நாள் ஊறவைத்து பின் ஆவின் பாலில் ஒரு நாள் ஊறவைத்துக் கழுவி எடுக்க சுத்தியாம்.*

பவழ பற்பமுறை

முயல் எலும்பைச் சுட்ட சாம்பல் 35 கிராம் எடுத்து, கற்றாழை சாறுவிட்டரைத்து, மூசையும் மூடியும் செய்து உலர்த்திக் கொள்ளவேண்டும்.

பவழம் 35 கிராம், கிராம்பு, வீரம் வகைக்கு 5.1 கிராம் வீதம் எடுத்து அனைத்தையும் முயல் ரத்தமிட்டு ஆட்டி வில்லை செய்து உலர்த்தி மூசைக்குள் வைத்து மூடி ஏழு சீலை செய்து உலர்த்தி பன்றிப்புடமிட பற்பமாகும்.

அனுபானம்: *சீந்ததில் சர்க்கரை*

தீரும் நோய்கள்: *மேக வகை யாவும்.*

கீழா நெல்லியை அரைத்து குகை செய்துலர்த்தி அதற்குள் பவழத்தை வைத்து மூடி 7 சீலை செய்துலர்த்தி புடமிட பற்பமாகும்.

உரிய அனுபாகத்தில் கொடுக்க சுரம், சன்னி, வயிற்றிரைச்சல், பித்தம், கண்புகைச்சல், ஈளை, இருமல் தீரும்.

ஒரு பாண்டத்தில் 1 பங்கு பவழத்திற்கு 5 பங்கு புதிய தேன் விட்டு மூடி சீலை செய்து புடமிட்டெடுக்க பற்பமாகும்.

"விரைமலர்க் கொன்றையான் வேணியிலணிந்த

சொருபமா மொருமலர்ச் சுதையதனாலே

யரனது மேனியை யனையதோர் வனச்செம்

பருபிர வாளமும் பற்பம தாமே"

– தே.கா.

1 பலம் (35 கிராம்) பவழத்திற்கு எருக்கம் பால் விட்டரைத்து வில்லை செய்து உலர்த்தி வில்லையின் மேல் கொன்றைப் பூ கற்கத்தால் கவசம் செய்துலர்த்தி ஓட்டில் வைத்து ஒடு மூடிச்சீலை செய்து உலர்த்தி லகு புடமிட பற்பமாம்.

அளவு: 1—3 குன்றி அளவு

அனுபானம்: நெய், தேன், வெண்ணெய்

தீரும் நோய்கள்: ஈளை, இளைப்பு, இருமல், மேகம், நீர் எரிச்சல், உடல் வெப்பம் இவை தீரும்.

பவழ பற்பம்

பவழத்தைச் சுத்த நீரில் ஒரு நாள் ஊறவைத்து கழுவியபின், ஆவின்பாலில் ஒரு நாள் ஊற வைத்து எடுக்க சுத்தியாம்.

தேள் கொடுக்குக் காயை இடித்து, ஒரு புது ஓட்டில் பரப்பி, அதில் சுத்தித்த பவழத்தை வைத்து, மேற்புறம் மீண்டும் இடித்த தேள் கொடுக்குக்காய் பரப்பி, மேல் மூடி சீலை செய்து, கசபுடமிட பற்பமாகும்.

இதற்கு பசும்பால்விட்டு ஒரு சாமம் வெயிலில் வைத்து பின், ஆலம்பழுப்பில் மேற்படி பற்பத்தை வைத்துக் கட்டி மூன்று நாட்கள் நெற்புடம் வைத்து எடுக்க உயர்தர பற்பம் ஆகும்.

அளவு: பணவெடை (488 மி.கி)

அனுமானம்: பசும்பால், நெய், தேன், தைலம், கற்கம், லேகியங்கள்

தீரும் நோய்கள்: ஈளை, காசம், மந்தாரகாசம், சுரரோகம், சொரி கரப்பான் தீரும்.

இலந்தை இலை கற்கம் அல்லது தைவேளை இலை கற்கம் இவற்றால் மூசை செய்துலர்த்தி, அதனுள் பவழத்தை வைத்து மூடி, சீலை செய்து புடமிட்டெடுத்து பற்பத்தை ஒரு பீங்கான் பாத்திரத்தில் வைத்துப் பசும்பால் விட்டு வெயிலில் வைத்து உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும். தேன், பசு நெய்யில் கொடுக்க மேகச்சூடு, இருமல், நீர்க்கடுப்பு தீரும்.

பழச்சாற்றில் சுத்தித்த பவழத்திற்கு சம எடை கற்பூர சிலாசத்து கூட்டி பிரண்டை ரசத்தால் 12 மணி நேரம் அரைத்து வில்லை செய்து காயவைத்து ஓட்டிலிட்டு ஓடு மூடி, சீலை செய்து புடமிட நீறும். புளியாரைச்சாற்றில் 6 மணி நேரம் அரைத்து, வில்லை செய்து உலர்த்தி புடமிட முழு பற்பமாகும். பணவெடை வீதம் பசு வெண்ணையில் கொள்ள என்புருக்கி, மதுமேகம், அஸ்தி மேகமும், தேனில் கொள்ள குன்மவாயு, ஊறலும் தீரும்.

*"பின்னித் திரைவருமோ பித்த முதிர்ந் தாலதற்குப்
பின்னித் திரைசேர் பிரவாளம்; — தன்னைத்
தராபதியால் நீறு செய்து தப்பாமலட்ட
பிரசத்திற் கொண்டு விடு பேண்"*

– தே.கா.

பித்தம் தலைக்கேறி முதிர்ந்ததனால், வரும் உறக்கமின்மையுடைய மிகுந்த பித்தாதிக்கத்திற்கு பூவரசம் பட்டை சாற்றால் பவழத்தை அரைத்து வில்லை செய்து உலர்த்தி புடமிட்டெடுத்த பற்பத்தை தேனில் கலந்து கொடுக்க தீரும் என்பதாம்.

தேரன் யமகவெண்பா முறை

பவழ பற்பம், அதன் பிரமாண முதலியவைகள்.

*"ஆரோ கணியருக்கை யாறஞ்சு வித்துருமை
யாரோ கணியருக்கை யாமடலை — யாரோ
கிணியருக்கை மாருசியை கார்த்திகையின் மீனேய்
கணியருக்கை யாயிருக்கக் கல்".*

– தே.ய.வெ

(இ—ள்) (ஆர் ஒ கணி அருக்கு ஐ) ஆத்தி, கொன்றை, வேங்கை, எருக்கு, (என்னும் இவற்றின்) சாற்றால்; (ஆறு அஞ்சு வித்துருமை) ஆறுநாள், ஐந்து நாள், ஆறுநாள், ஐந்து நாள் (என்னும் முறையே) பவழத்திற்கு விட்டரைத்தால் (ஆரோ கணி அருக்கை ஆம் அடலை) (உலகத்தின்) மீதேறி யிருக்கும் சூரியனைப் போல் பிரகாசிக்கும் பற்பமாம். (யாரோ கலி அருக்கு) எவர்களோ (இதன் பெருமையை) அளப்பவர்கள் அருமையாகும். (ஐ மாருசியை) (இதன் அளவு) மிளகை ஐந்து (பங்காக்கி கொள்க) (கார்த்திகை வில் மீன் நோய்) கார்த்திகை, மார்கழி, பங்குனி (என்னும்

இம்மாதங்களில் இப்பற்பம் புசிக்கிற்றுன்பமாம்; (கணி யருகு ஐ ஆயிருக்க கல்) (தா—ம்). (எ) முன்னர் சொல்லப்பட்ட முறைப்படி சுத்தி செய்த பவழப்பொடி பலம் 1—க்கு ஆத்தியிலைச்சாறு 6—பலம் விட்டு அரைப்பதற்கு முதல் நாளிரவே ஊறவைத்து, மறுநாளுதயத்திலும் மீண்டும் புதிதான மேற்படியிலைச்சாறு 6—பலம் சிறுகச்சிறுக விட்டு, அன்று பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லை தட்டிப் பனியில் ஆறவைக்க வேண்டும். இரண்டாம் நாள் உதயத்திலும் முன்சாற்றையே 6 பலம் விகிதம் சிறுகச்சிறுக விட்டு பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லை தட்டிப் பனியில் ஆறவைக்க வேண்டும். இவ்வாறே மீண்டும் 4 நாளும் பிரதி தினமும் முன் சாற்றையே, முன் விகிதம் விட்டு விட்டு, அரைத்தரைத்துப் வில்லை தட்டி பனியில் ஆறவைத்தூறவைத்து பின்பு 7—ஆம் நாள் உதயமுதல் 5—நாள் வரையில் அதை வெளிக்காட்சியாகவும் 1—நாள் கவசித்தும் வெயிலில் காய வைத்து நன்றாயுலர்ந்த பின்பு 13—ம் நாள் காலையில் 30 காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒரு நாளாறவிட்டு மறுநாளுதயத்திலெடுக்க, காற்கூறு பற்பமாகியிருக்கும்.

(பி) மறுபடியும் 15—ஆம் நாள், காற்கூறு பற்பமான பவழப்பொடி பலம் 1—க்கு சரக்கொன்றையிலைச்சாறு 5 பலம் (175கி) விகிதம் விட்டு அரைப்பதற்கு முதல் நாளிரவே ஊறவைத்து, மறுநாள் உதயத்திலும் மீண்டும் புதிதான மேற்படி கொன்றையிலைச்சாறு (5 பலத்தை), சிறுகச் சிறுக விட்டுப் பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லை செய்து பனியிலாறவைக்க வேண்டும். அடுத்த மறுநாள் உதயத்திலும் புதிதான முன் இலைச்சாறின் அளவுப்படி (5 பலம்) விகிதம் சிறுகச் சிறுக விட்டுப் பகலில் அரைத்து இரவில் வில்லை செய்து பனியில் ஆறவைக்க வேண்டும். இவ்வாறே மீண்டும் 3 நாளும் பிரதி தினமும் முன்சாற்றையே விட்டு, அரைத்து, வில்லை செய்து

4 நாள் பனியில் ஆற வைத்து, கவசித்து, வெய்யிலில் காய வைத்து, பின்பு மறுநாள் உதயத்தில் 25 காட்டு வரட்டியில் புடமிட்டு, 1 நாள் ஆற வைத்து மறுநாளெடுத்துப்பார்க்க அரைக்கூறு பற்பமாகியிருக்கும்.

(சி) பின்பு 27—ஆம் நாள், அரைக்கூறு பற்பமான மேற்படி பவழப்பொடி பலம் 1—க்கு, இரத்த வேங்கைப்பட்டைச்சாறு (பலம் 6) விகிதம் அரைப்பதற்கு முதல் நாளிரவிலேயே விட்டு ஊறவைத்து, மறுநாளுதயத்திலும் முன்பாகவே மேற்படி பட்டைச்சாறு 6—பலம் விகிதம் விட்டு முன்போலவே பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லை தட்டிப் பனியிலாறவைக்க வேண்டும். மறுநாள் உதயத்திலும் மீண்டும் புதிதான பட்டைச்சாறு (6 பலம்) விகிதம் விட்டுப் பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லை செய்துப் பனியில் ஆறவைக்க வேண்டும். இவ்விதம் மீண்டும் 4 நாட்கள், தினமும் முன் சாற்றையே முன்போலே ஊற்றி அரைத்து வில்லை செய்து பனியிலாறவைத்து 6 — நாள் அதை வெளிக்காட்சியாகவும் 1 — நாள் கவசித்தும் வெய்யிலில் காய வைத்து, அடுத்து மறுநாள் காலையில் 30 காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒரு நாளாறவைத்து, மறுநாளெடுத்துப் பார்க்க முக்காற்கூறு பற்பமாகியிருக்கும்.

(டி) இதன் பின்பு 41—ஆம் நாள், முக்காற்கூறு பற்பமான பவழப்பொடி பலம் 1—க்கு, எருக்குச் சமூலச்சாறு பலம் 5 விகிதம் விட்டு அரைப்பதற்கு முதல் நாளிரவிலேயே ஊற வைத்து, மறுநாளுதயத்திலும் முன்போலவே மேற்படி சாறு (5 பலம்) விகிதம் விட்டுப் பகல் முழுவதும் அரைத்து, இரவில் வில்லைத் தட்டிப் பனியில் ஆறவைக்க வேண்டும். மறுநாளுதயத்திலும் முன்போலவே மேற்படி சாறு பலம் 5 விகிதம் சிறுகச் சிறுக விட்டு பகல்முழுவதும் அரைத்து இரவில் வில்லை தட்டிப் பனியில் ஆறவைக்க வேண்டும். மறுநாள் உதயத்திலும் முன்போலவே மேற்படி சாறு பலம்

5 விகிதம் சிறுகச் சிறுக விட்டு பகல்முழுவதும் அரைத்து இரவில் வில்லை தட்டிப் பனியில் ஆறவைக்க வேண்டும். இவ்விதம் மீண்டும் 3 நாள் முன் சாற்றையே முன்போலே ஊற்றி அரைத்து வில்லை செய்து ஆறவைத்தாறவைத்து பின்பு 4 நாள் அதை வெளிக்காட்சியாகவும் 1 நாள் கவசித்தும், வெய்யிலில் உலர்த்தியும், அடுத்த நாள் காலையில் 25 காட்டு வரட்டியில் புடமிட்டு, ஒரு நாளாறவிட்டு, மறுநாளெடுத்துப்பார்க்க முழுக்கூறு பற்பமாயிருக்கும்.

இதை மிளகின் ஐந்து கூறில் ஒரு பங்காகப் புசிப்பது உத்தமம், மேற்படி இரண்டு பங்காக புசிப்பது மத்திமம், மேற்படி மூன்று பங்காகப் புசிப்பது அதமம், மேற்படி நான்கு பங்காகப் புசிப்பது அதமாதமம், மேற்படி ஐந்து பங்காகப் புசிப்பது துணிவு என்பதும்.

கார்த்திகை, மார்கழி, பங்குனி என்னும் இம்மாதங்களில் புசிக்கலாகாதென்பதும், மருத நிலத்திலிருந்தே அவிழ்தங்களைப் புசிக்க வேண்டுமென்பதுமேயாம்.

பவள பற்பத்தின் அனுபானமும், தீரும் நோயும்

"துப்புவெள்ளை முத்தீ துனிபனிபந் திப்புவல்லை
துப்புவெள்ளை வெண்ணெய் சுதைதயிர்மோர் — துப்புவெள்ளை
யைவனமா புன்னென்மலி யார்குளமா வில்வகுள்வே
யையவனமா புன்னைவழையாம்".

– தே.ய.வெ.

(இ—ள்). (துப்பு வெள்ளை) பவள பற்பத்திற்கு (அனுபானமாவது), (துப்பு) கயரோகம், (வெள்ளை) மேகவெள்ளை (முத்தீ) வாத பித்த சேத்தும் சுரங்கள் (துனி) கடுப்பு வாதம், (பனி) நடுக்கு வாதம், (பந்திப்பு) பிடிப்பு வாதம், (வல்லை) வல்லை முகப்பெரு வாதம் (என்னும் இவைகட்கு முறையே) (துப்பு) நெய், (வெள்ளை) பனங்கள், (வெண்ணெய்) பசுவின் வெண்ணெய், (சுதை)

பசுவின் பால், (தயிர்) பசுவின் தயிர், (மோர்) பசுவின் மோர், (ஐ) குளிர்ந்த நீர், (வனம்) துளசிச்சாறு, (மா) இளநீர், (ஆர்) சந்தனக் குழம்பு, (குளம்) வெல்லம், (மா) தேன், (வில்) வில்வியிலைச்சாறு, (வகுள்) மகிழம்பூச்சாறு, (வேய்) மூங்கிற் கிழங்குச்சாறு, (ஐ வள மா) குள நெல்லின் மா, (புன்னை) புன்னைச்சாறு, (வழை) சுர புன்னைச்சாறு, (ஆம்) வெந்நீர் (என்னும் இவைகளே) — எ—று.

பவழச் செந்தூர முறை

பவழத்திற்கு பனஞ்சாறு, பருத்திச்சாறு, ஓரிதழ்த் தாமரைச்சாறு, உத்தாமணிச்சாறு, கமுகஞ்சாறு, கடம்பின் சாறு தனித்தனியேவிட்டு அரைத்து தனித்தனியே புடமிட செந்தூரமாகும்.

துணை மருந்தும் தீரும் நோய்களும்

வெந்நீர்	—	இரத்த மூலச்சூடு
சர்க்கரை	—	பவுத்திரம்
நெய்	—	எரிச்சல்
வெங்காயச்சாறு	—	சத்தி குன்மம்
துவரையிலைச்சாறு	—	வயிற்றுவலி
மாவிலங்க பட்டைச்சாறு	—	கிராணி
தண்ணீர்	—	வாயிலைப்பு

மகாஏலாதி குளிகை, மகாவசந்தகுசுமாகர மாத்திரை, தாலாதி மாத்திரை, பஞ்சாதி மாத்திரை, பச்சை தாம்பிராதி மாத்திரை போன்ற மாத்திரை வகைகளில் பவழம் சேரும்.

பவழப் புற்று

இது கற்பவழம், குழல்பவழம் என்றும் கூறப்படும். மருத்துவ நூற்களில் இது பேசப்பட வில்லை எனினும் வழக்கில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

பவழப் பூச்சிகளின் மற்றொரு இனத்தால் (*Tubi pora Musica*) கட்டப்படுவது. கொடிப்பவழம் போல் உயரமாகவும், கிளையாகவும் தோன்றாமல் பக்க வாட்டில் வளர்ந்து

வரும் இயல்புடையது. எனவே பல சிறு குழல் போன்ற அமைப்புகள் ஒன்று சேர்ந்தாற் போல் தோற்றமுடையது. பவழத்தைப் போல் மிக்க கடினமானதன்று. எளிதில் பொடிபடக் கூடியது. பவழத்தில் காணப்படும் ரசாயனக் கூறுகளே இதிலும் அமைந்துள்ளன. பவழத்தை போல் கடலின் மிக ஆழமான பகுதியில் மட்டுமே கிடைப்பதாகும். இந்திய கடற்புறத்தில் இவை காணப்படமாட்டாது. பவழத்தைக் காட்டிலும் மிக விலை குறைந்துள்ளதால் பவழத்திற்கு பதிலாக இது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மருத்துவ முறைகள்

பவழப்புற்றை எலுமிச்சம்பழச் சாற்றில் ஒரு நாள் ஊறவைத்து, சுத்தித்து பொற்றிலைக் கையான் சாறு விட்டரைத்து, வில்லை செய்து உலர்த்தி புடமிட பற்பமாகும்.

65—130 மி.கி. வீதம் கொடுத்துவர குருதியழல் நோய் தீரும். இம்முறை இன்றும் வழக்கில் உள்ளது.

பவளம்
Coral

The corci is considered as an auspicious gem by many Indians and astrologically representing the planet mars. Like pearl, it is a delicate gem, soft and chemically reactive.



Coral Polyps

Coral is of organic origin and constitutes a Skeleton from which certain tiny organs (or) Polyps protrude. A coral "head" is formed of many individual polyps. Each polyps is about 1.5 mm. The colony of polyps function essentially a single organism by sharing nutrients via a well developed gastro vascular network, and the polyps are colnes each having the same genetic structure. Each polyp generation grows on the skeleton remains of previous generations, formatting as structure that has a shape characteristic of the species, but subject to environmental influences. The Skeleton is arborescent and its.

Height 25 cm

Thickness : 4

Anatomy

The coral polyps are multicellular organisms that feed on a variety of small organisms, from microscopic zooplankton to small fish. These polyps formed a layer of outer epithelium and inner jelly like tissue known as mesoglea.

The polyp grows by vertical extension of the basal plate forming vertical extension of the basal plate forming vertical calices which are occasionally seperated to form a new higher basal plate. Over many generations this extensions forms the large calciferous structures of corals and ultimately coral reefs.

Formation of the calciferous exoskeleton involves deposition of calcium carbonate by the polyps from calcium ions isolated from sea water. The rate of deposition, while varying greatly between species and environmental conditions.

The polys are inter connected by a complex and well developed system gastro vascular canals allowing significant sharing of nutrients and symbiotes. The soft corals, allow transport of both metabolites and cellular components.

Composition & Properties

Chiefly $CaCo3$ in the form of calcite

Presence of higher amount of organic matter may reduce SG much further

Organic matter, chiefly conch Olin is present in variable proportions.

$MgCo3$ – 3%

$FeCo3$ – 1%

Conchiolin – 2%

Moh's scale of hardness value, $H = 3.5$

It is slightly higher than that of pure calcite due to its organic matter and texure.

Colour : Red, pink rose.

பவழப்புற்று

(Coral Reef)

An animal not much larger than shydra produces a hard protective skeleton around itself. This is the little corals polyps, not much more than a half an inch long, get through the combined action of many of these polyps islands and reefs of (tremendous)





size have been constructed. Their bodies are soft and they secrete little protective cups of limestone around themselves is they bud and produces more individuals and these produce more limestone. The colony continues to grow. Due to the difference in the mode of budding they produce varied shapes of skeletol forms. These corals are limited in their vertical distributor. It is called as true or stony coral.

Coral reefs are typically massive biogenic formations of CaCo3 (limestone) that are deposited with in or around the bodies of the in habitants of the reef as skeletal material. This material gradually accumulated as debris is knitted together by the continued growth of the attached forms living in the reef.

Biology

The building blocks of coral reefs are the skeletons of generations of reef building algae, corals and other organisms that are composed CaCo3.

பாம்பு

Snake

வேறு பெயர்கள்:

புசங்கம், பணி, சர்ப்பம்.

பல வகையான பாம்புகளின் மாமிசம், கொழுப்பு, பித்து, பாம்புச் சட்டை ஆகியவை மருத்துவத்தில் பயன்படுகின்றன. அவற்றுள் சிறப்பாக நல்ல பாம்பு, மலைப்பாம்பு, பச்சைப்பாம்பு முதலியன ஆகும். சில நாடுகளில் இவை உணவாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பாம்பின் மருத்துவ குணத்தைக் கூறுமிடத்து சேத்தும நோய்களுக்கு உரியதாகக் கீழ்கண்ட பாடல் கூறும்.

"கோலமெனப் பேர் புனைந்து கோபித்துத் தன்குணமா
யால மிகவே யணுகுமே — நாலமிசை
முந்து கப வாத பித்த மூன்றிற்கு மூன்றாகிக்
கந்தியென வோது புசங்கம்"

– தே.வெ

புசங்கம் — பாம்பு, சுத்தி — கமுகு,கோலம் — இலந்தை புசங்கம் கோலம் என பேர் கொண்ட உடம்பினில் அநாதியாகவே தோன்றி ஆதரித்தும், நோய் படுத்தியும் அழித்தும் வருகின்ற முக்குற்றங்களை நிலை பிசகுங்கால் முறையே மூன்றினுக்கும் மூன்றாகி அவற்றின் மிகை, குறைகளை நீக்கி உடம்பைக் காக்க முறையே கமுகு வாதத்திற்கும், இலந்தை பித்தத்திற்கும், பாம்பு கபத்திற்கும் ஆகுமென்பர்.

பாம்பின் மாமிசத்தை நன்கு உலர்த்திய பின் மருத்துவத்தில் கையாளப்படுகிறது. இவ்வுலர்த்திய மாமிசம் சர்ப்ப கண்டம் என வழங்கப்படுகிறது.

சர்ப்ப கண்டத்தின் பொது குணம்

"மேவிய சர்ப்ப கண்ட வியன் குணமினிது கேண்மோ
ஆவியை வருத்துஞ் சன்னியரும் வாத மிவற்றினோடு
தாவறு பெருநாகத்தின் றழல்விட முதலாய
யாவையு மகற்று மென்றே யிசைத்தனர் பெரியோரம்மா"

– அ. சா.

சர்ப்ப கண்டத்தால் மிகுந்த சன்னி ரோகம், வாதம், பாம்பின் விடம் முதலிய கொடிய ரோகங்கள் தீரும்.

"என்ன வென்று சொல்வேனெதிரானால் வைகறையில்
மன்னவர்க டங்கேமகிழ்வார்கள் — பின்னுமகா
வல்லமையுண்டாக வழங்குமே வாகடர்க்கும்
நல்ல நாகப் பெருமை தான்"

– தே. வெ.

நாகமெனும் நல்ல பாம்பு மருத்துவர்கட்கு நல்ல மருந்து முறைகட்கு உதவியாக இருப்பதால் அவர்களுக்கு நல்ல வல்லமையை அளிக்கும்.

நித்திரை நீங்கிய வைகறையில் நாகம் எதிர்ப்படுமானால் மகிழ்ச்சியடைவர்கள். இத்தகைய நாகத்தின் பெருமையை எவ்விதம் புகழ்வேன் எனத் தேரையர் உரைக்கிறார்.

சர்ப கண்டம் சேரும் மருந்துகள்

"கேட்டிடவே நாட்பட்ட சுரத்துக் கெல்லாம்
கிருதமடா ஆடாதொடைவேர் கீழ்வாய் நெல்லி
வேட்டிடவும் காட்டுமல்லி வேளை குப்பை

வேலிப்ப ருத்தியொடு குப்பை மேனி
நாட்டில்வளர் வழுதலைவேர் நத்தைச் சூரி
நலமான மருட் கிழங்கு அப்பை மூலம்
உற்பனஞ்சேர் நல்ல பாம்பு கண்டந்தானே"
"கண்டமொடு வராகனங்கே மூன்று தூக்கி
கல்லிலாட்டிநாழிநெய்யாற் கலந்து கொண்டு
கண்டமெனு நல்லெண்ணெய் யேரண்ட மெண்ணெய்
கலந்திடுவாய் வகையிரண்டு படிதா னொன்று
கண்டிதமா யிவையெல்லாங் காயும் போது
கருங்குங்கிலிய மிரண்டு காசு தூக்கி
கண்டிதமாய் நிம்பப்பழச் சாற்றிக் கேளு
கனிந்தபடி மஞ்சங்கே பிழிந்தே யூட்டே"
"ஊட்டி வடித்தப்பா வைத்துக் கொண்டு
உள்ளுக்குக் காசெடைதான் உண்ணச் சொல்லு
நாட்டியே மேலுக்குந் துவாலையோடு
நாட்பட்ட சுரந்தணியு................".

– *பதார்த்த சூடாமணி*

சன்னி நெய்

உரையும் வசம்புள்ளி உற்ற கடுங்காயத்
திரை பூநாகம் பாம்பின் சீர் கண்டங் — கரைய
அரைத்து வடி வேம்பின் நெய்யதனிற் சன்னியாகும்
துரத்திடப் பூசிட்டுள் கொள் தூறு

வசம்பு, பூண்டு, காயம், பூநாகம், சர்ப்பகண்டம் ஆகியவற்றைச் சம எடை எடுத்து அரைத்து 4 பங்கு வேப்ப நெய்யில் கரைத்து, காய்ச்சி பதத்தில் வடித்து கொள்ள வேண்டும்.

5 — 10 மிலி உள்ளுக்கும் கொடுத்து துவாலையிட சன்னி தீரும்.

இரசக்குழம்பு

இரசம், கந்தகம், காயம், துத்தம், துருசு, வசம்பு ஆகியவை சம எடை, உலர்ந்த பச்சை பாம்பு — 1 உலர்ந்த மூஞ்சுறு — 1.

சரக்குகள் அனைத்தையும் நன்கு அரைத்து பின் வேப்பநெய் விட்டரைத்து ஒரு தேங்காயின் கண்ணை திறந்து நீரை ஊற்றி அதற்குள் மேற்படி மருந்தை இட்டு கண்ணை அடைத்து எருக்குழியில் 40 நாட்கள் புதைத்து பின் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

இதை வெளிப்பிரயோகமாகப் பயன் படுத்த ஆறாத அழுகிய ரணம், பாம்புக் கடியால் வந்த புண் ஆகியவை தீரும்.

"ஊமை புத்துத் தட்டியதில்
உள்ளும் புறமுமுறு கரையான்
நாமப் பச்சை பாம்பிவற்றை
நாடியிரண்டுஞ் சமன் கொணர்ந்து
தீமை போலாட்டியும்
பாக்கு நிகரா வுண்டை செய்து வைத்து
ஆமக் கஞ்சி தனிற் கொடுத்தா
வஞ்சிக்கால் விடம் போமே"

– **தேரையர் வைத்தியம்**

புற்றுக் கரையான், பச்சைப்பாம்பு கண்டம் ஆகியவை சம எடை எடுத்து அரைத்து, பாக்களவு கஞ்சிநீரில் கலந்து கொடுக்க ஆலகாலவிடத்தை ஒத்த பாம்பின் விடம் தீரும்.

மலைபாம்புத் தைலம்

துருசு, துத்தம், அரிதாரம், கெந்தி, இலிங்கம், கௌரி, வெள்ளைபாடாணம், நாபி, எட்டி, கருஞ்சீரகம் ஆகியவை வகைக்கு 10.2 கிராம் எடுத்து சுத்தித்து கல்வத்திலிட்டு பொடித்துக் கொள்ள வேண்டும்.

புங்க நெய், ஆமணக்கு நெய், வேப்ப நெய் ஆகியவை வகைக்கு (3 படி) 3.9 லிட்

சுத்தித்த சேங்கோட்டை	—	120 கிராம்
மயிலிறகு	—	120 கிராம்
மலைபாம்பு கண்டம்	—	240 கிராம்
உலர்ந்த சங்கன் வேர்	—	160 கிராம்

அனைத்தையும் பொடித்து ஒரு பாண்டத்தூற்றி அழிஞ்சில் வேர் குழித்தைலம் ¼ படி சேர்த்து 7 நாள் வெயிலில் வைத்து உலர்ந்த கருடன் கிழங்கு சூரணம் 160 கிராம்,பூண்டு 160 கிராம், சங்கன் 3குப்பி சாறு — (1 படி) சேர்த்து அடுப்பேற்றி சிறு தீயில் எரித்து மயிலிறகு கரையுமட்டும் எரித்து கரைந்த பின் வடித்துக் கொள்ள வேண்டும்.

அளவு: 2.5 கிராம் வீதம் காலை,மாலை 2 வேளை உட்கொள்ள வேண்டும் வெளியிலும் பூசிவர வேண்டும்.

தீரும் நோய்கள்: குட்ட நோய், கிரந்தி, கரப்பான், பிளவை, புற்று, தொட்டவுடன் ஒட்டுகின்ற ஒட்டியப்புண், கண்டமாலை, விப்புருதி, சூலை ஆகியவை தீரும்.

பத்தியம்: கருங்குருவை அரிசி, சம்பா பச்சரிசி அன்னம், சர்க்கரை, பசுநெய் ஆகும். புளி, புகை, பெண்போகம் நீக்க வேண்டும்.

152- 2 - 19a

"பாம்புக்கண்டங் குந்திருக்கம் பருக்கைபடா மற்பொடி செய்து

சாம்பல் போக்கித் தழலெடுத்துச் சட்டி தனிலிட்டுரலுள்ளே

சோம்பா துரலா வழல் மூடிச் சுகமாயவளை யதிலிருத்தித்

தேம்பப் பொடியை யதிற்றூவி திறமாய்ப் புகைக்க வலிவிடுமே"

– *ப.ரா.சே*

பாம்புக்கண்டம், குங்கிலியம் சம அளவு பொடித்து, ஒருசிறு சட்டியில் தழல் எடுத்து உரலுக்குள் அடைத்து அதன் மேல் நோயாளியை அமர்த்தி பொடியைத் தூவி புகையை அல்குலில்படும் படி செய்ய அல்குல் சூலை தீரும்.

"தக்கவோம் வெள்ளையுள்ளிச் சருகு சர்ப்ப கண்டமுடன்

சுக்கு மிளகு திப்பிலியுஞ் சேர்மன் வசம்பு குந்திருக்கம்

மிக்க வெளுத்த லவை நுணுக்கி மேலுமுடம்பி னிலெண்ணெ யிட்டே

ஒக்க விருத்திப் புகையூட்டே யோனிச் சூலை யோடிடுமே"

– *ப.ரா.சே*

ஓமம், உள்ளி தோல், சர்ப்பகண்டம், சுக்கு, மிளகு, திப்பிலி வசம்பு, குந்திரிக்கம் ஆகியவற்றைச் சேர்த்து பொடித்து உடலில் எண்ணெய் தடவி அனலில் மேற்படி புகையைத் தூவி புகைகாட்ட யோனிச்சூலை தீரும்.

பாம்பின் பொது பயன்கள்

பச்சைபாம்பை இடித்து வேப்ப நெய் ½ படியில் இட்டு காய்ச்சி புண்ணிலிட பாம்பு கடியால் வந்த புண் தீரும்.

கரு நாகத்தின் தோலைச் சுட்டுக் கரியாக்கி அதைத் தான்றிக்காய் எண்ணெயில் குழப்பி போட வெண்குட்டம் தீரும்.

வலிப்புகட்கு கூறியுள்ள சோதிரிஷி தைலத்தில் சர்ப்ப கண்டம் சேரும்.

சன்னிரோக சிகிச்சையில்

"பாம்புக் கண்டத்தை குறுகத்தரித்து மேற்புகைத்து

தள்ளப்பிடாத விடமுட்டித்தைலம் கண்டூஷமுஞ்செய்யே"

- ப.ரா.சே.

என்பதில் பாம்பு கண்டத்தைப் பொடித்து புகை பிடிக்க சன்னிநோய் தீரும்.

பாம்பு கண்டம் (1/2 முதல் 1 வராகனெடை) எடுத்து, சாராயம் அல்லது இலவங்கப்பட்டை குடிநீரில் கொடுக்க சிலந்திவிடம், பாடாணங்களின் விடம், குட்டம், ஊழிக்காய்ச்சல் தீரும்.

பாம்பின் கொழுப்பை உருக்கி கண் இமைகளின் மேல் இட்டுவர கண் சிவப்பு, நீர் முட்டல், கண்பூ, படலம் தீரும்.

பாம்புச்சட்டை

பாம்புகள் கழற்றிவிடும் தோலே சட்டை என்பதாம். இதில் நல்ல பாம்பின் சட்டை மட்டுமே வழக்கில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

பல பெரிய நோய்களில் இது உள் மருத்துவத்திலும், புற மருத்துவத்திலும் பயன்படுகிறது. சிறப்பாகப் புகை சிகிச்சை முறைகளில் அதிகமாகக் கையாளப்படுகிறது.

உபரசங்களில் ஒன்றாகச் சொல்லப்பட்டுள்ளது.

பயன்கள்

1. பாம்பு சட்டையைப் பொடித்து கண் இமையில் வரும் காயத்தில் போட ஆறும்.
2. உடலில் ஏற்படும் புது காயத்தில் போட 3 தினங்களில் ஆறும்.
3. பாம்புச்சட்டை, கஷாயமிட்டு கண்களை கழுவ கண்ணோய் தீரும்.
4. மேற்படி கஷாயத்தை வாய் கொப்புளிக்க பல் நோய் தீரும்.
5. தலையில் தேய்த்துகழுவ பேன்கள் சாகும்.
6. பாம்பு சட்டையை இடுப்பில் கட்ட பிரசவம் எளிதாகும்.
7. பாம்பு சட்டையைப் பொடி செய்தாவது, எரித்து சாம்பலாக்கியாவது தடவ தினவு, சொறி தீரும். மயிர் முளைக்கும்.
8. பாம்பு சட்டை பொடி சம அளவு வயல் நண்டு சேர்த்தரைத்துப் பூச அறுபட்ட நரம்பு கூடி ஆறிப்போகும்.
9. பாம்புச்சட்டை, கழுதையின் இடபாக பிடரிமயிர் இரண்டையும் ஒரு சீலையில் சுற்றி வேப்பெண்ணெய் விட்டு சுடர் தைலமாக எரித்து எடுத்துக் கொள்ள வேண்டும். 10. மி.லி வீதம் 2 வேளை 3 நாள் கொடுத்து துவாலையிட பயித்தியம் தீரும்.

"பாம்புச்சட்டை மயிலிறகு பரிய கழுதை விட்டையுடன்

சாம்பல் நெருப்பை வில்வவேர் கூறு மோம — முள்ளித்தோல்

தூம்பல் துளசி குந்திருக்கஞ் துவட்டிப் புகைக்க விட்டேகுஞ்
சாம்பு சன்னி வாதமொடு சகல சுரமுந் தீர்ந்திடுமே”

– ப.ரா.சே

பாம்புச் சட்டை, மயிலிறகு, கழுதை மலம், ஓமம், முள்ளித் தோல், வில்வவேர், குந்திருக்கம் சேர்த்து பொடித்து புகைக்க சன்னி வாதம், சுரம் தீரும்.

சன்னிரோக சிகிச்சை முறையில்

“............கண்டுஷம்
கொள்ளப்பாம்பு சட்டை மஞ்சள் குதிரைகுளம்பு புகைப்பீரே”

– ப.ரா.சே

என்பதில் பாம்பு சட்டை, மஞ்சள், குதிரை சம எடை எடுத்துப் பொடித்து புகைபிடிக்க சன்னி நோய் தீரும்.

“............பாம்புச்
சட்டங் கிராம்பு வெற்றிலைநீர் கீழே சிந்தாதே பிழிந்து விட்டே யரைத்துக் கண்ணிலிட வெருவியோடும் விப்பிரமை”

– ப.ரா.சே

பாம்புச்சட்டை கிராம்பு ஆகியவை சமஎடை வெற்றிலை நீர் விட்டரைத்து கண்ணில் பிழிய பிரமை நீங்கும்.

பாலும் பாற்பொருள்களும்

LACTUS

Milk And Milk Products

வேறு பெயர்கள்:

பயம், கீரம், சுதை, பயசு, பாகு, அமுது, துத்தம், சாறு.

பால், ஊன்செய் பொருளும், சருக்கரையும், நில உப்புக்களும் இவைகளோடு கொழுப்பின் நுண்துளிகளும் சேர்ந்து நீர்மயமாய் இருக்கின்றது. பாலில் முக்காலே அரைக்கால் பங்கு நீர் உண்டு.

இதன் நிறம் வெண்மை. ஆகையினால், இதில் ஏழு நிறங்கள் கலந்துள்ளன.

பாலில் உள்ள ஊன் செய் (Casein) பொருள் மிகு விரைவில் செந்நீரில் கலந்து கொள்கிறது. பாலில் உள்ள கொழுப்பும், சர்க்கரையும் உடலுக்கு வெப்பமும் வன்மையும் கொடுக்கின்றன. பாலில் உள்ள நில உப்புக்களில் சேர்ந்திருக்கும் சுண்ணாம்பும், எரியமும் (Phosphorous) மூளையையும் நரம்புகளையும் செவ்வனே வேலை செய்யுமாறு செய்கின்றன. இந்த உப்புக்களுடன் உவரமும் (Sodium) சேர்ந்து, தூம்பற்ற சுரப்பிகளுக்கு (Duetless glands) எழுச்சி மருந்துகளாக உபயோகப்படுகின்றன. மற்றும் சுண்ணாம்புச் சத்தினால் பற்களும் எலும்புகளும் உறுதி அடைகின்றன. உடற்குள்ளே பால் சென்றவுடனே, செந்நீரின்கண் உள்ள வெள்ளை அணுக்கள் அதிகப்பட்டு, நோயை அணுக, உணவுப்பொருள்களை மாற்றமடையச் செய்து செந்நீரில் கலக்கப் பேருதவி செய்கின்றன. இதனால் பாலில், உயிர்களின் வளர்ச்சிக்கும் உரத்துக்கும் வேண்டிய பொருள்கள் எல்லாம் கூடி முழு உணவுப் பொருளாய் அமைத்து இருக்கின்றது.

பாலும் பால் சேர்ந்த பொருள்களும் சிறந்த உணவாகின்றமையினாலும், காய்ச்சாமலே பாலை அருந்தக் கூடுமாகையினாலும், இது எப்பொருளும் ஈடாகாத முழு உணவுப்பொருளாய் இருப்பதினாலும், பாலில் இருந்து உண்டாக்கப்படும் தயிர், மோர், வெண்ணெய் முதலிய உடன்படு பொருள்களும் உரந்தரும் உணவுகளாக இருக்கின்றமையாலும் பாலில் உய்வன அனைத்தும் அடங்கி இருத்தலினாலும் இது சிறந்த உணவாகக் கருதப்படுகிறது.

பாலின் வகைகளும் குணங்களும்

பாலில் சிறந்தது ஆவின் பாலே ஆகும். தமிழ் மக்களால் பழைய காலந்தொட்டே இதனுடைய சிறப்புகள் நன்கு உணரப்பட்டு வந்திருக்கின்றன. ஆயர்கள், பாலில் தயிர், மோர், வெண்ணெய் முதலிய பொருள்களைக் கண்டு வழங்கும் கலையினை அறிந்திருந்தார்கள். இத்தகைய ஆவின் பாலிலும் கரு நிறப் பசு, கபிலை பசு, செந்நிறப் பசு ஆகிய இப்பசுக்களின் பால் மிகவும் சிறந்தது. ஆவின்பாலில், ஐம்பூதத் தன்மைகளும் உள்ளன. பால் ஆகாசக் கூறும், வெண்ணெய் மண்ணின் கூறும் உடையனவாக இருக்கின்றன.

ஆவினது பாலின் பொதுக் குணம்

“பாலர் கிழவர் பழஞ்சுரத்தோர் புண்ணாளி
சூலையர் மேகத்தோர் துர்பலத்தோர் எலுமிவர்
எல்லார்க்கும் மாகும் இளைத்தவர்க்குஞ் சாதகமாய்
நல்லாய் பசுவின்பால் நாட்டு”

– ப.கு.சி.

பசுவின் பாலானது, குழந்தைகட்கும் கிழவர் கட்கும் பழைய சுரம், புண், சூலை, பிரமேகம், துர்ப்பலம், மெலிவு (இளைப்பு) ஆகிய இவைகளை உடையவர்களுக்கும் ஆகும் என்க.

தேரன்காப்பியத்திலும், தருவிலும் கீழ்காணுமாறு பால் வகைகளுக்கு குணம் கூறப்பட்டுள்ளது.

"உணவின் பகுதியை யோதலுற் றனமினிப்
பணிவுள வெண்பசும் பாலிளைப் பாற்று
நற்பசு வின்சுதை நாவிளைப் பாற்றிடும்
பொற்பான செம்பசு போக்குங் கயப்பிணி
புள்ளியா மேகநோய் போக்கிடு நிச்சய
மடாச்சுதை தீபன மாக்கிடு மட்டபால்
விடாத்தொடர் காத்திர வெம்மையை மாற்றுமே"

– *தேரன் காப்பியம்*

வெண்மையாகிய ஆவின் பால் களைப்பைப் போக்கும். காராம் பசுவின் பால் தாகத்தைத் தணிக்கும். செம்மை நிறமுள்ள ஆவின் பால் ஷயரோகத்தையும், புள்ளிகளையுடைய ஆவின் பால் மேக ரோகத்தையும் போக்கடிக்கும். காய்ச்சாத பால் பசி தீபனத்தை உண்டாக்கும்; காய்ச்சிய பால் சரீரத்தில் உள்ள வெப்பத்தைத் தணிக்கும்.

ஆட்டுப்பால் கபத்தையும், பசுவின் பால் வெப்பத்தையும், வெள்ளாட்டுப் பால் பித்தத்தையும், பள்ளை ஆட்டுப்பால் வாத கபத்தையும், எருமைப்பால் வாதத்தையும், காட்டு எருமைப்பால் கபத்தையும் அதிகப்படுத்தும் என தேரன் தருவில் உரைக்கிறார்.

பதார்த்த குண சிந்தாமணியில் கீழ்க்காணுமாறு பால் வகைகளும் அதன் குணங்களும் கூறப்பட்டுள்ளன.

வெண்மை, செம்மை, கருமை, கபிலை என்னும் இந்நிறமுள்ள பசுக்களின் பாற்குணம்.

"வெண்பசுவின் பால்போக்கும் பித்தத்தை மெய்சிவந்த
வண்பசுவின் பால்போக்கும் வாதத்தைக் கண்சிறந்த
காராவின் பால்போக்கு மையங் கவிலைப்பால்
ஆரமிர்தாந்த தோஷ மறுக்கும்".

– *ப.கு.சி*

வெண்மைநிறப் பசுவின் பால் பித்தகோபத்தையும், செம்மை நிறப் பசுவின் பால் வாத தோஷத்தையும், கருமை நிறப் பசுவின் பால் கபரோகத்தையும், கபில நிறப் பசுவின் பால் திரிதோஷத்தையும் போக்கும்.

காராம் பசுவின் பாற்குணம்

“கண்ணோ யகற்றுங் கயரோகந் தான் போக்கு
மண்ணிலுள்ள பால்தோஷம் மாற்றுங்காண் — பெண்ணே
இரத்தபித்தம் போக்கு மிராச வசியங்
கறுத்தபசும் பாலதனைக் காண்”

– ப.கு.சி

பெண்ணே காராம் பசுப் பாலால் விழிப்பிணி, ஷயம், மற்ற பாலின் தோஷங்கள், ரத்த பித்த ரோகம் இவைகள் நீங்கும்.

நாரைமான் கபிலை என்னும் பசுக்களின் பாற்குணம்

“நாரைப் பசுவின் பால் நாளுமுய னோயகற்று
மாரை நிறப்பசும்பால் வாய்திடினோ வேரையுறு
முப்பணியும் போகு மொழிகபிலை யின் பாலுக்
கெப்பிணியும் போமே யிறங்கி”

– ப.கு.சி

நாரைப் பசும்பால் முயல்வலி தீர்க்கும். கபிலை பசும் பாலால் திரிதோஷமும் பல பிணியும் தீருமென்க.

கொம்பசையும் பசுவின் பாற்குணம்

“கொம்பசையு மாப்பாலோ கூறுபித்தம் போக்கிவிடும்
தம்பவா தத்தைத் தருவிக்கும் — வம்புமுலை
மானேகேள் விந்துவை வளர்க்குங் கபமதனைத்
தானே யெழுப்புமெனச் சாற்று”

– ப.கு.சி

அசைகின்ற கொம்பையுடைய பசுவின் பால், பித்த ரோகத்தை நீக்கும், தனுஷ்தம்ப வாதம், சுக்கில தாது, கபநோய் இவைகளை வளர்க்கும்.

“மூன்றாமீற்று நான்காமீற் றின்பால் முதிர்கபத்தைப் போக்கிவிடும்

ஏன்றநா லாமீற் றெனும்பாலுங் கூன்றுதிரி

தோட மகலுஞ் சுகமுண்டிவ் வாப்பாற்சந்

தோடமெ வர்க்குமுண்டாக் கும்”

– ப.கு.சி

மூன்றாம் ஈற்றுப் பசுவின் பால் நீடித்த கிலேஷ்ம் நோயையும், நான்காம் ஈற்றுப் பசுவின் பால் வாதாதி மூன்று தோஷங்களையும் நீக்கும். சரீர சவுக்கியத்தையும் மகிழ்ச்சியையும் உண்டாக்கும்.

ஆகாப் பசுவின் பாற்குணம்

“விஞ்சு வரணை தாராநோய் மிகுத்துச் சுழல் வெண்புள்ளி

துஞ்சு யலைந்து மலமருந்தல் சுடுகா டேகியெலும் புணலின்

வஞ்சு வகையி னாவின்பா லாகா தணுகிற் றிரிதோஷம்

நெஞ்சி லடையுங் கபநோயா விறைந்த வயதுங் குறைத்திடுமே”

– ப.கு.சி

அரணைநோய், தாராநோய்களை உடையதாயிருத்தல், மிகவுஞ் சுற்றுதலோடு வெண்புள்ளி பெற்றிருத்தல், தூங்கித் திரிந்து மலம் அருந்தல், சுடுகாட் டெலும்பு உண்ணல் ஆகிய ஐந்து வகையான பசுக்களின் பால் ஆகாவாம். இவை சேருமாகில், வாதாதி மூன்று தோஷங்களும் மார்பிற் சேர்ந்து, ஷயத்தை விளைவிப்பதும் ஆயுளைக் குறைப்பதும் செய்யும்.

பகற்பசுவின் பாற்குணம்

"பகற்பால் சிசுகட்குப் பக்குவமென் றாலும்
விகற்பமு டன்பருக மெய்யே — யெதற்குமிதத்
தீதடரச் செய்யுமித்தாற் சேராதுட் காய்ச்சலனல்
தாதுவிழும் பூங்குழலே சாற்று"

– ப.கு.சி

பகற்பசுவின் பால் குழந்தைகளுக்குப் பக்குவமாமென்றாலும், பற்பல கபநோயையும், தாம்பூலம், புளிப்பு முதலியன சேருமிடத்துக் கெடுதியையும் செய்யும்; உட்சூட்டையும் வெப்பத்தையும் நீக்குமென்க.

"பகற்பசும்பால் காய்ச்சிப் பருகி னழலும்
விகற்பமு மீளையுமி ராவாம் — புகல்பித்த
வேகமும்போ மேனியெல்லா மேயிடுந் தாதுவுமாம்
போகமுமுண் டாகும் புகல்"

– ப.கு.சி

இராப்பசுவின் பாற்குணம்

"இரவின்பால் கண்ணி லெழுபிணி போக்கும்பின்
பரவியநோ யும்போக்கும் பாரில் — விரகமுற்றாக்
கத்தியம் பண்ணிவிழி யாயிழையே யாவருக்கும்
பத்தியமா மென்றைக்கும் பார்" – ப.கு.சி

பகலிற் சுரந்து இரவில் கறக்கின்ற பாலை விதிப்படி காய்ச்சி அருந்த, தேக அழற்சி, கபரோகம், சுவாசம், பித்தகோபம், நேத்திர வியாதி, விந்துவின் கெடுதியாலனுசரித்த சிற்சில ரோகங்கள் ஆகியவை நீங்கும். தேகத்தில் மினுமினுப்பும், சுக்கிலப் பெருக்கமும், மாதர் மேல் விருப்பமு முண்டாகும். இது பத்தியத்திற்கு உதவுமென்க. (பகல் முழுதுஞ் சுரந்திருந்து இரவில் கறப்பது பகற்பால்)

எருமைபாற் குணம்

“வாதத் திமிரை வரவழைக்கும் புத்தியினற்
றோதத் தெளிவைநனி போக்குங்காண் — கோதற்றே
யங்கத் துருமருந்தை யன்றே முறித்து விடும்
பங்கத் துறுமேதிப் பால்”

– *ப.கு.சி*

எருமைப் பால் திமிர் வாயுவைத் தருவிக்கும், தெளிந்த புத்தியின் கூர்மையும், நல்ல மருந்தின் குணத்தையும் கெடுக்கும்.

வெள்ளாட்டுப்பாற் குணம்

“வெள்ளாட்டு பாலுக்குமேவியநற் றீபனமாந்
தள்ளாடு வாதபித்தஞ் சாந்தமாம் — உள்ளிரைப்புச்
சீதமதி சாரஞ் சிலேஷ்மமறும் புண்ணாறும்
வாத சிலேஷ்மமும்போ மாய்ந்து”.

– *ப.கு.சி*

வெள்ளாட்டுப் பாலினால் வாதபித்த தொந்தம், சுவாச காசம், சீதாதிசாரம், கபதோஷம், விரணம், வாதத்திலுண்டாகிய வீக்கம் முதலிய துன்பந்தீரும். நல்ல பசியும் உண்டாகுமென்க.

செம்மறியாட்டுப் பாற் குணம்

“செம்மறிப்பால் பித்தஞ் சிலேஷ்மத்தை யுண்டாக்கும்
விம்மும் வயிறுமிக மேன்மூச்சாங் — கொம்மை
வருமுலையாய் பத்தியத்தில் வாராது வாய்வாம்
பருகுவர்க்கு நாளும் பகர்”.

– *ப.கு.சி*

வாத ரூபமான செம்மறியாட்டுப் பால், பித்த சிலேஷ்ம தொந்தம், வயிற்றுப்புசம், மேற்சுவாசம் ஆகியவற்றை உண்டாக்கும், பத்தியத்திற்குதவாது. இதனால், வாயு அதிகரிக்குமென்க.

வெள்ளாட்டு பாலின் பயன்

"மரி யிரணங்கள் வற்றி வலியடங்கித்
தேறிகுணமாகுந் தேகத்தில் — ஊறிரத்தம்
பாய வெள்ளாட்டின் பாலாலரைத்திட்ட
சீயக் கொடியாலே சீ"

– *தே.வெ*

வெள்ளாட்டு பாலால் சீயக்கொடியை அரைத்துப் புண்ணிலிட வலி நீங்கி, சீழ்மாறி புண் காய்ந்து ஆறி குணமாகும்.

"வெள்ளாட்டுப் பாலும் வெதுப்படக்கிச் சாறும் நிறை
கொள்வதிலே கறுத்தகொள்ளையிட்டக் கொள்ளளவு
காட்டாமணக்கின்வேர் காணப் பொடிசெய்து
போட்டாலுச்சிப் பிளவை போம்"

– *தே.வெ*

வெள்ளாட்டின் பாலும், வெதுப்படக்கி சாறும் ஓரளவாகக் கொண்டு அத்துடன் கருங் கொள்ளை கூட்டி கொள்ளின் அளவு காட்டாமணக்கு வேரைப் பொடி செய்து கூட்டி சீலையில் தடவி போட்டுவர உச்சிப் பிளவை தீரும்.

"மிக வுண்டாங் காயத்தை மேருவெனச் செய்யும்
இகலுண்டா நோய்களுக் கெந்நாளும் — பகுதி
யையிடைச் சகியாமை யாக்குவிக்கு நாடின்
மையிடச் சுதையாலே மைந்து"

– *தே.வெ*

எருமைப் பாலால் மிக்க வலிவுண்டாகும். உடம்பை மலை போல் வளரச்செய்யவும். வாதநோய்களினால் உண்டாகும் வருத்தம் சகிக்க முடியாதவாறு அதிகரிக்கும்.

யானைப்பாற் குணம்

"வாதம்போந் தாதுபுஷ்டி வந்தடரும் வன்பலமோ
யாது பித்தங்கூடி யழகுதிக்குந் — தாதுமலர்த்
தேனைப்பா லிற்கலந்த தித்திப்பைப் போலிருக்கும்
யானைப்பா லுண்ணுமவர்க்கு"

– ***ப.கு.சி***

தேனும் பாலுங் கலந்தது போன்ற இனிப்புடைய யானைப் பாலைக் குடிப்பவர்க்கு வாதகோபம் நீங்கும். சுக்கில விருத்தியும், மிகு வன்மையும், பித்த சம்பந்தமான நோயும், தேக அழகும் உண்டாகு மென்க.

குதிரைப்பாற் குணம்

"வீரிய விருத்தி விளைக்குமழ குண்டாகுங்
காரியத்திற் காமங் கதிப்பிக்கும் — வாரார்
கரகமெனச் செப்புமுலைக் காரிகையே கேளாய்
துரகதப்பால் செய்யுந் தொழில்". – ***ப.கு.சி***

குதிரைப்பால் சுக்கிலப் பெருக்கத்தையும், சரீர வனப்பையும், புணர்ச்சியில் நிருவாகத்தையும் உண்டாக்கு மென்க.

ஒட்டகப்பாற் குணம்

"ஒட்டைப்பா லுக்குமந்த மூவாதம் சூலையோ
டட்டகு ணக்கரப்பா னாவதன்றி — மட்டிடாக்
காதிரைச்சல் மந்தமதி காசங் சுவாசமுமா
மாதரைக்கு ணாளும் வழுத்து"

– ***ப.கு.சி***

ஒட்டகப் பாலினால் அக்கினி மந்தம், வாதசூலை, எண்விதக் கரப்பான், கர்னநாத செவிடு, புத்திக் குறைவு, அதி இருமல், இரைப்பு இவை உண்டாகும்.

கழுதைபாற் குணம்

"கழுதைப்பால் வாதங் கரப்பான் விரணந்
தழுதளையுள் வித்திரதி தானே — யெழுகின்ற
ஒட்டியபுண் கீழ்மேக மோடு சொரிசிரங்கு
கட்டியிவை போக்குங் கழறு"

– ப.கு.சி

இதுவுமது

"கத்தபத்தின் பாற்குக் கரிய கிரந்தியறுஞ்
சித்தப்பிரமை பித்தந் தீருங்காண் — தத்திவரும்
ஐய மொழியு மதிக மதுரமுமாஞ்
செய்ய மடமயிலே செப்பு"

– ப.கு.சி

கழுதைப்பால் மிகு மதுரத்தை யுடையது. இது வாத நோய், கரப்பான், புண், தழுதளைரோகம், உள்வித்திரதிக் கட்டி, ஓட்டுக் கிரந்தி, சீழ்ப்பிரமேகம், சொறி சிரங்கு, கட்டி, கருங் கிரந்தி, சித்தப்பிரமை, பித்த தோஷம், கபநோய் இவைகளை போக்கும்.

பாத்திர பேதத்திலுண்டாகிய பாற் குணம்

"செம்பிலிடும் பால்வாத சீதமொழிக் கும்பொன்மண்
கும்பத் தடுபால்போக் கும்பித்தை — யம்புவியுள்
வெள்ளி யறையிரும்பில் விட்டுக்காய்ச் சும்பாலாற்
றுள்ளியுறை யையமறுஞ் சொல்"

– ப.கு.சி

செப்புப் பாத்திரத்தில் காய்ச்சியப் பால் வாத சிலேத்மத்தையும், பொன், மண் பாத்திரங்களில் காய்ச்சிய பால் பித்த தோஷத்தையும் வெள்ளி வெண்கலம் இருப்புப் பாத்திரங்களிற் காய்ச்சிய பால் காசரோகத்தையும் போக்கு மென்க.

ஆடையெடுத்த பாற்குணம்

"ஆடை யெடுக்கும்பா லக்கினிமந் தப்படுமே

வாடைநல்லாய் சீரணமாம் வாதமறுங் — கோடையிடி

போலு மெழுந்தபித்தம் போகுமே கூரியசீர்

வேலனைய கண்ணாய் விதி"

– ப.கு.சி

ஏடு நீக்கிய பாலால் அக்கினி மந்தப்படும், சீரணமும் உண்டாம். வாத பித்த கபதோஷங்கள் நீங்குமென்க.

காய்ச்சும் பாலுக்கு நீரளவை கூறல்

"ஆடுபசும் பால்காய்ச்சி லஷ்டபா கம்புனலாம்

நீடெருமை செம்மறிக்கு நேர்நேராந் — தேடரிய

சுக்குசிறு காஞ்செரிவேர் கூட்டிச் சுவறியபா

லொக்கும்வெள் ளாட்டுப்பாற் குரை"

– ப.கு.சி

வெள்ளாடு, பசு இவைகளின் பாலுக்கு எட்டிலொரு பங்கும், எருமை, செம்மறியாடு இவைகளின் பாலுக்குச் சரிபங்கும் நீர் விட்டுக் காய்ச்ச வேண்டும். எவ்விதப் பால்களுக்கும், சுக்கு, சிறுகாஞ்சொறி வேர் சேர்த்துக் காய்ச்சில், அவை வெள்ளாட்டுப் பாலுக்கு ஒப்பாகும்.

பாலேட்டின் குணம்

"பாலேட்டாற் பித்தமதும் பாழ்மந்தமொடும் வாந்தியும்போம்
மாலாட்டு மூர்ச்சையும்போம் வன்பலமா — மேலாலே
தாதுமிகுந் தீபனமாந் தானே விளைந்தார்க்குக்
கோதுமறு மாமயிலே கூறு"

– ப.கு.சி

பாலிலுண்டாகும் ஏட்டினால் பயித்திய நோயும், கொடிய வாந்தியும், மூர்ச்சையும் நீங்கும். மிகுபலமும், சுக்கிலமும், ஜடராக்கினியும் விருத்தியாம். இதைத் துர்ப்பல தேகிகள் உண்ணினும் அவர்கள் உடலிலுள்ள குற்றங்கள் அறும்.

முலைப்பாலின் பொதுக் குணம்

"தன்னியமென் றோதிச் சருவதோ ஷங்கள்போம்
உன்னிய தாப மொழியுங்காண் — சந்நியொடு
வாதசுரம் பித்தசுரம் வன்கபச்சு ரந்தணியுங்
கோதில்வன் மையுண்டாங் கூறு
இதுவுமது
இருந்தோஷம் போக்கு மிகற்கிரிச்சந் தீர்க்கும்
அருந்து மருந்தின்னு பானம் — பொருந்துமது
அஞ்சனத்திற் காகு மனல்வறட்சி நீக்கிவிடும்
பஞ்சினடி மாதர்தம் பால்"

– ப.கு.சி

தாய்ப்பாலானது ஏழுவகைத் தோஷங்கள், வெப்பம், சந்நிபாதம், வாத, பித்த, கப சுரங்கள், திரிதோஷம், வாத கிரிச்சரம், நாவறட்சி, ஆகிய இவைகளைப் போக்கி வன்மையைத் தரும். மருந்தினனுபானத்திற்கும் கலிக்கத்திற்கும் ஆகுமென்க (தன்னியம் — முலைப்பால்)

கருமை, செம்மை நிற மாதர்களின் முலைப்பாற் குணம்

"கரியநிற மாதர் கலசமுலைக் கீரம்
அரியவிழிக் காமருந்திற் காகா — திருநிலத்துளி
நோயணுகாச் செய்ய நுடக்கிடையார் தம்முலைப்பால்
தீயமுத்தோஷம் போக்குஞ் சேர்"

– ப.கு.சி

கரிய நிறமாதர் முலைப்பால், கண் வயித்தியங்களுக்கே அன்றி மருந்துகளுக்கும் உபயோகமாகாது. வியாதி இல்லாத செம்மை நிற மாதர் முலைப்பால் வாதாதி முத்தோஷங்களையும் போக்கும் (சீரம் — பால்).

பரத்தையரின் முலைப்பாற் குணம்

"பரத்தை முலைப்பாற்குப் பாரமுந் தோஷங்கள்
உரத்து வரும் வாத முண்டாகும் — இரத்தச்
சொரிகிரந்தி புண்ணுந் தொடர்கழனோய் சேருங்
குறியறிந்து நீக்கிக் கொடு"

– ப.கு.சி

வேசியர் முலைப்பாலால் திரிதோஷங்கள், வாதரோகம், இரத்தச் சொரி, கிரந்தி, விரணம், கழல்வாதம் இவை உண்டாகுமென்க.

பால் வகைகளின் பயன்கள்

பசுவின் பால்

மக்கள் தம் குழந்தைப் பருவத்திலிருந்தே பால் பருகி வருகின்றார்கள். குழந்தைகட்குப் பால் ஒன்றே தனி உணவாய் இருக்கின்றது. குழந்தையின் நிறம் விளக்கமடைய, அது கருவிலிக்கும் போதே தாய், பாலில் குங்குமப்பூ

முதலியன இட்டுப் பருகி வருவது வழக்கம். கல்வி பயிலுங் காலங்களில் மாணவர்களுக்குப் பால் சிறந்த ஞானம் பயக்கும் உணவாயிருக்கின்றது. பாலைக் கொண்டு பாலடிசில், பால்வடை, பால் கொழுக்கட்டை, பாலேடு, பாற்கட்டி, பாற்பாயசம், பால் பொங்கல், பாற்கூழ், திரட்டுப் பால், பாற் குழம்பு போன்ற பல்வகைப்பட்ட உயர்ந்த பண்டங்கள் செய்து உணவாகக் கொள்ளப்படுகிறது.

காசநோய் நீங்க, பாலில் காஞ் சொறி வேரிட்டுக் காய்ச்சி அருந்துவது பண்டை நாள்தொட்டு வழக்கில் இருக்கின்றது.

நோய் நீங்கியபின், குளிப்பதற்கு ஓமத்திற்குப் பசும்பால் விட்டு அரைத்து தலையில் தேய்த்துக் கொள்வதுண்டு.

பசுவின் பால், சுக்குத்தைலம், பிருங்காமலகத் தைலம், கீழ்காய் நெல்லித் தைலம், பொன்னாங்காணித் தைலம் போன்ற பல முடித் தைலங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

சில தைலங்களுக்கு பசும்பால் சேர்க்கும் அளவைச் சொல்லியிருந்தாலும் வேண்டுமானால் அத்தைலத்திற்கு எண்மடங்களவு சேர்த்தாலுஞ் சேர்க்கலாம், இதனை,

"பயசு தயிலத் தொகைக்கெண் கூறமைக்கினாம்" என்ற அடியால் உணர்க.

பசுவின் பாலை அருந்திவந்தால் பெண்களுக்குப் பால் சுரக்கும். இரத்தபித்தம், வாந்தி முதலிய பித்த நோய்கள் நீங்கும்.

சவ்வீரம், மயில்துத்தம், திராவகம் முதலிய விடப் பொருள்களை விடமிக்க அருந்தியவர்களுக்கு, விடமுறியப் பசும்பாலைக் கொடுக்கலாம்.

காலையில் பச்சைப்பாலைப் பருகிவந்தால், கைகால் எரிவு, காமாலை, இரத்தப்பித்தம், பாண்டு, தாது நட்டம், கபம் (மார்புச்சளி) இவைகள் நீங்கும்; பலம் உண்டாகும். குழந்தைகட்கும் பொருந்தும். இதனைத் தாரோஷ்ணச் சிகிச்சை என்பர். அதாவது கறந்த பாலை சுடுகை ஆறுவதற்கு முன் உண்பதாகும். இதனை,

"கையெரிவு காலெரிவு காமிலமி ரத்த பித்த
மெய்யெரிவு பாண்டு நோய் விந்துநஷ்டம் — வெய்ய
விதயகபம் போம்புட்டி யெய்துஞ்சேய்க் கொவ்வு
முதயமதிற் பச்சைப்பா லுண்"

– ப.கு.சி

என்ற செய்யுளால் அறிக.

பால், பஞ்ச தீபாக்கினி, சரபுங்க வில்வாதி, வெண்பூசணி, தேற்றான், இம்பூரல் போன்ற பலவகைப்பட்ட இலேகியங்களிலே சேர்க்கப்படுகின்றது.

கந்தகம், சிவதை, நிலாவாரை, அசுவகந்தி, பரங்கிச்சக்கை போன்ற பொருள்களையும், சூரணங்களையும் தூய்மை செய்வதற்குப் பால் பயன்படுத்தப்படுகிறது.

பால் பற்பசெந்தூரச் சூரணங்களை அனுபானித்துக் கொடுக்கப் பயன்படுவதோடு, பத்திய உணவாகவும் வழங்கப்படும்.

அதிசாரம், அசீரணசுரம், கபநோய் இருக்கும் காலத்தில் பாலை உபயோகிக்கக்கூடாது.

சன்னி சுரத்தில் பேதியிருந்தால், பசுவின் பாலைக் காய்ச்சி எலுமிச்சம் பழச்சாறு விட்டு முறித்து வடிகட்டித் தெளிவு நீரைக் கொடுப்பதுண்டு.

பாலில் திப்பிலி, அதிமதுரம், மிளகு இவைகளிலொன்றைச் சிறிதளவு சேர்த்துச் சீனாக் கற்கண்டு கூட்டிக் காய்ச்சிக் குடிக்கத் தொண்டைக் கட்டு, வறட்டு இருமல் நீங்கும்.

முலைப்பால்

முலைப்பாலில் குழந்தைகளுக்கு வேண்டிய உணவுச் சத்துக்கனெல்லாம் இருக்கின்ற படியால், எளிதில் சீரணமாகக் கூடிய சிறந்த ஆகாரமாக இருக்கின்றது. முலைப்பாலை உண்ணும் குழந்தைகளுக்குத் தொத்து நோய் உண்டாவதில்லை.

சன்னி, சுர தோடங்களில் மலச்சிக்கல் உண்டாகி மலம் ஆட்டுப் புழுக்கை போல் தீய்ந்தகாலத்து, முலைப்பாலை ஆகாரமாகக் கொடுத்துவர மலத்தை வெளிப்படுத்தும்.

சுரத்தை தணிக்க முலைப்பாலில் பச்சைக்கர்ப்பூரம், குங்குமப்பூ, இலவங்கம், வெற்றிலைக்காம்பு இவைகளைச் சிறிய அளவில் எடுத்து அரைத்துச் சேர்த்து, அப்பாலைச் சீலையில் தோய்த்து நெற்றியில் ஈரம் காயாமல் போட்டுவர சுரம், தலைவலி தணியும்.

நீர், மலம் இவைகள் கட்டுப்பட்டால், துணியை முலைப்பாலில் தோய்த்து அடிவயிற்றில் போட அவை இறங்கும்.

கண்ணோய்க்கு முலைப்பாலைக் கண்ணிலிடுவதும், கண் மருந்துகளை முலைப்பாலில் உரைத்து உபயோகிப்பதும் உண்டு. இதற்குக் கரியநிற மாதர் பாலைப் பயன்படுத்த வேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இலிங்கம், இரசச் செந்தூரம், பூரம் போன்ற தாதுப் பொருள்களைச் சுத்தி செய்யவும், சண்டமாருதச் செந்தூரம், கஸ்தூரி மாத்திரை போன்ற மருந்துகள் அரைப்பதற்கும் இப்பால் பயன்படுகின்றது.

சரணாதித் தைலம் போன்ற தைலங்களிலும் இது சேர்க்கப்பட்டிருக்கின்றது.

முலைப்பால், இஞ்சிரசம் இவை இரண்டும் சேர்ந்த எடைக்குச் சமன் நல்லெண்ணெய் கூட்டிக் காய்ச்சி,

முடித்தைலமாகப் பயன்படுத்த நீரேற்றத்தினால் உண்டான தலைவலி குணமாம்.

எருமைப்பால்

பசும்பாலைவிட எருமைப்பால் ஊட்டத்தில் மேன்மைப்பட்டுள்ளது. இதில் தசை வளர்ச்சிக்குரிய பொருளும் கொழுப்பும் மிகுதியாய் இருக்கின்றன. எருமைப்பால் அழுத்தமாகவும், செரிப்பதற்குக் கடினமாகவும் இருக்கின்றது. அறிவுத் துறையில் உழைப்போர் பசும்பாலையும், உடலுழைப்புடையவர்கள் எருமைப்பாலையும் பயன்படுத்துகின்றனர். இது உடற்கட்டுகளை உறுதிபடுத்தும். எருமைப்பாலைக் குழந்தைகளுக்கும், பெண்களுக்கும், பிணியாளருக்கும், நோயினால் மெலிந்தவர்களுக்கும், அறிவுத் துறையில் உழைப்பவர்களுக்கும், கிழவர்களுக்கும் கொடுத்தல் கூடாது.

வெள்ளாட்டுப் பால்

ஊன் செய் பொருளும், கொழுப்புப் பொருளும் குறைவுபட்ட வெள்ளாட்டுப்பால், இனிப்பிலும் குறைவு பட்டிருக்கிறது. இது விரைவில் செரிக்கக்கூடியது. மருந்துண்ணும் நோயாளிக்கு இப்பால் சிறந்த பத்தியப்பொருளாகும்.

வெள்ளாட்டுப்பாலுடன் நீர் சேர்த்துக் காய்ச்சிக் கற்கண்டுத் தூள் சேர்த்து, காலை மாலைகளில் அருந்திவர கப நோய்கள் தீரும்.

பாண்டு, சோபை, காமாலை, ஆகிய நோய்களுக்கு அயம், அயகாந்தம் இவைகளாலாகிய செந்தூரங்களை வழங்கும்பொழுது காய்ச்சிய வெள்ளாட்டுப்பாலைச் சோற்றுடன் கூட்டிப் பத்தியமாக உண்டுவரின் விரைவில் நோய்கள் நீங்கும்.

மிளகுத் தைலம், வாதகேசரித் தைலம், அமிர்தாமலகத் தைலம், நிர்க்குண்டித் தைலம், மூலயோக நிர்க்குண்டித் தைலம், உளுந்து தைலம், லகுவிடமுட்டித் தைலம் போன்ற தைலங்களில் வெள்ளாட்டுப்பால் சேர்க்கப்படுகின்றன.

கணை, கல்லீரல், மண்ணீரல் முதலிய நோய்களினால் வருந்தும் குழந்தைகளுக்கு வெள்ளாட்டுப்பாலை உணவாக வழங்கிவர அவை குணமடையும்.

இளைப்பு நோயினால் வருந்துகின்றவர்கள், பலவகைத் தாவரங்களை உண்ணும் இயல்புடைய வெள்ளாட்டுப் பாலை உண்டுவர பயனைத்தரும்.

கழுதைப் பால்

கழுதைப் பால், மற்றெல்லாப் பால்களைக் காட்டிலும் இனிப்பாய் இருக்கும். இப்பால், உடல் வெப்பத்தையும் கபத்தையும் தணித்து, குளிர்ச்சியைக் கொடுக்கக் கூடியது. ஈளை போன்ற நுரையீரல் நோய்களுக்குச் சிறந்ததாகக் கருதப்படும்.

கழுதைப்பாலில் உள்ள சத்துக்கள் எல்லாம் தாய்பாலில் உள்ள சத்துக்களின் அளவையே ஒத்திருக்கின்றன. ஆதலின் இதைத் தாய்ப்பாலுக்கு அடுத்தது என்று சொல்லலாம். இது எளிதில் செரிக்கக் கூடியது. தாய்ப்பாலுக்குப் பதிலாக கழுதைப் பாலைக் குழந்தைகளுக்குக் கொடுக்கலாம்.

கழுதைப்பால் ஒரு சிறு பாலாடை அளவில், ஓணான் இரத்தம் ஒன்று அல்லது இரண்டு துளிகள் கலந்து கொடுக்க, கருங்கிரந்தி நோய் நீங்கும். இந்நோய் வராமலிருப்பதற்காகவும் இது வழங்கப்படுகின்றது.

கழுதைப் பாலை அருந்தி வந்தால் மேக நோயும் பயித்தியமும் நீங்கும்.

பேரண்டபற்பம் செய்வதற்கும் அப்பற்ப அனுபானத்திற்கும் இப்பாலைப் பயன்படுத்துவதுண்டு.

தயிரின் பொதுக் குணம்

"தயிருணப் பயித்திய சஞ்சல மகற்றி மெய்
யெயிலென வின்பமு மெ;திடப் புரியும்"

– ப.கு.சி

பித்தாதிக்கத்தினால் உண்டாகும் சாதாரண நோய்களை எல்லாம் ஒழித்து உடம்பிற்கு உறுதியையும் சுகத்தினையும் உண்டாக்கும்.

தயிர் வகை

பசுவின் தயிர்க் குணம்

"பசுவின் றயிராற் பசிமிகவு முண்டா
மிசிவுறும சீரணணோ யேகு — பசையகன்ற
தாக மிளைப்பிருமல் தாங்கொணா மெய்யெரிவு
மேகு முலகி லியம்பு"

– ப.கு.சி

பசுவின் தயிரால் பசியுண்டாகும்; இசிவு, அசீரண ரோகம், தாகம், களைப்பு, இருமல் எரிச்சல் இவை நீங்கும்.

ஆடையெடுத்த தயிர்க்குணம்

"ஆடையெடுத்தயி ரையமி ளைப்பறுக்கும்
நாடு கிரிச்சரத்தை நாடவொட்டா — தாடொலியா
லுண்டாங் கிராணி யுறைமேகம் போக்கிவிடுந்
தண்டார் குழலணங்கே சாற்று"

– ப.கு.சி

ஏடு நீக்கிய தயிரானது சிலேத்துமரோகம், ஆயாசம் மூத்திரக்கிரிச்சரம், வாதகிராணி, மேகரோகம் இவற்றை நீக்குமென்க.

எருமைத் தயிர்க் குணம்

"எருமைத் தயிருக் கெரிவு பித் தம்போம்
வருமை கரப்பனொடு வாதம் — பெருமிதஞ்சேர்
தூல வுடலுமாந் தூயறிவு மாந்தமுறுங்
கோல விழிகுளிருங் கூறு"

– ப.கு.சி

எருமைத் தயிரினால் எரிச்சலும் பித்தநோயும் போகும். கபத்தைப் பற்றிய கரப்பான், வாதரோகம், அதிதூல ரோகம், புத்தி மந்தம், கண்ணுக்குக் குளிர்ச்சி ஆகிய இவை உண்டாகுமென்க.

வெள்ளாட்டின் தயிர், மோர் இவைகளின் குணம்

"வெள்ளாட்டின் வெண்டயிரோ மிக்கனல மாகுமதற்
குள்ளாடை யான்மந்த முண்டென்பார் — வெள்ளாட்டின்
மோரோமே கத்தை முதிரா தடித்துவிடும்
பாரோ ரறியப் பகல்"

– ப.கு.சி

வெள்ளாட்டின் தயிரால் அதிக உஷ்ணமும், அதன் ஏட்டால் மந்தமும் விளையும். மோரானது பிரமேக ரோகத்தைப் போக்கும்.

செம்மறியாட்டுத் தயிர்க் குணம்

"செம்மறியின் றன்தயிரைத் தின்ன மதுரமிகுங்
கொம்மைமுலை மாதரசே கூறக்கேள் — அம்ம
கரப்பான் சொறியுங் கடுப்பிரத்த வாய்வு
மூரப்பா முடல்கெடுமென் றோர்"

– ப.கு.சி

மதுரமுள்ள செம்மறியாட்டின் தயிரை உண்டால் கரப்பான், சொறி, மூலக்கடுப்பு, இரத்த மூலம், வாதரோகம் ஆகிய இவைகள் பெருகுவது மன்றிச் சரீரத்திற்குத் துன்பமும் உண்டாகும்.

ஒட்டைத் தயிர் குணம்

"தீபனமு முண்டாஞ் சிறுகரப்பான் புண்ணுமாற்
பூபதிபொன் மேனி புளகிக்குந் — தாபதமாம்
ஒட்டைத் தயிர்நிதமு முண்ணவதி தாகம் போந்
துட்டக் கிருமியறுஞ் சொல்"

– ப.கு.சி

ஒட்டைத் தயிரைக் குடித்தால் சடராக்கினி, சிறு கரப்பான், விரணம், உடலிற்கு அழகு இவை உண்டாகும். தாகமும் மலக்கிருமி ரோகமும் நீங்குமென்க.

மோரின் பொதுக் குணம்

"மோருண வளிமுதன் மூன்றையு மடக்கி
யாருமெய் யினைத்தின மாதரித் திடுமே"

– ப.கு.சி

மோரானது வாத முதலிய முக்குற்றங்களையும் அதிகரிக்க வொட்டாமல் அடக்கி, உடம்பை நாடோறும் காப்பாற்றும்.

மோர் வகை

பசுவின் மோர்க் குணம்

"வீக்க மகோதரமுள் வீறுகுன்மம் பாண்டுபித்தந்
தாக்குமருந் திட்டததி சாரமொடு — கூக்குரலே
மாறாத் திரிதோஷ மந்தமன்ற றாகம்போம்
வீறாவின் மோருக்கு மெய்"

– ப.கு.சி

பசுவின் மோரினால் வீக்கம், மகோதரம், வயிற்று வலி, பாண்டுரோகம், பித்தகோபம், இடுமருந்தால் வரும் நோய்கள், பேதி, திரிதோஷம், அக்கினிமந்தம், வெப்பம், நீர்வேட்கை இவைகள் போம்.

எருமை மோர்க் குணம்

"தாகங் கிராணி சலங்கழிச்சல் காமாலை
ஆகங் குடைபுழு மற்றுப்போ — மோகமுவுறுந்
தேவா மிருதமுமாஞ் சீர்மா னிடர்தமக்கு
மூவா மருந்தெருமை மோர்"

– ப.கு.சி

எருமை மோரினால் தாகம், கிராணிரோகம், சலக்கழிச்சல், காமாலை, கிருமி ஆகிய இவைகள் நீங்கும். போக விருப்பமாம் சிறந்த மானிடர்களுக்கு இது கெடாத அமுதமாகும்.

ஒட்டையின் மோர்க் குணம்

"ஒட்டைமோர் மெத்தவன லோங்கியவா தந்தணிக்குங்
கிட்டுமந்த நெய்ப்பெருமை கேட்பீரால் — நெட்டுலகின்
மந்தஞ்செய் தாலும் வலிவிந்து வைப்பெருக்கு
மாந்தஞ்சேர் கண்ணா யறி"

– ப.கு.சி

ஒட்டையின் மோர் பித்தவாததொந்தத்தைச் சாந்தி செய்யும். அதன் நெய்யானது அக்கினிமந்தஞ் செய்வதாயிருந்தாலும், சுக்கில தாதுவை விருத்தி செய்யும்.

வெண்ணெய்

"வெண்ணெயை யுண்டிட விந்துவைப் பெருக்கிமேற்
றண்ணென மெய்வலி தனக்குர மாகுமே"

– ப.கு.சி

வெண்ணெயை உண்டால் தாதுவிர்த்தியையும், தேகத்திற்குக் குளிர்ச்சியையும், பலத்தையும் உண்டுபண்ணும்.

வெண்ணெய் வகை

முலைப்பால் வெண்ணெய்க் குணம்

"கண்ணெரிவுங் கையெரிவுங் காலெரிவு நாசிகளி
லண்ணெரிவு மண்ணி லகன்றிடுங்காண் — தண்ணா
ரலைப்பால் வன் மாதுக் கணிசெய்யு மாதர்
முலைப்பால்வெண் ணெய்க்கு முரிந்து"

– ப.கு.சி

சிறந்த மாதர் முலைப்பால் வெண்ணெய்க்குக் கண், கை, கால், நாசி இவ்விடங்களில் உண்டாகும் எரிச்சல் நீங்கும்.

பசு வெண்ணெய்க் குணம்

"கண்ணி லெழுநோயுங் கண்ணெரிவும் பீளையும்போ
மெண்ணும் பசியு மெழும்புங்காண் — நண்ணரிய
ஆவினறும் வெண்ணெய்க் ககலும்வன் மேகமெல்லாம்
பூவினர்க் கெல்லாம் புகல்"

– ப.கு.சி

வெண்ணையால் கண்ணோய், கண்ணெரிச்சல் பீளைசாரல், பிரமேகம் இவை போம் பசியுண்டாம்.

எருமை வெண்ணெய்க் குணம்

"எருமைவெண் ணெய்யில் லெரிநீ ரிழிவு
வருவமயி லேகேளிப் பாரிற் — கிருமியுறும்
மந்தமாம் வாதமிகு மாறாக் கபங்கரப்பான்
றொந்தமா நோயடருஞ் சொல்"

– ப.கு.சி

எருமை வெண்ணெயினால் பித்த மூத்திரகிரிச்சரம் நீங்கும். மலாசயக் கிருமி, அக்கினி மந்தம், வாத ரோகம், கபாதிக்கம், கரப்பான், தொந்தரோகம் ஆகிய இவை உண்டாகும்.

வெள்ளாட்டு வெண்ணெய்க் குணம்

"வெள்ளாட்டு வெண்ணெயது வீறுசுரந் தான்போக்குந்
தள்ளாடு பித்தந் தணிக்குங்காண் — தெள்ளுமொழி
மானே பசியெழுப்பும் வன்கரப்ப னைக்கடற்குட்
டானே துரத்திவிடுஞ் சாற்று"

– ப.கு.சி

வெள்ளாட்டு வெண்ணெய் சுரரோகம், பித்த நோய், கரப்பான் ஆகிய இவற்றை நீங்கும். பசியை உண்டாக்கும்.

ஒட்டை வெண்ணெய்க் குணம்

"கட்டழகு செய்யுநற் காரிகையிர் கேண்மின்கள்
ஒட்டைவெண்ணெய் மந்த மொடுவாதங் — கிட்டவைக்கும்
நீரழிவுக் கேற்கு நிறைபித்தம் போக்கிவிடும்
பாரறியச் சொன்னோம் பகுத்து"

– ப.கு.சி

ஒட்டை வெண்ணெயானது நல்ல அழகையும் மந்தத்தையும் வாதரோகத்தையும் உண்டாக்கும். நீரிழிவையும் பித்த கோபத்தையும் நீக்குமென்க.

நெய்ப் பொதுக் குணம்

"நெய்யுண வுண்டவை நேர்வுறச் செய்துமேன்
மெய்யையுந் திண்ணிய மேருவெனச் செய்யும்"

– ப.கு.சி

நெய்யை வேண்டிய அளவாய் உணவுகளிற் சேர்த்து உட்கொள்ளின், அது உண்ட உணவைச் சரிப்படுத்திச் சரீரத்திற்கு மிகுந்த பலத்தையும் புஷ்டியையும் உண்டாக்கும்.

நெய்வகை

பசுவின் நெய்க் குணம்

"தாகமுழ லைசுட்கம் வாந்தி பித்தம் வாயுபிர
மேகம் வயிற்றெரிவு விக்கலழல் — மாகாசங்
குன்மம் வறட்சி குடற்புரட்ட லஸ்திசுட்கஞ்
சொன்மூலம் போக்குநிறைத் துப்பு"

– *ப.கு.சி*

பசுவினது நெய்யானது தாகம், உழலைப்பிணி, அதிசுட்கரோகம், வாந்தி, பித்தாதிக்கம், வாத விஷம், விரணப் பிரமேகம், வயிற்றிலெரிவு, பித்த விக்கல், இருமல், வயிற்றுவலி, வறட்சி, அஸ்தி சூம்பல், மூல ரோகம் ஆகிய இவற்றை நீக்கும்.

காரம் பசுவின் நெய்க்குணம்

"காரம் பசுநெய்யாற் கண்ணுக் கொளியுண்டாம்
நீரார் விழிபுருவ நெற்றிசிரச் — சூடொழியும்
மெய்யிற் குழைவு மிளிர்பொன் னிறமுண்டாம்
நெய்யிலது மேலே நிகழ்ந்து"

– *ப.கு.சி*

காரம் பசு நெய்யால் நேத்திரத்திற்கொளியும், உடல் வன்மையும், பொற்சாயலும் உண்டாகும். கண், புருவம், நெற்றி, தலை இவற்றைப் பற்றி நோய்கள் விலகும்.

எருமையின் நெய்க் குணம்

“புத்திகெடு மெய்யழகு போதக் கெடுநயனம்
மெத்தவொளி மாறிவிடு மேதினியிற் — சத்தியமாம்
வாதமொடு பித்த மாறாக் கரப்பானாங்
கோதெருமை நெய்யருந்திற் கூறு”

– ப.கு.சி

எருமை நெய்யால் அறிவுகெடும் அழகு, கண்ணொளி இவைகள் மங்கிவாழும் வாதபித்த தோஷம் கரப்பான் இவை உண்டாகும்.

வெள்ளாட்டின் நெய்க்குணம்

“ஐயைப்போக் கும்வாதத் தாண்மையைக் கெடுத்துவிடு
மெய்வளமிக் கும்விழி யைத்துலக்கும் — வையகத்திற்
பத்தியத்திற் காகும் பயமிலைவெள் ளாட்டின்னெய
நித்தியங்கொண் டாலும்கொள் நீ”

– ப.கு.சி

வெள்ளாட்டின் நெய்யை உண்ணில் அது சிலேத்து மாதிக்கத்தையும் வாத கோபத்தையும் போக்கும். சரீரத்தை வளர்ப்பது மன்றி கண்ணுக்கொளியை உண்டாக்கும்; பத்தியத்திற்கும் உதவும்.

செம்மறியாடு, பள்ளையாடு இவைகளின் நெய்க்குணம்

“செம்மறியி னெய்யதனைத் தின்ன மதுரமுமாங்
கொம்மைமுலை மாதரசே கூறக்கேள் —
ஐயமுறுங்காண்
பள்ளையின்னெய் பித்தொழிக்கும் பாருலகி
லெல்லாருங்
கொள்ளத்தான் மந்தமுறுங் கூறு”

– ப.கு.சி

மதுரமுள்ள செம்மறியாட்டு நெய்யால், கபநோயதிகரிக்கும், பள்ளையாட்டு நெய் பித்த நோயை ஒழிக்கும், மந்தமுமாமென்க.

கலப்பு நெய்யின் குணம்

“நெய்யுட் பலநெய்க்கு நீள்சுக்கி லம்பெருகும்
வெய்யபசி யுண்டாம் விடும்பித்த — மெய்யனலா
லுள்ளபித்த வெக்கைபோ மோங்குயிருந் தாளிலைக்குங்
கொள்ளத்தெரியுங் குணம்”

– ப.கு.சி

எருமை நெய் முதலிய கலப்பு நெய்யால் சுக்கிலம் பெருகும். தீபனமும் உண்டாகும். பித்ததோஷமும் தேகக் கொதிப்பாலாகிய பித்த சுரமும் போம். உயிரைத் தாங்குகின்ற உடலும் பலக்கு மென்க.

தயிர்

சாதாரணமாகப் பகல் உணவின் முடிவில் தயிர் சேர்த்து உண்பது வழக்கம். இதனால் உடலுக்கு அழகும் வன்மையும் உண்டாம். இரவில் உண்ணாமல் இருந்தால் சன்னிநோய் சேராது. இதனை,

“இராசனி யளையிலை இராசனி யிராசனீ” என்ற அடியால் உணர்க.

வெள்ளை, வெட்டை, காமாலை நோய்களை நீக்கக்கூடிய பச்சிலைகளை அரைத்துத் தயிருடன் கொடுப்பது வழக்கம்.

தயிரைத் துணியில் மூட்டையாக முடிந்து கட்டி, அதனின்று வடியும் தண்ணீரைக் குடல் மெலிந்தவர்கட்குக் கொடுத்துக் கொண்டுவர, அது உணவாகவும் ஆகி, வயிற்றில் காணும் வெப்ப புண்களையும் ஆற்றிப் பசியையும்

உண்டுபண்ணும். இத்தயிர்த் தெளிவை (தயிர்மஸ்து), அரக்குத் தயிலம் போன்ற தைலங்களில் சேர்ப்பதுண்டு. தோல் நோய்களுக்கு நீரடி முத்து, கார்போக அரிசி, கொப்பரைத் தேங்காய், காட்டுச் சீரகம், கருஞ் சீரகம், கெந்தகம் இவை போன்ற பொருள்களைத் தயிரில் கலந்து அரைத்துப்போட சொறி சிரங்கு, கரப்பான் முதலியவைகள் தீரும்.

அசீரண பேதிக்கு வழங்கப்படும் தயிர்ச்சுண்டிச் சூரணத்திலும் சேருகின்றது. வற்றலிடவும் தயிர் உபயோகப்படுகிறது.

உணவு முடிவில் மோர் சேர்ந்து உணவு உண்பது தமிழ்நாட்டில் பழக்கத்தில் இருக்கின்றது. இது மலசலக்கட்டு உண்டாகாமல் உடல் வெப்பத்தைத் தணிக்கும். "நீரை விட்டு மோரைப் பெருக்கு" என்னும் பழமொழிப்படி, அன்று கடைந்த மோரை நீர் விட்டுப் பெருக்கித் தாராளமாய்ப் பயன்படுத்திக் கொண்டு வர கணுக்கால் வீக்கம், வலி முதலியன நீங்கும். நீர் இறங்கும்.

கடுநடையாளரும், கடும்பசியுள்ளோரும் அதிக வெப்படைந்தோரும் பசுவின் மோரை யருந்த, அழல் தாகம் முதலியன தீர்த்து நன்மையடைவர்.

குட்டம் முதலிய நோய்களுக்கு மருந்தருந்தும் காலத்து, நீர் பெருக்கிய மோரை அடிக்கடி உட்கொண்டுவர, சிறுநீர் வாயிலாகத் துர்நீர் கழிந்து சுகம் கொடுக்கும்.

மகோதரம், வயிற்றுவலி, பாண்டு, பித்தகோபம், பேதி, தாகம், பசிமந்தம் முதலிய நோய்களில், இது பத்தியப்பொருளாகவும், துணை, மருந்தாகவும் வழங்கப்படுகின்றது.

152 -2 - 21a

சுத்தியாரநாளத் தைலம் போன்ற தைலங்களில் மோரில் நீர் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

வெண்ணெய்

வெண்ணெய்க்கு உள்ளழலாற்றி, உடலுரமாக்கி ஆகிய செய்கைகள் உள. உண்ணும் பொருள்களிலும், சிற்றுண்டி வகைகளிலும், வெண்ணெயைச் சேர்த்துக் கொண்டால் உடல் வன்மை பெறும்.

பழக்கிராம்பு பக்குவ வெண்ணெய் போன்ற கண்ணிலிடு மைகளிலும், அமிர்த வெண்ணெய் போன்ற புண்ணிலிடு மருந்துகளிலும் வெண்ணெய் சேருகின்றது.

வெண்ணெய்யைத் தடவ வாயில் உண்டாகும் விரணங்கள் நீங்கும்.

சோறு வடித்துச் சூடாக இருக்கும் சமயம் சிறிது வெண்ணெய் கூட்டி பிசறி, ஒரு சுத்தமான துணியில் வைத்து முடிச்சுக்கட்டிப் பொறுக்கக்கூடிய சூட்டில் கண்களுக்கு ஒற்றமிடக் கண்வலி நீங்கும்.

நீரெரிச்சல், நீர்ச்சுருக்கு, நீரடைப்பு, வெள்ளை முதலிய நோய்களுக்கு கல்நார் பற்பம், சிலாசத்துப் பற்பம், குக்கில் பற்பம் முதலியவற்றை உள்ளுக்குக் கொடுக்கும்போது, பசுவின் வெண்ணெயை அனுபானமாகக் கொண்டால் விசேட நன்மை தரும்.

"ஐயவி பூதி யவுரி கிலுகிலுப்பை
யையவி பூதி யறமிரட்டி — யையவி
யேகமட்ட மீன மிரப்பை துலாந்தனுவோ
யேகமட்ட மினனி யில்". – **தே.ய.வெ**

வெண்ணெய் பற்பமாவதற்கு, மேற்படி வெண்ணெய் ஒரு பலத்திற்கு (40 கிராம்) நீலியிலைச்சாறு 1 பலம் (40 கிராம்) விட்டு அரைத்து, வில்லை தட்டி இரவில்

பனியில் வைத்து, மறுநாளும் இப்படியே செய்து, எட்டு நாட்களரைத்து, எட்டு நாட்கள் நிழலிலுலர்த்தி அதன்பின் வட்டக் கிலுகிலுப்பைச் சாறு, சீந்திற் சமூலச்சாறு, அதன்பின் வட்டக் கிலுகிலுப்பைச்சாறு, குப்பைமேனிச் சமூலச்சாறு இவை ஒவ்வொன்றையும் தனித்தனியே விட்டு, முன்போன்றே ஒவ்வொன்றையும் எட்டு நாட்கள் அரைத்து, எட்டு நாட்கள் உலர்த்தி, இம்முறையில் அறுபத்து நான்கு நாட்கள் அரைத்து, அறுபத்தைந்தாம் நாள் வில்லையை ஓட்டில் வைத்துக் கவசித்து, ஒருநாள் வெய்யிலிலுர்த்தி மறுநாள் காட்டு வரட்டியிற் புடமிட்டு ஒரு நாள் ஆறவைத்தெடுக்கப் பற்பமாம்.

இப்பற்பத்தை, ஒரு கடுகு முதல் எட்டுக் கடுகு வரையிலும் உண்ணில் முறையே உத்தமம், மத்திமம், அதமம், அதமாதமம் ஒரு புடைத் துணிவு, முழுத் துணிவு, அனந்தம், அபரிமிதம் என்பதாம். இதைப் பங்குனி, ஆனி, ஐப்பசி, மார்கழி என்னும் நான்கு மாதங்கள் நீங்க, மற்ற மாதங்களிலே மருத நிலத்திலே சாப்பிட வேண்டும்.

"நவநீத பற்பத்திற் கனுபானமும் தீரும் நோய்களும்
மருத்தாதி மேகம் வனிவல்லை குன்மமூலம்
மருந்தாதி மம்மயிர்நீர் மாலி — மருந்தாதி
காயமளை சாயக பித்தலி லாங்கலிபால்
காயம ளைகோர கை".

– தே.ய.வெ

வயிற்றுவலி, பக்கத்தையிழுத்துக்கொண்டு வேதனை செய்தல், தசை நோதல் என்னும் குணங்களுடைய வாத மேகத்திற்கு தேனிலும், வாய்நீர் பெருகுதல், வாய் இலைத்து அரோசகமாயிருத்தல், வயிற்றெரிவு, மாரடைப்பு என்னும் இக்குணங்களுடைய பித்த மேகத்திற்குப்

பனித் தண்ணீரிலும், கால் கை ஆகிய இவற்றின் வீக்கம், கள்ளைப் போல் நீரிறங்கல், அதி தாகம், முகவெளுப்பு என்னும் இக்குணங்களுடைய சேத்தும மேகத்திற்கு சர்க்கரையிலும், வாதசுரத்திற்குக் குளிர்ந்த நீரிலும், பித்த சுரத்திற்குக் கள்ளிலும், கபசுரத்திற்குச் சீந்தில் இலைச் சாற்றிலும், வாதவல்லைக்கு வெந்நீரிலும், பித்த வல்லைக்குத் தயிரிலும், கபவல்லைக்குக் கோரைச் சாற்றிலும், வாத குன்மத்திற்கு விளாமரப்பட்டையின் சாற்றிலும், பித்த குன்மத்திற்குத் தேங்காய்ப் பாலிலும், கபகுன்மத்திற்கு முலைப்பாலிலும், வாத மூலத்திற்கு வெண்காயச் சாற்றிலும், பித்த மூலத்திற்குக் கற்றாழைச் சாற்றிலும், கபமூலத்திற்குக் கஞ்சாச் சாற்றிலும் மேற்படி மருந்தைச் சேர்த்துக் கொடுக்க நீங்கும்.

நவநீத பற்பம் (வேறு)

"தூசனை பகண்டை வாதுமைநெ யிமுன்றினாய்

பாசறு நவநீதம் பற்பம் தாமே"

– *தே.கா.*

கொக்கு, இலந்தை, வாதுமை நெய் இம்மூன்றினாலும் குற்றமற்ற நவநீதமானது பற்பமாகும்.

இதன் செய்முறை

பசுவின் வெண்ணெய் பலம் 1—க்கு (40 கிராம்), கொக்கினது காலெலும்பின் மேற்றோல் பலம் 2 (80 கிராம்) இவற்றை ஒன்று சேர்த்து, நாழிகை அரைத்து, இலந்தையிலைசாறு 2 பலம் 70 கிராம், வாதுமை நெய் 2 பலம் 70 கிராமை ஒரே உருண்டையாக உருட்டி, அதன்மேல் இலந்தைப்பூ, கண்ணுவல்லி இலை இவை இரண்டையும் அரைத்துக் கவசித்து, மூசைக்குள் வைத்து,

மேல்மூடிச் சிலை மண் செய்து, ஓர் இரவு முழுவதும் பனியில் வைத்து, மறுநாள் சூரியோதயத்திலெடுத்துப் புடமிடப் பற்பமாகும்.

நெய்

சுடு சோற்றில் நெய் விட்டுப் பிசைந்து சாப்பிட்டால், இது தேகத்திலுள்ள கொதிப்பை ஆற்றிக் குடற் புண்ணை நீக்கும், இது மச்சை தாதுவை விருத்தி செய்து, இளைப்பு நோய் முதலிய நோய்களுக்கு இடங்கொடுக்காமல் பாதுகாக்கும். நெய்யை உருக்கிப் புசிக்க வேண்டும். உருக்காமல் புசித்தால் வயிற்றில் மந்தத்தை உண்டுபண்ணும். இதனை, "இழுதை யதீயெனி லிழுதை யாக்கும்" என்ற அடியால் உணர்க.

சுக்கு, மிளகு, நற்சீரகம் ஆகிய இம்மூன்றையும் வறுத்துப் பொடி செய்து நெய் சேர்த்து சாப்பிட்டுவர செரியா மந்தமும் பேதியும் நீங்கும்.

சோற்றுக் கொதிநீரில் சிறிது நெய் சேர்த்து அருந்த வயிற்று வலி நீங்கும். இந்நீரில் பனங்கற்கண்டு சேர்த்து அருந்தினால் உடற்சூடும் புகை இருமலும் நீங்கும்.

பற்ப செந்தூரங்களுக்கு, நெய் துணைப் பொருளாகும் இலேகியங்களிலெல்லாம் நெய் சேரும்.

சிற்றுண்டிகளை நெய்யில் வேகவைப்பது சிறந்தது.

இது தைலம், கிருதம் முதலியவற்றில் சேரும்.

நெய்யைத் தலையில் தேய்த்து மூழ்கிவர, இரசதாதுவின் கொதிப்பால் ஏற்பட்ட எரிச்சல், பித்தம், மூர்ச்சை, இரத்த பித்தநோய் முதலியன நீங்கி நன்மை உண்டாம்.

படுக்குமுன் உள்ளங்காலில் நெய்பூசித் தவிடு ஒற்றி, காலையில் கழுவிச் சந்தனம் பூசிவர கண்ணோய்கள் அணுகா.

பிச்சி

Bile

வேறு பெயர்கள்:

பித்து, பிச்சி

பசு, எருமை, ஆடு, மான், பன்றி, நாய், பூனை, மயில், பாம்பு, மீன், கரடி, புலி முதலியவற்றின் பித்து மருந்து முறைகளில் சேர்க்கப்படுகின்றன.

பல்வகை பிச்சியின் பயன்கள்

காட்டுச்சீரகம், உலர்ந்த தராயிலை, சம எடை எடுத்து சூரணம் செய்து வெள்ளாட்டுப்பிச்சு விட்டு நான்கு நாள் அரைத்து தேற்றான் விரை பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி வேளை ஒன்றுக்கு ஒரு மாத்திரை வீதம் இருவேளை அருந்திவரவேண்டும். இவ்விதம் ஒரு மண்டலம் உட்கொள்ள வெண்குட்டம் மாறும்.

எஃகு சுத்திக்கு வெள்ளாட்டு பிச்சி பயன்படுகிறது.

வெள்ளாட்டு பிச்சியில் முற்றிய சத்திச்சாரணை வேரை இட்டு பாவனை செய்து உலர்த்தி நந்தியாவர்த்த பூச்சாறு விட்டு உரைத்து கண்ணிலிட கண்ணோய் யாவும் தீரும்.

இலிங்கத்துண்டை வெள்ளாட்டு பித்தப் பைக்குள் இட்டு கட்டி பித்தால் சுருக்கு கொடுக்கவும். இதனால் இலிங்கம் கட்டும்.

புலிப்பிச்சில் இலவங்கத்தை ஊறவைத்து, உலர்த்தி, வேளை ஒன்றுக்கு ஒரு இலவங்கம் வீதம் 3 — நாட்கள் அருந்த சுவாச காசம் தீரும்.

“காடியிலூறக் கடிப்பகையுஞ் சேர்தரைப்

போட ரவியிற் புடம் போல — வாடியபின்

உண்கடநீரிலுண்ணி லுப்புசங்கா மாலையறும்

எண்கினது பிச்சுவசை யில்”

– தே.வெ

கரடியின் பித்தை காடியில் ஊறவைத்து அத்துடன் வேம்பு சேர்த்தரைத்து வெயிலில் உலர்த்தி பொடித்து கடுக்காய் நீரில் கொள்ள உப்புசமும் தண்ணீரில் கொள்ள காமாலையும் தீரும்.

“சேத்துமத்தை வாட்டுமது செய்வதுகே ளப்பொருளை

மாத்திரம்பூ மிக்குளிட்டு மண்ணாக்கிப் — பாத்தி

பொசுங்கு மதில் விளைந்த பூவரசின் கொட்டை

புசங்கத்தின்பிச்சு நமன் போல்”

– தே.வெ

பாம்பின் பித்தை பூமியில் புதைத்து அவ்விடத்து பூவரசு மரத்தை நட்டுவளரச் செய்து அதன்காயை உபயோகிக்க எமனைப் போல் உயிர்களை வாட்டும் சேத்தும நோய் நீங்கும்.

சுபச்சந்த பைரவ மாத்திரை செய்முறையில் பன்றியின் பித்து சேரும்.

காலாக்கினி இரசம் செய்முறையில் பன்றி, மீன், மயில், ஆடு இவற்றின் பித்து வகைகள் சேரும்.

மனோசிலை, இரசம், அரிதாரம், துத்தம், நேர்வாளம், கந்தகம், வெண்காரம், இலுப்பை விதை, நாபி, ஆகியவை சம அளவு எடுத்து வேலிப்பருத்தி சாறு விட்டரைத்து அதற்கு சம எடை நல்ல பாம்பின் பித்து சேர்த்து பிசறி

ஈயக்குப்பியில் வைத்து மூடி சீலைசெய்து வாலுகா எந்திரத்தில் வைத்து 9 மணி நேரம் எரித்து எடுக்கவேண்டும். இதுவே "சூசிகாபாணம்" என்பதாம்.

மிக்க சுரம், சன்னி நோய்களில் குன்றிமணி அளவாய் உச்சியில் தேய்த்து ஊசிமுனை அளவு உள்ளே கொடுக்க உடனே தீரும் என்பதாம்.

கோகிலப் பிச்சால் இரசக்குரு செய்முறை தேரையர் வெண்பாவில் கூறப்பட்டுள்ளது.

புலி

Tiger
Panthera tigris

வேறு பெயர் வல்லியம்

புலியின் தோல், இறைச்சி, இரத்தம், கொழுப்பு, பித்தம், நகம், மீசை, என்பு, மலம் ஆகியவை மருத்துவத்தில் பயன்படும்.

குளிர்ச்சியை உடைய உடலினர்க்கும், உடல்வன்மை குறைந்தவர்களுக்கும், புலித்தோலைப் படுக்கையாகவும், இருக்கையாகவும் உபயோகிக்கலாம்.

புலி மாமிசமும், இரத்தமும் எளிதில் சீரணமாகி உடலில் சேரும். ஆதலால், இவற்றை இளைப்பு நோயிலும், இளைக்கச் செய்கின்ற மற்றைய நோய்களிலும் பயன்படுத்தல் உண்டு. மற்றும் இறைச்சியில் உன்மாத நோய் நீங்கும் என்பதை,

"வருபுலி மாங்கிசத்தால் மாறுமுன் மாதரோகம்"

என்னும் பதார்த்தகுண சிந்தாமணி அடியால் உணரலாம்.

புலி இறைச்சியும், இரத்தமும் எல்லாக் காலங்களிலும் கிடைக்காது. ஆதலால், புலியைக் கொல்லுங் காலத்து இரத்தத்தை ஒரு பாண்டத்தில் பிடித்துச் சீலையில் நனைத்து உலர்த்தி வைத்துக் கொண்டு, வேண்டுங் காலத்து ஒரு துண்டை நீரில் நனைத்துக் கரைத்துக் கையாளுவதும், இறைச்சியை நீண்ட மெல்லிய துண்டுகளாக நறுக்கி உலர்த்திப் பைகளில் வைத்துக் கொண்டு விற்பதும், அதை வேண்டுங் காலத்துக் கையாளுவதும் பழக்கமாகும்.

புள்ளியுடைய செம்புலியின் இறைச்சியை, அம்மைநோய்த் தற்காப்பிற்காக மகாராஷ்டிரர்கள் அருந்துகிறார்கள்.

உள்ளங்கால், உள்ளங்கைகளில் உண்டாகும் கட்டிகளுக்குப் புலி மாமிசத்தை வைத்துக் கட்டத் தீரும். புலியின் கொழுப்பைக் கீல்வாயு, பட்சவாதம், சுளுக்கு, வீக்கம் முதலிய நோய்களுக்கு மேற்பூச நீங்கும்.

நரம்புத் தளர்ச்சிக்குக் கொழுப்பை மேற்பூசி மர்த்தனம் செய்து வெந்நீர் ஊற்றத் தீரும்.

நபுஞ்சகத்திற்கு இதை லேபமிட நீங்கும்.

புலிக் கொழுப்பைக் குன்றியளவு வாழைப்பழத்தில் புதைத்து, உண்ண அம்மைக்குத் தற்காப்பாகும்.

நிற்க, புலியின் மீசை கொடிய நச்சுப் பொருளாகுமென்றும், மீசையின் மயிர் இடு மருந்தாக உபயோகித்தல் உண்டென்றும், இதனால் இளைப்பு தோன்றுமென்றும் கூறுகின்றனர். இக்காரணத்தினாலேயே, புலியைக் கொன்ற பின்பு மீசையைக் கத்தரித்துக் கொளுத்திப் பிறர் பயன்படுத்தாவண்ணம் செய்கின்றனர்.

புலி மீசையைப் பாலிலிட்டுக் காய்ச்சித் தேய்த்துக் கடைந்து எடுக்கும் வெண்ணெயை, புலிக் கொழுப்பிற்குப் பதிலாக மேலுக்கு மாத்திரம் உபயோகிப்பதுண்டு. அம்மோரையும், மீசையையும் மற்றவர் பயன்படுத்தாத வண்ணம் அகற்ற வேண்டும்.

ஆண், பெண், புலிகளின் என்பைத் தனித்தனியாகக் கற்றாழைச் சாறுவிட்டு அரைத்து, வில்லை செய்துலர்த்திப் புடமிட்டெடுக்க பற்பமாம். இவற்றைப் பழச்சாராயத்தில் அனுபானித்துத்துக் கொடுக்க வேண்டும். ஆண் புலி என்பினால் செய்யப்பட்ட பற்பம் வாதமிகுதிப் பிணியையும், பெண் புலி என்பினால் செய்யப்பட்ட பற்பம் பலவகைப்பட்ட தலைவலிப் பிணிகளையும் போக்கும்.

புலி மலத்தினால் தாளகம் நீறாகும். புலியின் ஈரல் ஒன்பது உலோகங்களையும் மருந்தாக்க நன்கு கைவசமாகும் சூலை, கயம் ஆகிய நோய்களை நீங்கும்படி விளக்கும். இம்முறையால் மருத்துவர்க்கு கூரிய அம்புபோலாம் இதனைக் கீழ்கண்ட பாடல் கூறும்.

"நற்கை வசமா நவலோக முஞ்சூலை
நிற்கக் கயத்தை நிராகரிக்கும் வங்கமென்ன
சொல்லுவேன் பண்டிதர்க்குச் சூரச்சிலிமுகமாம்
வல்லியத்தி னீரல் மகிமை".

– தே.வெ

புனுகு (புழுகு)

Viverra tangalunga

இதற்குப் பிலாளகம் என்னும் வேறு பெயரும் உண்டு. இது வடமொழியில் கந்த மார்ஜாலபீஜம் என்று வழங்கப்படுகின்றது. இது புனுகுப் பூனை என்று ஒருவிதப் பூனையினின்று எடுக்கப்படுகின்றது. இப்பூனை கேரளம் ஆப்பிரிக்கா, தென் ஆசியா முதலிய இடங்களில் அதிகமாகக் கிடைக்கும். இப்பூனையின் மல வாய்க்கும், குறிக்கும் மத்தியில் இரண்டு பைகள் இருக்கின்றன. இந்தப் பைகளில் வாசனையுள்ள ஒரு வகைப் பிசுபிசுப்புப் பொருள் சேருகின்றது. இந்த நெய்ப்புப் பொருளே புனுகாகும். புனுகைச் சேகரிப்பதற்காக மேற்படிப் பூனையை ஒரு கூட்டில் அடைத்து அக்கூட்டின் நடுவில் ஒரு மூங்கில் துண்டைச் சுழலும்படி இணைத்து வைத்தால், இப்பூனை அடிக்கடி மலவாயை இம்மூங்கிலின் மேல் தேய்க்கும். அப்பொழுது மூங்கிலின் மேல் புனுகு படியும். இதனைச் சேரச்சேர வழித்து எடுத்துக்கொள்வது வழக்கம். சவ்வாது என்னும், பொருளும் புனுகுப் பூனையினின்றும் மேற்கூறியவாறே எடுக்கப்படுகின்றது. இதன்குணம் முதலியன புனுகை ஒத்திருக்கும்.

புனுகையும் சவ்வாதையும் மணத்திற்காக மணப்பூச்சு, வர்த்தி முதலிய மணப்பொருள்களில் சேர்க்கின்றனர். பண்டை நாளில் மக்கள் கூந்தலுக்கு மணம் ஊட்டுவிப்பதற்காக புனுகு நெய் உபயோகித்ததைச் சிலப்பதிகாரம் போன்ற காவியங்களால் அறியலாம்.

சுத்தி

புழுகைப் புறங்கையிலிட்டு ஒரு பிளந்த ஈர்க்கால் தேய்த்து, அதில் கலந்திருக்கும் புனுகுப் பூனையின் உரோமங்களை நீக்கிக் கொள்வதே சுத்தியாகும்.

வேறு

இதனைச் சந்தனக்கல் அல்லது சுத்தமான படிகக் கல்லின் மீது வைத்து சுத்த நீர் விட்டுக் கழுவி வழித்துக் கொள்ளவும்.

புனுகிற்கும் சவ்வாதிற்கும் கைப்புச் சுவையும், வெப்ப வீரியமும், கார்ப்புப் பிரிவும், வெப்பமுண்டாக்கி, காம முண்டாக்கி, இசிவகற்றி ஆகிய செய்கைகளும் உள.

புனுகின் குணம்

"நாள் வளரு மெய்க்கு நலமுண்டா நாடாது
பாள் வறிய நோய்கள் பயமில்லை — யாள்வரிசை
யாற்சால மேன்மையமைய மிகையுண்டா
மாற்சால பீசத்தால் வாழ்வு".

– *தேரன் வெண்பா*

புனுகை கையாளுகின்ற வரிசையால் மேன்மையுண்டாம். வாழ்நாள் வளரும், உடம்பிற்கு நன்மை உண்டாகும். துன்பந்தரும் நோய்கள் அணுகாவாம். ஆகவே பயமில்லை.

சவ்வாதின் குணம்

"சுரமுந் தலைவலியுந் துண்டத் தடைப்பு
முரமுந்து நோயோடு டற்குப் — பரவிமிகக்
குத்துகின்ற வாயுவும்போங் கோதிற்சவ் வாதினுக்கு
மெத்த வசியமுமாம் விள்"

– *ப.கு.சி*

குற்றமற்ற சவ்வாதினால், சுரம், தலைவலி, மூக்கடைப்பு, மார்புநோய் உடலில் பரவிக் குத்துகின்ற வாயு முதலியன நீங்கும். வசியத்தை உண்டுபண்ணும்.

புனுகுச்சட்டம்

பதப்படுத்தப்பட்ட புனுகு உற்பத்தியாகின்ற பைகளுக்குப் புழுகுச் சட்டம் என்பது பெயர். இதன் குணத்தை கண்ட செய்யுளால் அறிக.

"ஆசுறாக் காந்தி யுண்டா மசீரண வாதம் போகுந்
தேகந்தான் வளரும் பித்த சிலேஷ்மமும் விடமு மேகு
மாசவமாயுளுண்டாம் வனசமா தருளுஞ் சேரும்
வாசமார் புழுகுச் சட்ட மகிமையைஉரைக்குங் காலே"

– ப.கு.சி

மணமுள்ள புழுகுச் சட்டத்தினால் மந்தவாதம், பித்த கபம், விடம் முதலியன நீங்கும். காந்தி, அழகு, நிறைந்த ஆயுள், திருமகள் அருள் முதலியன சேரும் என்பதாகும்.

உபயோகம்

முகத்திலுண்டாம் பருவில் இரண்டொரு வேளை புனுகை மேற்றடவ அது கரைந்து விடும். ஒரு சமயம் அதில் சீழ் இருந்தால், வீக்கம் அதிகரிக்காமல் உடைந்துவிடும்.

புனுகைச் சந்தனத்துடன் கலந்து தேகத்தில் பூசிக்கொள்ள, மன உற்சாகம் உண்டாவதுடன், சொறி, நமைச்சல், வியர்வை, துர்நாற்றம், பரு முதலியன நீங்கும்.

இதனை ஒரு குன்றி (130 மி.கி) முதல் இரண்டு குன்றி (260 மி.கி) வரை கொடுக்க சூதக சந்நியும் நரம்புத் தளர்ச்சியும் நீங்கும்.

புனுகும் சவ்வாதும், கஸ்தூரி மெழுகில் சேர்வதைக் கீழ்க்காணும் முறையால் உணரலாம்.

152- 2 - 22

கஸ்தூரி	—	1 பங்கு
பச்சைக்; கற்பூரம்	—	2 பங்கு
கோரோசனை	—	4 பங்கு
குங்குமப்பூ	—	4 பங்கு
புனுகு	—	¼ பங்கு
பூ நீக்கிய லவங்கம்	—	4 பங்கு
வால்மிளகு	—	4 பங்கு
ஏல அரிசி	—	8 பங்கு
சிறுலவங்கப்பட்டை	—	8 பங்கு

ஆகியவற்றை ஒன்றுபடக் கலந்து கற்பூர வெற்றிலைச்சாறு, கற்பூரவல்லி சாறு, கொடிவேலி வேர்ப்பட்டைக் குடிநீர், மஞ்சள் கரிசாலைச் சாறு, இவற்றைத் தனித்தனியாக விட்டு ஒவ்வொரு சாமமரைத்து நிழலில் உலர்த்திப் பிறகு தேன் விட்டு மெழுகு பதத்தில் அரைத்துக்கொள்ள வேண்டும்.

பயிறளவு தேனில் கொடுக்க, சந்நி, சீதளம், சுரம், கபநோய், உப்பு மாந்தம், முகவாதசந்நி, சூதகசந்நி, இருமல், மாரடைப்பு, நடுக்குவாதம் ஆகியன நீங்கும்.

மற்றும் புனுகு, மகா ஏலாதி மாத்திரை போன்ற மாத்திரைகளில் கூட்டப்படுகின்றது. புனுகுச் சட்டம், நாசி ரோக நாசத்தைலம் போன்ற தைலங்களில் சேர்க்கப்படுகின்றது.

உருக்கினத்திற்கு ஆதி சவ்வாது, சுண்ணத்திற்கு ஆதி புனுகு என்பதை

"காத்திடவே உருக்கினத்திற் காதி சொல்வேன்
காரமொடு சவ்வாது சார மூன்றும்
வாதிடவே வீரமொடு புனுகு சீனம்
மக்களே யிவை மூன்றும் சுண்ணத்தாதி"

என்ற போகர் காரசாரத்துறை அடிகளால் உணரலாம்.

மணமுள்ள புனுகுப் பூனையின் இறைச்சியினால் இடுப்பு, மார்பு இவ்விடங்களில் உண்டாகும். நோய், கடுப்பை உண்டு பண்ணுகின்ற வாதம், இவை நீங்கி, நல்ல பசியும் தாதுவும் உண்டாகும் என்பதை

"இடுப்பி லுரத்தி லெழுநோ யகற்றுங்
கடுப்புறுவா தத்தைக் கருக்குந் — தொடுப்பி
லமிழ்தா துவும்நல் லரும்பசியு நல்குங்
கமழ்புழுகுப் பூனைக் கறி"

என்ற பதார்த்த குணசிந்தாமணிச் செய்யுளால் அறிக.

புனுகு பூனை

Viverra Tangalunga

The oriental civet, Viverra tangalunga, also known as the Malay civet. It has been introduced to many other Southeast Asian islands.

Distribution

The Malabar civet is endemic to the Western Ghats. It is called as Viverra civettina. It is mostly recorded from the coastal district of Western Ghats in southern India from Kanyakumari in the extreme south Honnavar in Karnataka, in the north as far as Wayanad and Coorg. There are only two reports of its occurrence in the higher elevation of the Western Ghats, in the High Wavy Mountains.

Civets produce a secretion from their and scent glands known as civet. Civet may be secreted as a defensive measure, similar to that of the skunk (family Mephitidae). Civet may also be secreted and rubbed on various objects to communicate with conspecifics.

Civetone is a chemical substance present in the civet.

Chemical Structure of civetone

Civetone is a cyclic ketone and one of the oldest perfume ingredients known. It is a pheromone sourced from the Civet cat. Civetone is closely related to muscone, the principal odoriferous compound found in musk because both compounds are large cyclic molecules.

Geographic Range

Viverra zibetha, also known as the Indian civet is found from Indochina to southern China. It is also found in Nepal, Bangladesh, the Malay Peninsula, Hainan and Vietnam.

Habitat

Viverra zibetha live in grasslands, scrub, and densely forested areas. They are commonly found near human habitats. They live in burrows that have been dug by other animals.

The Ahmedabad Zoo in India has a small population of Indian civets. They were formerly kept in order to collect their glandular secretions.

Life span

Natural life spun averages 15 years. In captivity they have lived over 20 years.

Behavior

Viverra zibetha are solitary, nocturnal animals.

புற்றாஞ்சோறு

வேறுபெயர்

"புத்துக்குகைச்சி புகழ்ந்த கரும்பி தான்
மத்துக் குகைச்சி வாள்முலைப் பாலியாஞ்
சித்துக் குழைச்சி திரண்ட கொடிச்சிதான்
அத்துக்குள் புத்தாம் பழத்துட நாமமே"

– *ச.மு.நி*

"முலைப்பாலி, புத்துக்குள் குகைச்சி, கரடி மித்திரி
விஷத்துள்வாசி, மகாசேனை கூடிவாழும்
திரண்டுருண்ட கொடிச்சி".

– *போகர் நிகண்டு*

கரையான் புற்றின் உள்பகுதி பல குகைகளாக ஒரு காலனி போல் கட்டப்பட்டிருக்கும். மழைக் காலங்களில் கரையான் முட்டைகள், புழுக்களின் பாதுகாப்பிற்குக் குகைபோன்ற காலனியின் உள் பகுதியில் வெண்மை நிறத்தில் காளான்கள் போல் காணும். இது மழைக்காலங்களின் ஆரம்பத்தில் மட்டுமே தோன்றுமாதலால் அக்காலங்களில் மட்டும்தான் சேகரிக்க முடியும். இது கரடிக்கு மிக விருப்பமான உணவாகும். இக்காலங்களில் புற்றினுள் உள்ளவற்றை உறிஞ்சி உண்டுவிடும். இது சோறு என்றும் புற்றாம்பழம், கிருமி மனை மண் என்றும் பேசப்படும். மருத்துவ முறைகளிலும், பல வேதியல் முறைகளிலும் சேரும்.

புற்றுச் சோற்றுச் சூரணம்

"புற்றிலுள்ள சோறெடுத்துக் காயப்போட்டு
புரசம்பூ சுக்குச்சமன் பொடியாய்ச் செய்து
நித்தமிரு வேளையுந்தேன் வெண்ணெய் நெய்யில்
நிகழ்த்தவே அமுதப்பா லந்தி சந்தி
ஒத்ததிலே அனுபானத் துடனே யீய்ந்தால்
உடலுக்குள் சலரோக நீர்கள் போகும்
வைத்தவைக்கு மேகசுரம் விலகிப்போகும்".

– யா.வை.சி

புற்றுச் சோற்றை உலர்த்திக் கொண்டு, புரசம்பூ, சுக்கு ஆகிய சரக்குகளையும் சமஎடை இடித்து வஸ்திர காயம் செய்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு: *½ முதல் 1 கிராம் வரை*

அனுபானம்: தேன், வெண்ணெய், நெய், தாய்ப்பால்

தீரும் நோய்கள்: *சலரோகம், மேகசுரம் தீரும்.*

"வேலிப்பருத்திக் கொடிவேலி யிதின் வேரைக்
காலிட் டதினேர் கடிப்பகைசெல் — மாலெச்சில்
ஈண்டு பிருந்த ரசமிட்டிழைத்த மாத்திரையாற்
றாண்டி விடுஞ் சன்னிபாதம்"

– தே.வெ

வேலிப்பருத்திவேர், சித்திரமூலவேர் வகைக்கு ¼ பலம் (10 கிராம்), வேம்புவேர், புற்றாஞ்சோறு வகைக்கு ½ பலம் (20 கிராம்) கூட்டி துளசி சாற்றால் அரைத்து உருட்டி உலர்த்தி கொடுக்க சந்நிபாதம் தீரும்.

புற்றுச் சோற்றினால் துத்தநாகம் பற்பமாகும். அப்பற்பம் நோய் தீர்த்து உடல் வன்மை உண்டாகச் செய்வதாம். இதன் மகிமை அளவிட முடியாததாகும்.

"சொல்லிவிட முடியாது துத்தநாகம் பொடியாய்
மெல்லத் துரத்தும் வியாதிகளை — நல்ல
உடனுரைமை யுண்டாக்கு முண்டவரை யென்றும்
கிருமிமனை மண் மகிமை கேள்"

— *தே.வெ*

என்ற தேரர் பாடலலில் அறியலாம்.

புற்றாஞ்சோறு

புறா எச்சம்

Geopelia placida

புறாவின் மலம் எச்சம் என்பதாம். இது மருத்துவத்தில் பயன்படும். எச்ச வகையில் முதலானது. உபரசங்களில் ஒன்றாகக் கொள்ளப்படுகிறது.

புறா என்பதில் மாடப்புறா, மணிப்புறா, காட்டுப்புறா எனப் பல வகைகள் சொல்லப்பட்டுள்ளன. கிடைக்கக்கூடிய எவ்வகைப் புறாக்களின் எச்சத்தையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

புறா எச்சத்தின் பயன்கள்

"மலடாிவ ரென்று வையகத்ததாரேசார்
பலரு முறையினிது பார்ப்பார் — குலவுபிசின்
மாதப் புறாவெச்சம் வால் மிளகோ டுண்டுவரச்
சூதத்தா லுண்டாகுஞ் சூல்"

– தே.வெ

குலவுமரத்தின் பிசின், புறா எச்சம், வால்மிளகு ஆகியவை சம எடை சேர்த்தரைத்து உண்டு வர மலட்டுத் தன்மை நீங்கும்.

"புறா எச்சத்தை நீர் விட்டு அரைத்துப் பற்றிட கட்டி பழுத்து உடையும்.

புறா எச்சம், தாளகம், இந்துப்பு, சம எடை எடுத்து மாதுளம்

பழச்சாற்றால் அரைத்து பூச விடக்கடி தீரும்.

புறா எச்சம், கடுக்காய், சுக்கு, கிரந்தி தகரம் சம எடை எடுத்து கொடி மாதுளை சாறுவிட்டு அரைத்துப் பூச தேள்கடி விடம் தீரும்.

புறா எச்சத்தை உலர்த்தி வறுத்து ஒற்றடமிட அடிபட்ட வீக்கம், வலி தீரும்.

செத்த பிள்ளை விழ வேண்டிற் றிரிந்து மாடப்புறா வெச்சம்

மெத்தக் காடி தனிலரைத்துத் தடவ தீரும் கீழ் வயிற்றில்

– ***தேரையர் வாகடம்***

மாடப்புறா எச்சத்தைக் காடிதனிலரைத்து அடிவயிற்றில் பூச வயிற்றுள் மரித்த பிள்ளை பிறக்கும்.

தழுதாழை இலையுடன் சேர்த்து வதக்கி வாத நோயுள்ள இடங்களில் ஒற்றடமிட நோய் தணியும்.

மாடப்புறா எச்சத்தைத் தேனில் குழைத்துக் கொடுக்க இரத்த பித்த நோயிற்காணும் இரத்தம் உறைதல் தீரும்.

பூனை

Felis catus

வேறுபெயர்

பூஞை, வெருகு

காட்டில் வாழக்கூடிய பூனை இனம். இதன் மாமிசம் என்பு, பித்து, மலம், மயிர் மருத்துவத்தில் பயன்படுகிறது.

பூனை மாமிசத்தின் குணம்

"பூனைக் கறியைப் புசித்தா லெழிலணங்கே
மேனிக்கழகுண்டா மேல்விரணந் — தானகலுஞ்
சூடு மதிகரிக்குஞ் சோரியது மேன்மேலு
நீடுமென நாளு நினை"

– ப.கு.சி.

பூனைக்கறியுண்டால் சரீர அழகும், வெப்பமும், இரத்த விருத்தியும் உண்டாகும். சருமதாதுவைப் பற்றிய கிரந்தி விலகும். மற்றும் நஞ்சுக்கிருமி ஆசனவாய் நோய் நீக்கும்.

பூனை என்பு விரணம், கடிவிடம் இவற்றிற்கு பயன்படும்.

மார்ச்சாதி சூரணம்

கரும்பூனை ஒன்று, தோல், குடல், நீக்கி சுத்தம் செய்து கொள்ள வேண்டும். பின் செங்கழுநீர், கொட்டி, நெய்தல், சதாவேரி, நிலப்பனை, கோரை இவற்றின் கிழங்குகள் நன்னாரி வகைக்கு (1/2 பலம்) 20 கிராம்.

அரிசி வகையாறு, அதிமதுரம், அரிதாரம், திப்பிலி, வெள்ளைக் குந்திரிகம், கஸ்தூரிமஞ்சள் வகைக்கு 5.1 கிராம் சூரணித்துப் பூனைக்குள் செலுத்தி ஆடாதோடை இலை கொண்டு பொதிந்து சீந்தில் கொடி கொண்டு கட்டிக் கொள்ள வேண்டும். ஒரு பானையில் காடிநீர் ஊற்றி அதன் வாயில் பருத்திக் கட்டைகளைக் கொண்டு வேர்போல் குருக்காகக் கட்டி அதன்மீது மருந்தடைத்த பூனையை வைத்து மேல்சட்டி கொண்டு மூடி 3 சீலை மண் செய்து கமலம் போல் எரித்து 12 நாழிகை கழித்து இறக்கி ஆறவிட்டு உலர்த்திச் சூரணித்து வஸ்திரகாயம் செய்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

அனுபானக்குடிநீர்: வில்வவேர், நத்தைச்சூரிவேர், குறுந்தொட்டிவேர், மஞ்சிட்டி, இசங்குவேர், மணத்தக்காளிவேர் வகைக்கு 2 பலம் (80 கிராம்) எடுத்துச் சிதைத்து 4 தூணி நீரில் 3 நாள் ஊறவைத்துப் பின் எரித்து 5 படியாக வற்றவைத்துக்கொள்ள வேண்டும்.

மார்ச்சாதி சூரணத்தை 3 விரல் அளவு மேற்படி குடிநீரில் தேன், சர்க்கரை கலந்து கொடுக்க வேண்டும்.

நாளளவு: ஒரு நாளைக்கு இருவேளை வீதம் 6 நாட்கள்

தீரும் நோய்கள்: வர்மம், இடுப்புவலி, மேகம், கண்புகைச்சல், நெஞ்சுவலி தீரும்.

பூனை இளகம்

ஒரு பூனையைச் சுத்தித்து இடித்துத் தூணிநீர் விட்டு அத்துடன் வில்வவேர், சாரணைவேர், நன்னாரி, கொத்தான், முத்தக்காசு, ஆடாதோடைவேர், இசங்கு, அறுகுவேர், அரத்தை, குந்திரிகம், திரிகடுகு, கண்டங்கத்திரி, தூதுளை, தேற்றான், கொடி வேலி வகைக்கு

8.75கி சிதைத்துச் சேர்த்து ஒரே விறகால் எரித்து 10.4லிட் வற்ற வைத்துக் கொண்ட குடிநீருடன் ஆட்டுப்பால், பசும்பால், பசுநெய், பருத்திச்சாறு, வெண்பூசணிச்சாறு, தாய்ப்பால், தேன், பழச்சாறு, மாதுளம்பழச்சாறு, கரும்புச்சாறு, மலைதாங்கிபூண்டுச்சாறு, தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு, செவ்விளநீர், கதலி வாழைப்பழச்சாறு வகைக்கு 1.3லிட் சேர்த்து அத்துடன் கற்கண்டு, கரும்பு வெல்லம் வகைக்கு 210கி சேர்த்துக் கரைத்து அடுப்பேற்றி எரித்து பதத்தில் பேரிந்து, முந்திரிகை வகைக்கு 210கி, கூகைநீறு, சீந்தில் சர்க்கரை, பாதாங்கொட்டைப்பருப்பு, மாம்பருப்புச் சூரணம், உளுந்துமா, நன்னாரி, பரங்கிபட்டைச் சூரணம் வகைக்கு ¼ படி சேர்த்து அத்துடன் அக்கரா, அரத்தை, சுக்கு, மிளகு, கோட்டம், தேற்றான், சந்தனம், விலாமிச்சம், வெட்டிவேர், குங்குமப்பூ, புழுகு, வெந்தயம், திரிபலை, வலம்புரி, சடாமஞ்சில், மாசிக்காய், சாதிக்காய், கோரோசனம், தக்கோலம், கல்நார், கருடப்பச்சை, பொரிகாரம், ஏலம், அரிசிவகையாறு, இருபத்திரி, இருவேலி, தாளிசபத்திரி, காட்டுசாதிப் பத்திரி, வசுவாசி, கிராம்பு, குரோசானி ஓமம், மகிழம்பூ, வால்மிளகு அபின், கஞ்சா, அரிதாரம், சீரகம் — 3 வகைக்கு 15.3கி தூள் செய்து தூவிக் கிண்டி நெல்லிக்காய் அளவு 2 வேளை கொடுத்துவர தாது வளரும், சயம், அத்திசுரம், ரத்தவாந்தி, குவளைவாந்தி, பீனசம், கபாலச்சூலை, பித்தம்—40, உதரரோகம், மூலம், பழஞ்சுரம், குட்டம், பாலகிரந்தி, யோனிப்புற்று, மேகம், குன்மம், புண், புரை, வெடிநாற்றம், நீர்க்கட்டு, மருந்தீடு தீரும்.

பூனையின் என்பைத் திரிபலைக் குடிநீரில் அரைத்துப் பவுத்திரப்புண்ணில் பூசிவர ஆறும்.

பூனை என்பு, நாபி, கிரந்தி, ஆவிரைவேர் இவற்றைச் சம அளவு எடுத்துச் சூரணித்து நீர்விட்டு அரைத்து நசியமிட பெருச்சாளி விடம் தீரும்.

பூனை மலத்தைப் புகைபோட அபஸ்மாரம் நீங்கும்.

பூனை பித்தை நசியமிடினும் அபஸ்மாரம் நீங்கும். யானைத்திப்பிலி, மோடி, திரிகடுகு, நெல்லிக்காய், கடுகு எடுத்து பூனை, உடும்பு, கீரி, மீன் இவற்றின் பித்தால் ஆட்டி நசியமிட்டும் துவாலையிட்டும், புகையுமிட்டுவர மனக்கிலேசம், தோடங்களும் தீரும்.

பூனையின் சர்மம், பாம்புச்சட்டம், தலைமயிர், எருக்கன்வேர், அகில் இவற்றை நெய்யுடன் சேர்த்துத் தணலிட்டுப் புகைத்து அப்புகையை வீங்கிய மூலமுளையில் காட்ட வீக்கம், வலி நீங்கும்.

"ஓடுமே பதினெட்டு எலிக்கடி
காடுமே கரும்பூனை மலத்தைத் தான்
நீடுங் களஞ்சி நேர்ந்த வவைதாய்
கூடுங் கருப்பன் கட்டியி லுண்டிடே
உண்ட போது முறுதியாம் பத்தியம்
கண்டவாறு நாள்கடிய வுப்பு மாகா
கொண்ட வேழாநாள் கூறுந் தலைமுழுக
விண்ட பத்தியம் விட்டு வருந்திடே"

கரும்பூனை மலத்தினை 5 கிராம்; வீதம் பனை வெல்லத்தில் வைத்து 6 நாள் கொடுத்து உப்பில்லாப் பத்தியம் வைத்து 7ம் நாள் தலைக்கு நீர் வார்க்க பதினெட்டு வகை எலிக்கடி தீரும்.

பூநாகம்

Nereis bumirelli

வேறுபெயர்

"மேகத்தின் விந்து விளங்குசஞ் சீவிதான்
பாகத்தின் சோதி பருவிய னாங்கூழு
நாகத்தின் பாம்பு நலமான பூமிவேர்
பேசரச தீபன் பூநாகப் பேருமே"

– ச.மு.நி.

"மேகத்தின்விந்து, சஞ்சீவி, சோதியமான வேதி,
மாங்குளுத்தான், பூமிவேர், மாசிலாதான், ஆகாசதீபன்,
அமுதை யூட்டுஞ் சத்து"

– போகர் நிகண்டு

நாங்கூழ், பூநாகம், பூமிவேர், மேகத்தின் விந்து என பல பெயருடன் வழங்கும். மேலும்,

"பூநாகந்தானென்றும் பூறைக்காலி
பெருத்த நிலவே ரென்றும் பூசிப்பானென்றும்
கூநாகம் கோபீ ரத்தசெந்து
குணமான பூலநாசந் தாகஞ் சித்தி
நாநாகம் மாத்துண்ட கமுமாகுந்
நன்மையான வச்சிரநல் மாணியு மாகும்"

– போகர் 7000

பூநாகம், பூறைக்காலி, நிலவேர், பூசிப்பான், இரத்தசெந்து, பூலநாசம், நாநாகம், துண்டகம், என வேறு பெயர்களும் உள்ளன.

பூநாகம் தோன்றுமிடம்

“............ சமுத்திரத்தின் கரையில் தானும்
தங்கிடவே பூநாகம் தோற்றமாச்சு
துவித்திடவே சமுத்திரத்தின் கரையில் தானும்
கனமான அலைதிரண்டு வற்றும் போது
தவித்திடவே தலையெடுத் தெட்டிப் பார்க்கும்
தாமதமே யில்லாமல் இழுத்துக் கொள்ளும்.........”

– போகர் 7000

என்பதில் சமுத்திரக் கரையோரங்களில் நீர் வற்றிக் காணப்படும் இடங்களில் தோன்றும்.

இதில் இருவகை உண்டு.

“உபத்திடவே பூநாகம் விதம்ரெண் டாகும்
உண்மையாக குருதிபோ லொன்றுண்டு தானே
ஒன்றுதானே வெளிறினதோர் சிவப்பு மாகும்
உயர்ந்திட்டசிவப்பதுதான் உத்த மந்தான்
பன்றுதான் சத்துக்குப் பலித மெத்த
பாங்கான ரசாயன தீபனியு மாகும்
வின்றுதானே வெளிறினதோர் சிவப்பு தானும்
மேன்மையான மருந்துக்கு நிதியு மாகும்”

– போகர் 7000

பூநாகம் இருவகைப்படும். ஒன்று மிகுந்த சிவந்த நிறத்திலும், மற்றொன்று வெளிறிய சிவந்த நிறத்திலும் காணும்.

இவ்விருவகையில் மிகச் சிவந்த நிறத்தில் காணப்படுவது உத்தமம். இதுவே சத்து எடுப்பதற்கு உரியது, இரசாயன முறைகட்கும் ஆகும்.

வெளிறிய சிவந்த நிறமுடைய பூநாகம் மருத்துவ முறைகட்கு ஆகும். இவையன்றி மற்ற இடங்களில் காணப்படும் பூநாகம் பயனற்றது.

இதனை,

"............பூநாகம்; இத்தைவிட்டு
வேறொன்று நீர்தாழ்ந்த விடங்கள் செருதி
சிவரமான செந்தரையில் சேற்று மண்ணில்
சின்னமாக குப்பையெனில் திரளாயுண்டு
நவரசமாக நாங்கூழ் தானென்று பேரு
நன்மையாகப் பாராது சத்து தானும்
குவரமாக சத்துக்கள் குணமொன் றில்லை
குப்பையிலே கிடக்கின்ற நாங்கூழ்தானே"

– *போகர் 7000*

என்ற பாடலில் அறியலாம்.

பூநாகம் சேகரிக்கும் விதம்

பூநாகம் தோன்றும் இடங்களில் குழிகள் வெட்டி அதில் வரகு வைக்கோல் பரப்பி வெல்லத்தை நீரில் கரைத்துத் தெளித்து மூடி வைத்து மறுநாள் எடுத்துப் பார்க்க பூநாகம் நிறைந்து காணும். அதைச் சேகரித்துக் கொள்ள வேண்டும்.

பூநாகச் சுத்தி

"...........பூநாகந்தான்
அளந்துமேதான் படியொன்று பாலில் போட
வாமென்ற மண்ணெல்லாங் கக்குங்கீழே
மறுநாள்தான் அதையெடுத்துச் சட்டியிலிட்டு
நேமென்ற நீர்விட்டுக் கழுவிப் போட்டு"

– *போகர் 7000*

பூநாகத்தை வேண்டிய மட்டும் சேகரித்துப் பாலிலிட்டு வைக்க மண்ணைக் கக்கும். மறுநாள் கழுவி எடுத்துக் கொள்ளவேண்டும்.

இவ்விதம் சுத்தித்த பூநாகம் பல்வகை மருந்துகள் செய்ய உதவும்.

இதில் செம்புச் சத்து உள்ளது.

பூநாகத்தின் குணம்

“மாதவறு செய்வறட்சி மாறுமடங்காச் சன்னி
பாதவறு நோயொடு பாறுமடல் — வாதவா
ருண்டபத மீளுமோக் காளமைய மும்போங்
கண்ட பதமெனுங் கால்”

– ப.கு.சி

மிகவும் துன்பத்தை விளைவிக்கின்ற தாகரோகம், சந்நிபாதசுரம், மகாவாதரோகம், ஓக்காளம், கபநோய் ஆகியவை பூநாகத்தால் தீரும்.

“புரையில்பூ நாகஞ் சூலை
புகல் வீக்கம் வெட்டுக்காயம்
உரமார்பின் வலிவ யிற்றின்
வலி வாத மோட்டுமே”

– ப.கு

பூநாகத்தால் சூலை, வீக்கம், வெட்டுக்காயம், மார்புவலி, வயிற்றுவலி, வாதம் தீரும்.

பூநாகக் குடிநீர்

“........பூநாகம் பலமே தூக்கி
சட்டியினி லிட்டெரித்துச் சாம்ப லாக்கி

உள்ளப்பா நாலாழாக்கு பசுவின் பால்விட்
டுறவைக்கச் செய்தொரு வுழக்காய்க் காய்ச்சி
மெள்ளப்பா யிப்படிநாள் மூன்றே கொள்ளு
மீறியதோர் குளிர்சுரமு மில்லை யில்லை
கொள்ளப்பா பொரிமிளகு நீரோ டன்னங்
குறியாதே புளிபுகையுந் தள்ளிப் போடே"

– ப.ரா.சே

பூநாகத்தை சுத்தித்து 40 கிராம் எடுத்து சட்டியிலிட்டு எரித்து சாம்பலாக்கி அதற்கு 650 மி.லி. பசும்பால் விட்டு 325 மி.லி யாக வற்றவைத்து குடிக்க குளிர் சுரம் நீங்கும். இவ்விதம் மூன்றுநாள் செய்து உட்கொள்ள வேண்டும்.

பத்தியம்

மிளகு வெடிக்க வைத்து குடிநீரிட்டு அத்துடன் அன்னம் புசித்து, புளி புகை நீக்க வேண்டும்.

பூநாகக்கருக்குக்குடிநீர்

பூநாகம் — 35 கிராம்

மயிலிறகு — 8.75 கிராம் எடுத்து இரண்டையும் சட்டியிலிட்டு கருக்கி சிறிதளவு தேன் விட்டு 32.5 மி.லி. நீர்விட்டு ஏலக்காய் தோல் — 8.75 கிராம் கூட்டி ¼ பங்காகக் குறுக்கி 2 வேளை கொடுக்க நாவறட்சி, சந்நிதோடம் நீங்கும்.

பூநாக கற்கம்

"தன்னையவித் தக்காரஞ் சாதிக்காய் சாதிபத்திரி
துன்னக் கலந்துருட்டித் துய்க்கவே — யென்னபல
மூள்வதுகா மேசுரமா முன்சுக்கிலத் தம்பனமாம்
வேள்மனை முதுபூமிவேர்"

– தே.வெ.

152- 2 - 23a

பூநாகத்தை அவித்து கரும்பு சர்க்கரை, சாதிக்காய், சாதிப்பத்திரி இவை கலந்துருட்டி உட்கொள்ள, உடல் வலிமையும், நலமும் உண்டாகும். சுக்கிலத்தம்பனமாம்.

பூநாகக்கருக்கு

பூநாகம், மயிலிறகு சமஎடை எடுத்துச் சட்டியிலிட்டுக் கருக்கி, சாம்பலாக்கி 650 மி.லி. தேனில் குழைத்து 2 வேளை தடவி வர நாவறட்சி, சந்நிதோடம் தீரும்.

பூநாகச்சூரணம்

பூநாகம், தூதுளை சமூலம் வகைக்கு	—	35 கி,
சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்கு	—	8.75 கி
கடுக்காய்த்தோல், நெல்லிவற்றல், தான்றிக்காய்த்தோல், சிற்றரத்தை, கற்கடகசிங்கி, மூங்கிலுப்பு வகைக்கு	—	4.375 கி
சீந்தில் கொடி	—	17.5 கி

எடுத்து உலர்த்திச் சூரணித்து சம எடை கற்கண்டு பொடி கூட்டி எடுத்து பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும். 1—2 கிராம் வரை கொடுக்க ஷயம், காசம், குன்மம், மேக உட்டிணம்; தீரும்.

பூநாகத்தைலம்

பூநாகம், வாளம், நிம்பவேர், பூண்டு, காயம் ஆகியவை வகைக்கு 5.1 கிராம் எடுத்து அரைத்து 1 லிட்டர் நல்லெண்ணெயில் கரைத்து அடுப்பேற்றி எரித்துப் பதத்தில் வடித்து காசெடை உள்ளுக்குக் கொடுத்துவர உளை மாந்தம் தீரும்.

காதுவலித்தைலம்

"பூநாகஞ் சூடன் பொருந்துசுருள்பட்டை
தானாநல் லெண்ணெய்தனில் பெய்து — கோனாம்
இரவிமுகத் தேழுநா ளிட்டுப்பா ரின்றே
திரமாப்போங் காதுவலி நேர்"

– *தே.வெ.*

பூநாகம், சூடன், கருவாப்பட்டை சம எடை எடுத்து நன்கு அரைத்து 4 பங்கு நல்லெண்ணெயில் பகலிலரைத்து 7 நாள் சூரிய புடம் வைத்து இத்தைலத்தைக் காதிலிட, காது வலி தீரும்.

சிரரோகத் தைலம்

பூநாகம், நொச்சிக்கொழுந்து 40 கிராம், மிளகு — 20 கிராம் எடுத்துச் சுத்தித்துப் பசும்பால் விட்டரைத்து 200 மி.லி. நல்லெண்ணெய்யில் கரைத்துக் காய்ச்சி, மெழுகு பதத்தில் வடிகட்டி தலை முழுகத் தலைவலி, கழுத்துவலி தீரும்.

பூநாகம்	—	325 மி.லி.
தேங்காய்ப்பால்	—	650 மி.லி.
எருக்கம்பால்	—	325 மி.லி.
நல்லெண்ணெய்	—	325 மி.லி.

பூநாகத்தை அரைத்துப் பின் அனைத்துச் சரக்குகளையும் சேர்த்துக் காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து பூசி வர முக வாதம் தீரும்.

பழச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 1/8 படி, கலந்து பூநாகம் 20, பூண்டு, வசம்பு வகைக்கு 5.1 கிராம் சிதைத்துப் போட்டுக் காய்ச்சி காதிலிட சீழ் தீரும்.

கொன்றையை எரித்துச் சாம்பலாக்கி கரைத்து வடிகட்டி தெளிவை வாங்கி அதை காய்ச்சி உப்பெடுத்து அத்துடன் பூநாகத்தைச் சேர்த்து அரைத்துப் பூச வெண்குட்டம் மாறும்.

பூநாகப் பற்பம்

நாகரவண்டோடு 210 கி, சத்திச்சாரணை சாறுவிட்டு நன்கு அரைத்து மூசையும் மூடியும் செய்துலர்த்தி அதில் சுத்தித்த பூநாகம் 105 கி மூடி ஒரு சட்டிக்குள் வைத்து மேல்மூடி சீலைமண் செய்து 4 சாமம் எரிக்க பற்பமாகும். பணவெடை வீதம் தேனில் கொடுக்க சுரம், சந்நி தீரும்.

பூநாகச் செந்தூரம்

சுத்தித்த பூநாகத்திற்கு ஆடுதீண்டாப்பாளைச் சாறுவிட்டு அரைத்து, வில்லை செய்துலர்த்தி, ஓட்டிலிட்டு ஓடு மூடி சீலைமண் செய்துலர்த்தி குக்குட புடமிட செந்தூரமாகும்.

130 மி.கி அளவு தேனில் கொடுக்க ஷயம் சுரம் தீரும்.

பூநாகச் செம்பு

பூநாகத்தைச் சுத்தித்து ஆட்டுச்சாணியில் பிசைந்து வில்லை செய்து லேசாகத்தட்டி வெயிலில் உலர்த்தி ஒரு பெரும் பாண்டத்தில் அடைத்து ஒரு பெரும் பாண்டத்தால் மூடி சீலைமண் செய்து நான்கு சாமம் எரிக்க வேண்டும். ஆறிய பின் பிரித்து காடி வார்த்து கையாலே பிசைந்து சாம்பலெல்லாம் கரைத்து மேல் சாம்பலை இறுத்துவிட்டுப் பார்க்க அடியில் செம்பு தங்கி இருக்கும்.

பூநாகச் சத்து

பூநாகச் செம்பில் 35கி இரசமிட்டு துழாவ இரசமெல்லாம் பிடித்துக்கொள்ளும். ஒரே உண்டையாக எடுத்து அத்துடன் வாதகுடோரி, வெங்காரம், வீரம், பஞ்சமித்திரம் கூட்டி வெடியுப்பு நீரால் அரைத்து வில்லை செய்துலர்த்தி புடமிட்டு பின் குகையிலிட்டு ஊத செம்புபோல் சத்து பிறக்கும். அதை மித்திரனில் சாய்த்த பின் உருக்கி மீண்டும் மித்திரனில் சாய்க்க வேண்டும். இவ்விதம் பதினைந்து தரம் செய்ய சத்து சுத்தியாகும். ***(போகர் 7000)***

பூநாகச் சிறப்பு

"சுண்ணமா கப்படி சோதியா கப்பரிதி
வண்ணமாகப் பொருளாய் வாய்க்கவே — பின்னுமுறை
யேநாக முமஃதே யெய்தவெளி தாகப்
பூநாக முண்டாக்கும் பொன்"

– தேரன் வெண்பா

பொன்னைச் சுண்ணமாகவும், பளிங்கின் ஒளியாகவும், சூரிய காந்தியாகவும் தோன்றும்படி வாய்ப்பாகச் செய்யும். நாகத்தையும் இவ்விதம் சுண்ணமாகச் செய்யும்.

1. பூநாகத்தை சுத்தித்துச் சூரணித்து மூன்று வராகன் கொடி முந்திரிகைப் பழச்சாற்றில் கொடுக்க கல்லடைப்பு, நீரடைப்பு நீங்கும்.
2. மாமிச இரசத்தில் கலந்து குடிக்க தாதுவிருத்தி அதிகரிக்கும். வாதுமை நெய்யுடன் கலந்து பூச அண்டவாதம், அண்டப்புண் நீங்கும். பிரசவ வேதனை நீங்கும்.

3. நல்லெண்ணெயிலிட்டு எரித்துக் குடிக்க நாட்பட்ட இருமல், தொண்டைவலி நீங்கும்.
4. பச்சையாய் அரைத்துப் பூச அறுந்த நரம்புகள் கட்டும், மூட்டு பிசகுகளைச் சீர்படுத்தும். அடிபட்டதினால் உறைந்த உதிரத்தைக் கரைக்கும்.
5. "தரைக்குட் பூ நாகந்தன்னைப் பசும்பாலில் அரைத்துட் கொள பால் சுரக்கும்".

   பூநாகத்தைச் சுத்தித்துப் பசும்பாலில் அரைத்துக் குடிக்க தாய்மார்களுக்குப் பால் சுரக்கும்.
6. "மண்ணிற் பூநாகம் வைத்து வெற்றிலையினிற்

   திண்ணிற்றான் பிரசவிப்பர்"

– *வை.கு.*

சுத்தித்த பூநாகத்தை வெற்றிலையில் வைத்துத் தின்னக் கொடுக்க எளிதில் பிரசவமாகும்.

பூநாகம்





Alitta Succinea

The clam worm is marine living in sediment. There is well developed head region with tentacles and other structures. Jaws are present. The body of the clam worm is distinctly

segmented and that each segment bears a pair of fleshy appendages, called parapodia. Protruding from the fleshy parapodia are many setat from which the class derives its name (Poly- many, Charta - setae)

நண்டு

Cancer pagurus

வேறு பெயர்கள்

"பத்துக்கா லுடையான் பருந்தின் விருந்தானான்
தத்துநரி யுண்ணி தலையில்லாச் சேவகன்
கொத்துக் குறடு குளத்துக் குருவிதான்
நத்தி யுள்ளைதான் நண்டுடன் பெயரே"

– ச.மு.நி

நண்டு, கடல் நண்டு, குளத்து நண்டு என இரு வகைப்படும். இவைகளில் குளத்து நண்டே மருத்திற்காகும். இதுவே வயல் நண்டாம். பால் நண்டு எனவும் வழங்கப்படும். இதன்கறி உணவாகப் பயன்படுத்தப்படுகிறது.

நண்டுக் கறியின் குணம்

"வயலிலுறு நண்டருந்த வாதக் குடைச்ச
லயலி லிருக்கா தணங்கே — துயிலவொட்டி
வன்சயித்தியங் கரப்பான்மன் குடலி ரைச்சலும்போ
முன்பயித்தியங் கதிக்கு முன்"

– ப.கு.சி

வயல் நண்டுக் கறியால் வாதக்குடைச்சல், இருமல், சயித்தியம், குடலிரைச்சல் தீரும். பித்தம் பெருகும்.

நண்டின் பயன்

நண்டுத்தீநீர்

நண்டுகளைக் கழுவி ஓட்டுடன் இடித்து 10 பங்கிற்கு ஒரு பங்கு சோம்பு அல்லது நற்சீரகம் சேர்த்து 8 பங்கு நீரிலிட்டு வாலை இயந்திரத்திலிட்டு எரித்து திராவகம் இறக்கிக்கொள்ள வேண்டும்.

அளவு: *15 முதல் 30 மி.லி. வரை.*

தீரும் நோய்கள்: *சுரம், ஷயம்*

நண்டுக்குடிநீர்: *நண்டைக் கழுவி உரலிலிட்டு இடித்து ஒரு மட் பாண்டத்திலிட்டு சுக்கு, மிளகு, மல்லி, அதிமதுரம், சிற்றரத்தை, கறிமஞ்சள் வகைக்கு 8.75 கிராம் சேர்த்து 4 லிட்டர் நீர் சேர்த்து ஒரு பங்காக வற்றவைத்து வேளைக்கு 60 மி.லி. முதல் 90 மி.லி. வரை அருந்த நீர்க்கோவை, சுரம், கடுப்பு, சயித்தியம் தீரும்.*

நண்டுத் தைலம்

நண்டிறைச்சி, முட்டைமஞ்சட்கரு, பூநாகம், வசம்பு, குக்கில், பூண்டு வகைக்கு 4.2 கி எடுத்து அரைத்து 175 கி வேப்ப நெய் சேர்த்துக் காய்ச்சி வண்டல் சிவந்து மிதக்கும் சமயம் இறக்கி ஆற விட்டுக் கொள்ள வேண்டும். காதிலிட காது வலி, குத்தல் தீரும்.

நண்டு இடித்த ரசம் — 1 லிட்டர், நல்லெண்ணெய்; — 1 லிட்டர் சேர்த்து எரித்து மெழுகு பதம் வரும் சமயம் கஸ்தூரி மஞ்சள், சாம்பிராணி, கிச்சிலி, பிச்சிவேர், கார்போகரிசி வகைக்கு 8.75 கிராம் எடுத்து இடித்து சேர்த்து ஆறவிட்டு தலையில் தேய்த்துக் குளிக்க தலைவலி, தலைபாரம் தீரும்.

நண்டுக்குழம்பு

நண்டிடித்த ரசம்	—	2 லிட்டர்
திப்பிலி வேர்	—	4.2 கிராம்
சீரகம்	—	4.2 கிராம்
கஸ்தூரி	—	4.88 மி.கி
கோரோசனம்	—	732 மி.கி
குங்குமப்பூ	—	976 மி.கி
இலவங்கம்	—	35 கிராம்
சாதிக்காய்	—	8.75 கிராம்
இலவங்கப்பட்டை	—	8.75 கிராம்
ஓமம்	—	8.75 கிராம்

கடைச் சரக்குகளை வறுத்து நண்டுச் சாறு விட்டு அரைத்து மேற்படி எஞ்சிய ரசத்துடன் கரைத்துத் தேவையான அளவு புளி, மிளகு, பூண்டு, சேர்த்துக் குழம்பாக்கி அருந்தி வர கயம் தீரும். கய நோயினர்க்குரிய உணவாகும்.

நண்டுக்குழி நீர்

"வாந்தியறுந் தாகமறு மாறாத விக்கல றுங்
காந்த லெரிவுங் கடிதேகுந் — தோய்ந்துவருங்
கண்டுக் குயர்ந்த கனிமொழியே பன்னாளும்
நண்டுக் குழிநீரை நாடு"

– ப.கு.சி பாடல் 44

நண்டுக்குழிநீரினால் வாந்தி, தாகம், விக்கல், வெப்பம் தீரும். நண்டுக்குழி நீரை 40 முதல் 100 மி.லி. வரை கொடுக்கலாம். இதனால் மேற்சொல்லிய நோய்களுடன் இருமல், கக்குவான் தீரும்.

வயல் நண்டை இடித்துச் சாறு பிழிந்து சம அளவு பசும்பால் கலந்து காய்ச்சி பிரை குற்றி மறுநாள் கடைந்து

வெண்ணெய் எடுத்து அத்துடன் பச்சைக் கற்பூரம், கோரோசனை, தேன் சம அளவு கல்வத்திலிட்டு சங்கினால் நன்கு அரைத்துக் கண்ணிலிட கண்ணிலெழும் சுக்கிர ரோகங்கள் தீரும்.

நண்டுச்சாறு

"நண்டிடித்த சாறு நளிர் சுரத்திற்கேற்றிடவே விண்டுமே யேகி விடும்."

1. நண்டை இடித்து சாறுபிழிந்து கொடுக்க கபசுரம் தீரும்.

2. நண்டை இடித்து அரைத்து வில்லை செய்து உலர்த்தி சுட்டு

   சாம்பலைத் தேன்விட்டுக் குழைத்துத் தடவ குதிகால் வெடிப்பு, ஆசன வெடிப்பு தீரும்.

3. நண்டை இடித்து முள்தைத்த இடத்தில் வைத்துக் கட்ட முள் வெளிப்படும்.

நத்தை

வேறு பெயர்கள்

ஊமைச்சி, சிரமூரி, நீர்க்காய், கல்லொட்டி, சலக்காய், நீர்க்குண்டு.

“ஊமைச்சிர மூரி யூர்ந்திடும் நீர்க்காய்
நாமச்சி கல்லொட்டி நற்செலக் கூறுமாம்
ஓமச்சி வுள்ளுயிர் வுயர்ந்தநீர்க் குண்டுதான்
நாமச்சி கொம்பொடு தானத்தையின் பெயரே”

– ச.மு.நி

இதன் ஓடு, மாமிசம் ஆகியவை மருந்தாகவும், உணவாகவும் பயன்படுகிறது. நத்தை கறியின் குணத்தைக் கூறுமிடத்து

“நத்தைக் கறிதனக்கு நாடாது மூலமுத
லொத்தமல ரோகமெலா மோடுங்கா — னித்தந்
தின்றாற் செரியாது தேசரிய தாது விரித்தி
நன்றாகு மாதே நவில்”

– ப.கு.சி

நத்தைக் கறிக்கு மூல முளையும், மலாசயப் பிணிகளும் நீங்கும், தினமும் புசிக்கில் அசீரணமும், சுக்கிலப் பெருக்கும் உண்டாகும்.

நத்தை குளிர்ச்சியும் ஈரமுமாம், இதனால் உதிர சுத்தி உண்டாகும். தாகத்தைத் தணிக்கும், பயித்தியம் போக்கும்.

நத்தைத்தைலம்

"குணமா நத்தைச் சத்தையுங் கூறுமுக் கடுகோமம்
கணமான திரிபலைக்கார் சீரகமும் — மணமாகுங்
காயங் கடுகிந்து காரெண்ணெயிற் காய்ச்சியுண்ண
வாயு கிராணிபோகும் வண்ணம்"

நத்தைச்சதை, திரிகடுகு, ஓமம், திரிபலை, கருஞ்சீரகம், காயம், கடுகு, இந்துப்பு வகைக்குச்சம எடை சேர்த்து அரைத்து எள் நெய்யிற் கலந்து காய்ச்சிக் கொடுக்க கிராணி, வாயு தீரும்.

நத்தைப்புகை

நத்தையை இரும்பு பாத்திரத்தில் அடைத்து நீர் ஊற்றி எரிக்க ஆவி வரும். அதன்மேல் துளையுள்ள இருக்கையை வைத்து, துளையில் ஆசனவாய் படும்படி நோயாளியை அமரச் செய்து, வேது பிடிக்க, இரத்த மூலம் தீரும்.

நத்தையை அவித்துச் சதையைப் பிரித்தெடுத்து பசு நெய்யிலிட்டு வறுத்து அரைத்துக் கழற்சிக்காய் அளவு உருண்டையாக உருட்டி ஒருவேளை 2 உருண்டை வீதம் கொள்ள சீழ், உள் மூலம் தீரும்.

நத்தைப்பற்பம்

நத்தையைப் பிடித்துக் கழுவி ஓட்டுடன் ஒரு பானையில் பாதியிருக்கும்படி போட்டு சீலைமண் செய்துலர்த்தி கனபுடமிட வேண்டும். ஆறிய பின் பிரித்து துத்தி இலைச்சாறு விட்டரைத்து சிறு வில்லைகளாகத் தட்டி உலர்த்தி ஓட்டிலிட்டு மறு ஓடு கொண்டு மூடி சீலை செய்து புடமிட பற்பமாகும்.

அளவு: 50 முதல் 100 மி.கிராம்

அனுபானம்: தேன், நெய், வெண்ணெய்

தீரும் நோய்: மூலம், இரத்த மூலம், ஆசன வெடிப்பு தீரும்.

நத்தையைப் பிடித்துக் கதிரில் குத்தி விளக்கில் காட்ட தைலம் இறங்கும். இதில் கரியபோளம், வாலேந்திர போளம் சம எடை எடுத்து வறுத்துச் சேர்த்தரைத்துப் பூச மேகப்புண் ஆறும்.

நத்தையை எரித்துச் சாம்பலைத் தேனிற் கலந்து படை, கண்ணோரத்தில் வரும் புண் இவைகளில் பூசத் தீரும்.

சாம்பலை முடிந்து காடியில் தோய்த்து நசியமிட இரத்த பீனசம் தீரும். நத்தை மாமிசம், நவாச்சாரம் வகைக்கு 1 பங்கு, கந்தகம் ½ பங்கு, கல்லுப்பு ¼ பங்கு சேர்த்துத் தைல மிறக்க இரசவாதத்திற்கு உரியதாகும்.

நத்தை, நண்டு, உள்ளி, வசம்பு, பூவரசம்வேர் ஆகியவை சம எடை எடுத்து அரைத்து அனைத்து சரக்கின் எடைக்குச் சேர்த்து சம எடை வேப்ப நெய்யில் கரைத்து எரித்து பக்குவத்தில் வடித்து துவாலையிட்டு உள்ளுக்கும் கொடுக்க குழந்தைகட்கு காணும் அனைத்துத தோடங்களும் நீங்கும்.

தாரை நெய்

"நறுநெய்யுழக்கு நத்தைச் சிப்பி நவிலுநீருஞ் சரிகூட்டி
யுறு நற்சீரமதி மதுரத்தோடு தேவதாரமபின்
நரிய சீனாக்கார முடன் நாட்டு முருங்கை பூ நீரும்
குறையாதிதனைக் கூட்டி வெந்து குளிரத் தாரை
கூட்டுகவே".

– *ப.ரா.சே.*

நெய்	—	¼ லிட்டர்
நத்தை நீர்	—	½ லிட்டர்
முருங்கைப்பூசாறு	—	½ லிட்டர்

சீரகம், அதிமதுரம், தேவதாரம், அபின், சீனாக்காரம், வகைக்கு 35 கிராம் எடுத்து அனைத்தும், சேர்த்தரைத்துக் காய்ச்சி வடித்து கண்களில் தாரையிட கண்ணோய்கள் தீரும்.

நாய்க்கட்டம்

நாயின் மலம் பல வேதியல் முறைகளில் பயன்படுத்தப் படுகிறது.

கம்பி நவாச்சாரக் கட்டிற்கு நாயின் வெண்கட்டம் பயன்படும்.

கந்தக பற்பம் செய்முறையில் நாயின் மலம் உதவும்.

“..

கூற நாய் மலங் குறிக்கு மிருபலம்
தீர கெந்தி நிறமாய் சமபலம்
மாறக் கவசம் வகையாகப் பூண்டிடே
பூண்டு சீலை பொருந்தவே மாட்டிடு
தூண்டு குக்குடந் திறமாகப் போட்டிடு
நீண்ட பற்பமாம் நேராக வெடுத்திடு
கூண்டு தேனில் குறிப்பா யருந்திடே”
அருந்த போது உறையுங் கண்டமாலை
திருந்து மேகந் தீராப் பிணியறும்
யொருந்து வெள்ளையும் பொங்கியே நின்றிடும்
குறித்து மேமுறைக் குறிப்பா யறைந்ததே”.

– *தே.வை 1500*

நாயின் மலம் — 70 கிராம்

கந்தகம் — 70 கிராம்

கந்தகத்தை நாயின் மலத்தினால் கவசித்து, உலர்த்தி, ஓட்டிலிட்டு ஓடு மூடி சீலைமண் செய்து குக்குட புடமிட பற்பமாகும்.

அளவு: *50 — 100 மி.கி. வரை*

அனுபானம்: தேன்

தீரும் நோய்கள்: *கண்டமாலை, மேகம், வெள்ளை நோய் தீரும்.*

போகர் 700—ல் சொல்லப்பட்டுள்ள பூதமாரண விடமுட்டித்தைலத்தில் நாய்மலம் சேரும்.

நாகர வண்டு

Sternocera chrysidioides

வேறு பெயர்கள்

"பாம்பின் வாய்க்கிரையானோன்,
சங்கன்காட்டுக்குள்உமுரி
காட்டுக்குள் சங்கு
சங்கஞ் செடியில் புக்கி"

– போகர் நிகண்டு

"காகைச் சங்கங் காட்டிலுமுரிதான்
வாகைப் பாம்புக்கு வாய்க்கிரையாவோன்
பாகைச் சங்குஞ் செடியில் குடிபுக்கி
வாகை நாகர் வண்டினின்பெயரே"

– ச.மு.நி பாடல் 97

சங்கஞ்செடியில் இருக்கக்கூடியது.

இதற்கு உமுரி, கொள்ளி, பொன்வண்டு என்று வேறு பெயரும் உண்டு.

இவ்வகை வண்டும், வண்டின் ஓடும் மருத்துவத்தில் பயன்படும். இது அநேக கண் மருந்துகளில் சேரும்.

கனத்த தாம்பிராதி மாத்திரை

"துத்த துருசு வெண்கலத்தூள் துலங்கும் செம்பு திரிகடுகு
சுத்த சூடன் கற்பூரம் சொர்ணமெழுகு கடுகு மஞ்சள்
நத்த நன்னாகரவண்டு கடனுரை முட்டை இந்துப்பு

சுத்து வெண் சாறடை காக்கணும் செம்பருத்திப் பிஞ்சையும் சேரே

சேர்த்துச் செங்கழுநீர் மூலம் சிறு கையாந்தகரைச் சாற்றில்

காத்தரை நாலுசாமம் கனத்த தாம்பிராதி தன்னை

மாத்திரை விதமாய்ப் பண்ணை மாதர் தம் பாலிலிட் டுரல்

நேத்திர ரோகமெல்லாம் நில விட்டுபோமே"

– *அ.ந.வி*

துத்தம், வெண்சாறடைவேர், துருசு, காக்கட்டான்வேர், வெண்கலத்தூள், செம்பருத்திப் பிஞ்சு, செம்புபொடி, திரிகடுகு, சூடன், பச்சைகற்பூரம், பொன்மெழுகு, கடுகு, மஞ்சள், நாகரவண்டு, கடனுரை, முட்டை, இந்துப்பு ஆகியவை சம எடை எடுத்துப் பொடித்து செங்கழுநீர்க் கிழங்கு சாறு, கையாந் தகரைச்சாறு விட்டு 4 சாமம் அரைத்து கயிறாகத் திரித்து உலர்த்தித் தாய்ப்பாலில் உரைத்து கண்ணிலிட கண்ரோகம் அனைத்தும் தீரும்.

பச்சைத்தாம்பிராதி மாத்திரை

"சங்கு மதி யொன்று நாகரவண்டீர்பத்து தனங்கள் ரத்தின நிறையுமாம் தாந்தேத்தானுந் துத்தம் ஓர் பத்துடன் தாம்பிரம் ஆறிலுடனே

இங்கிதமாய்ச் சிறுகீரையோடு கோவையும்

இதில் கையான் பனைமட்டையும்

இனமுடனே வரிமையுள மருந்ததனையும் இதமுடன் தானெடுத்துப்

பங்குமிவையாவையும் இங்கிதத்துடன் வளம் போன்று அம்மிதனிலே

கூட்டியிருபது நால் சாமமதையாட்டியே புகழ்ந்து கல் கயிறுமாக்கிச்

சொங்கு நிழலிலுலர்த்தி மின் ரசத்தெழுதத் தோற்கு நோய் தலையறிகில்

கண்சூடு மதிகோப நீர்ப்பாய்ச்சலுடனே மருள் பச்சைத்தாம்பிராதியே"

சங்கு	—	1 பங்கு
நாகரவண்டு	—	20 பங்கு
துத்தம்	—	10 பங்கு
இந்துப்பு	—	1 பங்கு
தேற்றான்கொட்டை	—	10 பங்கு
தாம்பிர அரப்பொடி	—	6 பங்கு

சேர்த்து சிறுகீரை, கோவையிலை, கையான், பனைமட்டை இவைகளின் சாற்றைத் தனித்தனியாக வகைக்கு 6 சாமம் அரைத்து கயிறாக உருட்டி நிழலில் உலர்த்திப் பழச்சாற்றில் இழைத்து கண்ணிலிட அதி உட்டிண நோய்கள், நீர்ப்பாய்ச்சல், அன்னகோபம் தீரும்.

கற்பூராதிப் பொடி

1. நாகரவண்டு, பச்சைக்கற்பூரம், பீதரோகிணி, மனோசிலை, துத்தம், துருசு, இந்துப்பு, பலகறை, பீங்கான், வண்டோடு, வெண் காக்கணவேர், ஓரிதழ்த் தாமரைவேர், வெண்சாரணைவேர், பொன்னங்காணிவேர், சிறுகீரைவேர் ஆகியவை வகைக்குச் சம எடை எடுத்துப் பழச்சாறுவிட்டரைத்து உலர்த்தி ஓட்டின் மீது வைத்து அடுப்பேற்றி எரித்து ஆறவிட்டுப் பொடியாக்கி கண்களில் இட கண்ணில் தோன்றும் சுக்கிர ரோகம் தீரும்.
2. வண்டு செம்பிராதி மாத்திரை, தந்திரத்தினாதி மாத்திரையில் சேரும். நாகரவண்டின் ஓடுகள் தனித்தும் பல மருந்து முறைகளிலும் சேர்க்கப்படுகிறது. பாம்பு புற்றுகளில் இவற்றைச் சேகரித்துக் கொள்ளலாம்.

3. வண்டு மகாரத்தினாதி மாத்திரை, நவ ரத்தினாதி மாத்திரை, பூநாக பற்பம் செய்முறையில் சேரும்.

4. நாகர வண்டோடு 6 பலத்திற்குச் சத்திச்சாரணை சாறுவிட்டு 5 கடிகை அரைத்து மூசையும், மூடியும் செய்து உலர்த்தி 105 கி பூநாகத்தைச் சுத்தித்து மூசைக்குள் வைத்து மேல் மூடி சீலை செய்து 4 சாமம் எரிக்க வேண்டும். மேற்சட்டியின் மேற்புறம் வெளுத்தால் பதமென இறக்கி ஆறவிட்டெடுத்துக் கொள்ள வேண்டும்.

   சுரம், சன்னி, நோய்களுக்குப் பணவெடை (488 மி.கி) திரிகடுகு, தேனில் அனுபானித்துக் கொள்ள தீரும் என தேரையர் வைத்திய காவியத்தில் கூறப்பட்டுள்ளது.

5. போகர் ஏழாயிரத்தில் சொல்லப்பட்டுள்ள காரச் செயநீர் முறையில் நாகர வண்டு சேரும்.



Sternocera Chrysidioides

Sternocera includes large brightly coloured species of somewhat oval shape, with smooth elytra and deeply punctuate pronotum, the sterna process prominent. They are rarely found outside the hills and forest areas.

2. Chrysochroa mutabilis.

This is metallic green insect with red reflectionsespecially at the margion of the elytra. This is abundant in Khasi hills.

Ref: Indian Insect Life. - ***by H. Maxwell - Lefroy.***

மயிர்

வேறு பெயர்கள்

“கேசர ரோமங் கிளர்ந்த மசகந்தான்
ஆசரக் கம்பிளி வஸ்தியின் வேறுதான்
தேசரச் சிப்பஞ் சிகையுறு கூந்தல்தான்
மாசரக் கந்தம் மயிருடன் பெயரே”

– *ச.மு.நி.*

கேசரம், ரோமம், மசகம், கம்பிளி, சிப்பம், சிகை, கூந்தல், கந்தம் என வேறு பெயர்களால் வழங்கப்படும்.

மனிதர் முதல் பல்வேறு பிராணிகள், பறவைகள் இவற்றின் மயிர் மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்றன.

ஒவ்வொரு உயிரினங்களிலும் மயிர் வெவ்வேறு நாமத்தோடு வழங்கப்படுகிறது. பறவைகளில் சிகை என்றும், இறகுகள், என்றும், ஆடு, மாடு வகைகளில் ரோமம், கம்பளி என்றும், மனிதரில் கூந்தல், மயிர், ரோமம் என்றும் பேசப்படுவதால் அனைத்துச் சொற்களும் மயிரையே குறிப்பதாகும்.

பொதுவாக மயிர் வகைகளில் இரும்பு மற்றும் செம்பு சத்து இருப்பதாகக் கூறப்படுகிறது. பல வகைப்பட்ட பட்சிகளின் இறகுகள் பற்பம் செய்யப்பயன்படுகின்றன. அவை

“கழுகிறகை வன்னிமயில் காரி நின்று” என்பதில்
கழுகு இறகு — பெருங்கூளி, காட்டுக்கூளி

நாட்டுக்கூளி — பெரும்பருந்து, சிறுபருந்து, காட்டுப்பருந்து, நாட்டுப்பருந்து

வன்னி — பெருங்கிளி, சிறுகிளி, காட்டுக்கிளி, நாட்டுக்கிளி

மயில் — பெருமயில், சிறுமயில், காட்டுமயில், நாட்டுமயில்

காரி — பெருங்காக்கை, சிறுகாக்கை, காட்டுக்காக்கை, நாட்டுக்காக்கை என்பனவாம்.

இறகுகளின் சுத்தி

சிறு சிறு துண்டுகளாகக் கத்தரித்து ஓட்டிலிட்டு எரித்து கருக்கிக் கொள்வதே சுத்தியாம்.

மனிதர் கூந்தல், மிருகங்களின் ரோமம், இவற்றைச் சிகைக்காய் நீரிலிட்டு கொதிக்க வைத்து நன்கு கழுவி எடுத்துக் கொள்வதே சுத்தியாம்.

இறகு பற்பமுறை

ஒரு பலம் (40 கிராம்) சுத்தித்த இறகின் பொடிக்கு நாலு பலம் (160 கிராம்) கையாந்தகரைச் சாறுவிட்டு அரைத்து வில்லை தட்டி உலர்த்தி ஓட்டிலிட்டு ஓடு மூடி சீலைமண் செய்து லகு புடமிட பற்பம் ஆகும்.

அனுபானம்

"கூளிச் சிறை முதற்கூறிய பற்பத்தை
நீளப்புவி நவநீதத் தானனு பானத்துன்
வாளிக் கிணையாகி மந்திரி யாதியை
யாளிக் கிணையா யனுக்கு மறுக்குமே"

– தே.ய.வெ

என்பதில் இறகு பற்பத்திற்குப் பொது அனுபானம் வெண்ணெய்.

அளவு

முழுக்கடலைக்கூறு	—	உத்தமம்
முக்காற்கடலைக்கூறு	—	மத்திமம்
அரைக்கடலைக்கூறு	—	அதமம்
காற்கடலைக்கூறு	—	அதமாதமம்
பெருங்கூளி இறகு பற்பம்	—	பித்தமிகுதி
சிறுகூளி	—	பித்தக்குறைவு
காட்டுக்கூளி	—	சேத்துமமிகுதி
நாட்டுக்கூளி	—	சேத்துமக்குறைவு
பெரும்பருந்து	—	வாதமிகுதி
சிறுபருந்து	—	வாதக்குறைவு
காட்டுப்பருந்து	—	காசம்
நாட்டுப்பருந்து	—	குட்டம்
பெருங்கிளி	—	பெருவியாதி
சிறுகிளி	—	பீதிரோகம்
காட்டுக்கிளி	—	நடுக்கல்
நாட்டுக்கிளி	—	நபுஞ்சகம்
பெருமயில்	—	பிரமை
சிறுமயில்	—	வியர்வை
காட்டுமயில்	—	அகாதரோகம்
நாட்டுமயில்	—	அடைப்பு ரோகம்
பெருங்காக்கை	—	பைத்தியம்
சிறுகாக்கை	—	குன்மம்
காட்டுக்காக்கை	—	பாண்டு
நாட்டுக்காக்கை	—	சன்னி

முறையே தீரும். இதனை,

“கழுகிறகை வன்னிமயில் காரிதின்று சூரங்
கழுகிறகை வன்னிமழைகாற்றி — கழுகிறகை
யச்சை நடக்கையலிபிரமை வேர்வையடை
யச்சைநடுக்கை வெண்ணையாம்”

என்ற தேரன் பாடலால் அறியலாம்.

சர்வ விடாரிக் குளிகையில் இறகு பற்பம் சேரும்.

மிளகு, கற்கண்டு, பரங்கிச்சக்கை, சித்திரமூலவேர்ப்பட்டை ஆமை ஓட்டுபற்பம், வகைக்கு ¼ பங்கு, சிறுதேக்கு 1 பங்கு, இறகு பற்பம் 2¼ பங்கு சேர்த்து தேன், கள், சாராயம் வகைக்கு 3 பங்கு வீதம் 9 நாள் அரைத்து பலம் (120 கிராம்) / குளிகை செய்துலர்த்தி கொள்ள வேண்டும்.

நல்ல பாம்பு முதல் அனைத்துப் பாம்பு கடி விடங்கட்கும் கொடுக்கத் தீரும்.

மயிரின் மருத்துவப் பயன்கள்

1. கோழி இறகு, தென்னை நார், மாட்டுக்கொம்பு சீவல், தலைமயிர், சம எடை புகைக்க வலிப்பு தீரும்.
2. கம்பளி சுட்ட சாம்பல், ஓட்டடை வேப்ப நெய்யில் குழைத்து தடவ வண்டுகடி தீரும்.
3. வேளை, ஊமத்தை, கஞ்சா, முருங்கைவேர், சித்திரமூலவேர், பூண்டு, வசம்பு, கம்பளி, மயிலிறகு — சம எடை வேப்பநெய்யில் அரைத்துப் புகைக்க தாந்திரிக சன்னிபோம்.

“முலையுண்ணாப் பிள்ளைகட்குத் தலைமயிரும்
மயிலிறகு முழுக்கச் சுட்டே
நிலைமையுடனே பொடித்து முலைப்பாலி

லே புகட்ட நினைத்துக் கொண்டே
குழவி முலைதா வெனவே குடித்திடும்......"

– *பா.வா.*

சுத்தித்த தலைமயிரும், மயிலிறகையும், தனித்தனியே சுட்டு சம எடை எடுத்து தாய்ப்பாலில் குடிப்பிக்க பாலுண்ணா குழந்தைகள் பால்குடிக்கும்.

"நன்மணிக ளுக்குறவாய் நாளுந் தொழில்காட்டு
புண்மைக ளுண்டான தெல்லாம் போக்குமே — தின்முன்
நாரான வராவார் நாரெனச் செய்யும்
மரைரோமமெனு மயிர்".

– *தே.வெ*

மான் மயிரால் முடிக்கப்பட்ட மருந்துகள் நாள் தோறும் நோய் தீர்க்கும் தொழிலைச் செய்யும். துன்பங்களை யெல்லாம் தீர்க்கும். உட்கொண்ட அளவில் மனிதர்களைத் தேவர்களைப் போல் ஆக்கும் என்பதாம்.

"மீதுவளர் கெசத்தால் வெண்பொடியா னாற்குளிகை
யாதுந் தனது வசமெய்துமே — யீதுமன்றி
உண்மேக நோயுடல்விட் டோடுமே நாடோறும்
விண்மேக நீருணியின் மெய்"

– *தே.வெ*

மேகநீருணி — வானம்பாடி

நாள்தோறும் வானம்பாடியின் மீது வளரும் உரோமத்தால் இரசம் பற்பமாகி

இரசக் குளிகை தன்வசமாகும்.

அன்றி இதன் ரோமத்தால் ஆன மருந்துகளைக் கொள்ள உடலிலுள்ள மேக ரோகங்கள்விட்டு நீங்கும்.

"தானென்ற கழுதையுட இட பா கத்தில்
தான்வளர்த்த சடையுடனே பாம்புச் சட்டை
மானென்ற வேப்பெண்ணெய் செஞ்சீலை சுற்றி
மைந்தனே சுடரென்ற தயிலம் வாங்கி
வோனென்று வுள்ளுக்குக் கரண்டி வீதம்
கொடுத்திடுவாய் மூன்றுநா ளாறு வேளை
தேனென்ற மேலுக்கும் பூசு பூசு
தெளிவாகும் பில்லிபயித்தியத் தானா ளாறே"

– குணபாடம் தாது சீவ வகுப்பு

கழுதையினிட பாகத்து மயிருடன் பாம்புச் சட்டை சேர்த்து சிவப்பு சீலையில் சுற்றி வேப்ப நெய்விட்டு சுடர்த் தைலம் வாங்கி, 5 மி.லி. வீதம் உள்ளுக்குக் கொடுத்து, மேலுக்கும் துவாலையிட பயித்தியம் தீரும்.

மயிலிறகாதித்தைலம்

மயிற்பீலி	—	70 கிராம்
மனோசிலை	—	42 கிராம்
வேப்பநெய்	—	1 லிட்டர்

மயிற்பீலியைச் சட்டியிலிட்டுக் கருக்கி, மனோசிலையைப் பொடித்துத் தூவி, உருகும் சமயம் வேப்பநெய் சேர்த்து எரித்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

பிடித் தைலமாக பிரயோகிக்க குடைச்சல், வலி, தீரும்.

மயிர்பற்று

“சீவிவி முஞ் கையது தான் பல முங்கால்
சிறக்கயெடு சீனமிடை அதனில் விட்டு
தாவியெடு மண்சட்டி யடுப்பில் வைத்து
தாக்கியெரி பழுத்துவிடு மதனிற் ருனும்
தூறவிடு உருகிநிற்கும் பதத்தில் தானும்
துடியுள்ள பழச்சாறும் விட்ட ரைத்து
பாவினிய பதமாகும் யெடுத்துப் பின்பு
பதமான கண்ரெப்பை யதனிற் பூசே
பூசியது காந்திடவே மறுநாள் தானும்
புகழுங்கண் வலியற்று உறுத்தல் போகும்
பாசிபடாப் பாணியது அறுத்து ஊத்தும்
பருதிகண்டால் கூசாது வலியும் நிற்கும்
தூசியது விழுந்தாலும் ஒதுங்கிப் போகும்”

– **தே.வை.**

சுத்தித்த இள வயது ரோமம், சீனாக்காரம் வகைக்கு ¼ பலம் (10 கிராம்) எடுத்து சீனத்தைப் பொடித்து ரோமத்தை நறுக்கி இரண்டும் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஒருமண் சட்டியை அடுப்பில் வைத்து எரித்து நன்கு சூடாக்கியதும் அதில் மேற்படி மயிர்க் கலவையைத் தூவ உருகும். இவ்விதம் அனைத்தும் உருகியதும் இறக்கி பழச்சாறு விட்டரைத்து கண்ணைச் சுற்றி புறவளையமிட கண்வலி, கண் சிவப்பு, கண்கூச்சம், உறுத்தல், நீர்வடிதல் தீரும்.

கண்ணில் மாற்றுப் பொருட்கள் விழுந்திருப்பின் அவை நீங்கிவிடும்.

மயில்

Pavo cristatus

"சிகியோடு ஞமலி தோகை சிகாவளஞ் சிகண்டி மஞ்ஞை
ஒகரமே மயூரமற்று முறுபினி முகங்க லாபி
மகிழ்வுறு நனீரம் பீலி கேகய மயில்பன் முப்பேர்"

– *ச.மு.நி.*

என்று நிகண்டில் கூறப்பட்ட பதின்மூன்று வேறு பெயர்களினாலும், மயில் வழங்கப்படுகின்றது. இதன் இறகு,

"சரணமே சிகண்டங் கூந்தல் சந்திரகங் கலாபங் கூழை
பெருகிய தோகை தொங்கல் பீலியாந் தூவி யும்பேர்".

என்ற பத்து வேறு பெயர்களினாலும் வழங்கப் படுகின்றது.

தேசியப் பறவை ஆகிய மயில் குறிஞ்சி நிலப் பறவை. இதனை அழகிற்காகவும். பாம்பு வராதிருக்கவும், வழிபாட்டிற்காகவும் வீடுகளில் வளர்க்கின்றனர். இதன் எல்லா உறுப்புகளும் உபயோகமாகின்றன.

இறகு

இதில் செம்புச் சத்திருக்கின்றது. கோழையகற்றிச் செய்கை இதற்கு இருத்தலின், இறகைச் சாம்பலாக்கி விக்கலுக்குச் சிறப்பாகக் கொடுக்கப்படுகின்றது.

"சிலேத்மத்தின் கோதமலாது விக்கலடாது"

என்ற அடியால், விக்கலுக்குக் கபமே முதற்காரண மென்றறியலாம். மற்றும்,

"மஞ்ஞைத் தோகை பற்பங், கும்புவிக்கல் வாந்தி கெடுக்கும்"

என்ற அடியால் மயிலிறகு பற்பம் வாந்தி, விக்கலைத் தீர்க்கும்.

மயிலிறகுச்சூரணம்

"எட்டுத் திப்பிலி யீரைந்து சீரகம்
கட்டுத் தேனில் கலந்துண விக்கலும்
விட்டுப் போகும் விடாவிடிற் போத்தகம்
சுட்டுப் போடுநான் தேரனு மல்லனே"

– *சி.வை.திரட்டு*

எட்டு பங்குதிப்பிலி, பத்து பங்கு சீரகம் சுத்தித்து சூரணித்துத்தேனில் கொடுக்க விக்கல் தீரும். விடாவிடின் சமஎடை மயிலிறகு சுட்டுப் பொடித்துச் சேர்த்துக்கொடுக்க விக்கல் தீரும்.

இறகைக்கொண்டு விசிறி செய்யப்படுகின்றது. அவ்விசிறியின் குணத்தைக் கீழ்க்காணும் செய்யுளினால் அறியலாம்.

மயில் விசிறியின் குணம்

"சந்நிவிஷங் குன்மந் தலைச்சுழலல் பித்தவிக்கல்
துன்னுசுவே தம்வாத தோஷமும்போம் — பன்னவதில்
உட்டிணமாம் புத்தி யொளிரும் பசுந்தோகை
யிட்டமயில் விசிறிக் கே"

– *ப.கு.சி*

இறகைக் கீழ்க்காணுமாறு சுத்திசெய்து பற்பித்து உபயோகிக்கலாம். இதனை நெருப்பிலிட்டுச் சாம்பலாக்கச் சுத்தியாம். கையாந்தகரைச் சாறுவிட்டு அரைத்து 9 வரட்டியில் புடமிட்டெடுக்கப் பற்பமாம். இதன் அளவு கடலையில் கால் கூறும்;, அனுபானம் வெண்ணெயுமாகும்.

பெருமயில் இறகு பற்பத்தை, வாயில் ஈரமின்மை, விக்கல், மூச்சடைப்பு முதலிய குணங்களை உண்டாக்குகின்ற பிரமிப்பு ரோக தோடத்திற்குப் பயன்படுத்தலாம்.

சிறுமயில் இறகு பற்பம் முதுகு வலி, பக்க இசிவு, தொப்புளில் காங்கையை உண்டுபண்ணும் வியர்வை முதலியவற்றிற்கு நன்மையை உண்டாக்கும்.

காட்டுமயில் இறகு பற்பத்தைக் கைநாடி நிதானப்படாமை, நடைக்கிசைவின்மை, புசித்த பதார்த்தத்தின் ருசி வேறுபடுதல் முதலிய குணங்களை உடைய அகாத ரோகப் பிணி தோடத்திற்கு உபயோகிக்கலாம்.

நாட்டுமயில் இறகு பற்பத்தை வாய் திறக்க வொட்டாமை, மேல் மூச்சுத் திணறல் முதலிய குணங்களை உடைய அடைப்பு ரோகத்திற்குக் கடலையில் கால்கூறு வெண்ணெயில் அனுபானித்துக் கொடுக்கத் தீரும்.

நோயில் தோடமுண்டாம் வகையினையும் அத்தோடத்தை நீக்க மயில் இறகை உபயோகிக்கும் முறையினையும் கீழ்க்காண்க.

நோயிருக்கும் காலத்தில் குளிர்ந்த நீருண்டால், அஃது தலையில் சேர்ந்து சீதளம் உண்டாகித் தோல், என்பு முதலிய சப்த தாதுக்களிலும் பின்பு மலமூத்திரத்திலும் தோடமுண்டாகி, சுரமும் கண்டு, கண்ணானது கொடியிழுப்பது போலவாகும்.

வறண்ட உணவை உண்டால் எப்படி தாகமும் வறட்சியும் இருக்குமோ அதைப் போலவும் நாவும் பல்லும்

ஆம். இதற்கு மயில் தோகை, கிளியிறகு, சங்கம்பட்டை இம்மூன்றின் சாம்பலையும், வெண் தோன்றி, திரிகடுகு இந்நான்கின் தூளையும் அதனுடன் கூட்டித் தேனில் கலந்து விரலில் தோய்த்துத் துவரை அளவு நோயாளியின் நாவில் தடவ நாவில் உண்டான சேத்துமத் தோடமறும். நாவில் நீர் பெருகும். வறண்ட வார்த்தை குளிர்ச்சிக்கு நிகராகும். தோள்களும் அதிராது மூக்கிலும் நீர்வடியாது.

மயில்கறி

இஃது ஆமாசயத்திற்கு வலிவையும், வீரிய விருத்தியையும் செய்யும் மற்றும் இதன் குணத்தைக் கீழ்க்காணும் செய்யுளாலறியலாம்.

"சூலைப் பிடிப்புகளைச் சோரிவளி யைப்பித்தை
வேலைச் சிலேட்டுமத்தை வீட்டுங்காண் — நூலொத்த
வற்பவிடை மாதே யனலா மயிலிறைச்சி
நற்பசியுண் டாக்கு நவில்"

– ப.கு.சி

வெப்ப வீரியத்தையுடைய மயில் கறி, கீல்வாயுவையும் வாதசோணித நோயையும், கப பித்தத்தையும், அதிகபத்தையும் நீக்குவதன்றி நல்ல பசியையும் உண்டுபண்ணும்.

மயில் கறியுடன் சதாப்புத் தழை சேர்த்துச் சூப்பிட்டுக் குடித்துவர வயிற்றுப் பொருமல், வலி, மேகசூலை நோய் நீங்கும்.

மயிலின் கொழுப்பை உருக்கி எண்ணெயாக்கி, வாத நோய்களுக்கும் மேக சூலைக்கும் வெளிப் பிரயோகமாக உபயோகிக்கலாம்.

மயில் நெய்

"நீலமயிலின் கொழுப்பை நெய்யாக்கி மேற்றேய்க்கச்
சாலப் பிடிப்புவலி தானொழியும் — வாலிழையாய்
கண்டவிரற் சூலையறும் கைகால் முடக்கறும் பூ
மண்டலத்தி லென்றும் மதி".

ப.கு.சி

மயிலின் பயன்கள்

1. மயிற்கொழுப்பை உருக்கி நெய்யைத் தேய்த்துவர தசைவலி, சூலை கை, கால் முடக்கு தீரும்.
2. மயில் கொழுப்பை ஆண்குறியில் தடவி வரத் தளர்ச்சி நீங்கும்.
3. மயிலின் என்பைச் சுட்டுச் சாம்பலாக்கி நீரில் குழைத்து வெண்குட்டத்திற்கு வெளிப்பிரயோகமாக உபயோகிக்கலாம்.
4. மயில் பிச்சு, சன்னிக்குக் கொடுக்கும் வயிரவங்களின் அரைப்புக்கு உபயோகமாகின்றது.
5. மயில் முட்டை ஓட்டைச் சுத்தி செய்து, அதற்கு நீர்முள்ளிச் சாறு மிதமாய் விட்டு, ஒரு நாள் அரைத்து வில்லை செய்து, சில்லிட்டுச் சீலை செய்து புடமிட்டெடுக்கப் பற்பமாகும். இதனைக் கடலையில் கால்கூறளவு வெண்ணெயில் அனுபானித்துக் கொடுக்க வெட்டை ரோகத்தினால் தோஷித்த தோடம் நீங்கும்.

6. மயில் மலம் நாகக்களங்கு செய்ய, உதவுமென்பதனைக் கீழ் கூறப்பட்ட வெண்பாவினாலறியலாம்.

“கங்களங்கா மம்முறையாற் காணலா மெப்பொருளு
மிங்கிதமா யாரு மெளிதிலே — யெங்க
ளுமைதன் னருளா லுலகி லறிய
ஞமலி மலத்தாலே நா” – **தேரையர் வெண்பா**

7. மயில் மலத்தைக் கொண்டு புகையிட, வீட்டில் பாம்பு வராதென்றும் கூறுவர்.

மயில்

PAVO CRISTATUS
(Blue or Indian Peafowl)

HABITAT

All habitats, almost in all villages and orchards.

GEOGRAPHICAL RANGE

India, Nepal and Sri Lanka

SIZE

The male peafowl (peacock) is about 2m long. The female peafowl (peahen) is about 0.09m long.

Both have a fan - shaped crest on the head. The peacock has long At the age of 3, peacock's feathers reach maximum length for their lives, aside from the new feathers grow after they molt in the later summer. Feathers are used in SIDDHA Medicine.

மான்கொம்பு

வேறுபெயர்கள்

நவ்வி, உழை, புள்ளிமிருகம், கடவிழி, சாதகவோடி, அரிணம், சூனம் மிருகம்.

மான் இனங்களில் புள்ளிமான் ஒருவகை. இதன் கொம்புகள், தோல், மாமிசம், குளம்பு முதலியன மருத்துவத்தில் பயன்படும்.

இவ்வகை மானின் கொம்புகள் சிரத்திலுள்ள மயிரின் ஒரு மாற்று வளர்ச்சி என உயிரியல் நூல் கூறுகிறது. இக்கொம்புகள் ஒரு நிலையில் உதிர்க்கப்பட்டு மீண்டும் வளர்வன. இவ்வகை மானின் தோல் இருக்கைக்குச் சிறப்புடையது. பலவித நோய்களிலும் ஆசன முறைகளிலும் இவ்விருக்கைசொல்லப்பட்டுள்ளது.

மான் கறியின் குணம்

“மான்கறி யுண்டார் தமக்கு மாதொந்தநோய் கபநோ
யூன்பகந்தரங் கழலி னூதையோடு — தான்பரவு
வாதநமையும்விட்டு வாங்குங்கண் ணிற்புகையா
மோது பித்தம் வீறு மொழி”

– ப.கு.சி

மானின் கறியால் தொந்த நோய், ஈளை, பவுத்திரம், கழல்வாயு, வாத நமைச்சல் தீரும். கண் புகைச்சலும் உண்டாகும். சூடும், கொழுமையும், உடற்கு உண்டாகும். பசு நெய்யால் பொரித்து உட்கொள்ள சிறப்பாகும்.

"மான்கறியி னாலக்கினி மாந்தமறு மென்றுமுறை
நான்கறிய வேதநவிற் றுகையா — லூன்கொள்
விழைவுடையோ ராலாயுள் வேதியர் சொல்லாலே
யுழையாலே நன்மையடை யும்"

– தே.வெ

மான் கறியில் அக்கினி மந்தம் தீரும். ஊன் உண்ண விரும்பின் மான் கறியே நன்மைபயக்கும் என்பதாகும்.

மான் தோல், குளம்பு, கொம்பு இவற்றை எரித்து புகையைச் சுவாசிக்க சுவாச காசம் தீரும்.

வல்லாரை நெய்யில் மான் கொம்பு பற்பம் சேரும்.

புலிப்பாணி வைத்தியம் 500-ல் சொல்லப்பட்ட கண்டாவிழ் தத்தில் மான் கொம்பு சேரும்.

மான் கொம்பின் குணம்

"ஆகு மிங்கிதனின் கொம்புக் ககன்றிடும் வரட்சிழச்சுத்
தாகமே தொய்வினோடு சாற்றரு மலடு பித்தம்
மேகமே யிருமல்காந்தி வெட்டைவெங் கயமே யீழை
போகுமே கிராணியெல்லாம் புகல் சலரோக மற்றும்"

– ப. சூடாமணி

மான் கொம்பு, வறட்சி, சுவாசகாசம், மலடு, பித்தம், மேகம், இருமல், வெட்டை, சயம், ஈளை, கிராணி, நீர்த்தோடம் இவற்றை நீக்கும்.

மான் குழம்பு

"மானின் கொம்பு வளர்பெற ஆவிநெய்
தேனில் நேக உரைத்துச் செலுத்திடக்
கானமா முனி சொன்னதைக் கண்ணில்
ஊனமான படலங்க ளோடுமே"

– அ.ந.வி.

மான் கொம்பைப் பசு நெய்யிலும், தேனிலும் இழைத்துக் குழம்பாக்கி வைத்துக் கொண்டு கண்ணிலிட கண் படலம் தீரும்.

மான் கொம்பு பற்பம்

“அழகிய மானி னழகிய பற்பங்கேள்
நிறைய மேபழச் சாற்றா லரைத்துமே
நிறைய மேரவித் தீரவே காய்ந்தபின்
முறையுங் குக்குட முற்றும் பொதிந்திடே
பொதிந்து தீயைப் பொருத்தப் புகட்டியே
வதிந்து மாயனை வாழ்த்தி யெடுத்திடு
சதிந்து பற்பந் தனியநறு நெய்யில்
முதிர்ந்து மண்டல முற்றும் பொசித்திடே.
பொசித்த போது பொரும லிரைப்புகள்
நசித்த மேனி நவிலு மிருமலும்
கசிந்த ரோகங் கதறியே நீங்கும்
பசித்த பற்பம் பகர்ந்தனர் தேரனே”

– *தே.வை.*

மான் கொம்பைச் சுத்தித்து அராவிய பொடிக்கு பழச்சாறு விட்டு அரைத்து வில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மூடி சீலைமண் செய்து குக்குட புட மிட பற்பமாகும்.

அளவு: *50* முதல் *200* மி.கி.

அனுபானம்: பசு நெய்

நாளளவு: *40* நாட்கள்

தீரும் நோய்கள்: பொருமல், இளைப்பு, இருமல்.

வேறு

சுத்தித்த மான்கொம்பைச் சீவி, குப்பைமேனிச்சாறு, முசுமுசுக்கைச்சாறு, வேலிப்பருத்திச் சாறு இவைகளால் தனித்தனியே அரைத்து வில்லைசெய்து உலர்த்தி குக்குட புடமிட பற்பம் ஆகும்.

அளவு: *50 — 200 மி.கிராம் வரை*

அனுபானம்: *நெய்*

தீரும் நோய்கள்: *அஸ்திசுரம், இருமல், கணை தீரும்.*

வேறு

மான் கொம்பைப் பிளந்து சிறு சிறு துண்டுகளாக வெட்டி குப்பைமேனிச் சாற்றில் ஒருநாள் ஊறவைத்து மறுநாள் எடுத்து குப்பைமேனி இலையை அரைத்துக் கற்கமாக்கிக் கவசம் செய்துலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு கொண்டு மூடி சீலைமண் செய்து உலர்த்தி குக்கிட புடமிட வேண்டும்.

அளவு: *50 முதல் 200 மி.கிராம்.*

அனுபானம்: *நெய், தேன்*

தீரும் நோய்கள்: *பவள பற்பத்துடன் கூட்டிக் கொடுக்க நீரடைப்பு, கல்லடைப்பு, நீர் எரிச்சல், சயம், உஷ்ணம், மேக உட்டிணம் தீரும்.*

Axizaxis

Geographic Range

The axis deer occurs historically in India and Ceylon.

Antler Development

Axis bucks can be in hard horn any time of the year. They grow and shed antlers on their own clock so in one herd may be a newly shed buck, a hard horn buck and a buck in the velvet.

Usual antlers are 22 to 27 inches.

மாட்டுக் கொம்பு

“மேதை யெருமை விளக்குங் கிடாக்காலன்
மாதை மயிடம் மருவும் பசுங்கொம்பு
தோதை யெருது கோவினிடத் தந்தம்
பாதையி னாமம் பரிமாட்டுக் கொம்புக்கே”

– ச.மு.நி

என்பதின் மாட்டுக் கொம்பு என்ற தலைப்பில் பசு, எருமை, காளை, எருது இவற்றின் கொம்புகள் மருத்துவத்திற்காகும்.

எருமைக்கொம்பின் குணம்

“. . . . . . . யெருமைக்கொம்புக்
குதிரைவலி நீக்குங் குறி”

– ப.கு.சி

1. *எருமைக் கொம்பினால் குதிரைவலி நீங்கும்*
2. *எருமைக் கொம்பு சீவல் சேர்த்து பிடாலவணம் செய்யப்படுகிறது.*
3. *எருமைக் கொம்பை ராவி, குகையிலிட்டு ஊதி, பசு வெண்ணெயில் குழைத்து 3 நாள் போட மூல முளை அற்று விழும்.*
4. *பரராச சேகரம் எனும் நூலில் சன்னி ரோக சிகிச்சை முறையைக் கூறுமிடத்து,*

"ஈனாத மாட்டின் கொம்போடிங்கிவை புகைபிடிக்க"

என்றிருப்பதில் கன்றீனாத மாட்டின்கொம்பை புகை பிடிக்க சன்னி, சுரம் தீரும்.

5. தென்னை நார், கோழியிறகு, பசுமாட்டின் கொம்பு சீவல், தலை மயிர் சேர்த்தரைத்து புகை பிடிக்க வலிப்புத் தீரும்.

கணத் தைலம்

எருமைக் கொம்பைச் சீவி சட்டியிலிட்டு எரிக்க அது பொரிந்து களி போல் ஆகும்.

அச்சமயம் திருகு கள்ளியின் மேற் புறணியை 3 காசெடை பொடித்துச் சேர்த்து 1.3 லிட்டர் ஆமணக்கு நெய் சேர்த்துக் கிண்டி பக்குவத்தில் இறக்கி 2 நாள் சூரிய புடம் வைத்து எடுத்துக் கொண்டு துட்டெடை வீதம் கொடுக்க குழந்தைகட்கு காணும் எட்டு வகைக் கண நோய் தீரும்.

கொம்புப் பசை

"மயிற்பீலி சுட்டகரி தலையி லுள்ள
மயிர்சுட்ட கரியெருமைக் கொம்பு தன்னைத்
தீயிற்சுட்ட கரியுடனே யொதியம் பட்டை
சேர்சமனா யெலுமிச்சம் புளியா லாட்டி
உயர்ச்சிபெறு மெள்ளெண்ணெ யதிற்கலக்கி
யுறவெந்து சிறுதேனின் மெழுகு போட்டு
மயிற்சியறும் பதம்வடித்துத் திரியிற் றோய்த்து
வைக்கவொடுப் புண்வகைக்கண் மாறு மன்றே"

– ப.ரா.சே

மயிலிறகு சுட்டகரி, தலைமயிர் சுட்டகரி, எருமைக்கொம்பு சுட்டகரி ஒதியம்பட்டை ஆகியவை சமஅளவு எடுத்து, எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து நல்லெண்ணெய்யில் கலக்கிக் காய்ச்சிப் பதத்தில் வடித்து, தேன் மெழுகு சேர்த்துக் கிளறி ஆறவிட்டெடுத்துக் கொள்ள வேண்டும். சீலையிலூட்டிப் போட, புண் தீரும்.

காளை மாட்டுக் கொம்பு, செம்போத்திறகு, மஞ்சள் புகைக்க பிரலாப சன்னி தீரும்.

மின்மினிப்பூச்சி

Pyractomena borealis

வேறு பெயர்கள்

கச்சோதம்

இரவில் ஒளிவிட்டு பறக்கும் சிறிய வண்டினம். இது உபரசத்தில் ஒன்று. இது மருத்துவத்திற்கும், இரசாயன வித்தைக்கும் பயன்படும்.

மின்மினிப்பூச்சின் பயன்கள்

"துன்மினிப் பூச்சிதன்னை அமுதினுள் வைத்தி
ரவியினின் நீ விழுங்கிடில்
நின்னைத்துடவோர் மூன்று இரவே நீ
விழுங்கிடிலோ வீழிமாலைபோம்"

– அ.ந.வி

மின்மினிப் பூச்சியைப் பிடித்து வெல்லத்தில் வைத்துப் பொதிந்து மூன்று நாள் விழுங்க மாலைக் கண்தீரும்.

"வற்கமெல்லாங் கட்ட வலிமை யுடைத்தாகும்
பொற்கடம்போல் தேகத்தைப் போஷிக்கும் — தற்கமெனப்
பிச்சோதம் போலும் பிணிகளை யெல்லாமறுக்கு
கச்சோதம் பாஷாணக் கல்"

– தே.வெ.

மின்மினிப் பூச்சி பாடாண வகைகளைக்கட்ட வன்மையுடையதாகும். பொன்போல மேனிஉண்டாகும். நோய்களை யெல்லாம் அகற்றும் என்பதாம். பூபதி மாத்திரையில் மின்மினிப்பூச்சியின் எச்சம் சேரும்.

மின்மினிப்பூச்சி, மயில்துத்தம், வெள்ளைச்சாரணை வேர் சமனெட எடுத்து சதாப்பிலைச்சாறுவிட்டு அரைத்து மாத்திரை செய்து தாய்ப்பாலில் உரைத்து கண்ணிலிட மாலைக்கண் தீரும்.

"பச்சோந்தி வாலிற்படு மிரத்தமுங் கணையுங்
கச்சோத மெய்யுங் கலந்தரைத்து — மெச்ச
நிழலிலுலர்த்திக் கொள்ளதற்கு நீங்காநோயும் நீங்குங்
கழல்பட்சி ராசக் கலிக்கம்"

– தே.வெ.

மின்மினிப் பூச்சி, பச்சோந்தி வாலை அறுத்து வரும் குருதி, திப்பிலி சேர்த்தரைத்து நிழலில் உலர்த்தி கலிக்கமிட அனைத்துப் பிணிகளும் நீங்கும்.



மின்மினி பூச்சி

PYRACTOMENA BOREALIS

Habitat

Wet, Wooded areas

Physical description

Both male and female adults of P. borealis are 11-19mm long. It consists of light organs, which appear as two pale, enamel-like ventra abdominal segments in the male. The female has enamel-like organs confined to the edges of these segments.

மீன் எலும்பு

(மீன் முள்)

“மச்சத்தின் செல்வி மகரமீ னங்கம்
அச்சத்தின் செல்வங் கசமீனென் புதான்
மச்சத்தின் கச்சமுறு மீன்றலை வாளா
மிச்சதாதின் மீனெலும் பிடநாமமே”

– ச.மு.நி.

முழுமுதற் கொட்டு, மகரமீன் அங்கம், மீன்தலைவாள், எதிர்த்தேறும் வேளை, வாள் உற்ற அறல் என போகர் நிகண்டிலும் கூறப்பட்டுள்ளது.

இவ்வகை மீன்கள், தலையின் மேற்புறத்திலிருந்து முன்புறமாக ஏறக்குறைய 12 முதல் 36 அங்குல நீளத்தில் இரு புறமும் முட்கள் அமைந்த வாள் போன்ற தோற்றமுடைய கொம்பை உடையது. இம்மீன்கள் கொம்புச் சுறா எனவும், வழக்கில் பேசப்படும். கடலில் மீன்கள் வாழும் வகையைப் பொறுத்து 3 வகையாகப் பிரிக்கப்படுகிறது. அவை கடலின் மேற்பரப்பில் வாழ்பவை நடுப்பகுதியில் வாழ்பவை, கடலில் அடிப்பகுதியில் வாழ்பவை என்பதாகும். கடலின் ஆழ்ந்த அடிப்பகுதியானது “கசம்” என கடல் இயல் துறையினரால் பேசப்படுகிறது. இவ்வகை மகர மீன்கள் கடலுக்குள் ஆழ்ந்த அடிப்பகுதியில் மட்டுமே காணப்படுவதாக கடலியல் நூல் கூறுகிறது. இதனால் தான் “கசமீன்” என்ற தொரு பெயர் காரணப்பெயராக அமைந்திருக்கிறது. “மகரம்” எனின் வாள் என்பது பொருள். எனவே மகரமீன் எனவும், வாள் உற்ற அறல் எனவும் பெயர்பெற்றது. இதன் வடிவை முதன்மையாகக்கொண்டே மகரயாழ் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மருத்துவ நூற்களில் தலைவாள்மீன், தலைவாள், மீன்எலும்பு என்ற பெயர்களில் கூறப்படுகிறது.

பெரும்பாலும் கண்ணோய் மருத்துவ முறைகளில் இது சேர்க்கப்பட்டுள்ளது.

மீன் எலும்பு சேரும் மருந்துகள்

கனகமாமணி மாத்திரை

“ஆவினற் பல்லும் உழையதன் கொம்புங்
கூன னெலும்புடனே மதுரமுஞ் சங்கும்
பலகறை யுடனே செந்தலை வாள்மீன்
அக்கினி சாலமும் ஆவினற் குளம்பும்
முத்தமங் கிழங்கும் மேன்மைய தாக
சரிநிரை எடுத்து மே பழச்சாறுங்
கோவி னீருடனே மெழுகுபோ லதனை
யரைத்ததை வழித்து நீயன்பாய்ப்
பூவின் வெண்கலத்துப் புறந்தனி லுருட்டிப்
புதுமையாய் நிழலினி லுலர்த்துப்
போகுமே பில்லம் பிரிச்சலு மாணிப்பூ முதல்
பொரிகள் கண்பூவுங்
காலினில் மறைந்து போகுனிம்ப ரசத்தில்
கயிறதை இழைத்துமே எழுதில்
கனகமா மணியின் பேரெனப் புவியில்
கருத்தினா லுரைத்தனர் பிரித்தே”.

– அ.த.வி

ஆவின்பல், மான்கொம்பு, ஆமைஓடு, அதிமதுரம், சங்கு, பலகறை, மீன் எலும்பு, கடல்நுரை, பசுகாற்குளம்பு, கோரைக்கிழங்கு வகைக்கு ஒரெடையாக எடுத்துப் பழச்சாற்றில் அரைத்து மெழுகு பதத்தில் வழித்து கயிறு

போலுருட்டி வெண்கலப் பாத்திரத்தில் வைத்து நிழலில் உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும்.

பழச்சாற்றில் இழைத்துக் கண்ணிலிட கண்பூ, பில்லம் தீரும்.

இம்மகர மீன் அன்றி பலவகை மீன்களின் குணம் சொல்லப்பட்டுள்ளது.





முள் மீன்

Saw Fish

Sawfishes are related to sharks and rays. These fish range from medium – sized to huge. Their most striking appearance is a long. Toothy snout. They possess a cartilaginous skeleton and no swim bladder.

Sawfishes are found in tropical and sub-tropical areas around Africa and Australia and in the Carribbean, and frequently swim far into rives. They are also found in bays and estuaries.

Sawfishes live only in shallow, muddy water and can be found in both freshwater and saltwater. Most prefer river mouths and freshwater systems. All sawfishes have the ability to travels between fresh and salt water.

Physical characteristics

The most eye-catching feature of the saw fish is of course, their saw like snout, called a rostrum. The rostrum is covered with motion and electro sensitive pores that allow sawfishes to detect movement and even heartbeats of buried prey in the ocean floor. The "teeth" protruding from the rostrum are not real teeth, but modified denticle scales. The body and head of a sawfish is flat as they spend most of their time lying on the sea floor.

Sawfish are hunted for their roustrum (which is prized as a curiosity by some), their fins (which are eaten as a delicacy). Their liver oil and for use as medicine.

பேரரால்

MALABAR SPINY EEL – MACROGNATHUS GUENTHERI

"வாராய் மடமானே வந்தபிணி அத்தனையும்
பேராரால் மீனுக்குப் பின்னிடையும் — பேரா
திருந்த பழமலம்போம் எய்தும்ஆ ரோக்கியம்
மருந்தோடே ஒக்கும்என வை".

– ப.கு.சி.

பல பிணிகளும், பழமலமும்போம். ஆரோக்கியம் உண்டாம்.

சிற்றரால்

SPINY EEL – MASTACEMBELUS ARMATUS

"சிற்றாரால் மீன்அருந்தச் சிக்கு மலசலம்போம்
உற்றகபங் கரப்பான் உண்டாகுஞ் — சற்றேதான்
மந்தம்உறுந் தீபனம்போம் வாயிற் சலம்ஊறுங்
கந்தமலர்ப் பூங்குழலே காண்" *– ப.கு.சி.*

152- 2 - 26a

தீபனம், மலச்சிக்கலும் போம். கபம், கரப்பான், மந்தம், வாயில் சலம் ஊறலும் உண்டாம்.

கச்சற்கருவாடுக் கறியின் குணம்

PENINSULAR OLIVE BARB – PUNTIUS SARANA

"வாதமறும் அப்பொழுதே வனபித்தம் உண்டாகுஞ்
சீதம் மகலுந் தினவும்போங் — கோதாய்கேள்
கண்டால் பசிஎழும்புங் கச்சற் கருவாடு
கொண்டால் சுரமும்விடுங் கூறு"

– ப.கு.சி.

சீதம், சுரம், தினவு, வாதமும் போம். பித்தம், பசியும் உண்டாகும்.

கிழங்கான் மீன்

WHITING – SILLAGO SIHAMA

"பத்தியத்திற் கேற்ற பருங்கிழங்கான் மீன்அருந்த
உற்ற பிணியனைத்தும் ஓடுங்காண் — மெத்தப்
பசியெழும்புஞ் சேர்ந்த பழமலமுஞ் சாறும்
முசியா துடல்வளரு முன்" *– ப.கு.சி.*

பழமலம், பிணியனைத்தும் போம். உடல்வளரல், பசியும் உண்டாகும். பத்தியத்திற்கு ஆகும்.

மயறிமீன்

CLUPEA ARTICULATA

"மயறிகரப்பான் ஐயம் வாதபித் தத்தோ
டுயருகின்ற சோபம் ஒழிக்கும் — நிச்சயமாய்
உதரத்தன் உள்ளும் உறைவாதம் போக்கும்
பதியில் இதனைப் பகர்".

– ப.கு.சி.

ஐயம், கரப்பான், சோபம், வயிற்றுள் வாதம், வாதபித்தமும் போம்.

அயிரை

MESONOE MACHEILUS PULCHELLUS

"உயிரை வளர்க்கும் உடற்பிணியை நீக்கும்

மயிரை வளர்க்கும் அருசி மாற்றும் — வயிரச்
செயிரையுறாச் சற்குணநற் றென்னமிர்தே நாளும்
அயிரை எனுமீன் அது".

– ப.கு.சி.

அருசியை மாற்றும். தேகப்பிணியும்போம். தலைமயிரும் மிகவும் வளரும் உயிரையும் வளர்க்கும்.

சேல்கெண்டை

COMMON LABEO – LABEO DUSSUMIERI

“குடல்வாத சூலை கொடுக்குஞ்சேற் கெண்டை
அடல்வாத மேகமும் உண்டாக்குஞ் — சடமீது
புண்ணுஞ் சிரங்கும் பொருந்திநிற்கச் செய்துவிடும்
உண்ணமிகு சுவையாம் ஓது”.

– ப.கு.சி.

குடல்வாத சூலை, சிரங்கு, புண், வாதமேகமும் உண்டாம்.

சுறா



“வாத கபம்அறுக்கு மன்னுகீ டம்போக்கும்
ஊது குடல்வாதம் ஓடுங்காண் — ஆதரவாய்
எல்லாப் பிணிக்கும் இதமாகும் நல்லசுறா
நல்லா ரறிய நவில்”. – ப.கு.சி.

வாதகபம், புழு, குடல்வாதமும் போம். பத்தியத்திற்காகும்.

சுறாக்கருவாடு

“சூலை கிராணிகுன்மந் துஷ்டஅதி சாரமிவை
வேலை யுலகை விடுத்தோஷஞ் — சால
அறாப்பசி யுண்டாகும் அபத்தியமல் லாத
சுறாக்கருவா டுண்பார்க்குச் சொல்”.

– ப.கு.சி.

சூலை, கிராணி, குன்மம், அதிசாரமும் போம். பசியுண்டாகும். பத்தியத்திற்கும் ஆகும்.

ஓலைவாளைக்கருவாடு

RIBBON FISH – LEPTURACANTHUS SAVALA

"ஆலைவாய்ப் பித்தம் அணுகாதாம் அம்புவியில்
ஓலைவா ளைக்கருவா டுண்டக்கால் — காலப்
பசிதீ பனமாம் பறக்கும் வாதம்
புசியார்க் கிதனை புகல்".

– ப.கு.சி.

பித்தம், வாதமும் போம். பசிதீபனமும் உண்டாம்.

கொள்ளிக் கருவாடு

YELLOW WING FLYING FISH – CYPSELURUS POECILOPTERUS

"கொள்ளிக் கருவாடு கொண்டால் உடம்பெல்லாங்
கொள்ளிகொண்ட சுட்ட குறிப்பாகும் — விள்ளக்
கரப்பானும் புண்ணுங் கனசிரங்கும் பைய
உரப்பாம் அழகுகெடும் ஓது". – ப.கு.சி.

அழகும்போம், கொள்ளியால் சுட்டபுண் போம், கரப்பான், சிரங்கு, புண்ணும் உண்டாம்.

சன்னக் கூனி

ACETUS INDICUS



"சன்னக்கூனிக் கறியைத்தான் அருந்தில் அக்கணமே
தின்னப் படும் அன்னஞ் சீரணமாம் — பின்னும்

பசிக்கும் அதிநெருப்பாம் பாரில்நோ யெல்லாம்
நசிக்கு மெனவு நவில்".

– ப.கு.சி.

நோய்களெல்லாம் போம். அன்னஞ்சீரணமாகும். சூடு, பசி உண்டாம்.

மடவை

Flathead Grey Mullet – Mugil Cephalus Speiglar's Grey Mullet – Valamugil speigleri

"மடவைமீன் வாதமொடு மந்தமுள்ள மூலங்
குடல்வாதஞ் சூலைகொடிய — அடல்கரப்பான்
உண்டாக்கும் மாங்கி சங்கள் ஊறுமெனப் புகல்வார்
வண்டார்க்கும் வார்குழலே வாழ்த்து".

– ப.கு.சி.

ஊறல், கரப்பான், குடல்வாதம், சூலை, மந்தம், முளைமூலம், வாதமும் உண்டாக்கும். தசை பருக்கும்.

வைப்பு முத்து செய்வதற்கு இம்மீன் பயன்படும்.

சுரும்பு
BIG JAWED JUMPER – LACTARIUS LACTARIUS



"சுரும்புமீன் பத்தியமாஞ் சொல்லுவார் உண்ணில்
அரும்பிணியை யெல்லாம் அகற்றும் பெரும்போகந்
தீபனம்உண் டாக்கும்அது தின்னச் சுவைகொடுக்குஞ்
சோபனமின் னாரரசே சொல்".

– ப.கு.சி.

பிணிகள் எல்லாம் போம். தீபனமும், போகமும் உண்டாம்.

உல்லமீன்
HILSHA – CLUPEA ILISHA



"உல்லமெல்லாஞ் சன்னஎலும் போவியமே யிக்கறிதான்
நல்லகறியாம் அதனை நாளும்உண்டால் — மெல்லக்
கழிச்சல் பிளவையொடு காணாக் கடியும்
விழிச்சுக்கொண் டாடுமென விள்" – ப.கு.சி.

உண்பதற்கு உரிய உணவாகும். ஆயினும் நாளும் உண்டால் கழிச்சல், பிளவை, காணாக்கடி உண்டாகும்.

கற்றளை மீன்

Soldier croaker – Nibea soldado

“கற்றளைமீன் றன்னனக் கருதி நிதம் உண்பாரும்
குற்றவயிறும் உறுமியெழுஞ் — சற்றொழியாய்
பேதியெடுக்கும் பிறகுகரப் பான்ஒழியுஞ்
சாதி மடமயிலே சாற்று”.

– *ப.கு.சி.*

கரப்பான்போம், பேதி, வயிறுபொருமலும் உண்டாகும்.

நெய்த்தோலி

Harden Berg's Anchory – Stole Phorus Indicus



“மந்தம் ஊறுந் தீபனம்போம் வாயிலைப்பும் உண்டாந்
தொந்தமுறு வாதபித்தந் தோன்றும்பின் — நொந்தே

வயிறும் பொருமும் வலிய நெய் தோலிக்குத்
துயர மிகும் இதனைச் சொல்".

– ப.கு.சி.

தீபனம் போம், மந்தம், வயிறுபொருமல், வாதபித்தம், வாயிலைப்பு துயரமும் உண்டாகும்.

விலாங்குமீன்

Indian Longfin Eel – Anguilla Bengalensis Bengalensis Shortfin Eel – Anguilla Bicolor Bicolor

"விலாங்குமீன் தன்னை விரும்பிமிக உண்டால்
குலாங்கிஷமாய் ஐயங் குலாவும் — இலங்கருசி
போகமொடு சொரியும் புண்கரைப்ப னுங்கதிக்குங்
கோகனக மாதே குறி".

– ப.கு.சி.

அருசி, ஐயம், கரப்பான், சொறிபுண், போகமும் உண்டாம்.

குறவைக்கறியின் குணம்
Spotted snakehead – Channa punctata

“முட்டுக்குடல்வலிபோம் மூடிருமல் ஏகுமலக்
கட்டுரக்கும் வாய்அருசி காணுங்காண் — முட்ட
துறவைப்பெற் றோருந் துதிக்கும்எழின் மாதே
குறவைமீனின் குணத்தைக் கூறு”

– ப.கு.சி.

குடல்வலி, இருமல் நீங்கும். அருசி மலக்கட்டு உண்டாகும்.

சன்னக்கெண்டை
Labeo filamentosus



“மின்னை நிகருமிடை மெல்லியலே மேனியது
சன்னமீன் உண்டால் தளராதா — முன்னைக்
கரப்பானும் புண்ணுங் கடியகப மும்போம்
உரப்பாக நாளும் உரை”.

– ப.கு.சி.

கபம், கரப்பான், புண்ணும்போகும். தேகபலம் உண்டாம்.

உழுவை

Rough Flathead – Grammopliites Scaber Indian Lizardfish – Synodus Indicus Tank Golay – Glossogobius Giuris

"முழுதும் புசிக்கலாம் முள்ளுமில்லை அந்த



உழவைக் குடர்பிணி விட்டோடும் — வழவான
முன்மலமுஞ் சாறும் முதிர்கரப்பான் உண்டாகும்
வன்முலையாய் நீயறிந்து வை."

– ப.கு.சி.

உடல்பிணிபோம், கரப்பான், மலமும் உண்டாம்.

வாளை

சாவாளை - *Hair Tail – Trichiurus lepturus*

அட்டுவாளை - *Pinnacatfish – Nallago attu*



“ஆளை வளர்க்கும் அதிஆண்மை தனைஉண்டாக்கும்
வாளைவென்ற கண்மாதே வாயுவென்பார் — வேளை
அறியாமல் உண்டால் அணுகுமே வாதங்
குறியார்கள் வாளைக் குணம்”

– ப.கு.சி.

ஆண்மையும், வாயுவும் உண்டாம்.

கெளிற்றுக்கறியின் குணம்

“நெய்த்திருக்கும் நொய்த்திருக்கும் நீங்காத சுக்கிலமாம்
ஒத்திருக்கும் வன்கெளிற்றை யுண்டாக்கால் — மெத்த
கரப்பானும் புண்ணுங் கபமும் பெருகுந்
தரைக்குள் வெருக்குஞ் சாற்று”.

– ப.கு.சி.

கபம், கரப்பான், சுக்கிலம் பெருகும், புண்ணும் உண்டாம்.

முட்டை

Egg

வேறு பெயர்கள்

"மும்மூர்த்தி, மஞ்சள் வெள்ளைக்கரு, கடுங்கார நீரானோன்.

நீத்துண்டை, ஊமை, உருளை சுண்ணத்துக்குயிரானோன், அண்டம், மெழுகுக்குக் கூர்மையானோன், சாரத்தின் சத்துரு, ரோக பேதளம்"

– போ.நி

"ஊமையுறுவ ளுயர்ந்த நீற்றுண் டைதான்
ஓமய வண்ட முறவான மும்மூர்த்தி
தூமய மஞ்சள்றளி வெள்ளை யாங்கரு
காமய வித்தைக் குகைகள் கண்ட வண்டமே"

– ச.மு.நி

முட்டை என்பது சிற்றண்டம் என்றும் பேசப்படும். பலவகை பட்சி, சில வகை மீன் முட்டைகள் மருத்துவத்திற்காம். இதில் கோழி, காக்கை, கருடன், குயில், நாகணவாய்ப்புள், தாரா, குருவி போன்றவைகளும் அடங்கும்.

இதில் பெரும்பாலும் கோழி முட்டையே வழக்கிலுள்ளது. ஆயினும் கன்னியாகுமரி மாவட்டத்தில் பலவகை அண்டங்கள் இன்றும் வழக்கிலுள்ளது.

கோழி முட்டையின் குணம்

"வாதபித்தஞ் சேர்ப்பிக்கும் வன்றோடம் புண்போக்குந்
தாதுவை மெத்த தழைப்பிக்கு — மோது
கபத்தை யடங்குங் கரப்பானுண் டாக்கு
மிபத்தை யுறுங் கோழி முட்டையெண்"

– ப.கு.சி.

"கோழி. . . . .

. . . . முட்டை

பாழ் செய்யுங் கிரந்தியல்லாற் பகருங்கரப்பன் சேர்க்கும்"

– ப.கு.

கோழி முட்டை உண்ணில் தாதுவை விருத்தி செய்யும். கபத்தை அடக்கும் வாயுவை உண்டாக்கும். நாளும் உண்ண கரப்பான் உண்டாக்கும் என்பதாகும்.

பறவைகளின் முட்டைக் குணங்களை பேசுமிடத்து.

"பல பட்சி முட்டை பரிசேடம் வாயு சேர்க்கும்

மலியுட லிறுக்குமெத்த வர்த்திக்கு மிரத்த மென்ப"

– ப.கு.சி.

பல பட்சிகளினது முட்டை வாயுவை உண்டாக்கும். நலிந்த உடலை வளர்க்கும். இரத்தத்தை விருத்தி செய்யும் என்று கூறப்பட்டுள்ளது.

பல பட்சி முட்டைகளின் குணம்

"கெருடன் முட்டை ரசத்தைக் கட்டும்

நாணுவான் முட்டை தைலம் பலமுண்டாக்கும்

காக்காய் முட்டை கெந்தி கட்டும்

கோழி முட்டை சகலசரக்குகளைச் சுண்ணமாக்கும்

குயில் முட்டை வெள்ளைப் பாடாணத்தைச் செந்தூரிக்கும்

தாராமுட்டை கண்துலக்க மாகும்

ஊர்க்குருவி முட்டை ஆண்மை பெருக்கும்.

எனவும் சொல்லப்பட்டுள்ளது."

– போ.நி

152- 2 - 27

கோழி முட்டை

மருத்துவத்தில் சிறப்பாக பல அரிய நோய்கட்கு மருந்தாகப் பயன்படுகின்றது. இதன் வெள்ளைக்கரு பாடாணப் பொருட்களின் முறிவாகவும், மருந்துகளின் செய்முறையிலும் பயன்படுகிறது.

அண்டத் தைலம்

முட்டைகளை அவித்தெடுத்து உடைத்து மஞ்சள் கருவை மாத்திரம் ஓர் இருப்புக்கடாயில் இட்டு அடுப்பேற்றி எரித்துக் கிண்ட தைலம் பிறக்கும்.

இதனை வழித்தெடுத்துப் பத்திரப் படுத்திக்கொள்ள வேண்டும்.

இதனை நாவில் தடவி வர நாவைப் பற்றிய வாதம் நீங்கும்.

இத்தைலத்தில் கோரோசனை, குங்குமப்பூ முதலியன கலந்து துளிக்கணக்கில் குழந்தைகட்குக் கொடுக்க மாந்தம், வலிப்பு, நீர்க்கோவை தீரும்.

சிற்றண்ட மெழுகு

வில்வவேர் 14 கிலோ எடுத்து உடைத்து, வெயிலில் உலர்த்தி குழித்தைலக் கருவியிலிட்டு வடித்து, கருங்கோழி முதலில் இட்ட முட்டையை ஒரு பீங்கானிலிட்டு தைலம் நிறைய வார்த்து நாற்பது நாட்கள் வெயிலில் வைத்து தினமுறையாக தைலத்தை வார்த்து எடுக்க மெழுகாகும்.

சுண்டைக்காய் அளவு தேனில் கொடுக்க வாதம், சூலை தீரும்.

குக்குடத்தைலம்

"வாய்த்த சந்நி முப்பதுத் தீரவே மகிழ்ந்து குக்குடத் தயிலமதிறக்கவே
யாய்ந்து குக்குடத் தண்டமதைம்பது அவித்து மஞ் கள் கருவெடுத்தபின்
தோய்ந்த சட்டியிலிட்டுப் பிதிர்ந்தபின்
சூட்டடுப் பினிலேற்றி யெரிபடக் கிண்டியே
காந்தக் காந்த யிறக்கிடுந் தயிலமுங்
கண்ட போதே நிம்பவெண்ணைய் கால்படி
வாந்தமான கடைச்சரக்கினில் பஞ்சசாதியும் கார்போகரிசியும்
வேந்த வெள்ளுள்ளி ரோகிணிகாயமும் வேறு சீரகம் வாகனயிறகுடன்
கோர்ந்த நாயகன் சுழிலிக் கொடி திரிகடுகுடன் வசம்பெறும்புகள்
போத்த ஓரிடையோர் கழஞ்சாக வரைத்துப் புகட்டியே பதத்தி
தீர்ந்திடும் சந்நி தீர்ந்திடும் சொன்னேன் வாதமெண்பதும்"

– ப.ரா.சே

50 கோழி முட்டைகளை அவித்து மஞ்சட் கருவை உதிர்த்து ஒரு சட்டியிலிட்டு அடுப்பிலேற்றி எரிக்க வேண்டும். மஞ்சள் கரு கருகித் தைலம் பிறக்கும் சமயம் வேப்பநெய் 325 மி.லி. சேர்த்து அத்துடன் பஞ்சசாதி (சாதிக்காய், சாதிப்பத்திரி, இலவங்கப்பத்திரி, மாங்கொட்டை, விடத்தலை) கார்போகரிசி, வெள்ளுள்ளி, கடகரோகிணி, காயம், சீரகம், மயிலிறகு சன்னிநாயகன், திரிகடுகு, வசம்பு, முசுறுமுட்டை வகைக்கு 5.1 கிராம் வீதம் எடுத்து அரைத்துச் சேர்த்தெரித்து பதத்தில் வடித்து காசெடை உள்ளுக்குக் கொடுக்க சன்னி ரோகமும், வாத ரோகங்களும் தீர்ந்துவிடும்.

அண்டத்தைலம் (வேறு)

"குக்குடத்தின் அண்டமதை அவித்து ஓட்டைக்
கொட்டி தட்டிப் பிளந்ததற்குள் கருவை வாங்கி
புக்கியதில் கற்கண்டு பொடித்துக் கூட்டிப்
புனலிறக்கும் குறடதினால் பிடித்து வாட்டக்
கக்கியித மிந்நீரைப் பதனஞ்செய்து
கண்ணிலிட நோய் தொண்ணூற்றும் நீங்கும்"

– தே.வை

முட்டையை அவித்து ஓடு நீக்கி நடுவில் இரண்டாகக் கீறி உள்ளிருக்கும் மஞ்சள் கருவை நீக்கி அவ்விடத்தில் சீனாக்காரத்தைப் பொடித்து வைத்து முட்டையை ஒன்று சேர்த்துக் கட்டி, குறடால் (இடிக்கி) பிடித்துக்கொண்டு தீயில் வாட்ட தைலம் விழும். இதைக் கண்களிலிட கண் நோய் தீரும்.

கோழி முட்டையின் சிறப்பு

"இரும்பானது களங்க மென்பதி னாலாகும்
பெரும்பார் புகழும் பெருமை — திரும்பவுங்கேள்
வேண்டியமுதல் லாங்கிடைக்கு மெய்யாக வோதுமுறை
ஆண்டலையண் டக்கருவா லாம்"

– தே.வை

கோழி முட்டையின் கருவினால் இரும்பு களங்காகும். ஆதனால் வேண்டியதெல்லாம் உண்டாகும் என்பதாகும்.

ஆள்காட்டிக் குருவி முட்டை அவிழ்தம்

“கேளடா ஆள்காட்டிக் குருவி முட்டைக்
கிருபையுடன் பார்த்தெடுத்துக் கொண்டு வந்து
ஆளடா சட்டியிலே யுடைத்து ஊற்றி
அழகான புழுங்கலரிசி சம்பா வப்பா
வாளடா முட்டைக்கரு நனையு மட்டு
வளமான அரிசியதை மிதமாய்ப் போட்டு
நாளடா வடுப்றேற்றிப் பதமே பார்த்துத்
தவறாமல் கருகாமல் பொரியுமது வாங்கே
வாங்கியே செப்பதனி லடைத்துக் கொண்டு
வரிசையாய்க் காய்ச்சல்வந்த ததுமே நீதான்
தாங்கியே இடக்கையி லரிசி கொட்டி
தயவாக வலக்கையால் பிடியே யள்ளி
ஏங்கியே திரியாம லுள்ளே கொள்ளே
இதமாக வரிசிதொகை யான மட்டும்
பாங்கியேவைசூரி அதிகம் வாராப்
பரிவான தேகத்துக் கழிவே யில்லை”

ஆள்காட்டிக் குருவி முட்டையை உடைத்துச் சட்டியில் ஊற்றி, கரு நனையும்மட்டும் சம்பாப்புழுங்கலரிசியை மிதமாய்ப் போட்டு, அடுப்பேற்றிப் பதத்தில் கருகாமல் பொரித்தெடுத்து, செப்பில் அடைத்து கொள்ளவும். காய்ச்சல் கண்டவுடன் இடக்கையில் அரிசியைக் கொட்டி வலக்கையால் ஒரு பிடி அள்ளி உட்கொள்ள, வைசூரி அதிகம் வராது. வைசூரித் தற்காப்பிற்கும் இதனை வழங்கலாம்.

குயில் முட்டையின் பயன்

"ஆகிய பாஷாண மனைத்தும் வசமாகித்
தேகஞ் சுரத் தணலாற் றீஞ்சவர்க்கு — வாகாக
நாளுமிகப் போஷிக்கு நன்மைமிக வுதவும்
காளகண்ட முட்டையினாற் கல்"

– *தே.வெ.*

பாடாணங்கள் அனைத்தும் கட்ட உதவும். சுரத்தால் உடல் கருகி பலகீனப் பட்டவர்களுக்கு அவ்வேதனை தீர்ந்து உடலை வளர்க்கும். மிக நன்மையுந்தரும்.

காளகண்டம் - குயில்

"ஆமயிலை யிற்பாய்ச்சி யாட்டி யதிற்கடுகும்
ஓமமு மத்தித் துருட்டியே சீமிகுமெய்
நீளிரண குட்டமெல்லா நெய்யிலிட மேலாறும்
காளகண்ட முட்டைகலி கை"

– *தே.வெ.*

குயில் முட்டையின் கருவை இருவாட்சி இலையில் தோய்த்து அரைத்து அதனுடன் கடுகும், ஓமமும் கூட்டி மத்தித்து, உருட்டி, நெய்யில்குழைத்துப் பூச இரணம், குட்டம் முதலிய சரும நோய்கள் ஆறும்.

நண்டின் சினையின் பயன்

"சுன்னமெனச் சொன்னந் துலங்கு மதினாலே
மன்னு பிணிகளெலா மாறுமே — மற்று
பலவன்மை யுமடரும் பாரி லுடற்கே
அலவன் கருவாலே யாம்"

– *தே.வெ.*

நண்டின் சினையினால் தங்கம் பற்பமாகும். நாட்பட்ட நோய்களெல்லாம் தீரும். பொருந்திய பலவகை வலிமை உண்டாகும்.

நாகணவாய்ப்புள் முட்டையின் பயன்

“வங்கமெனு மியத்தில் மல்கியநீர் பாறவெண்
தங்க மெனவே தயங்குமே — சங்கிலையில்
மேவுரச முந்துடியும் விட்டரைத்து மந்தித்த
பூவை முட்டையின் கருவாற்போம்”

– தே.வெ.

பூவை - நாகணவாய்ப்புள்

ஏலமும் சங்கிலைச்சாறும் விட்டரைத்த நாகணவாய் முட்டைக் கருவால் வெள்ளீயத்தின் நீர் வாங்கும். சுத்த வெள்ளியைப் போல் ஒளிரும்.

“தன்னைப் பெருக்கச் சவ்வீரத்தைக் காண்பிக்கும்
பொன்னைப் போற்றேகத்தைப் போஷிக்கும் — வன்னமிகுக்
காணு முறைமைகளைக் காண்பிக்குந் தப்பாது
நாணுள் முட்டைவானாள்”

– தே.வெ.

வாழ்நாள் வளரும்படி சவ்வீரத்தை மருந்தாக்க உதவும், உடம்பைப் பொன்போல் வளர்க்கும். பலவகை முறைகளைத் தப்பாது காண்பிக்கும்.

காக்கைச் சினையின் பயன்

“பங்குக் கரைவாசி பாலிட் டதிலவித்துச்
சங்கம் பழக்கனிநீர் சார்பாகப் — பொங்கி
வருமுனெண்ண யட்டாடில் வாரா நரையென்றும்
நரைதிரையில் லான்சினையை நால்”

– தே.வெ.

நரைதிரையில்லான் - காகம்

காக்கைச் சினை 4 பங்கு, பால் 2 பங்கு சேர்த்து அவித்து அத்துடன் சங்கம் பழச்சாறு கூட்டி எரித்து பொங்குமுன் நல்லெண்ணெய் சேர்த்துக் காய்ச்சி முழுக நரை என்றென்றும் வாராது.

"நரைதிரையில் லான்முட்டை நண்ணிய பூநாக
மருவுமிவை களினால் வாய்த்த — பருவமிகு
மெட்டுமெழு காமவ்விவ ரத்தா லக்கணமே
கட்டுமித மான வங்கம்"

– *தே.வெ.*

"காக்கைமுட்டை பூநாகம் சேர்த்தரைத்து மெழுகாக்கி
வங்கத்தை உருக்கு முகத்தில் மெழுகைச் சேர்க்க
வங்கம் கட்டிப்போம்".

– *தே.வெ.*

முட்டை

ஓட்டுச்சுத்தி

கோழி, பருந்து, கிளி, காகம், காடை, மயில் முதலிய பறவைகளின் முட்டை ஓடுகள் 14 கிராம் எடைக்கு ¼ படி கறி உப்பில் ½ படி ஆற்றுசலம் விட்டு நன்றாக் கலக்கி 1 மணி நேரம் வைத்துத் தெளிவிறுத்து முட்டை ஓடுகளைப் போட்டு ஒருநாள் முழுவதும் ஊற வைத்து மறுநாள் காலையில் அடுப்பேற்றி எரித்து ¼ பாகமாக வற்றியதும் இறக்கி ஆறவிட்டு முட்டை ஓட்டிலுள்ள சவ்வை நீக்கி நீரில் கழுவி எடுத்துக் கொள்வதே சுத்தியாகும்.

முட்டை ஓட்டுப்பற்பம்

சுத்தித்த முட்டையோடு 35 கிராம் எடுத்து நீர்முள்ளி சமூலச்சாறு 175 கிராம் விட்டரைக்க வேண்டும். இவ்விதம் 6 நாட்கள் நித்தம் புதிய சாறுவிட்டு அரைத்து வில்லை செய்து நன்கு உலர்த்தி ஓட்டிலிட்டு ஒரு மூடி சீலைமண் செய்து உலர்த்தி குக்குடப்புடமிட வேண்டும்.

பின் புடத்தைப் பிரித்து மீண்டும் நீர்முள்ளிச் சாறுவிட்டு 4 நாள் அரைத்து வில்லை செய்துலர்த்தி புடமிட வேண்டும்.

இவ்விதம் மீண்டும் இருமுறை செய்ய பற்பமாகும்.

ஒவ்வொரு முறை புடமிடும் பொழுது வறட்டியின் அளவையும், அரைக்கும் நாள் அளவையும் குறைத்துக்கொள்ள வேண்டும்.

அளவு: *கடலை பிரமாணம்*

அனுபானம்: *வெண்ணை*

தீரும் நோயும்: *துணை மருந்தும்*

"ஆண்டலை பாறுவனியோரிட்டை காடை மஞ்ஞை
யாண்டலை பாறுசினை யாடலையை — யாண்டலை
யத்திசுரமூர்ச்சை யரிகாலார் மேகமுளை
யத்திசுர மூர்ச்சை யையாம்".

– தே.ய.வெ

நோய்		மருந்து
அத்திசுரம், மூர்ச்சை	-	கோழிமுட்டை ஓட்டுப்பற்பம்
காசரோகம், சத்திரோகம்	-	பருந்து முட்டை ஓட்டுபற்பம்
உப்பிசம், பெருவியாதி	-	காகமுட்டை ஓட்டுபற்பம்
பிடிப்புரோகம், வெட்டை	-	கிளிமுட்டை ஓட்டுபற்பம்
வெப்பம், மாரடைப்பு	-	காடை முட்டை ஓட்டுபற்பம்
கபம், சன்னி	-	மயில் முட்டை ஓட்டுபற்பம்

An egg is an external womb that precedes nourishment and protection for the growth and development of the embryo inside.

முத்துச் சிப்பி

Mytilus margaritiferus
Pearl Oyster Shell

"சந்திர சிப்பி தனிச்சோதி நீர்ச்சடம்
அந்திர வாளி வழகிய கெர்ப்பத்தி
தந்திர வருணன் தான்துளி விந்துவாம்
பந்திர முத்தின் பரிவான சிப்பியே"

– ச.மு.நி

கடலுள் முத்து விளையக்கூடிய சிப்பினம் முத்துச்சிப்பி என்பதாம்.

இதன் சதை போஷாக்கு தரவல்லது. எனவே உணவாகக் கொள்வர். இதைக் கபநோயினருக்கும், சூலை நோயினருக்கும் வழங்கலாம். இது இருதயத்திற்கு வன்மை அளிப்பது.

இதன் சிப்பி மருத்துவத்தில் பயன்படும். ஈரிதழ்சிப்பி வகைகளைச் சார்ந்தது மற்றைய சிப்பினங்களில் இல்லாதவாறு இதனுட்புறம் முத்தைப் போல் ஒளி பொருந்திய அமைப்பே மற்றைய சிப்பிகளினின்று இதைப் பிரித்து காட்டக்கூடிய முக்கிய சின்னமாகும். இவ்வகைச் சிப்பிகளில் மட்டுமே முத்து விளையும். முத்திற்கு உரிய மருத்துவ குணங்கள் முத்துச் சிப்பிக்கும் உண்டு.

முத்துச் சிப்பியின் குணம்

"ஈளை விலகுமிருமல் குடியோடுங்
கோழை விழுங்கய நோய்க்கூட்டமறு — நீளுடலிற்
கப்பிவரு மேகக் கட்டியையும் போமுத்தின்
சிப்பிதனைக் கண்ட விடத்தே"

– ப.கு.சி

முத்துச் சிப்பியினால் கபக் கோழை, காசம், சயரோகம், மேகக்கட்டி, கபப்பிரகோபம் தீரும்.

முத்துச்சிப்பி சுத்தி

"..............................முத்துச் சிப்பி ஓடானாலும்
உவர்மண்ணும் சுண்ணாம்பும் சமனாய்ச் சேர்த்து
ஆதித்தத் தண்ணீரை யளந்து விட்டு
ஆண்மையான ஒன்றுக்கு நான்கு தண்ணீர்
நாதித்து அதிலிட்டு வற்றக் காய்ச்சி
நல்ல தண்ணீர் சுண்டியபின் கழுவிப்போடே"

– *போகர் 7000*

உவர்மண்ணும், சுண்ணாம்பும் சம எடை எடுத்து நான்கு பங்கு நீர் விட்டு கரைத்து அதில் முத்துச் சிப்பியை இட்டு நீர் வற்றும் வரை எரித்துக் கழுவி எடுக்கச் சுத்தியாகும்.

முத்துச்சிப்பி பற்பம்

சுத்தித்த முத்துச்சிப்பியை ஆடாதோடைச்சாறு, நொச்சிச்சாறு, நிலப்பனைச்சாறு இவை ஒவ்வொன்றுடனும் தனித்தனியே அரைத்துப் பன்றி புடமிட்டெடுத்துக் கொள்ள பற்பமாகும்.

அளவு

அவரைக்கொட்டையில் 1/6 கூறு உத்தமம்,
2/6 கூறு மத்திமம்
3/6 கூறு அதமம்
4/6 கூறு அதமாதமம்
5/6 கூறு ஒருபுடைத்துணிவு
முழுக்கூறு முழுத்துணிபு

தீரும் நோய்கள்

முத்துச்சிப்பி சுண்ணம்

அனுபானம்	-	நோய்
தேன்		நீரருகல் நோய்
கம்மாறு வெற்றிலைச் சாறு	-	இருமல் நோய்
திராட்சைச் சாறு		அண்டவாதம், விக்கல்
பசுவெண்ணெய்		மகாவாதம், பொருமல்
உள்ளி சாறு		வாதம்
குளிர்ந்த நீர்		பித்தம்
பசுந்தயிர்		கபம்
பசும்பால்		அம்மை, வெப்பம்
பசு நெய்		நீரிழிவு, பிரமியம்
பனங்கள்		சொறி, சிரங்கு

"நீரிலுண வாதமறும் நெய்யிலுண வெம்மையறும்
மோரிலுண பித்த முறியுமே — சாரணைவேர்
குப்பிநடு வைத்துக் குறியாக வட்டமுறை
இப்பிமுத்துச் சுண்ணத் தையே"

– தே.வெ

சத்திச்சாரணை வேரை அரைத்து மூசை செய்துலர்த்தி அதனுள் சுத்தித்த முத்துச் சிப்பிப்பொடியை வைத்து மூடி சட்டியுள் வைத்து மேற்சட்டி மூடி சீலைமண் செய்து புடமிட்டு எடுக்க சுண்ணமாகும்.

அளவு பிரமாணம்: 50 மி.கி — 100 மி.கி

நெய்யில் கொடுக்க பித்தரோகமும்,

மோரில் கொடுக்க கபரோகமும் தீரும்.

முத்துச்சிப்பி

Pearl oyster

Distribution

Pearl oysters of the genus Pinctada are widely distributed in the world. They occur in several seas of the tropical belt and in the sub-tropical region. Although a number of species of pearl oysters have been identified, only a few have been found to produce pearls of good quality.

In the Indian waters six species of pearl oysters occur but only P. fucata has contributed to the pearl fisheries in the Gulf of Mannar and Gulf of Kutch. In the Gulf of Mannar, the pearl oysters occur in large numbers on the submerged rocky or hard substrata known as paars. The paars lie at depths of 12 to 25 m off the Tuticorin coast along a stretch of 70 Km.

Shell features

The shell of Pinctada fucata is about 1.5 mm thick over the greater part.

Shell structure

The shell is composed of three layers. The very thin outer layer is uncalcified cuticular conchiolin layer or periostracum. The middle or prismatic layer shows a cellular structure formed of calcareous prisms or columns running vertically to the surface and appearing polygonal in section. The innermost nacreous or mother – of – pearl layer is composed of numerous fine lamellae of aragonite crystals.

Age and growth

The oysters can grow to a height of about 35-45 mm at the end of one year, 50-55 mm at the end of the second year, 55-60 mm at the end of the third year, 60-65 mm at the end of the fourth year and 65-70 mm at the end of the fifth year. The weight of the oysters was 10, 30, 45, 60 and 70g at the end of the first, second, third, fourth and fifth years. The pearl oysters have been estimated to have a longevity of 5-5.5 years in natural beds but have been observed to live up to seven years when reared in the farm.

Ecology

Pearl oysters are found from the low tide level to depth of about 75m, therefore they can adapt and live in varying environmental conditions within this range. Environmental factors such as bottom topography, wind, waves, water movement, current, light, temperature, salinity, dissolved oxygen ph nutrient salts, and primary production play a crucial role in the settlement, growth and reproductive pattern of oysters, both in the natural beds and farms. In the Gulf of Mannar, the pearl oysters live on rocky or other hard substrata which lies roughly in a line parallel with and

at a distance of 10-16 km from the coast.A rich fauna,comprising members of various groups like sponges, hydroids, polychaetes, lamellibranchs, amphipods, decapods, enchinoderms, fishes etc. are usually associated with pearl oyster beds.

If salinity level falls below 15% and if such condition is prolonged, it may lead to mortality. This may happen during unusual heavy rain and heavy discharge of fresh water from rivers in the vicinity. It is well known that the benthi ecology of the pearl culture grounds plays a vital role in the rate of production as well as quality of pearls. Rocky or gravelly bottoms are more suitable. A high amount of silt in the farm water may affect the filtration efficiency of pearl oysters.

முதலை

Crocodylus porosus

வேறு பெயர்: வன்மீன்

இதன் தோல், தசை, நகம், இரத்தம் முதலியன மருத்துவத்தில் பயன்படுகிறது. இதன் மாமிசத்தை வற்றலாகச் செய்து உபயோகிப்பதுண்டு. இதன் மாமிசத்தின் குணத்தைக் கூறுமிடத்து,

"......................................வாம
மதலைக் குறுகக்கு வானனிலஞ் சீதம்
முதலைத் தசைக்கிருக்கு மோ"

– குணபாடம் தா.சீ.வ

என்பதில் முதலைக்கறியினால் சிறு குழந்தைகட்கு காணும் கக்குவான், வாத, கப ரோகங்கள் தீரும் என்பதாகும். இதன் மாமிசத்தைச் சமைத்தும், வற்றலைச் சுட்டுக் கறியாக்கியும் கொடுக்கலாம்.

முதலையின் புறவோட்டைக் கருக்கி ஆதொண்டை இலைச் சாறுவிட்டு இழைத்து மையாக்கிப் பயன்படுத்த வங்கத்தின் நீரை வாங்கும் என்பதாம். இதனை,

"கொண்டுவங்க நீரைக் குறுக்கலா மெப்படியு
மண்டலதம் மைசெய்யு மாறுகேள் — தொண்டையிலை
யின்மா ரசம்விட் டிழைத்துக் கறியாக்க
வன்மீன் புறவோட்டு மை"

– தே.வெ.

“வாச வரிசனமும் வன்மீனடி நகமும்
ரோசனையு நைய நொறுக்கியே — காசளவு
பச்சைப் புனுகுனெய் பக்குவமா யிட்டதிட
வுச்சிப் பிளவை யொழியும்”

– தே.வெ.

கஸ்தூரி மஞ்சள், முதலைக் கால்நகம், கோரோசனம் மூன்றையும் சமஅளவு எடுத்துப் பொடித்து 12 கிராம் பச்சைப்புனுகும், நெய்யும் சேர்த்துக் காய்ச்சி தடவி சீலையால் கட்டிவர உச்சிப் பிளவை தீரும்.

முயல்

Lecs Nigricollis

வேறு பெயர்: சசம்

இது காடுகளில் வளர்பவை. வீட்டிலும் வளர்ப்பதுண்டு.

இதன் மாமிசம், குருதி, மலம் மருத்துவத்திற்கு உதவும். இதன் கறி உடற்றேற்றியாகும், குருதியை முடி வளர்க்கப் பயன்படுத்துவதுண்டு.

பவளபற்பம் செய்ய இதன் குருதி பயன்படும்.

முயலிறைச்சியின் குணம்

"கடுகிய நடையுண் டாகுங் கனத்ததோர் பித்த மேகும்
முடுகிய வீளை காச முதிர்ந்ததோர் சுவாசம் போகுஞ்
சடுதியில் வெருண்டே யோடுந் தனிமுயற் கறியி னாலே
கொடுமயிற் கண்ணாய் வாதங் குறைந்திடு மலமிறங்கும்"

– ப.கு.சி

முயல் கறியால் கால்களுக்குப் பலமுண்டாகி கடுகிய நடையை உண்டாக்கும். மிக்க பித்தம், ஈளை, காசம், சுவாசம், கண்ணோய், வாத நோய் நீங்கும். மலம் போகும்.

மேலும் முயற்கறியைப் பற்றி கூறுமிடத்து தேரையர் கீழ்கண்டவாறு உரைக்கிறார்.

“சாரத்தைக் காண்பார் சடலத்தை யாதரிப்பார்

வீரத்தை நன்றாய் விளக்குவார் — பூர

விசையையவிப் பாராயுள் வேதியர்க ளானோர்

சசவிறைச்சி யாற்கரத்தை”

– தே.வெ.

மருத்துவர்கள் முயலிறைச்சியால் பூரத்தின் வேகத்தை மாற்றுவர். உப்பை முடிப்பர். உடம்பை நன்கு வளரச் செய்வர். உடல் விளங்கச் செய்வர் என்பதாகும்.

இதன் இரத்தம், நெய், மாமிசம் மருத்துவத்தில் பயன்படும்.

முயல் கொழுப்பு

முயலிண மிருமலீழை மொழிந்திடு சுவாச காசம்

கயமலக் கட்டுப் பித்தங் கருதரும் வறட்சி யோட்டும்

நயனுறு நடையுண்டாக்கு நல்லசனஞ் செமிக்கப் பண்ணும்

சயமுறு கொழுப்பினோடு சாற்றிடு பெலனுமன்றே”

– ப.கு

முயல் கொழுப்பால் உடல் பலம் உண்டாகும். வறட்சி, சுவாசகாசம், இருமல், கற்பரோகம் தீரும். பசி உண்டாக்கும். தீபனத்தைச் செரிக்கப் பண்ணும்.

பவள பற்ப செய்முறையில் முயல் ரத்தம் உதவும்.

முயல் கறி சேரும் மருந்து முறைகள்

தூதுவளை வேர், அமுக்கரா வேர், ஆடதோடைவேர், வில்வ வேர், சாரணை வேர், முருங்கைப்பட்டை, உப்பிலி, கையான், கடுகு, மிளகு, கொடிவேலிவேர் தோல் வகைக்கு 10 கிராம் எடுத்து இடித்து 2 லிட்டர் நீர் விட்டு ½ லிட்டராக வற்றவைத்துக் கொள்ள வேண்டும்.

பெரிய முயல் ஒன்றைத் தோல், குடல் நீக்கி சுத்தித்துக் கழுவி இடித்து 2 லிட்டர் நீர்விட்டுக் காய்ச்சி ½ லிட்டராக வற்றவைத்துக் கொள்ள வேண்டும்.

இரு குடிநீரையும் கலந்து அத்துடன் பசு நெய் ½ லிட்டர் சேர்த்து, தேன் உரி சேர்த்து அத்துடன் கோட்டம், அதிமதுரம், சுக்கு, மிளகு, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், வெட்பாலை, கச்சோலம், திப்பிலி, செவ்வியம், ஆடாதோடை, மஞ்சள், வகைக்கு 15 கிராம் பொடித்துப் பசும்பால் விட்டரைத்து கரைத்து அடுப்பேற்றிக் காய்ச்சி பதத்தில் வடிக்க வேண்டும்.

அளவு: 12 கி

தீரும் நோய்கள்: இருமல், ஈளை, காசம், இளைப்பு

உச்சுவாசாதி கிருதம்

சுத்தித்த முயல் — 840 கிராம்

ஆடாதோடை — 840 கிராம் சேர்த்து 18 படி நீர்விட்டு எரித்து 1/8 பங்காக வற்ற வைத்து வடிகட்டி குடிநீருடன் பசுநெய் — 2 லிட்டர், பசும்பால் — 4 லிட்டர் சேர்த்து கற்கடகசிங்கி, சிறுதேக்கு, கோட்டம், குந்திருக்கம், திரிபலை, திரிகடுகு, முத்தக்காசு, கஸ்தூரி, முந்திரிகை, கற்கண்டு, அமுக்கரா வகைக்கு 10 கிராம் எடுத்து நெய்யில் வறுத்து, பொடித்து, கரைத்துக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடிகட்டிக் கொள்ள வேண்டும்.

அளவு: 5 முதல் 15 கிராம்

தீரும் நோய்கள்: காசம், இரத்த பித்தம், சுவாசம், நீர்த்தோடம் தீரும்.

முயற்கட்டம்

·"பீனச மெட்டிற்கும் பெருமுயலத்தின் கட்டமானது பொடி நசியமாட்டு"

– வை.கு.

முயல் கட்டத்தை உலர்த்திப் பொடித்து நசியமிட பீநிசநோய் தீரும்.

முயல்

Lecs nigricollis

Geographic range

Lepus nigricollis is found in southern India. These hares range as far east as Godavari and west as far as Khandesh, Berar and Madhya Pradesh, lepus nigricollis are also native to Sri Lanka. They have been introduced into Java, Mauritius, and Seychelles.

Food Habits

Lepus nigricollis is herbivorous, though the types of vegetation it eats varies. Many of the areas these animals in habit have wet and dry seasons and these play a large role in food availability. During the wet season, short grasses are abundant and they are the preferred food. During the dry season, when short grasses are scarce, more flowering plants are consumed. They also eat crops and germinating seeds.

மெழுகு

Cera – Wax

தேனீக்கள் தேனைக் குடித்துத் தேன் மெழுகை உற்பத்தி செய்கின்றன. உழைப்பாளித் தேனீக்களின் அடிவயிற்றில் மெழுகின் பைகள் இருக்கின்றன. அப்பைகளில் மெழுகுப் பட்டைகள் அடுக்கடுக்காய் இருக்கும். அவற்றிலிருந்தே அவை தேனடையைக் கட்டுகின்றன. தேனடைகளைச் சேகரித்துத் துண்டு துண்டாக நறுக்கி, உட்புறம் தேங்காய் நெய் பூசப்பட்ட பாத்திரத்தில் போட்டு, அப்பாத்திரத்தை அதிக சூடுள்ள வெந்நீர்ப் பாத்திரத்துக்குள் வைத்தால், தேன் மெழுகு நன்றாய் உருகிப்பாகு போலாகும். பின்பு பாகை, வேண்டிய அளவில் செய்த அச்சுக்களில், தேங்காய் நெய் தடவி, அச்சுக்களுக்கு நேராக ஒரு மெல்லிய துணியைப் பிடித்து, அவற்றில் ஊற்ற வேண்டும். பாகு போன்ற தேன்மெழுகு, துணியின் மூலம் இறங்கி அச்சுக்களில் விழுந்து இறுகிவிடுகிறது. பின்பு அதை அச்சுக்களிலிருந்து கட்டிகளாக எடுத்து வியாபாரத்திற்கு அனுப்புகின்றார்கள். இது வடிகட்டிய ஒழுங்கான நல்ல மஞ்சள் மெழுகாகும். தேன் மணத்துடன் கூடியது. நீரில் கரையாது.

தேன் மெழுகு, மரங்களுக்கு மெருகு பூசப்படுவதற்கும் பாதரட்சைகளுக்கு மெருகு கொடுப்பதற்கும், துணிகளில் அச்சடிக்கும் பல உபாய முறைகளுக்கும், வார்ப்பட வேலைகளுக்கும் உபயோகமாகின்றது.

பெரும்பாலும் புறமருந்து முறைகளில் சேரும். தைலம், களிம்பு, சீலை செய்வதற்கும் உபயோகமாகின்றது.

தேன் மெழுகிற்கு உள்ளழலாற்றிச் செய்கை உண்டு. இதன் குணத்தைக் கீழ்ச்செய்யுட்களால் அறிக.

"அறைபக்க வாத மதைப்பைய மூதை
குறைவிந்தி தழ்நோய் தேள்கூளி — கூறையைப்
புழுகெடுக்க வங்கமுறு புண்ணிடிப்புண் டீப்புண்
மெழுகெடுக்க வாங்கலு மெய்."

– ப.கு.சி.

மெழுகினால் பாரிசவாயு, வீக்கம், கபநோய், வாத கோபம், சுக்கில நஷ்டம், கபரோகம், தேள்விடம், பைசாசம், குஷ்டம், ஆகந்துக விரணம், சத்தியோ விரணம் முதலியன நீங்கும்.

பலவகை மெழுகின் குணம்

"பொன்மெழுகு மாறல் சுரங்கண்ணோய் போக்கிவிடு
நன்மெழுகு புண்ணோய்க்கு நஞ்சாகு — முன்னுங்
கொசுமெழுகு நாளுங் குறித்தவசி யத்திற்
கிசையுமெந்தி ரத்திற்கு மென்"

– ப.கு.சி.

பொன் மெழுகு, மாறல் சுரத்தையும் கண்ணோயையும் போக்கும். நல்ல மெழுகு, விரணத்தில் உண்டாகும் நோயை நீக்கும். கொசு மெழுகு, வசியத்திற்கும், யந்திரத்திற்கும் உதவும் என்க.

உபயோகங்கள்

மெழுகை உக்காவிலிட்டுப் புகைபிடிக்கத் தேள்விடம் இறங்கும்.

மெழுகுக் களிம்பு

மெழுகு, தேங்காய் நெய் சமன்கூட்டி உருக்கி வடிகட்டிக் கொண்டு விரணங்களுக்கு உபயோகிக்கலாம்.

வேறு

மஞ்சள் மெழுகு 1 பங்கு, சுத்தி செய்த தேன் 4 பங்கு சேர்த்து தீயில் வைத்துருக்கி வடிகட்டிக்கொள்ளவும். இதைத் துஷ்ட விரணங்களுக்குப் போட, நல்ல குணத்தைக் கொடுக்கும்.

மெழுகுத் தைலம்

"சித்தக மனற்கலுப் பயிரோம மரிசனந் தேம்பிசா சேழு முறையே
சேர்தொடி சதுப்பிதிற் றஃததஃதிற்பாதி செப்பரைக் காலரைக்கா
லொத்த தொகையிற் பாதி இவைகளை நெடுங்கடத் துள்ளடைத்
தொருகலசமே
லூறவைத்து மண்ணிட்டு நூல்வரிந் தெழுசீலை யொவ்வப் புரிந்திரண்டின்
சுத்த மத்தியமீது கீழ்பெரிது சிறிதாய்த் துவாரமிட் டுயர்வழி
யின் வாய்த்தூரமமே காவண முலோட்ட மொடு கோமயந் தோயப்
பொதிந்தி வணமே
சத்தமுறு முத்தான மிட்டதோ முகவழி தனிற்பாத் திரஞ் சேர்த்துதா
சனனையங் குலவவிடு முச்சாம மாவியொடு தைலம் பிறந்தி ழியுமே"

– *தே.தை.வ.சு*

மஞ்சள் மெழுகு, சக்கிக்கல், வெள்ளையுப்பு, ஆற்று மணல், ஓமம் கப்புமஞ்சள், மணமுள்ள சடாமாஞ்சில் ஆகிய சரக்கு வகைகள் ஏழையும் முறையே முதலிலிருக்கின்ற சரக்குகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வீசையும்

(1,400 கிராம்), அடுத்து ஒரு சரக்கு அரை வீசையும் (700) கிராம், அப்பால் இரண்டு சரக்குகள் அரைக்கால் வீசையும் (175 கிராம்) ஈற்றிலிருக்கிற ஒரு சரக்கு வீசம் வீசை (87.5 கிராம்) யாய் நிறுத்தி, அவற்றைக் கழுத்து நீண்ட குடத்திற்குள் முறைப்படி அடைத்து, மற்றொரு சிறுகலசத்தை இதன் வாய்க்குப் பொருந்துமாறு கவிழ்த்து மூடி, அந்தச் சந்தின்வாய் மறைய மண்ணரைத்துப்பூசி, நூற்கயிற்றினால் வரிந்து கட்டி, அதன் மேல் ஏழு மண் சீலைசெய்து இவ்விரண்டு கடத்தின் நடு மையங்களில் நீண்ட கடத்தின் மேற்புறம் பெரிதாகவும் தைலம் இறங்கும் கடத்தின் கீழ்ப்புறஞ் சிறிதாகவும் இரண்டு துவாரங்களிட்டு, மேற்றுவாரத்தில் புகை வெளிப்படாதிருக்கும் பொருட்டு ஒரு சிறிய ஓட்டினால் அத்துவாரத்தை மறைத்து, அதன்மேல் பசுவின் சாணத்தை அப்பி இக்கடத்தை ஓரஞ் சரித்தபடியே அடுப்பின்மிசையேற்றி, கீழ்முகத் துவாரத்தின் வழியில் ஒரு பாத்திரத்தை வைத்து அக்கினியை மூட்டி மூன்று சாமம் நன்றாய் எரிக்கில் புகையுடன் கூடியத் தைலம் பிறந்திறங்கும்.

"இழியுமிந்த வள்ளியத்தாந் தைலப் பேரை
யியம்புங்கா லர்த்தாங்க மிசிவு வீக்கம்
வழியுமுதி ரங்கொடுக்கும் வெட்டுக் காயம்
வளியதைப்புநரித்தலையின் வாய்வு சந்நி
அழியுமடவார் குறியாண் குறித்த ளர்ச்சி
யத்திசந்தி தசைநரம்பிற் கிளைத்த வூதை
இழியுமிதைப் பட்டிகட்டிற் கைகால் சோர்வு
முறங்குவர்க னாப்பொருளா மோதுங் காலே."

– தே.தை.வ.சு

மெழுகினால் இறக்கிய தைலத்தின் பெயரைச் சொல்லுமிடத்தில், வலியுள்ள பக்கவாத ரோகமும், குழந்தைகளுக்குக் காணுகின்ற இசிவுகளும் வீக்கங்களும்,

இரத்தம் வழிந்தோடும்படிச் செய்கின்ற வெட்டுக் காயங்களும், நோயோடுங்கூடிய பீஜத்தின் வீக்கமும், நரித் தலைவாதமும், சந்நிபாதமும், பெண்குறித் தளர்ச்சியும், ஆண்குறித் துவளலும், கீல், எலும்பு, மாமிசம், நரம்பு என்னும் இவைகளைப் பற்றி அதிகரித்த வாயுவும் நீங்கிப்போம். அன்றியும், இதைப் பட்டி கட்டினால் கை கால்களில் உண்டாகிய சோர்வுகளெல்லாம் நித்திரை செய்பவர் சொப்பனத்திற் கண்ட பொருட்போலப் பொய்மையாய் விடும்.

சிவப்பு குக்கில் தைலம்

தேன் மெழுகு 2½ பங்கு, வெண்குங்கிலியம் 2½ பங்கு, மஞ்சிட்டி 5 பங்கு, நன்னாரி 5 பங்கு, நல்லெண்ணெய் 100 பங்கு நிறுத்தெடுத்து, மஞ்சிட்டியையும் நன்னாரியையும் நன்றாய் இடித்துச் சலித்துக் குடிநீரிலிட்டுக் கரைத்து, நல்லெண்ணெய் சேர்த்து, அடுப்பேற்றி மெழுகு பக்குவத்தில் காய்ச்சி சூட்டுடன் இறக்கி, வடிபாண்டத்தில் வேம்பாடம்பட்டை மற்றும் குங்கிலியத்தைத் தூள் செய்தும், மெழுகைத் துண்டுகளாக்கியுமிட்டுச் சீலையிலிட்டுத் தைலத்தை வடிகட்டிக்கொள்ளவும் மெழுகும் குங்கிலியமும் எண்ணெயில் உருகிக் கரைந்துவிடும்.

இத்தைலம் பலவகைப்பட்ட வாதரோகங்களுக்கு மேற்பூச உபயோகப்படுகின்றன. இது தோலுக்கு வர்ணத்தைக் கொடுக்கும். இதனைக் காலிலுண்டாகும் பித்த வெடிப்பிற்கும், முகத்திலுண்டாகும் கரும் புள்ளிகளுக்கும் உபயோகிப்பதுண்டு.

சந்திரகலாலேபம்

கற்பூரம் பங்கு, மஞ்சள் மெழுகு 1 பங்கு, வெள்ளை மிளகு ½ பங்கு, தேங்காய் நெய் 4 பங்கு நிறுத்தெடுத்து, மெழுகைத் தேங்காய் நெய்யுடன் கூட்டி நெருப்பிலிட்டு உருக்கி மிளகையும் நுண் பொடியாக்கிச் சேர்த்துக் கலந்து கொள்ளவும். சூடாறியபின் இறுகிவிடும்.

இந்த லேபத்தை மேலுக்குப் பூசத் தலைநோய், உடல்வலி, நீர்க்கோவை முதலியவை நீங்கும்.

தேன் மெழுகு

CERA WAX

Bees wax is the wax produced by worker bees from nectar and pollen. These substances are converted in the body of the bee to wax, which then exudes through wax pores on the ventral surface into 8 small moulds and there hardens into small scales. When required it is plucked off, made plastic with saliva and used for building honey comb and capping the cells. Bees forms about one tenth of total weight of the honey comb.

வரால்மீன் தலைக்கல்

Channa Striatus

மச்சரத்தினம்

குளத்து மீன் வகைகளில் ஒன்றாகிய வரால் மீன் பத்தியத்திற்காகும் சிறந்த உணவாகும். மீன் தலையில் உள்ள கல் மருத்துவத்திற்குப் பயன்படும்.

"...தெள்வரா லுண்ண வாதஞ் சேடமே பித்தமே வரா
எளிதினின் மானு...."

– ப.சூ.

வரால்மீனின் குணம்

"உடலை வளர்க்கும் முறுபிணியைத் தீர்க்குங்
குடலுக் கதிசுகங் கொடுக்குங் — கடலை
யுழக்கும் வராலை விட்டிவ் வூர்க்குளத்து சேற்றே
யுழக்கும் வராலதனை யுண்"

– ப.கு.சி

கடலில் வாழும் வராலைத் தவிர்த்து குளத்து நீரில் வாழும் வரால் மீனை உண்ண உடல் நன்கு வளரும். உற்ற பிணிகள் தீர்க்கும். உடல் வன்மை உண்டாக்கும். குடலுக்கு மிக்க நன்மையைத் தரும்.

இதன் தலையில் இருபுறமும் இரண்டு கற்கள் காணும். இது நீர்க் கட்டு நீரடைப்பு நோய்களுக்கும் பல வகை கண்நோய்கட்கும் மருந்தாகச் செயல்படுகிறது.

பூ படலங்களுக்கு வரால்மீன் தலைக்கல்

“கல்லின் நன்மை முருங்கைப்பூ வாவது
கனத்த மாதுளம் பூ ரசமாவதில்
நெல்லிற் பாதியுரைத்துக் கண்பூவினில்
நேரதா யுரைத்திடக் காலையும் மாலையும்
வெல்லுமே யொருவாரம தனிலே
விளைந்த பூவும் படலமுந் தன்னுடன்
வல்லமாம் பொதிவாழு மகத்தியர்
வரிசை பெற்றமுறை போதினரே”

– அ.ந

மச்சரத்தினத்தை முருங்கைப்பூ ரசத்திலாவது, மாதுளம்பூ ரசத்திலாவது இழைத்து நெல்லிற் பாதியளவு காலை, மாலை இருவேளை கண்ணிலிட கண் பூ, படலம் தீரும்.

மச்ச இரத்தின அஞ்சனம்

“பெரிய வரால்மீன் கல் குங்கு மப்பூபேசும் அந்நிறையாங்
கரியஞ்சனக்கல் துட்டிடையுங் கனக்கக் குழியில் தானிட்டுத்
தெரியப்புளிமாதுளைச் சாற்றில் திறமாயரைத்தே யதிலுலர்த்தி
அரிய பொடியைக் கண்ணிலிட அகலும் பூச்சதை அஞ்சனமே”

– அ.ந

வரால்மீன் தலைக்கல், குங்குமப்பூ, அஞ்சனக்கல் சமஎடை எடுத்து மாதுளம் பழச்சாறு விட்டரைத்து உலர்த்தி பொடியாக்கிக் கண்ணிலிட கண்பூ, சதை தீரும்.

வரால் மீன் தலைக்கல் பற்பம்

வரால் மீன் தலைக்கல்லை முள்ளங்கிச் சாறு அல்லது நீர்முள்ளிச்சாறு விட்டு அரைத்து நன்கு உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு: *200 மி.கி முதல் 500 மி.கி வரை.*

அனுபானம்: நீர், நீர் பெருக்கிக் குடிநீர்.

தீரும் நோய்கள்: நீர்க்கட்டு, கல்லடைப்பு தீரும்.

Murrel Fish

It is common in fresh water plains, it is very nutritious. It contain protein, cholesterol, Vit-E, calcium, iron, sodium, potassium and fat. It is very interesting food in Kerala.

வௌவால்

இது தலை குனிந்து தொங்குகின்ற பட்சி என்ற பெயரில் நூற்களில் பேசப்படுகிறது.

இதில் பல வகையிருப்பினும் பழந்தின்னி வௌவால் என்ற இனமே உட்கொள்ளத் தக்கது. பழந்தின்னி வௌவால் இருவகையாகக் காணப்படுகிறது. கருப்புவௌவால், வெள்ளை வௌவால் என்பதாம்.

இதில் வெள்ளை வௌவால் மட்டுமே மருத்துவத்திற்கும், உணவிற்கும் ஆகும். இதில் இரு வகை உண்டு. இருவகை வெள்ளை வௌவால் இனமும் மருத்துவத்தில் பயன்படும். வெள்ளை வௌவாலில் இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள இனத்திற்கு சிரட்டை நறுச்சி என்ற பெயர் வழக்கில் உள்ளது.

இதன் மாமிசம், எச்சம் முதலியவை மருத்துவத்திற்காகும். சிறகுகள் குளிசத்திற்காகும்.

இது மரங்களிலும், மலைகளிலும், கோவில்களிலும் வசிப்பதாகும்.

"வெள்ளை வவ்வா றன்னை விரும்பி நிதமுண்பார்க்குத்
தள்ளுகின்ற பித்தந் தரிக்குமோ — துள்ளி
வருங்கரப் பானோடு மயிலே புவியி
லரும்பத் தியமா மறி"

– ப.கு

வெள்ளை வௌவால் கறியால் மிக்க பித்தம், தீவிரமாயுள்ள கரப்பான் ஆகியவை தீரும். பத்தியத்திற்கும் ஆகும் என்பதாகும்.

“கரு வவ்வால் சிரங்கு மேகங்
காட்டுநீரிழிவு புண்ணே
மருவு செங்கரப்பனாதி வந்திடச்
செய்யுமென்ப”.

– ப.கு

“செங்கரப்பான் மேகம் சிறுசிரங்கு முண்டாகும்
வெங்கொடிய நீரிழிவு விர்த்தியாகுங் — கொங்கைகளில்
பாலூறு மெத்தப் பருகிற கருவவ்வால்
மேலுறும் போகம் விதி”

கருவவௌவால் கறியை நாளும் உண்ண செங்கரப்பான், மேகம், சிரங்கு உண்டாகும். நீரிழிவு நோய் அதிகமாகும். பெண்களுக்கு தாய்ப்பால் ஊறும். போகம் அதிகரிக்கும் என்பதாம்.

வௌவால் குடல், தோல் நீக்கி சுத்தித்து பசு நெய்யில் வேகவைத்து கழற்சி வீதம் கொடுக்க கக்குவான் தீரும்.

அனைத்துவித வலிப்பு கட்கும் கூறப்பட்டுள்ள சோதிரிஷி தைலத்தில் இது சேரும்.

வௌவால் தைலம்

“தலை குனிந்து தொங்குகின்ற பட்சி தன்னைச்
சதம்பிடித்துக் குடல்போக்கி உரலி லிட்டு
விலைகொடுத்து வெள்ளுள்ளி தூக்கு காலாம்
வீதமாய்ப் பரங்கிப்பட்டை தூக்கு காலாம்
அலைவிலா காயமது களஞ்சியெட்டு
அடைவாகப் பாண்டத்திற் பாணி யிட்டு

துலையான தூள் மருந்தைக் கலக்கிப் போடு
    தூக்கியெரி யெட்டொன்றாயிறக்கி கொள்ளே"
கசப்பெண்ணெய் படியளந்து விட்டுக் காய்ச்சி
    கருத்துன்னிக் கரண்டிதனிற் கலந்துண்ண
நிசமான யானைக்கால் அண்டவாதம்
    நாடிசடம் ஓதமுடன் வாத மெல்லாம்
பிசகாது யானை கண்ட சிங்கம் போலாம்
    பேசாது யிந்தயெண்ணெய் ஆட்டம்மெத்த
உசத்தி பாரென்று யாகோபு சொன்னார்
    உண்மையது நிசமாகும் உறுதியாமே"

– யா.வை.சி

வெளவால் நூறு பிடித்துக் குடல் நீக்கி சுத்தம் செய்து உரலிலிட்டு இடித்து அத்துடன் உரித்த பூண்டு பறங்கிப்பட்டை இரண்டும் வகைக்கு 1.7 கிலோ பெருங்காயம் 40.8 கிராம் எடுத்து பொடித்துச் சேர்த்து எட்டுபடி நீர்விட்டுக் காய்ச்சி எட்டில் ஒன்றாக வற்றக் காய்ச்சி, வடித்த குடிநீருடன் ஒருபடி வேப்பநெய் சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்துக் கொள்ள வேண்டும்.

அளவு: *5 முதல் 10 மி.லி வரை*

தீரும் நோய்கள்: *யானைக்கால், அண்டவாதம் மற்றும் வாத நோய்கள்.*

வெளவால் நெய்

"ஆடா தோடைகை யாந்தகரை தூதுவளை
யரிதா மியங்கினோடரியபூ சினிம லரதும்
கோடாத வாவினெய் கூட்டியோ ரளவதாய்க்
குறுகவே வெந்தபின் சொடியவீத் தின்னி வெள வாலினைக்
காடான திற்றேடி யேபிடித் தீரல்குடல்
களைந்தரைத் திடுமெழுகு பதமாய் வடித்தே யெடுத்துபின்பு

152- 2 - 29

வாடாம லுண்பவர்க் குள்ளே வறண்டுவரு
மாறாத விருமலு மீளைகா சங்கண் மாறிவிடுமே".

– ப.ரா.சே

ஆடாதோடை, கையான், இசங்கு பூசணிமலர் சமனெடை எடுத்து அரைத்து அதன் எடைக்கு பசுநெய் சேர்த்து அத்துடன் பழந்தின்னி வெளவால் ஒன்றை குடல், ஈரல் நீக்கி சுத்தம் செய்து அரைத்துச் சேர்த்து அடுப்பேற்றிக் காய்ச்சி மெழுகுபதமாய் வடித்துக் கொள்ள வேண்டும்.

5 மி.லி வீதம் கொடுக்க மாறாத வறட்டு இருமல், ஈளை, காசம் இவை நீங்கும்.

Flying Fox



Pteropus giganteus (Brunich)

Size

Head and body about 9 in (229 mm); singspread about 4ft (122cm); weight 20 to 22 oz. (568 – 625 gm)

Distinctive characters

The large size of this bat makes it unmistakable. Head usually reddish brown with a darker sometimes blackship snout. Hind neck and shoulders pale brownish yellow to straw behind shoulders dark brown or black ventrally yellowish brown. Chin neck vent flanks darker. Wings black.

Distribution

Indian, Ceylon, Burma, Rarein west Rajesthan. Cutch and sind. Does not occur as a resident species in the higher hills.

II Fulvousfruit bat

Rousettus leschenaultia Desmaret

Size

Head and body, 5 in (127 mm). tail 0.7 in (18 mm) foream 72 to 86 Distinctive characters: Medium sized bat, uniformally light brown, occasionally yellowish in colour. Older males with dull grey flanks. Completely hairless individuals may be seen during the spring and summer moults. The bats have an odour like that of fermented fruit.

Distribution

Indian peninsular and south – east Asia

III Short – Nosed Fruit bat

Cynoters sphinx vahl

Size

Head and body, 444 inch (112 mm), tail 0.4 inch (10 mm); Distinctive characters. The white margined nearly naked ears and divergent nostrils are distinctive. Brown of varying tints, ferrugious or Yellowish or dull grey brown in colour. Males a bright reddish brown or rusty brown colour.

Distribution

Indian peninsula and south – east Asia.

கருவெளவால்

Geographic Range

Pteropus giganteus occurs in tropical regions of India, Pakistan, China and Maldive Islands.

Lifespan/Longevity

The longest lifespan of an individual of this species in captivity was recorder at 31 years, 5 month.

Food Habits

Pteropus giganteus is frugivorous, as are other species of the suborder Magachiroptera. Otherwise known as the Old World fruit bats. This species has been reported to eat many different species of fruit, including guava, mango and fig.

வெள்ளை வெளவால்: Cynopterus sphinx

Geographic Range

The short – nosed fruit bat is found in India, Sri Lanka, India, South china, S.E.Asia, Western Malaysia and Sumatra and neighbouring small islands.

Habitat

Cynopterus sphinx is common in tropical forests and areas where fruit crops are cultivated. They can also be found in grassland and mangrove forests. They typically nest high in palm trees. The bats chew the fronds of the palms to construct fairly simple tents. These bats are also known to construct tents by closely interweaving the leaves and twigs of creeping vines which cover buildings, but such nests are constructed only when palms are not available.

Food Habits

These bats are frugivorous, they locate their preferred food items by scent. They have been described as voracious feeders, eating more and their body weight in food in one sitting. Some preferred fruits include ripe guava, banana, chikus (a popular Indian fruit crop), dates and litches.

இந்தியாவில் உள்ள உயிரின ஆய்வு மையங்களின் பட்டியல்

Zoological Survey of Indian
M – Block, New Alipore
Kolkata – 700 053
Website : http://zsienvis.nic.in//

Zoological survey of India
Marine Biological Station
Southern Regional Station
100, Santhome High Road
Chennai – 600 028
Website: http://zsienvis.nic.in//

Forest Research Institue (FRI)
Indian Council of Forestry Research Education
New Forest – P.O.
Dehradun – 248 006, U.P
Website: http://frienvis.nic.in//

The Ministry of Environment & Forests
Government of India
Paryavaran Bhawan
CGO Complex, Lodhi Road
New Delhi – 110 003
Website : http://envfor.nic.in//

The Chief Wildlife Warden
Govt. of Tamil Nadu
6th Floor, Panagal Building,
1, Jeenis Road, Saidapet,
Chennai – 600 015

The Centre for Ecological Sciences
Indian Institute of Science
Bangalore – 560 012
Website : http://iiscenvis.nic.in

Wildife Institute of India
P.O. Box No. 18
Chandrabani, Dehradun 248 001.
Website: http://wiienvis.nic.in/

Research Centres
Indian Venterinary Research Institute
Izatnagar – 243 122
Uttar Pradesh
Ph.No. 91-581-2300096.
http://www.ivri.nic.in/

National Dairy Research institute
Karnal – 132 001
Phone (Office) : 0184-2252800, 2259002
(Residence) : 0184-2253004; 2271612; 2259406
Fax : 0184-2250042

Central Institute For Research on Buffaloes
Sirsa Road,
Hisar – 125 001,
Haryana.
http://www.cirb.gov.in/

Central Institute for Research on Goats
Makhdom
Farah, P.O.
Mathura Dist,
Uttar Pradesh.
http://www.cirg.res.in/

Central sheep & wool research Institute
Avikanagar : 304 501
Rajasthan

National Research Centre of Camel
Post Box – 07,
Jorbeer, Bikaner
Rajasthan
Phone : 91-151 2230183, Fax:
http://www.icar.org.in/nreem/index.pK

National Research Centre on equines
Sirsa road,
Hisar – 125 001
Haryana.
http://nrce.nic.in/

National Research Centre on Mithun
Jharnapani,
Medziphema,
Nagaland 797 106.
Phone : 03862 – 247341 (O)
Fax : 03862 – 247341

National Research centre on pig
Panjabari Road, 6th Mile,
Guwahati : 585 037
Assam
Phone : 0361 – 2333359 (O)

National Research Centre on Yak
Dirang, West Kameng Distt: 790 101
Arunachal Pradesh
Aunchal Pradesh
Aunchal Pradesh.
Phone : 03780 – 242259 (O)
Fax : 03780 – 240073

National Institute of Animal and Physiology
Adugodi,
Bangalore – 560 030.
Phone : (Off) 080 – 25711303.
Fax : 0091 – 80 – 25711420
http://www.nianp.res.in/

National Boreau of Animal Genetic Resources
Makrampur Campus,
G.T.Road Baldi Bye Pass,
P.O. Box – 129,
Karnal – 132001
Haryana.
http://www.nbagr.ernet.in/

National Research Centre for mate and meat products
Saidabad, Crida Campus,
Hyderabad – 500059
Andra Pradesh.
Phone : 040 – 4536501
Fax : 040 – 24533381

Project Directorate on Cattle
Grass Fram Road,
PB No-17, Modipuram,
Meerut Cantt: 250001
Uttar Pradesh
Phone : 121 – 2657136 (O)
Fax : 0121 – 2657134
Website : www.pdcattle. up.nic.in

FISHERIES

Central Institute of Freshwater Aquaculture
Kausalyaganga, Bhubaneswar – 751002. Orissa
Telephone : 91-0674-465421/465446/465430
Fax : 91-0674-465407

Central Institute of Fisheries Education
Seven Bungalows, Jai Prakash road, versova,
Mumbai – 400061, Maharashtra
Telephone : (022) 6261573, 6263403, 6261656
Fax : 022 – 6261573

Central Inland Fisheries Research Institute
Barrackpore – 743101, West Bengal
Telephone : (033) 5561 190, 5561191
Fax : 033 – 5560386

Central Institute of Brackishwater aquaculture
141, Mrshal's Road, Egmore,
Madras – 600008, Tamilnadu
Telephone : 044-8554866, 8554891
Fax : 044-8554851
Telex : 041 – 6054 CIBA IN
Telegram : MONODON
E-mail : ciba@x400.nicgw.nic.in

Central Marine Fisheries Research Institute
P.B. No. 1603, P.O. Tatapuram, Cochin 682014, Kerala
Fax : 0484-374818

Cerntral Marine Fisheries Research Institute
Reginal Centre
Marine Fisheries Post
Mandapam – 623 520
Ramnad Dist. Tamil Nadu.

Tuticorin Research Centre of CMFRI
No. 115, N.K. Chetty Street
Tuticorin – 628 001

Central Institute of Fisheries Technology
Willington Island, Matsyapuri, Cochin – 682029, Kerala
Telephone : 0484-667727, 666880, 666845
Fax: 0484-668212

National Bureau of Fish Genetics Resources
Radheswamy Bhavan, 351/28, Dariyapur
Talkatora Road, Rajendra Nagar
Lucknow – 226004, Uttar Pradesh
Telephone: 0522 – 258370, 259820

National Research Centre on Cold water Fisheries
P.B. No. 28, Roop Nagar, Haldwani,
Nainital – 263 139, Uttar Pradesh
Telephone: 05946 – 20445

Fishery Survey of India
Botawala Chambers,
Sir P.M. Road,
Mumbai 400 001

National Institute of Oceanography (NIO)
Dona Paula – 403 004,
Goa,
Telephone: 832 – 2450450;
Fax : 832 – 2450602 & 2450603

Gulf of Mannar National Marine Park
Tamil Nadu Forest Department
Rameswaram Road
Ramanathapuram – 623 503

Fisheries Department
Govt. of Tamil Nadu
Administrative Building
Chennai – 600 018

Bay of Bengal Programme Inter – Governmental Organisation
91, St. Mary's Road
Abhiramapuram
Chennai – 600 018
Website : http://www.fao.org/waricent/faoinfo/bobp/website/homepage.htm

Forest & Marine Products Division
Regional Research Laboratory (CSIR)
Bhubaneswar – 751 013
Orissa.

HERPETOLOGY

Madras Crocodile Bank Trust
Centre for Herpetology.
Post Bag No.4,
Mamallapuram – 603 104,
Tamil Nadu, S. India
Ph:
Fax:
www.madrascrocodilebank.org

ORNITHOLOGY

Central avian research institute
Izatnagar – 243 122
Uttar Pradesh
http://www.icar.org.in/cari.index.htmpin

Salim Ali Centre for Ornithology & Natural History
Kalayampalayam
Coimbatore – 641 010 India
Phone : 91-422-807973, 807983
Fax #91-422-807952

Salim Ali Foundation
The Nest, #5, BSA Nagar
Bharathiar University P.O.
Coimbatore 641 046
India
Telephone : 91-422-2426231

ENTOMOLGY

Entomology Research Institute
Loyola College
Chennai – 600 034, India.
Tel : 91-44-28178348
Fax : 91-44-28174644
E-mail : erilc@hotamil.com
Website : www.entomology-loyola.com

ARACHNOLOGY

Division of arachnology.
Sacred Heart college,
Cochin,
Kerala.
http://www.southindianspiders.com/

Lac

Indian Institute of Natural Resins and Gums
Namkum – 834 010,
Ranchi, Jharkhand.
Phone : 91-651-2260117;91-651-2261156;
Fax : 91-651-2260202.

சிறப்புப் பெயர் அகராதி

அயிராணி ருது	43
அறுபுள்ளிவண்டு	90
அமிர்தாதிக் குளிகை	147
அரக்குத் தைலம்	149
அணிலெச்சம்	190
அற்புதப்புண்	203
அக்கினி சாலம்	80
அம்பர்	228
அட்டைப்புகை	211
அண்டத்தைலம்	418
ஆமை எச்சம்	191
ஆமை தைலம்	30
ஆமை ஓட்டு கருக்குக் குடிநீர்	29
ஆமை ஓட்டு கற்கம்	30
ஆமைக்கறி	32
ஆண்டலைப்புள்	167
ஆயிரங்காலி	208
ஆள் காட்டி குருவி முட்டை	420
இரசக் குழம்பு	290
இடியின் துளி	43
இரசப்புகை	73
இந்திர கோப தைலம்	46
இராசமிருகாங்கம்	257
ஈயல்	43
உருளை	58
உடும்புத்தைலம்	51
உடும்புச்சூரணம்	52
உடும்புக்களி	51
உகிர்	140
உமுரி	372
உச்சுவாசாத்கிருதம்	436
ஊமைச்சி	366
என்புக் குழித்தைலம்	56
என்பு பற்பம்	57
எண்கு	93

எலிப்புழுக்கை	190	கழற்சிமாத்திரை	143
எய்	264	கரலாயுதம்	167
என்புக்களிம்பு	57	கருங்கோழித்தைலம்	168
ஏலாதிமாத்திரை	64	கருங்கொழிக்கற்கம்	171
ஏரல்	124	கருங்கோழிக்குடிநீர்	173
ஏரற்குழம்பு	133	கருங்கோழிச்சூரணம்	169
ஒடுக்கன்	28	கன்றின் சாணம்	188
ஒற்றைக்கொம்பன்	120	கரடிமலம்	94,188
ஒட்டக சிறுநீர்	201	கழுதை நீர்	196
ஒட்டகப்பல்	260	கமடம்	58
ஓணான் தைலம்	75	கமடாதாரி	28
ஓணான் சுடர்தைலம்	76	கசப்பிடி	34
கற்பூராதிப்பொடி	374	கடல் நுரை	79
கச்சதூஷன்	224	கடல் நுரை பற்பம்	84
கல்லொட்டி	366	காக்கைச்சினை	133
கனத்த தாம்பிராதி மாத்திரை	372	காண்டாமிருக கொம்பு பற்பம்	121
கணத்தைலம்	396	கிளிஞ்சல் மை	133
கம்பு	176	கிளிஞ்சல்பூச்சு	134
கருமான்	97	கீரிமலம்	189
கபாலாதிமாத்திரை	107	கீரம்	296
கஸ்தூரிக்குளிகை	112	நீர்க்குண்டு	366

152 -2 - 30

குறும்பாடு	41	சூரசன்னித்தைலம்	67
குடாவடி	93	செம்போத்து எச்சம்	189
குதிரை குளம்பு புகை	142	செந்தண்டு	273
குளவிக்கூட்டுக்குடிநீர்	145	சேவல் நெஞ்செலும்பு	56
குக்குடதைலம்	419	சோகி	245
குயில்முட்டை	422	ஞமலி	384
குழியானைத்தைலம்	158	தம்பலப்பூச்சி	43
கொம்புப்பசை	396	தத்தூரான்	224
கோழிக்கல்	172	தயிர் வகை	314
கோலம்	287	தாலாதி உண்டை	34
கோட்டான்என்பு பற்பம்	59	திரிமருப்பு இரலை	97
சன்னி நெய்	289	துரிசுக்குரு	91
சசம்	434	நளு	124
சலக்கூறு	366	நரிஎச்சம்	188
சர்வாங்கத்தைலம்	209	நவநீதபற்பம்	326
சிரரோகத்தைலம்	357	நரியுண்ணி	362
சிலைத்தைலம்	271	நண்டுத்தைலம்	363
சிட்டுகுருவிலேகியம்	138	நண்டுக்குழம்பு	363
சிப்பி செயநீர்	133	நந்தாதி கிருதம்	267
சிரமூரி	366	நத்தைத்தைலம்	367
சிற்றண்டமெழுகு	418	நத்தைப்புகை	367

நண்டின்தினை	422	புறவளையம்	261
நயனாமிர்தமாத்திரை	269,262	புற்றாஞ்ச்சோறு சூரணம்	343
நாகணவாய்ப்புள்	423	புசங்கம்	287
நெய்வகை	320	புலிநகம்	143
பவழ வைப்பு	274	பூநாகச்சத்து	359
பரிசில்	124	பூநாகச்செந்தூரம்	358
பாரக்கிரமன்	120	பூநாகச் சூரணம்	356
பசுஞ்சாணம்	187	பூனை இளகம்	348
பசுமுத்திரம்	194	பெருவாயான் நீர்	196
பலகறை பற்பம்	247	பெண்மாலை	273
பலகறைதங்கு சுண்ணம்	256	பேரண்டபற்பம்	61
பவழ்ப்புற்று	282	பேற்றேண்ணை	159
பணி	176	மயில்நெய்	387
பயம்	296	மண்குளவிக்கூடு	145
பச்சைத்தாம்பிராதி மாத்திரை	373	மகாபேகன்	224
பால்	245	மலைபாம்புத்தைலம்	291
பாம்புச்சட்டை	293	மயிலறகாதி தைலம்	382
பிபிலிகை	63	மயிர்ப்பற்று	382
பிள்ளைத்தைலம்	158	மச்ச ரத்தின அஞ்சனம்	445
புல்வாய்	97	மான்குழம்பு	391
புறா எச்சம் பயன்	345	மாந்தர் என்பு	54

மார்ச்சாதிச்சூரணம்	347	யானைப்பால்	304
மாதுளை நெய்	225	வராடி	245
மாட்டுக்கொம்பு	395	வராகிவேல்	264
மீன்தலைவாள்	400	வராகம்	266
முயிற்றெறும்பு	63	வல்லியம்	143
முயிற்றுக்கற்கம்	68	வரகாதி மாத்திரை	269
முசிறுமுட்டைபுரசம்	69	வண்டுக்குள்ளரிசி	90
முசிறுமுட்டைத்தைலம்	64,65,68	வரால்மீன் தலைக்கல் பற்பம்	445
முள்ளுற்றசுண்டெலி	70	வாருதித் தண்டு	273
முயற்கட்டம்	436,190	வாரணம்	167
முட்பாணம்	264	வெடியுப்பாதிச் சுண்ணம்	258
முயல்கொழுப்பு	435	வெள்வரி	245
முத்துச் சிப்பி சுண்ணம்	428	வெண்பல்லம்	93
முட்டை ஓட்டு பற்பம்	424	வெண்ணெய் வகை	318
மூஞ்சுறு நசியம்	72	வெள்ளை மாத்திரை	184
மெழுகு தைலம்	440	வேட்டு வன்குழம்பு	146
மேகவார்த்தை அறிபவன்	224	வௌவால்	447
யானை நீர்	36	வௌவால் நெய்	449

ஆதார நூற்கள்

1. அகத்தியர் வைத்தியக் கும்மி
2. அனுபோக வைத்திய பெருங்குறள்
3. அஷ்டாங்க உற்ருதயம்
4. அகத்தியர் வல்லாதி
5. அகத்தியர் வைத்திய இரத்தின சுருக்கம்
6. அகத்தியர் நயனவிதி
7. அகத்தியர் வைத்திய காவியம்
8. இரச இரத்தின சமுச்சயம்
9. தேரையர் வைத்தியம்
10. தேரையர் யமக வெண்பா
11. தேரையர் வெண்பா
12. தேரையர் சேகரப்பா
13. போகர் சத்த காண்டம்
14. போகர் ஏழாயிரம்
15. போகர் கருக்கடை நிகண்டு
16. போகர் நிகண்டு
17. போகர் எழுநூறு
18. பரராச சேகரம்

19. பதார்த்த குணசிந்தாமணி

20. பதார்த்த சூடாமணி

21. சட்ட முனி நிகண்டு

22. சரபேந்திரர் வைத்திய முறைகள்

23. யாகோபு வைத்திய சிந்தாமணி

24. வைத்திய சாரசங்கிரகம்

25. ஞான வெட்டியான்

26. வைத்தியக்குறள்

27. மூலிகை மர்மம்

28. நாக முனிவர் நயன விதி

29. விஷ ஆரூடம்

30. சத்தி ஆரூடம்

31. சிகிச்சா ரத்தின தீபம்

32. சாம்பசிவம் பிள்ளை தமிழ் அகராதி

33. குணபாடம் தாது, சீவகுப்பு

34. பதார்த்த குண விளக்கம்